தேரையர் மகாகரிசல்

மூலமும் உரையும்

[illegible]

[illegible]

பதிப்பு

பண்டித் எஸ். எஸ். ஆனந்தம்

மருத்துவ ஆராய்ச்சி நிலையம்

சென்னை-600017

1974

முதற் பதிப்பு : 1974

விலை : ரூபாய் பத்து

பண்டித எஸ். எஸ். ஆனந்தம் சித்த மருத்துவ ஆராய்ச்சி நிலையம்
சித்த இலக்கிய மறுமலர்ச்சி வரிசை, எண் : க

தேரையர் மகா கரிசல்

மூலமும் உரையும்

உரையாசிரியர்
திருவாளர்: டாக்டர் ஆர். தியாகராசன் எல்.ஐ.எம்.
பொறுப்பு அலுவலர், சித்த மருத்துவ மைய ஆராய்ச்சி நிலையம்
சென்னை - 10
தலைவர், சித்த மருத்துவ அறிவியல் வளர்ச்சிக்குழு, சென்னை-29

அணிந்துரை
மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் எம்.ஏ.,
மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர், தமிழக அரசு.

பதிப்பு
பண்டித எஸ். எஸ். ஆனந்தம்
சித்த மருத்துவ ஆராய்ச்சி நிலைய இயக்குநர் அவர்களால்
அன்புச் செல்வி அச்சகத்தில்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.

எண்: 14, ராகவையா சாலை, தியாகராய நகர், சென்னை-600017.



தமிழக அரசு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்;
மாண்புமிகு பேராசிரியர்,

திரு க. அன்பழகன் எம். ஏ., அவர்கள்.

அணிந்துரை

தொன்மைப் பெருமையும் வரலாற்றுப் புகழும் மிகுந்த தமிழர் சமுதாயத்தினுடைய நாகரிக வளர்ச்சியில் பிறந்த கலைகள் பலப்பல. தமிழர் தம் விழுமிய ஓசை நலமுடைய மொழியே — இயல், இசை, கூத்து என முத்தமிழாகப் பிறந்து வளர்ந்த தனிச் சிறப்புடையது. உலக மொழிகளுள் - தனித் தன்மை வாய்ந்த தமிழைப் போன்றே - உலகோர் கண்ட மருத்துவ முறைகளுள் தனித்தன்மையும் நிகரற்ற நன்மையும் கொண்டது சித்த மருத்துவ மாகும்.

தமிழ் இனத்து நல்லறிஞர்களான சித்தர்களால், தலைமுறை தலைமுறையாகப்பல ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகத்தொடர்ந்து பயிலப்பட்டும் ஆராயப்பட்டும் பயன் காணப்பட்டும் நிலை பெறுத்தப் பெற்ற முறையே 'சித்த மருத்துவ'மாகும்.

"நோய் நாடி நோய் முதல் நாடி அது தணிக்கும்
வாய் நாடி வாய்ப்பச் செயல்" - என

வள்ளுவனார் விளக்கியதற்கு மருத்துவன் செயற்பட்டு, பிணியாள னின் நோய் நீக்கி உடல் நலம் சித்திக்கச் செய்யும் திறத்தா லேயே 'சித்த மருத்துவம்' என்னும் பெயர் பெற்றது எனலும் பொருந்தும்.

"மாறுபாடு இல்லாத உண்டி மறுத்துண்ணின்
ஊறுபாடு இல்லை உயிர்க்கு" - என்னும்

குறள் "ஒருவன் உண்ணும் உணவு அவன் உடல் நலத்துக்கு ஏற்றதாக அமையுமாறு கவனித்துப் பிறவற்றை விலக்கி உண்பா னாயின் அவனது உயிருக்கு ஏதம் வரத்தக்க உடல் நோய் அவனை அணுகாது என்று விளக்கியுள்ளதை ஊன்றிச் சிந்திப்போர் உண் ணும் உணவு போன்றே உட்கொள்ளும் மருந்தும், நோய் நீக்கும் திறனுடையதாவதோடு, மறு விளைவுகளை ஏற்படுத்தாததாகவும் உடல் இயற்கைக்கு ஏற்ற இயற்கைத் தன்மை உடையதாகவும் இருப்பதே சிறப்பு என்பதை உணர்வர். அத்தகைய சிறப்புத் தன்மை - அமையுமாறு இயற்கைப் பொருள்களான உணவுப்

பொருள்கள், மூலிகைகள், நெய்கள் இவற்றையே அடிப்படையாகக் கொண்டு உயர்நிலையில் தாதுக்களையும் (உலோகங்களையும்) தூய்மைப்படுத்தி அளவு முறைகட்குட்பட்டு மருந்தாக்கும் திறத்தையும் கண்டு கையாண்ட மருத்துவம் சித்த மருத்துவமாகும்.

உடல் இயற்கையைத் தெளிந்து அதனை இயற்கைப் பொருள்களாலேயே குணப்படுத்தும் இக்கலை மூலம், நோய் வராது தடுக்கவும் வந்தவிடத்து நீக்கவும் உடல் உரத்துடன் நெடிது வாழவும் வழிமுறைகள் காணப்பட்டுள்ளன. சித்த மருத்துவ உண்மைகளும் நுணுக்கங்களும் கூறும் நூல்கள் யாவும் இன்றும் அச்சு ஏறவில்லை, உரையும் காணப்படவில்லை. உரைநடையில் எழுதி வெளியிட்டு, ஆராய்ச்சி செய்வதற்கான தகுந்த அடிப்படையும் அமையவில்லை. ஆம், எத்தனையோ அருமையுடைய ஏடுகள் 'ஓலைச்சுவடிகளாக' மக்கி மடிந்து கொண்டுள்ளன. இன்னும் சில ஆண்டுகள் கடந்துவிடின் அவை தேடிப் பார்ப்பவர்க்கும் கிடைக்காது போய்விடும். சித்த மருத்துவ இலக்கியத்திற்கு அது பேரிழப்பு ஆகிவிட லாம். எனவேதான் இதுகாறும் அச்சு ஏருத அனைத்து ஓலைச்சுவடிகளும் உடனடியாக அச்சு ஏறுவதும் அந்த மருத்துவ இலக்கியங்கட்கு உரை காண்பதும் - உடனடியாக நாம் மேற்கொள்ள வேண்டிய கடமை ஆகிறது. ஆண்டு தோறும் நூறு - சித்த மருத்துவ ஏடுகளாவது வெளியிடப்பட்டாக வேண்டும்.

சிறந்த சித்த மருத்துவ ஏடுகள் பலவற்றிற்கு உரைகாண்பதும் அருமையுடைய செயலேயாகும். இத்துறையைச் சார்ந்த நல்லறிஞர் யாரேயாயினும் — அவர்கள் பயின்ற ஏட்டினையும் — அதன் அறிதற்கரிய பொருளுள்ள செய்யுளினையும் உரையுடன் எழுதித் தருவது சித்த மருத்துவத்தை நிலைபெறச் செய்யப் பெரிதும் உதவும் என்று உணர்ந்து செயல்படவேண்டும்.

இந்தப்பணி முதன்மையுடையதுமட்டுமன்றி உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டியது என்று உளங்கொண்டு தமிழக அரசு, சித்த மருத்துவப் பாடநூற் குழு ஒன்றினை அமைத்துள்ளது. இக்குழுவில் இடம் பெற்றுள்ளவர்களது முயற்சியால், இந்த நூல் — **"தேரையர் மகா கரிசல்"** உரையுடன் வெளிவந்திருப்பது கண்டு நான் மகிழ்கிறேன். இந்நூலைத் தொடர்ந்து, வரிசை வரிசையாக சித்த மருத்துவ இலக்கியங்கள் அனைத்தும் வெளிவர வேண்டும் என்பதே என் விருப்பம்.

இந்நூலுக்கு உரை எழுதியுள்ள எனது பாராட்டுதலுக்குரிய நண்பர் டாக்டர். **திரு ஆர். தியாகராசன்**, எல்.ஐ.எம்.,அவர்கள், பல்லாண்டுகளாக சித்த மருத்துவத்துறையில் பேராசிரியராக விளங்கி

- இத்தகைய இலக்கியங்களை ஆராய்ந்து காணும் ஆற்றல் பெற்றிருந்த தகைமையினாலேயே இந்நூலுக்கு உரைகாண முடிந்தது என்பதும், அவர்களைப் போன்ற திறனுடையார் மிகச்சிலரே என்பதும் எண்ணும்போது — அப்படிப்பட்ட தகுதி மிக்க மருத்துவ வல்லுனர்களின் பணி அனைத்தும் இத்தகைய அரிய நூல்களை உரையுடன் வெளியிடுவதற்கே பயன்பட வேண்டும் என்று விரும்புகின்றேன். டாக்டர் தியாகராசன் அவர்களும் அவர்களை ஒத்த தகுதியுடைய பெருமக்களும் மேற்கொள்ளும் இத்தகைய ஆக்கப் பணிகட்குத் தமிழக அரசு — இயன்ற வகையில் எல்லாம் உதவும் என்றும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்த நூல் சிறந்த முறையில் வெளிவர உறுதுணையாயிருந்த எனது கெழுதகை நண்பர் பேராசிரியர் **அன்புகணபதி** அவர்கட்கும் எனது பாராட்டுதல் உரித்து.

இந்த அரிய நூல், சித்த மருத்துவத் துறையின் கலங்கரை விளக்கமாகச் சுடர் விட்டுத் திகழ்ந்த பெரியார் — **பண்டித எஸ். எஸ். ஆனந்தம்** சித்த மருத்துவ ஆராய்ச்சி நிலையத்தின் முதல் வெளியீடாக மலர்ந்துள்ளது. தந்தையின் பேரும் புகழும் நிலைபெறும் வகையில் — சித்த மருத்துவத்திற்குச் சிறப்புக்களைச் சேர்க்கும் திருப்பணியில் தன்னையே ஒப்படைத்துள்ள அவரது மகன் - டாக்டர். **திரு. ஆனந்தகுமார்** ஜி. சி. ஐ. எம்., அவர்கள் ஆற்றிவரும் நற்பணியை நான் வரவேற்கிறேன்; வாழ்த்துகிறேன். இத்தகைய நல்ல சித்த மருத்துவ நூல்கள் பல்கிப் பெருக, ஆராய்ச்சி வளர்வதற்கான சூழல் உருவாக, இந்த ஆராய்ச்சி நிலையத்தாரைப் போன்றே, ஒவ்வொரு சித்த மருத்துவ நிலையத்தாரும் ஏதேனும் ஒருவகையில் ஒத்துழைக்க வேண்டுகிறேன்.

அன்பன்,

க. அன்பழகன்

சென்னை
6 - 6 - 74

டாக்டர் சி. எஸ். உத்தமராயன்
எச்.பி.ஐ.எம்.
முன்னாள் இந்திய மருத்துவத்துறை
இயக்குநர், தமிழ்நாடு.

174, பெரியதெரு
திருவல்லிக்கேணி,
சென்னை—5.

பாராட்டுரை

பதினெண் சித்தர்களில் ஒருவர் தேரன் (இவரைத் தேரையர் என்றுங் கூறுவதுண்டு). இவர் தாம் எழுதிய நூற்களின் வரிசையை அடியில் கூறும் செய்யுளால் அறியக் கிடக்கின்றது. இப்பா இவர் எழுதிய கரிசலிலும் தேரன் மருத்துப் பாரதத்திலும் அகச்சான்ருகக் கூறப்பட்டதால் நன்கறியலாம்:-

" சிகாமணி வெண்பா நிகண்டு சேகரப்பா
தேரையர் காப்பியந்தரு நாடக மந்தாதி
மிகாவண்ணம் நாண்மாலை யமகவெண்பா
விளங் கெதுகைப்பாவிவை யெல்லோருமெச்சு
மகாமகிமைக் கரிசலெனு முறையீராறும்
வேதாந்த சித்தாந்த வைத்ய வாத
முகாதியினு மசையாத விரிவுள் வேத
முத்தம மாய்விளங்கு மிஃதுண்மைதானே."

இதில் கூறப்பட்ட ஒவ்வொரு நூலுக்கும் உரை எழுதுவது மிகக்கடினம். காரணம் தேரன் தமிழ் இலக்கிய இலக்கண நூற்களை ஆழ்ந்து கற்றவர் என்று அறிகிரும். தமிழிலுள்ள யாப்பு வகைகள் எத்தனை உண்டோ அத்தனை வகையிலும் பாக்களைக் கூறியுள்ளார். வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா அவைகளின் இனங்களாகிய தாழிசை, துறை, விருத்தம் ஆகியவற்றிலும் அன்றி யமகம், திரிபு, மடக்கு, அந்தாதி குழிப்புச் சந்தம், சந்தம் போன்றவைகளிலும் எண்வகைப் பொருள் கோள்களும் மோனை, இயைபு, எதுகை, முரண் அளபெடை ஆகியவற்றையும் அமைத்துப் பாடுவதில் திறனுடையவர்.

தைல வர்க்கத்தில் ஒரு தைலத்தில் சரக்குத் தொகை 25 என்று கூருமல் (பஞ்சாட்சரம்) 'ஐந்தெழுத்து அடுக்கு' என்று

கூறி இருக்கின்றார். இதே போல இன்னொரு தைலத்தில் 'உமைகோணத் தெண்ணிறை' என்று சரக்குத்தொகைக் கூறியிருத்தலால் இவருக்கு மந்திர நூலிலும் ஆராய்ச்சி இருந்ததாகத் தெரிகிறது.

வட மொழி, மலையாளம், தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழிகளையும் இவர் கற்றிருந்தார் என்பதை நாம் அம்மொழிகளிலுள்ள சொற்களை ஆங்காங்கு இவர் எழுதிய நூற்களில் வழங்குவதால் அறியலாம்.

இவர் வேதாந்தம், சித்தாந்தம், தர்க்கம், நியாயம், சோதிடம் ஆகிய சாத்திரங்களிலும் வல்லுனரென்று அறிதற்கு நிரம்ப இவர் நூற்களில் அகச்சான்றுகளுள.

மேலும் புராணம், இதிகாசம், தமிழ் மறை நூல்கள் எல்லாம் நன்கு உணர்ந்தவர் என்பதை நாம் இவர்தம் "மருத்துப்பாரதம்' என்னும் நூலில்,

"வேதவியாசப் பொருப்பிலருட் சௌபாக்கிய
விக்கினராசன் வரைந்தபடியே வாத
வெப்பினுக் கீரைந்தே நாளதற்குளெந்த
வினைகளும் வீடுமிக்கும் முதநோய்க் குள்ளாகி"

என்று கூறியதனல் உணரலாம்.

மேலும் தேரன் கரிசலில் 'ஆ' என்ற எழுத்தை அடி மோனையாகக் கொண்ட செய்யுளில் "ஆற்றுத் தமிழ்மறை யாற்றுந் தமிழ் மறை" என்ற அடி சம்பந்தர் தேவாரம் திருவையாற்றுப் பதிகத்தில்,

"புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி
அறிவழிந்திட்டு ஐம்மேலுந்தி
அலமந்த போதாக அஞ்சேல் என்று
அருள் செய்வான் அமருங்கோயில்"

என்ற அடிகள் கபசுரத்தின் தீராநிலையாகிய சாகும் நேரத்தைக் குறிக்கின்ற செய்யுளைக் கொண்டு ஆற்றுத் தமிழ்மறை யாற்றுந் தமிழ் மறை என்று ஒப்பிட்டுக் கூறுகிறார். ஆதலின் நாம் அறிவது என்னவென்றால் தேரன் நூல்கட்கு உரை எழுத தமிழிலுள்ள எல்லா நூற்களையும் கற்றறிய வேண்டுமென்பது துணிவு.

தேரன் கரிசல் முழுக்க முழுக்க ஒவ்வொரு செய்யுளும் அடி மோனையைக் கொண்டதாகும். மோனை பொருந்தி வருவதற்கென்றே இந்நூலைப் பாடினர் என்று எண்ணவும்படுகின்றது.

அதனுல் சில இடங்களில் பொருள் கொள்வது மிகக் கடின மாக இருக்கிறது. எடுத்துக் காட்டாக "பாஷாண மாத்திரை" செய்முறை பிணிநீக்கம் கூறும் செய்யுளில் ஒன்பதாவது அடியில் "பாசரையிலும் அவ்வாறே" என்றிருப்பதை பசரையிலும் (பசரை - பசரைக்கீரை) அவ்வாறே என்று கொள்ள வேண்டும், இல்லையேல் சரக்குத் தெரியாமல் திண்டாட வேண்டியதுதான் மோனையை நோக்கி பசரை என்ற சொல் பாசரை என்று நீண்டது என்று கொள்ள வேண்டும்.

இந்நூலினின்று சிலபாக்களை ஜி. எி. ஐ. எம் மாணவர்கட்குப் பாடபுத்தகம் எழுதும்போது ஆங்காங்கே தேவையான இடங்களில் சேர்த்துக் கொண்டோம்.

தமிழ் மொழியில் சொல்லுக்கு முதலில் வரும் எழுத்துக்கள் 22 என்று நன்னூலில் கூறப்பட்டுள்ளது. அதன்படி பார்க்கின் அகரத்தை முதலில் கொண்டாரம்பித்து 'மெ' என்ற எழுத்தை முதலாகக் கொண்ட பாட்டோடு நிறுத்தப் பட்டுள்ளது. ஆகவே மற்ற எழுத்துக்களைத் தொடக்கமாகக் கொண்ட செய்யுள்கள் அழிந்து விட்டன என்று அறியக்கிடக்கின்றது.

டாக்டர் **ஆ. ஆனந்தகுமார்** ஜி.எி.ஐ.எம் அவர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க டாக்டர் **இரா. தியாகராசன்** எல். ஐ. எம் அவர்கள் தேரன் கரிசல் என்னும் இந்நூலுக்கு முழு உரை எழுதும் பணியினை ஏற்றுச் சிறப்புடன் முடித்திருப்பது பாராட்டிற் குரிய தாகும். ஏறத்தாழ அனைத்திற்கும் தெளிவான அரும்பத உரையும் கொடுத்துச் சில சொற்களைப்பிரித்துப் பொருள் விளக்கிச்செல்லும் முறை அப்பொருளின் கருத்தினை ஐயந்திரிபறக் கற்றுணர முடி கின்றது. அவர்களது நீண்ட நாளைய ஆசிரியத் தொழிலின் முழு அனுபவம் இந்நூலைச் சிறப்புற எழுதிட உறுதுணைபுரிந்துள்ளது என்பதை அறிய முடிகின்றது. மருந்து செய்முறை விளக்கம் தெளி வாகவும் விளக்கமாகவும் கூறப்பட்டுள்ளது.

ஆசிரியரின் முயற்சி மிகவும் பாராட்டுதற்கு உரிய தொன் ருகும். இந்நூல் சித்த மருத்துவப் பேரறிஞர் பட்டப் படிப் பிற்கும், சித்த மருத்துவர்களுக்கும் மிகப்பயனுடையதாகும்.

சென்னை,
29 - 5 - 74

சி. எஸ். உத்தமராயன்

முன்னுரை

"பல்விதமாயின சாத்திரத்தின் மணம் பாரெங்கும் வீசும் தமிழ் நாடு" என்று பாரதி பாராட்டியுள்ளவாறு சாத்திரங்கள் செறிந்துள்ள நாடு நம் தமிழ் நாடு. மக்கள் கேட்டோ, கற்றோ அறிந்து வாழ்க்கையில் பயனுடையவற்றைக் கடைப்பிடித்து ஒழுகி உயர்நிலையையடைய உதவும் கருவியே சாத்திரம் எனப்படும். அதுவே கலையெனப்படும். "ஆயகலைகள் அறுபத்து நான்கு" என ஒரு புலவர் கூறியுள்ளார். இயல், இசை, நாடகம், மருத்துவம், சிற்பம், ஓவியம், யோகம் போன்ற உயர்ந்த கலைகள் மலிந்துள்ளது நம் தமிழ் நாடு.

'மருத்துவம்' என்னும் சொல் சாவை நீக்கி நீடித்த ஆயுளை நல்க வல்லதொன்று என்பது புலனாகின்றது. நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம். நோய்நீக்கி இன்பமாக வாழ வழிவகுக்கும் கலை மருத்துவக்கலை. இக்கலை பழங்காலம் தொட்டே தமிழ்நாட்டில் சீரும் சிறப்புடனும் விளங்கி வந்துள்ளது. அகத்தியர், திருமூலர், போகர், தேரையர் போன்ற சித்தர்கள் இம்மருத்துவத்தைத் தமிழகத்திற்கு ஈந்தனர். அதில் பெரும் பகுதி கால வெள்ளத்திற்குப் பலியானது. தேரையர் பல மருத்துவ நூற்களை எழுதி இவ்வுலக மக்கள் இனிது வாழ வழிவகுத்துள்ளார். தேரன் எழுதிய நூற்களின் ஆழமும் அழகும் கடல் போன்றன. ஆனால் அவர் எழுதிய இருபத்தொரு நூற்களில் ஒரு சில நூற்களே உரையுடன் அச்சாகியுள்ளன. அந்நூற்களும் தற்காலம் கிடைப்பது அரிதாகவுள்ளன. ஏனைய நூற்கள் அச்சிடப்படாமலும் உரை எழுதப்படாமலும் சிதலைக்கும், இராம பாணத்திற்கும் இரையாகி அழிந்து கொண்டிருக்கின்ற இழிநிலையைப் போக்கிடவும், சித்தர்கலையை வளர்த்திடவும் உறுதிகொண்டு, எல்லாவகையானும் இக்கலை வளர்ச்சி பெற அரும்பாடுபட்டுவரும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் **மாண்புமிகு க. அன்பழகன்** அவர்கள் எடுத்துக் கொண்டிருக்கின்ற முயற்சிகள் எண்ணற்றன.

அவற்றுள் சித்தமருத்துவ அறிவியல் வளர்ச்சிக் குழு ஒன்றினை நிறுவி, அக்குழுவினைக் கொண்டு கிடைத்தற்கரிய ஏடுகளைச் சேகரித்து அவைகளுள் உரையெழுத வேண்டியவற்றிற்கு உரையெழுதிடவும் அச்சிட வேண்டியவற்றை அச்சிடவும் ஏற்பாடுகள்

செய்யப்பட்டுள்ளன. அக்குழுவினரின் திட்டத்தின்படி **தேரன் மகா கரிசல்** என்னும் இந்நூலுக்கு உரையெழுதும் பணி எனக்குக்கிட்டியது. கரிசல் என்னும் சொல் கடுமை என்பதனைக் குறிக்கும். கரிசல் நிலம் கடுமையாக இருப்பினும் பண்படுத்திஞல் உயர்ந்த விளை பொருள்களைக் கொடுப்பது போன்று கரிசல் என்னும் இந்நூலினை ஆழ்ந்து படிக்க, உயர்வான மருத்துவ உண்மைகளைக் கொடுப்பது கண்கூடு. ஆகவே அறிவும் ஆற்றலும் பெற்ற பெரியோர்கள் ஆற்ற வேண்டிய இச்செயலை மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் அளித்து வருகின்ற ஊக்கமும் சித்தமருத்துவ அறிவியல் வளர்ச்சிக்குழு உறுப்பினர் **டாக்டர் திரு. ஆ. ஆனந்த குமார்** ஜி. சி. ஐ. எம்., அவர்கள் காட்டிய ஆர்வமுமே இந்நூலுக்கு உரையெழுத வேண்டிய தவிர்க்க முடியாத நிலையை எனக்கு ஏற்படுத்தின. அவர்களது அன்புப் பிடியிஞல் ஒருவாறு முயற்சி செய்து இத்தேரன் மகா கரிசலுக்கு உரையெழுதத் துணிந்தேன். எனது ஆசிரியரும் தமிழ்ப்பண்டிதரும் மருத்துவப் புலவருமான மாங்காடு வடிவேலு முதலியார் அவர்களிடம் பாடங் கேட்டதைக் கொண்டும் எனது பட்டறிவைக் கொண்டும் இத்தேரன் மகாகரிசல் என்னும் கடலினுள் மூழ்கிக் கையில் அகப்பட்டவைகளை யெல்லாம் திரட்டிச் சேர்த்துக் கொணர்ந்தேன். வெளிக்கொணர்ந்தவற்றைச் சோதித்த பின் கொண்டுவந்த சிப்பிகளுளெல்லாம் நன் முத்துக்களே இருக்கக் கண்டேன். கிடைத்த முத்துக்களோ கொற்கை முத்துக்களாக இருப்பதை எண்ணிட என் மனம் இறும்பூதடைகின்றது.

இந்நூலின்கண்ணுள்ள சில சொற்களுக்குப் பொருள் சரிவர அறிய முடியாததாக உள்ளபடியால் அச்சில சொற்களுக்குப் பொருள் கூருது விடப்பட்டுள்ளது. பொருள் தெரிந்த பெரியவர்கள் எனக்குத் தெரியப்படுத்திஞல் நூலின் மறுபதிப்பில் நன்றியுடன் சேர்த்துக்கொள்வேன். அவர்களுக்கு நானும் சித்த மருத்துவ உலகமும் பெரிதும் கடமைப்பட்டவர்களாவோம். அறிஞர்கள் இதனுள் கூறப்பட்டுள்ள பொருண்மையை அறிந்து செயல்படுத்த 'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என எல்லோரும் இன்புற எனக்குத் தெரிந்த அளவில் உரையும் எழுதி செய்முறைகளும் தொடர்ந்து கொடுத்துள்ளேன்.

"நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்
பண்புடை யாளர் தொடர்பு."
—குறள்

"தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு."
—குறள்

மேற்கூறிய தமிழ் மறைக்கிணங்க இந்நூலை மீண்டும் மீண்டும் படித்து ஒருவாறாகப் பொருளைச் சேர்த்தபின் சுடச்சுட ஒளிவிடும் பொன்னைப் போன்று படிக்கப் படிக்கப் புதுப் புதுக் கருத்துக்களைக் கொடுத்து நூலுக்கும் தேரன் கருத்துக்கும் மெருகை யூட்டியது. இந்நூலில் கூறப்பட்ட பல்வகை மருந்து செய்முறைக்குக் கூறப்பட்டுள்ள சரக்குகளுக்கும் மூலிகைகளுக்கும் நூலாசிரியரால் அளவு கொடுக்கப்படவில்லையாதலால் மருத்துவர் கள் யுக்தானுசார அனுபோகப்படி செய்து கொள்ள வேண்டும்.

தேரன் மகா கரிசல் என்னும் இந்நூலுக்குப் பெரு மதிப் பிற்குரிய ஹக்கீம் பா. முகம்மது அப்துல்லா அவர்களால் பொருள் எழுதப்பட்டுள்ளது. அந்நூலில் அகர முதல் ஔகாரம் வரையி லுமே செய்முறைகள் விளக்கப் பெற்றுள்ளன. இந்நூல் கிடைக் கப்பெருமையால் பத்து ஆண்டுகட்டு முன் என்னால் பிழை திருத் தம் செய்யப்பட்ட தேரன் மகா கரிசல் நூலின் செய்யுள் மூலம் 'நந்தி'மாத வெளியீட்டில் தற்போதைய சித்த மருத்துவ இயக்குநர் டாக்டர் **திரு. பு. மு. வேணுகோபால்** எச். பி. ஐ. எம்., அவர்களால் வெளியிடப்பட்டது. அதைத் தொடர்ந்து 'அ' முதல் 'மெ' வரை யுள்ள தலைப்புக்களில் ஒரு சில நீங்கலாக ஏனையவற்றிற்கு அரும்பதவுரை விளக்கமும், பல தலைப்புக்களுக்கு அரும்பதவுரை களுடன் செய்முறை விளக்கங்களும் தெளிவாக இந்நூலில் கூறப் பட்டுள்ளன.

மேலும் இந்நூல் குறுந்தாழிசை மோனை சந்த வருக்கத்துறை யில் அமைந்துள்ளது. அகர வரிசையில் எழுதப்பட்ட இந்நூல் "மெ"வரையே காணப்படுகின்றது. இதனை ஆராயுமிடத்து இந் நூல் முழுதும் கிடைத்ததாகக் கூற முடியாது.

இந்நூலில் வாத பித்த கபத்தினுடைய தொழில், நாடி விபரம், சில நோய்களின் குறி குணங்களும் சிகிச்சை முறைகளும் கற்பங் கள், நோயினுற்பத்தி, நாடி, நிறம், மலம், மூத்திரம் முதலியவற்றைக் கொண்டு நோய்க்கணிப்பு முறை, நோயணுகாது தடுக்கும்முறைகள், உணவுப் பண்ட குணம், நசியம், நாசிகாபரணம், ஒற்றடம், கலிக் கம், அஞ்சனம் போன்ற புற சிகிச்சை முறைகள் முதலியவைகளும் மற்றும் குடிநீர், கற்க வகைகள், சூரணம், குழம்பு, இலேகியம், மாத்திரை, நெய், பற்பம், செந்தூரங்கள் போன்ற மருந்து வகை களும் மிக நுணுக்கமாக மருத்துவ மாணவர்களுக்குப் பயன்படும் முறையில் கூறப்பட்டிருக்கின்றன.

இந்நூல் சித்த மருத்துவர்களுக்கும் மேல்பட்டப்படிப்பு மாண வர்களுக்கும் பெரும்பயன் விளைவிக்குமென நம்புகிறேன்.

இத்தகைய அரிய நூற்களுக்குப் பொருள் எழுதிட அவர்கள் தங்களாலான உதவிகளைச் செய்வார்களெனவும் நம்புகிறேன்.

இந்நூலுக்கு உரையெழுதுங்காலத்து உடனிருந்து தொகுத்து எழுதி நூல் முற்றுப்பெற உதவிய சித்த பாடப்புத்தகக் குழுவைச் சேர்ந்த வித்துவான் **திரு. ஆ. முத்தையா** அவர்களுக்கும், பிழைதிருத்தம் செய்யப் பேருதவி புரிந்த பச்சையப்பன் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் வித்துவான் **திரு. அன்பு கணபதி** அவர்களுக்கும் குறுகிய காலத்தில் அன்புச் செல்வி அச்சகத்தில் நூலை நன்முறையில் உயர்ந்த தாளில் முழுப்பொறுப்பினையும் தாமே ஏற்று அச்சிட்டு வெளியிட உறுதுணையாயிருந்த டாக்டர் **திரு. ஆ. ஆனந்தகுமார்** ஜி. சி. ஐ. எம்., அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரியப்படுத்திக் கொள்ளுகிறேன்.

இந்நூலிற்கு உரை எழுதவேண்டும் என்ற எண்ணத்தைத்தெரியப்படுத்திய உடன் பேராசிரியர் டாக்டர் **திரு. க. சு. உத்தமராயன்** எச். பி. ஐ. எம்., (முன்னாள் இந்திய மருத்துவத் துறை இயக்குநர்) அவர்களுக்கு சித்த பாடநூல்களில் முன்னர்வெளிவந்த சில கரிசல் செய்யுட்களின் உரையையும் பயன்படுத்திக் கொள்ளும்படி கருத்துரைத்து வழிவகுத்துக் கொடுத்தமைக்கும் தேரனின் சிறந்த புலமையைப்பற்றி அரியதொரு ஆராய்ச்சியுடன் கூடிய பாராட்டுரை வழங்கியதற்கும் என் நன்றியைத் தெரியப்படுத்திக் கொள்ளுகிறேன்.

ஐம்பது ஆண்டுகட்கு முன்பு இந்திய மருத்துவத்தை வளர்க்க முற்பட்ட முதலமைச்சராகப் பதவி வகித்த அரசியல் மேதை **பானகல் அரசர்** அவர்களைப் பின்பற்றி இப்பொழுது சித்த மருத்துவம் சீர்பெற்று விளங்கிட பல்வேறு மட்டத்திலும் வேண்டுவன வேண்டியாங்கு செய்து சித்த மருத்துவத்திற்குப் புத்துயிரூட்டி மறுமலர்ச்சிகாணத் துடித்திடும் மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர், **மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்** அவர்களுக்குத் தமிழ் உலகம் மிகவும் கடமைப்பட்டுள்ளது.

சென்னை,
30-5-74

டாக்டர். ஆர். தியாகராசன்



திரு டாக்டர் ஆர். தியாகராசன், L. I. M.

உரையாசிரியர்—தேரையர் மகாகரிசல்

பொறுப்பு அலுவலர்,
சித்த மருத்துவ மைய ஆராய்ச்சி நிலையம்,
சென்னை-10

தலைவர்,
சித்த மருத்துவ அறிவியல் வளர்ச்சிக் குழு,
சென்னை-29

பதிப்புரை

"அருமை உடைத்தென்று அசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும்"
—திருவள்ளுவர்

உலகின் மிகத் தொன்மையானதும், விஞ்ஞானச் சிறப்பு மிகுந்ததுமான சித்த மருத்துவத்துறை தற்சமயம் புத்துயிர் பெற்றுள்ளது. இதற்குக் காரணம் தற்போதுள்ள தமிழக அரசு, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மாண்புமிகு **பேராசிரியர் திரு. க. அன்பழகன்** எம். ஏ., அவர்கள் சித்த மருத்துவத்தின் சிறப்பினை நன்குணர்ந்திருப்பதுடன், இந்த சித்த மருத்துவத்துக்குத் தேவையான அரசினுடைய ஆதரவைக் கொடுத்தால், இம் மருத்துவம் தமிழ் மக்களுக்கு மட்டுமன்றி உலக மக்கள் அனைவருக்குமே நல் வாழ்வைத்தரும் என்பதில் இந்த அமைச்சர் ஐயமற்ற தெளிவு பெற்றிருப்பதேயாகும். இத்தகைய தெளிவு அரசியல் உலகிலிருப்போருக்கு மிகவும் அபூர்வமாக அமைகிற ஒன்றாகும். இந்த அமைச்சரின் ஆர்வம் காரணமாய், உலக மருத்துவ அறிவியல் துறையில் தமிழ் நாட்டின் பங்கு அதிகப்படப் போவதை நாம் இன்னும் சில ஆண்டுகளிலேயே கண்கூடாகக் காண இருக்கின்றோம்.

தமிழ்ச் சித்த மருத்துவ இலக்கியங்களிலே தேரையர் மகா கரிசல் உயர்ந்த மொழிச் சிறப்பும், பொருட் செறிவும் மிகுந்தது. இந்நூலுக்கு உரை எழுத, மிகுந்த தமிழ்அறிவும், சித்த மருத்துவப் புலமையும், இவ்விரண்டுடன் பல்லாண்டு அனுபவத் தெளிவும் தேவையாகும். எனவே இதற்கு உரை எழுத வேண்டுமென்று நான் விரும்பிக் கேட்டபோது, எனது ஆசிரியர்கள் அடக்கம் காரணமாய், ஒருவாறு தயங்கியது இயற்கையே. தலைப்பில் கூறிய திருக்குறளின் படியும், கல்வி அறிவிலும், விஞ்ஞானத்திலும் பயிற்சியும் பற்றுதலும் கொண்ட ஒரு பேராசிரியர் இந்நாட்டின் அமைச்சராக இருக்கின்ற காரணத்தாலும், எனது அன்புக்குரிய மற்றொரு பேராசிரியர் டாக்டர் **ஆர். தியாகராசன்** அவர்களை அன்பினால் வற்புறுத்தி இந்நூலுக்கு உரை எழுதச் செய்தேன்.

இத்தேரர் மகாகரிசலின் மூலத்தை மட்டும், எங்கள் அன்புக் கோரிக்கையினை ஏற்று, "நந்தி" எனும் திங்கள் இதழில் வெளி

யிட்ட எனது அன்புள்ள மற்றொரு பேராசிரியர் டாக்டர் **பு. மு. வேணுகோபால்** அவர்களை நாம் மறக்க இயலாது.

எங்கள் அன்புள்ள மற்றொரு பேராசிரியர் டாக்டர் **சி. எஸ் உத்தமராயன்** அவர்களின் அன்பு உதவியினை பாராட்டுரையில் காணுவீர்கள்.

தமிழகச் சித்த மருத்துவப் பெரியார், காலஞ்சென்ற தியாகி, பண்டித **எஸ். எஸ். ஆனந்தம்** அவர்களது சீரிய பெயரினைத் தாங்கி இயங்கி வருகின்ற "பண்டித எஸ். எஸ். ஆனந்தம் சித்த மருத்துவ ஆராய்ச்சி நிலைய"த்தின் "சித்த இலக்கிய மறுமலர்ச்சி வரிசை"யின் முதல் வெளியீடாக வருகின்ற ஒரு நூல், சிறந்த ஒன்றாக இருக்க வேண்டுமென்று பெரிதும் விரும்பினேன். அத்தகு நூலாக இத்தேரையர் கரிசல் அமைந்ததோடன்றி, மருத்துவ ஞாயிறு பண்டித **எஸ். எஸ். ஆனந்தரது** முதலாவது ஆண்டு நினைவு நாளில் வெளியிட நினைத்த இதனை, இரண்டாவது நினைவு நாளான 18-6-1974-ம் நாள் செவ்வாய்க்கிழமை வெளியிட இறையருள் கூட்டி வைத்தது.

குருடனுக்குக் கண் கிடைத்ததை விட மிக அருமையானது நமது சித்த மருத்துவத்துக்குப் பெருமதிப்புக்குரிய **பேராசிரியர் க. அன்பழகன்** அவர்கள் கிடைத்திருப்பது. எனவே, இந்தத்தமிழகத் தலைமகன் ஆட்சியில் இன்னும் அனேக சித்த நூல்களை வெளியிட்டு, நாம் தமிழ் மண்ணில் பிறந்த கடமையை நிறைவேற்ற இறைவன் அருள்புரிவானாக.

"என்னை நன்றாக ஆனந்தம் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ் மருத்துவம் செய்யுமாறே"

சென்னை,
16 - 6 - 74

ஆனந்தகுமார்,
இயக்குநர்

பண்டித எஸ். எஸ். ஆனந்தம் சித்த மருத்துவ ஆராய்ச்சி நிலையம்,
14. ராகவையா சாலை, தியாகராயநகர், சென்னை. 600017.



சித்த மருத்துவப் பெரியார்,

மருத்துவ ஞாயிறு,

பண்டித எஸ். எஸ். ஆனந்தம்

அவர்கள்

தேரையரும் வரலாறும்

இவர் தமிழிற் பல மருந்து நூற்கள் (ஆயுள் மறை) செய்தருளிய பேரறிஞர். இவரது நாடு, நகரம், குலம் முதலியன விளங்கவில்லை.

இவர் செய்தருளிய நூற்களில் சைவ வழக்காக மங்கலங்கூறி யுண்மையானும் சைவம், வினை முதலிய சொற்களைப் பொருள்களின் எடைகளுக்கு வழங்கி யுண்மையானும் இவரைச் சைவ சமயத்தினர் என்னலாம். இவர் தமிழ் மொழியில் வல்லுநராதலுடன் வடமொழியிலும், தெலுங்கிலும் வல்லவரென்பது இவர் செய்தருளிய நூற்களில் வரும் தெலுங்கு சொற்களாலும் வடமொழிச் சொற்களாலும் தெரிகிறது.

இவர் செய்தருளிய நூற்கள் சிகாமணி வெண்பா, நிகண்டு, சேகரப்பா, காப்பியம், தரு, நாடகம், அந்தாதி, மிகாவண்ணம், நாண் மாலை, யமகவெண்பா, எதுகைப்பா, கரிசல், நீர் நிறக்குறி, நீர் நெய்க்குறி, தைல வருக்கச் சுருக்கம், தினக்கிரமாலங்காரம், சிகிச்சைக் கிரமம், நோய் மருந்தளவை, பிரதானகுண மூலித்தரு, வைத்தியப்பள்ளு நாடகம், மருந்துப்பாரதம் என இருபத்தொன்றென்பர்.

ஆயின்,

" சிகாமணி வெண்பா நிகண்டு சேகரப்பா
தேரையர் காப்பியந்தரு நாடக மந்தாதி
மிகா வண்ணம் நாண் மாலை யமக வெண்பா
விளங்கெதுகைப் பாயிவை யெல்லோருமெச்சு
மகா மகிமைக் கரிசலெனு முறையீராறும்
வேதாந்த சித்தாந்த வைத்ய வாத
முகாதியினு மசையாத விரிவுள் வேத
முத்தமுமா விளங்கு மிது சத்தியந்தானே."

என்னுஞ் செய்யுள் பன்னிரண்டு நூற்களையே விளக்குகின்றது. இவர் செய்த நூற்களெல்லாம் ஒருங்கே ஒருவர்பாற் கிடைக்காமையானும் எல்லாம் அச்சில் வராமையானும் உண்மை உணர்தற்கிடமில்லை.

ஆயினுஞ் சிலர் இச்செய்யுள் தோன்றிய காலத்து மற்ற நூற்கள் செய்யப்பட்டிருக்க மாட்டா வென்றும், சிலர் நீர் நிறக்குறி, நீர் நெய்க்குறி, தைல வருக்கச் சுருக்கம், தினக்கிரமாலங்காரம், சிகிச்சைக் கிரமம், நோய் மருந்தளவை என்பன காப்பியத்துள்ளன வென்றும், பிரதான குண மூலித்தருவையே தருவென்றதென்றும் வயித்தியப் பள்ளு நாடகம், மருத்துப் பாரத நாடகங்களையே நாடகமென்றதென்றுங் கூறுவர்.

மொழிந்த மருத்துப் பாரதத்தின்
முறைநாடகத்தி னுரையருத்த
முன்னிச் சிலேடை யிருபொருளும்
முடித்துக் கொளுவார் பண்டிதரே
வழிந்த திருப்பாற் கடலமுதம்
மருந்தானதுவு மருந்தாமே
மனத்தா லினத்தா லிதைப் பிரித்து
மருத்துப் புலவர் தமிழ்ப் புலவர்
மொழிந்த மேகச் சம்பரத்தின்
பொருப்பா ருதவ விருப்பாராய்
புணரி சேர்த்துக் கொண்டு மிகப்
பூவா முயிர்கட் களிப்பதென
மொழிந்த தேரப் பெருமானு
முதவியாகப் பண்டிதர்க்கிங்
குறுதி மரும நூலுரைத்தா
னென்று மினிமே லுரையானே.

என்ற செய்யுளால் மருத்துப் பாரதமே இவர் செய்த நூற்களில் ஈற்றதென்றும் இதன் பின்னர் ஒரு நூலுஞ் செய்யவில்லை என்றுந் தெரிகிறது.

ஈண்டுக் கூறப்பட்ட நூற்கள் இருபத் தொன்றில் யமக வெண்பா, கரிசல், நீர் நிறக்குறி, நீர் நெய்க்குறி, தைல வருக்கச்

சுருக்கம் என்னும் ஐந்து நூற்கள் அச்சிடப்பட்டுள்ளன. இவற்றில் யமக வெண்பாவுக் கொரு பழைய உரையுண்டு அதில் பல மேற் கோள் அருமையாய்க் காட்டப்பட்டுள்ளன. அச்சிட்டிருக்கும் யமக வெண்பாவில் அம்மேற்கோள்களிலொன்றுங் காணப்பட வில்லை.

இவையன்றித் தேரையர் 100 என்றும் 500 என்றும் 1001 என்றும் 1500 என்றுஞ் சில நூற்கள் வெளிவந்திருக்கின்றன. அவற்றின் செய்யுணடை, சொன்னோக்கு, பொருணோக்கு முதலி யவை இவர் செய்யுட்களுக்கு ஒப்பாமையால் அவை இவராலியற் றப்பட்டன வல்ல வென்பதொருதலை. இவர்,

"உத்தமஞ்சிவாடு சுமி நீ வெனவேமனர் வடுகி

லுரைத்தல் போல"

(கரிசல் 5 வது செய்யுள் துர்க்கி வணக்கம்) என்றோர் காட்டு வேமன்ன பத்யத்தினின்று மெடுத்துரைத்தமையின் இவர்வேமன்ன யோகீஸ்வரர் காலத்திற்குப் பின்னராவது அவரது காலத்திலா வது இருந்தவரென்னலாம்.

வேமன்னர் கி. பி. 1386 ஆம் ஆண்டுக்கும் 1505 ஆம் ஆண்டுக் கும் இடையிட்ட காலத்திலிருந்தவராக ஆராய்ச்சிக்காரர் எழுதி யிருக்கின்றமையின், இவர் ஏறக்குறைய 500 ஆண்டுகளுக்கு முன்னி ருந்தவர் என்னலாம். இவர்,

"ஆனதிக்காளையா மமைச்சை மேவிடின்

ஆளைப்பரவசமாக்குதலன்றி

ஆற்றுத் தமிழ் மறையாற்றுத் தமிழ்மறை"

கரிசல் நூல் இரண்டாவது ஆசிரியப்பா 19, 20, 21 வது அடிகள் என்றதால் அவை தண்ணீரானது (சிலேஷ்மம்), நெருப்பு (பித்தம்) டன் சேர்ந்தால் நோயாளியைப் பரவசமாக்குவதோடொழியாது திருஞான சம்பந்த மூர்த்தி நாயனர் திருவையாற்றிற்குப் பாடின தமிழ் மறையின் முதல் செய்யுளாகிய,

"புலனைந்தும் பொறிகலங்கி நெறி மயங்கி

யறிவழிந்திட்டைமேலுந்தி

யலமந்தபோதாக வஞ்சேலென் றருள்செய்வா

னமருங்கோயில்''

இதிற் கூறப்பட்ட குணங்களை யெல்லாம் நோயாளியடைவானென் கின்றமையின் இவர்மூவர் தேவார வாராய்ச்சி மிக்குள்ளாரெனவும்,

''ஏடக நீர் திருமாலெழுத்துப் படியொன்
றுச் சிறுக்கி''

நாரி கேளாஞ்சனச் செய்யுள் 3 வது அடி திருமாலெழுத்து, அஷ்டாக்ஷரமாகலின் இளநீர் எட்டுப் படி விட்டுப் பெருகின அளவை அடுப்பிட்டெரித்து ஒருபடியாகச் சுருக்கி என்றது பெருக்கிக்குத் தக்க எதிர்வினை டெ:ச்சம் சிறுக்கி என ஆண்டமையின் வினைச் சொல்லாட்சியின் பாகுபாடுகள் நன்குணர்ந்தவரெனப் போதரலின், எழுத்துச் சொல்லிலக்கணங்களில் வல்லுநரெனவும்,

''மாத்திரங்கான் மதிமுக்கால்''

(அச்சிட்ட கரிசலில் பின்னுள்ளவில்வாதிலேகியத்தில் 65 வது அடி)

இஃதிக்காலத்து (மந்திரங்கான் மதி முக்கால்) என வழங்குகிறது. உடலின் வன்மை காற்பங்காயினும் உணர்வின் வன்மை முக்காற் பங்காற் பயன்பெறுமாறு போல என்ற பொருளடங்கியதால் பழமொழிப் பாகுபாடு நன்குணர்ந்தவரெனவும்,

'' நமனுக்கொரு நமன் வெற்றியை நறுக்கிப் பிழி மூக்கில்
நளிருஞ் சுர குளிருந்தலை நடுக்கும் பிணி விடுக்கும் ''

(கரிசல் நசியம் 3, 4, வது அடிகள்) இதில் 'நமனுக்கொரு நமன் வெற்றி' என்றது தும்பையை உணர்த்துகின்றமையின் பொருளிலக்கண முணர்ந்தவரெனவும்,

'சுங்கனெடு - சத்தமஞ்சிவாடு பொன் போல்' என்றதாலும் (கரிசல் 4 ஆவது செய்யுள் 4 ஆவது அடி)

'' ஏகாதசி நவம் ஏற்குமற்றவையே
ஏறு ரேவதியா ரேற்கு மற்றவையே
ஏழை யிரட்டைவில் ஏற்குமோரையே ''

(கரிசல் கற்ப முதலியன கூறின ஆசிரியப்பா 27, 28, 29 ஆவது அடிகள்.)

என்றதாலும், இவைபோன்ற பிறவற்றாலும், சோதிட நூலில் வல்லவரெனவும்,

"மாயா மலட்டுவலிக் கமைவேல் சம்படிநீர்
மாயா மலட்டு மடலட்டு - மாயா
பகரணமண் டாமலோர் பங்கீடாய் நாளும்
பகரணமண் டாமலுண்டு பார்" (யமக வெண்பா)

என்பதாதியால் யாப்பிலக்கணத்தில் வல்லவரெனவும்,

"திப்பிலி மஞ்சள சமதாக மிள
கைப்பொடி யுஞ்செய் திரியி லேறவிடு
செப்பிய நிம்ப மருவு நேயமுறு சுடரேவை"

எனவும்,

வீரத்து மிக்கது பற்பங்களே - பரி
காரத்து மிக்கது பற்பங்களே
பாருக்குண் மானிடர் நோய் போக - வரு
பண்டிதருக்கெல்லா மாமோக
வீரதடாரி - பிணிக்கொரு
பாரகுடாரி - விசை பெறு
தீரதடாரி - வினையடு
சூரிக் குழு
நேரொத்தது
மேருக்கிணை
பாரப்புறம் (வீர)

எனவும்,

மத்தனமாகிய தொக்கணத்தின்
செயல் வகுப்பேனே - சதா
நித்தமும் வாதம் பிணித்த பிணிப்பைச் செகுப்பேனே.
(இவை தரு)

எனவும் புகன்றிருப்பதால் சந்தச் செய்யுள் பாடுவதில் வல்லவரெனவும் வெள்ளிடைமலை போல் விளங்குகின்றது.

இவர் செய்த நூற்கள் எல்லாம் பெரும் புலவர்களானும் வியக்கக்கூடிய தன்மையிலிருப்பினும், அவற்றில் 'மருத்துப்

பாரதமே' கருதொணு வியப்பைக் கற்ருர்க்கும் மற்ருேர்க்கும் உண்டாக்குமென்பதிலொரு சிறிதும் ஐயப்பாடின்று.

இத்தமிழ்ப் பெருங்கடலானர்க்குத் " தேரையர் " எனப் பேர் வந்தமைக்குக் காரணமொன்றும் புலனுக வில்லை. ஆகலின் அதை ஒருவாறு ஆராயத்துணிந்த போழ்து முன்னரே யாராய்ந்துள்ள இருவர் ஆராய்ச்சிகள் எம்பார்வைக் கெட்டியன. அவை ஆயுள் வேதபாஸ்கரர் சி. த. சுப்பிரமணிய பண்டிதர் குமாரர், ஆறுமுகம் பிள்ளையவர்கள் ஆராய்ச்சி யொன்று, விருதை சிவஞான சுவாமி கள் ஆராய்ச்சி மற்ருென்று.

இவ்விருவரில் சி. த. ஆறுமுகம் பிள்ளையவர்கள் தேரையரை 'மண்டுக மஹரிஷி' யென்று வரைந்திருக்கின்றனர். அதற்குக் காரணமொன்றும் ஏற்படவில்லை. ஆயின் 'தேரையர்' என்கிற அவரது பெயர்ப் பகுபதத்தை தேரை + அர் எனச்சிதைத்து அப் பகுதிப் பொருள் தேரையெனக் கொண்டு அதற்கினமாகிய தவளைக்கு வழங்கும் வடமொழிப் பெயராலழைத்தல் ஒருவாருெக்கு மெனக் கருதி அவர் பேரை 'மண்டுக மஹரிஷி' எனவரைந்தனர் போலுமெனக் கருதற் கிடமுண்டாகிறது.

ஆனல் தேரையர், தாஞ்செய்த எந்நூலிலும் தம்மை மண்டுக மஹரிஷி யென்று சொல்லவில்லை.

உலகிலுள்ள தமிழ் மருந்து நூலாராய்ச்சி வல்லுநர் எவரும் அவரைத் தேரையர் எனவே புகல்கின்றனர்.

இவரை மட்டும் தமிழ்ப் பேரான 'தேரையர்' என்பதை வட மொழி பெயர்த்து 'மண்டுக மஹரிஷி' எனக் கூறினதினல் அத்தே ரையருக்கு ஒரு சிறப்பு முண்டாகமாட்டாது.

அங்ஙனங் கூறுவது தமிழ் மருத்துவர்களை மயக்கற்கன்றி வேறில்லை. இங்ஙனங் கூறினர் இவரொருவரேயன்று. இவரது தந்தையார்க்கும் அது வழக்கமே. அஃது இவரது தந்தையார் எழுதின ஜீவரக்ஷாமிர்தத்தில் பலவிடங்களில் காணலாம். அவற்றி லொன்று ஜீவரக்ஷாமிர்தம் நேத்திரரோக பேதத்தினீற்றில் அவ் ரோகங்களுக்குச் சொல்லியிருக்கும் மருந்துகளிலொன்ருக,

"லிகுச நவநீத பாவன லவங் காஞ்சனம்" என்று வரையப் பட்டிருக்கின்றது.

அஃது அகத்தியர் செய்த பரிபூரணம் 400-ற்றில் உள்ளது. அது

"பார்த்திபனே கண்ணிலுள்ள வியாதி போகப்
பாடுகிறேன் சம்பழத்தி னூற்றெ டெட்டு
தோற்றுமற் றுளை துளைத்து லவங்க நாட்டித்
துரிதமுடன் கயிறு கோத்துச் சட்டியிலே தூக்கிப்
பார்த்தாலே விளாங்காய் போல பசுவின்வெண்ணெய்
பாலகனே லவங்கமெலாம் பரப்பி மூடே."

"மூடியே யச்சட்டி தனிற்படாமல்
மூர்க்கமின்றிச் சுத்தகங்கை விட்டுவை நீ
நாடியே நாற்பது நாள் வேறே வேறே
நலமான சுத்தகங்கை விட்டு வைத்துத்
தேடியே பிறகு வெண்ணெய் தனையெடுத்துத்
திறமான தாம்பிரத்தின் பரணிவைத்துச்
சாடியே பழமுடனே லவங்கப் பூவுந்
தள்ளிவிடு வெண்ணெய்தனைக் கண்ணிற் றீற்றே."

என்பது.

இச்செய்யுட்களில் கண்ணிலுள்ள வியாதி போகப் பாடுகிறேன் என்றுரேயன்றி அவரிட்ட பேரால் சொல்லவில்லை.

அச்செய்யுட்களிற் கூறப்பட்ட மருந்து வருமாறு :

நன்றாய்ப் பழுத்த பெரிய எலுமிச்சம்பழத்தில் நூற்றெட்டு தொளை செய்து ஒரு கயிற்றில் கட்டி ஒவ்வோர் தொளைக்கும் ஒவ்வோர் இலவங்கந் தாள்நீண்டதாக மொட்டெடுத்துவிட்டுச் செருகி அவை தெரியாதபடி பசுவெண்ணெய் முழுமைக்கும் அப்பி ஒருமண் சட்டியில் சுத்தமான தண்ணீர் விட்டு அந்தச் சட்டியில் படா வண்ணம் தண்ணீரில் நனையத் தொங்கவிட்டு நாள்தோறும் பழைய நீரைவடித்துப் புதுநீர் விட்டு தூசி அடையா விடத்தில் வைத்து நாற்பது நாள் சென்ற பின்னர் மேலுள்ள வெண்ணெயை மாத்திரம் தனியாக வெடுத்து ஒரு செப்புப் பரணியில் வைத்துக் கொள்ள வேண்டுமென்பது.

இந்த மருந்துக்குத் தமிழ்ப்பெயராகவே "பழக்கிராம்பு பக்குவ வெண்ணெய்" எனப் பேரிட்டாலென்ன குற்றம் நேரும்? அப்படி மாறுதலாக வைத்த பேருங் குற்ற முடையதே எங்ஙனமெனின் அப்பேர்லிகுசம் - எலுமிச்சம் பழத்தாலும், நவநீதம் - வெண்ணெ

யாலும், பாவனம் - பக்குவப்படுத்தப்பட்ட, லவங்கம் - லவங்கமாகிய, அஞ்சனம் - மை எனப்பொருளிடப் படுகின்றது. ஆண்டுப் பொருள் கொள்ளின் லவங்கம் அஞ்சனமாகின்றதேயன்றி வெண்ணெய் அஞ்சனமாகவில்லை. மருந்திலோ வெண்ணெய் மையாகின்றது. தமிழ் மருத்துவர்களில் பெரும்பாலார், கல்வியில்லாதவர்களாகவேயிருந்து உரை நடையில் வழக்கமாய் எழுதிவைத்துள்ள மருந்து முறைகளைக் கோண்டே வயித்தியஞ் செய்து வருகின்றார்கள். அவர்கட்கெல்லாம் இச்செயல் மயங்கற்கிடமேயாம். இதனால் தமிழ் வைத்தியர்களைக் குறை கூறியதாகக் கொள்ளற்க.

இனி இவர் ஜீவரக்ஷாமிர்தத்தில் தேரையர் வடமொழியிலும், தென் மொழியிலும் வைத்திய நூற்கள் செய்துள்ளாரென்று வரைந்துள்ளார். அதுவும் பொருந்தாது, அங்ஙனம் இவர் செய்ததாக வடமொழியில் ஒரு நூலும் வழங்கப்படாமையின். இனி, விருதை சிவஞான சுவாமிகள் ஆராய்ச்சி வருமாறு. அஃது,

இக்காலத்திற் சூருறைபற்றிய அறுவை முதலிய வற்றில் ஐரோப்பாக் கண்டத்து வைத்தியர் மிகச் சீர்த்தேற்ற மடைந்திருக்கின்றனர் ஆயினும் முற்காலத்தில் தமிழ்வைத்தியரும் அதில் குறைந்தவரா யிருந்திருக்கவில்லை என்பதை ஒரு அரசனுக்கு இடை விடாத மண்டையிடி வருத்த, மண்டையினுள் தேரையிருந்த தறிந்து மருந்தால் மயக்கி மண்டையைப்பீறி ஆண்டிருந்த தேரையை இடுக்கியா லெடுக்க அகத்தியர் முயன்ற பொழுது, அவர் மாணுக்கர் சட்டியில் நீரேந்த தேரை அதிற் பாய்ந்து செல்ல, மறுபடி மண்டையைப் பொருத்தியாற்றி மாணுக்கர் தேரை வெளிப்பட நல்வழி கண்ட நுண்ணறிவை மெச்சி அவர்க்குத் தேரையர் என்ற பேர் தந்தனர் என்ற சரித்திரம் நன்கு விளங்குகின்றதென்பது.

(இஃது இவர் திருக்குறள் மருந்து என்று அச்சிட்ட ஒரு சிறு பதிப்பில் கண்டது.)

இவ்விருதை சிவஞான சுவாமிகளும் நூல் வழியாய் உணர்ந்தெழுதினவராகத் தோன்றவில்லை. அங்ஙனமிருப்பின் ஓர் அரசற்கென்பதை இன்ன அரசற்கென அவ்வரசன் பேரையும், அன்னோனாட்டையும் குறித்திருத்தல் வேண்டும். அன்றி தேரை வெளிக்காணு முன் அவரது மாணவர்க்கிருந்த பேரைத் தெரிவித்துப் பின்னர் அவர் கொடுத்த பேர் தேரையர் எனனுதல் வேண்டும். அன்றி இக்கதையை விளக்கு நூலின்னதெனவாவது அந்நூலைக் குறித்திருத்தல் வேண்டும். இவர் நேராகக் கண்டவாறு மயக்கி, பீறி, பொருத்தி, ஆற்றி என இவ்வளவு தெளிவுடன் எழுதியுள்ள

வற்றை யுன்னிப் பார்க்கின் அம்மயக்க மருந்தையும் பிறுங் கருவியையும், பொருந்தி ஆற்றின மருந்துகளேயும் கண்டவராகவே தோன்றுகின்றமையின் அவற்றை எடுத்து விளக்கி யிருத்தல் வேண்டும். தாம் அச்சிட்டது சிறு பதிப்பாகலின் அக்காலத்து வெளிப்படுத்த இயலாதிருக்கலாம். ஆனல் இக்காலத்தாவது அவற்றை வெளியிடுவாராக. இவர் சூருறையை நிலே நிறுத்த வேண்டுமென்னு மொன்றையே கருதி அக்கதையின் உண்மையை உணராராயினர். இவ்வளவும் வந்த மாறுதல்களெல்லாம் 'தேரையர்' என்கிற சொல்லின் 'தேரை' என்பது பகுதி யெனக் சொண்டிருக்கும் காரணமேயாகலாமென்ப தொருதலே.

இம்மாறுதல் இவர்களோடு விட்டுவிடவில்லே சில ஆண்டுகட்கு முன்னிருந்த யாழ்ப்பாணம் நா. கதிரைவேற் பிள்ளேயையும் பிடித்துக் கொண்டது. 'என்னெனின்' அவர் எழுதின அகராதியில், 'தேரையர்' என்ற சொல்லுக்கு இவர் ஒருவாற்ருனு நீங்காத தலேக்குத்தினல் வருந்தின அரசனெருவனுக்கு அந்நோயின் காரணத்தை நிதானித்துச் சம்மோகினியைப் பிரயோகித்து அவரை மயக்கி அவன் கபாலத்தைத் திறந்து அமிர்தத்திலிருந்த தேரையை ஒரு நீர்க்கிண்ணத்தினுள்ளே பாயவைத்துப் பின்பு சந்தான கர்ணியினலே அந்தக்கபாலத்தை முன்போலப்பொருத்தி அந்நோயை நீக்கினரென்பது என வரைந்திருக்கின்றனர் * ஆயின் இது கர்ண பரம்பரை எனவும் எழுதியுள்ளார். அதனல் அவர் மீதொன்றுஞ் சொல்வதற்கில்லே. அன்றி அவர் வைத்திய முணராதார். மேற்கண்ட இவரைப் போன்றவர்கள் கூறினவற்றைக் கொண்டு அவர் அங்ஙனம் எழுதி இருக்கலாம். அது பொருந்தாக் கதை என்பதை அடியிற் கூறப்படும் வழக்குகளாலுணர்ந்து இனி அகராதி அச்சிடுவோர் அக்கதையை நீக்கி அச்சிடுவரென்று எண்ணுகிறேன்.

ஒரு சாரார் தேரையர் ஒருவர் எனவும் மற்ருெரு சாரார் இருவர் எனவும் இன்னெரு சாரார் மூவர் எனவுங் கூறுவர்.

"ஆதிபரை நந்தியமுதக் கடத்தோ டுதித்தோன்
அச்சுவனி தேவர்விரி யலேகடலே நுகர்ந்தோன்
கோதிலரும் புலத்தியனங் தரும சவுமியனிக்
குரவரும்"

எனத் தயிலவருக்கச் சுருக்கத்திலும்,

---

* இஃதொப்பதொரு வரலாறு போஜப்ரபந்தம் என்னும் வடமொழி நூலிலும் கூறப்பட்டிருக்கின்றது.

" நிசதரு

மசவுமி

யசகுரு

வசமே"

என மகாமகிமைக் கரிசலிலும் தாமே புகன்றிருப்பதால் தமக்கு ஆசிரியரானார் தரும சவுமியர் என விளங்குகின்றது.

யூகி முனிவர் தாம் செய்தருளிய சிந்தாமணி 800 ற்றில் தேரையர் தமக்காசிரியர் எனவும், அவர் புலத்தியர்க்கு மாணவரெனவும் கூறினார் அது,

சொல்லிடவே தேவிக்குச் சதாசிவன்றான்
சொல்லவே தேவியு நந்திக்குச் சொல்ல
நல்லிடவே நந்திதங்வந் த்ரிக்குச் சொல்ல
நயமுடன் தங் வந்த்ரியசு வனிக்குச் சொல்ல
அல்லிடவே யசுவனியாங் தேவர் தாமு
மகத்தியருக் குறைந்திடவே யம்முனீந்த்ரன்
புல்லிடவே புலத்தியருக் குபதேசிக்க
புலத்தியருந் தேரையற்குப் புகன்றிட்டாரே.

புகன்றிட்டார் தேரையனா முனிவன் தானும்
பூதலத்தில் யூகியா மெனக்குச் சொல்ல
உகன்றிட்ட யூகியென்ற முனியாம் யானே
உலகத்தோர் பிழைத்திடவென் றுரைக்கலானேன்

என்னும் இச்செய்யுட்களால் தெரிகிறது.

ஆயின், யூகி முனிவர் தேரையர் என்ற பேர் வந்தமைக்குக் காரணமொன்றுஞ் சொல்லவில்லை.

ஆனால் தேரையர் சொல்லும் குரு பரம்பரைக்கும், யூகி முனிவர் சொல்லும் குரு பரம்பரைக்கும், சிவபெருமான், உமையம்மை, நந்தியம் பெருமான், தங்வந்த்ரி, அச்சுவனி தேவன், அகத்தியன், புலத்தியன் என்பவர்கள் வரைக்கும் யாதோர் மாறுதலுமில்லை.

புலத்தியருக்கு மாணவராகத் தரும சவுமியர் என்பார் ஒருவ ரிருந்ததாகவும், அவருக்குத் தாம் மாணவ ரென்றுந் தேரையர் கூறுகின்றார்.

புலத்தியருக்கே நேராகத் தேரையர் மாணவராக இருந்தா ரென யூகி முனிவர் கூறுகின்றார்.

ஆயின், தரும சௌமியருக்கு மாணவரான தேரையரால் செய் யப்பட்டவைகளே முன்னர்த் தொகுத்துக் காட்டிய நூற்களாம். அவைகளே இப்பொழுது வழங்கப்பட்டு வருகின்றன. யூகிமுனிவர் சொல்லுகின்ற தேரையரால் செய்யப்பட்ட நூற்கள் ஒன்றுங் காணப்படவில்லை. ஆகலான், அவ்விரு தேரையர்களும் ஒருவரா கவே இருந்திருக்கவேண்டுமென்னுங் கொள்கையுடையார் சிலர் ஒரே தேரையர் இருந்தனர் என்ப.

யூகிமுனிவரால் சொல்லப்பட்ட தேரையரால் செய்யப்பட்ட நூற்கள் காணப்படாமைக்குக் கடல்கோள் முதலிய வழிகள் பல விருந்திருக்கலாமாகலானும், குருபரம்பரையில் மாறுதலிருக்கின்ற மையானும் ஒரு தேரையரிருந்தனர் என்பார் கூற்றை மறுக்கும் கொள்கையுடையார் சிலர் இருவர் தேரையர் இருந்தனர் என்ப.

ஆனால், விருதை சிவஞானயோகிகள் கொள்கையின்படி அவர் அகத்தியர் மாணவர் எனற்கு ஓராதரவுங்காணப்படவில்லை.

எத்தனை தேரையர்களிருந்தாலுமிருக்க, அத்தேரையர் என்கிற பேர் மாத்திரம் 'மண்டூகமஹரிஷி' என்கிற பேரிலிருந்து தமிழாக் கப்பட்டதும், தேரை எடுத்தகாரணத்தால் வந்ததென்பதும் அன்று. இப்பொழுது தேரையர் நூற்களென வழங்கிவரும் சில உண்மை நூற்களினின்றே மேற்கோள்கள் காட்டி இதனை நிலை நிறுத்துவோம்.

எங்ஙனமெனின்,

" அத்தி முகம னணிமழவா குங்கருணை
யத்தி முகம னணிகாப்பே - அத்தி
முகவா கடமேனை முன்னாதை தேரன்
முகவா கடமறைக்கு முன்."

" அவையடக்கம் புன்மை யநீத மகந்தை
அவையடக்கம் பம்போ யறஞ்செ- யவையடக்க

கத்திகையா மென்னுங்கவிபோல் தேரன் வெண்பாக்
கத்திகையா மோனையம கம்."

" தேனைநிக ராயுண்மறைத் தேரன்அரு ளிச்செய்த
மோனை யமக வெண்பா முந்நூறும் "

என யமக வெண்பாவிலும்,

'செயுமுறை தெரிகிலாத் தேரன் நாயடியேன்
உயுமுறை வயித்திய வுரைத்தமிழ்க் கரிசல்'

எனக்கரிசல் பாயிரம், அவையடக்கம் 21, 22 வது அடிகளிலும்

'தேரன் உரைத்த வாகடமே
தேர்ந்த தென்று தானுணரே'

எனத்தேங்காய்க் குழம்பில் 16 வது அடியிலும்

'வங்க சுத்தியை யிங்குரைத்திடு
வாகடாதிபர் மேதையோர்
தங்களுக் கொரு நண்புளப்பெயர்
சார வோதினர் தேரனர்'

எனவங்க சுத்தி செய்யுளிலும்

'தங்க கராடகத் திட்டால் - சகந்
தன்னை வசமாக்கு மென்ன சொல்வேனன்
மங்களமான ப்ரசண்ட - மகா
மண்டலீகர் புகழ் பண்டிதனவான்
என்ன வுனைத் தொழுவார்கள் - அப்பால்
எவருக்கு மேலான தவசித்தியாவாய்
சொன்ன வவிழ்தத்தை யாளும் - துறை
சொல்லுகிறேனது நல்லவனே நீ
கேட்டுக் கடைப்பிடித்து - அந்தக்
கிலகந் தன்னை விசாலமதாகத்
தாட்டிக மாகப் புரிந்தால் - உ
தாரஞ் செய்யு மொருதேரன் என்பாரே ?

என இருப்புச் செந்தூரத் தருவிலும், பிரூண்டும் தம் பெயரைத் தாமே தேரன் என்று புகன்றுள்ளார்.

அன்றியும், இவர் செய்தருளிய மருத்துப்பாரதத்தின் சிறப்புப் பாயிரங்களாக,

"மருத்துப் பாரத நாடகமிதுதனை மதித்து
விருத்தப் பாவினுந் தருவினு மிராகமேல் விரித்துக்
கருத்துக் கேற்றிடச் செய்தனன் தேரன் ஆங்கஞ்சன்
அருத்த மோர்ந்திடிற் சொல்லெலா மவுடதமாமே"

எனவும்,

"இந்த நூலிலிசைத்த வைத்தியம்
எந்த நூலிலுமில்லை யிஃதொன்றே
செந்தமிழ்த் துறைத்தேர சிகாமணி
புந்தித் தாமரைப் பொன்னிக ராவதே"

எனவும்,

"மொழிந்த தேரப் பெருமானும்
உதவியாகப் பண்டிதர்க்கிங்
குறுதிமரும நூலுரைத்தான்
ஒன்று மினிமே லுரையானே"

எனவும் அவரது காலத்தார்களான பாயிரங் கூறற்குரியார்களாலும் அவரது பேர் தேரன் எனவே கூறப்பட்டிருக்கின்றது. ஆகவே அவர தியற்கைப் பெயர் 'தேரன்' என்பதே என நிலைநிறுத்தியவாறும். ஆதலின் அத் 'தேரன்' என்கிறபேரே பிற்காலத்தாரால் 'தேரையன்' அல்லது 'தேரையர்' என்றழைக்கப்பட்டிருத்தல் வேண்டுமென யூகிக்கற்பாலது.

அத் 'தேரன்' என்னுஞ் சொல்லிற்கு இலக்கணங்கூறு மிடத்து, தேர் + அன் எனப்பிரிக்கப் பட்டுப் பகுதி விகுதிகளால் முடிந்த பகுபதமாய் 'தேர்' என்னும் பகுதி அவரது தேர்ச்சியை யுணர்த்துவதாய், அன் என்னும் ஆண்பால் விகுதியுடன் சேர்ந்து தேர்ச்சியை உடையவன் என்னும் பொருள்பட நின்றதொன்ருகும்.

இத்தேரன் என்னுஞ் சொல் தேரையன் என்று வழங்குவதற்கு இலக்கணம் யாதோவெனின், அது,

தேர் + ஐ + அன் எனப் பிரிக்கப்பட்டுப்பகுதி விகுதிகளுடன் சிறப்புப் பொருளைப் பயக்கும் 'ஐ' என்னும் சொல் இடைவிராய், 'தேரையன்' என முடிந்ததென்க.

இது 'வேலையன்' முதலிய சொற்களாலும் உணரக் கிடக்கின்றது.

இவ்விலக்கண விதியை யுணராதாராய்த் தேரை, பகுதியெனக் கொண்டு மயங்கி மண்டுக மகரிஷியெனவும், தேரை எடுத்த காரணத்தால் அவர்க்குத் தேரையர் எனப் பெயர் வந்ததெனவும் கூறினர். இனி அம்மயக்கமொழிவாராக.

அவர்கள் இவ்வளவு விளக்கியும் தேரையே பகுதியெனக் கொள்ளின் வேலையன் என்கிற சொல்லில் 'வேலை'யே பகுதியெனக் கொள்வார்க் கொப்பாவாரென்க.

(செந்தமிழ்ச் செல்வி சிலம்பு 1, 2வது வெளியீடுகளில் தமிழ்ப் பண்டிதரும், சித்த மருத்துவ ஆசிரியருமான மாங்காடு வடிவேலு முதலியார் அவர்களால் 1923—24ஆம் ஆண்டில் இவ்வரலாறு எழுதப்பட்டது.)

இந்நூல் செய்த தேரையர் 300 ஆண்டுகட்கு முன்னர்த் தொண்டை நாட்டின் பாலாற்றின் வடகரையிலுள்ள திருமலைச்சேரி என்னும் ஊரில் பிறந்தவர். நம்பிபூபதி என்னும் வேளாளரின் அருமைத்திருமகன். இளமையிலேயே பன்மொழிகளையும் கற்றவர். மேலும், யானையேற்றம், குதிரையேற்றம் போன்ற உடற் பயிற்சிக் கலையிலும் வல்லவராயிருந்தார். இவர் முத்தமிழ் வல்லவராகவும் விளங்கினர். கூரம் என்னும் ஊரிலிருந்த தரும சௌமியர் என்பவரை ஆசிரியராகக் கொண்டு சித்த மருத்துவத்தினை நன்கு கற்றுணர்ந்தார். இவர் கூரம் என்னுமிடத்தில் வைத்து மகா பாரதத்தைக் கேட்டார். அதன் காரணமாகப் பாரதத்தையும் மருத்துவத்தையும் இணைத்து மருத்துவ பாரதம் என்னும் மருத்துவ மரும நூலினை எழுதினர் என்று தெரியவருகிறது.

(தேவி சித்த பற்பம் கண்ணப்ப முதலியாரிடமிருந்து கிடைத்த தேரையர் காப்பியம் என்னும் நூலினை டாக்டர் சி. என். குப்புசாமி முதலியார் அவர்களிடம் காணப் பெற்றேன். அதில் தேரையர் வாழ்க்கை வரலாறு பற்றி நூலின் முற்பகுதியில் ஆசிரியப்பாவில் எழுதப்பட்டிருந்தது.)

—o—

பொருளடக்கம்

தேரையர்

திருவாய் மலர்ந்தருளிய

வைத்திய மகாகரிசல்

மோனையாசிரியக் குறுந்தாழிசை
வருக்கம்.

பாயிரம்

வெண்பா

நல்லாயுள் வேதமுறை நண்கரிச லாசிரியஞ்
சொல்ல வெனக்குத் துணையாமே - வில்லைக்
கணையா லடலை த்தீ காய்தலினவ் வைக்குத்
துணையான பாதத் துணை.

(பொருள்) நல்லாயுள் வேதமுறை - நன்மையைப் பயக்கின்ற ஆயுள்வேதத்தின் முறையை, நண்-பொருந்தியிருக்கின்ற (அஃதாவது 1. மருத்துவம், 2. நோய்குணம் இரண்டும்), கரிசல்-மகா கரிசல், ஆசிரியம் - மோனையாசிரியக்குறுந்தாழிசை வருக்கம் சொல்ல-சொல்வதற்கு, வில்லை-மனோசிலையை, கணையால்-திப்பிலி ரசத்தினால் அரைத்து,அடலை-பற்பம்செய்து கொடுத்து, ஐத்தீகாய் தலின்-சேத்தும சுரங்களைப் போக்கடித்து தேகத்தைக் காப்பாற்றுவது போல, ★ அவ்வைக்கு-அவ்வையாருக்கு, துணையான-துணையாயிருந்து இரட்சித்த, பாதத்துணை-உபயபாதத்துணை, எனக்குத் துணையாம்-எனக்கும் துணையாகி இரட்சிக்கும் என்றவாறு.

★ அவ்வை கணபதியை வணங்கிக் கொண்டிருந்தபொழுது சேரமான் பெருமாளும் சுந்திரமூர்த்தி நாயனரும் அவ்வையை சொர்க்கத்துக்கழைக்க, அவ்வை வராமையால் அவர்கள் சொர்க்கம் செல்ல, கணபதி அவர்களுக்கு முன் அவ்வையை சொர்க்கத்தில் சேர்த்ததாக வரலாறு.

வினை தீர்த்தார் தையல்நாயகி - முத்துக்குமாரசுவாமி இவர்கள் துதி.

வெண்பா

வித்தகஞ்சேர் புள்ளிருக்கும் வேளூர் வைத்தியரென்
னத்தமிறை நாடிமருந் தாகையால் - சித்திரம் போல்
தையலுமை யாளெனது தாயா ரருளியமுத்
தையனென தாசிரிய னும்.

(பொருள்) மகா மகிமை பொருந்திய புள்ளிருக்கும் வேளூரில், இருக்கும் வினைதீர்த்தவரானவர், எனது கையிலே வழங்குகிற நாடிகள் மூன்றனுள் முதன்மையான அரசன் என்னும் வாதரோகங் களுக்கு ஆமணக்கானது எப்படி அவற்றை நீக்கும் ஒளஷதமோ அதுபோல எனது ஆத்ம ரோகங்களை அறத்தீர்க்கும் அரிய ஒளஷ தம் ஆவார். தையல்நாயகி அம்மை என் மாதாவாம். அவர்கள் ஈன்ற முத்துக்குமாரசாமி எனது அரிய ஆசிரியனும்.

இறைநாடி - வாதநாடி, சித்திரம் -ஆமணக்கு

இதுவுமது

தான்மனைசேய் மன்னமைச் சன்மீளி நோய்மருந்து
மேன்மிளகு சுக்குகணை மேவியதைப் - போன்முறையைப்
பார்த்தாள் வாராதலினிப் பாரின் முன்னோர்க்குவினை
தீர்த்தா னெனுநாமஞ் சீர்.

(பொருள்) தான் - வைத்தீஸ்வரர், மனை-தையல்நாயகி, சேய்-முத்துக்குமரன் இம்மூவரும், மன் அமைச்சன் மீளிநோய் - வாத பித்த கப நோய்களுக்கு, மேன் மிளகு சுக்கு கணை-மேலான மிளகு சுக்கு திப்பலி ஆகிய மூன்றும், மருந்து-தீர்க்கும் மருந்தாக, மேவி யதைப்போல் - ஏற்பட்டிருப்பதுபோல், முறையைப் பார்த்தாள் வார்- முறையைப்பார்த்து இதற்குரிய இடையூறுகளைப் போக்கி ஆட்சி புரிவார்கள், ஆதலின்-ஆதலினாலே, இப்பாரின்-இப்பூவுல கில், முன்னோர்க்கு - முன்னே கூறப்பட்டவர்களாகிய வைத்தீஸ் வரர், தையல்நாயகி,முத்துக்குமரனாகிய மூவர்க்கும், வினை தீர்த்தார்-நோயைத்தீர்த்தார், எனும்-என்னும், நாமஞ்சீர்-நாம தேயச் சிறப் பைப்பெற்றவர்களாம். முத்துக்குமரனுக்குச் சொல்லிய சிறப்புப் பெயர் மற்றிருவருக்கும் எவ்வாறு பொருந்துமெனின்,

" கல்லால் நிழல்மலை - வில்லார் அருளிய
பொல்லார் இணைமலர் - நல்லார்புனைவரே"

மலைவில்லார் அருளப் பொல்லார்தாள் புனைவரெனவே- அவ்விருவரும் தம்முள்வேற்றுமையின்மை பெற்றும். உலகத்து புதல்வர்கள்மாட்டுச் செய்யும் வழிபாடு தந்தையர்க்குக் கழிபேரு வகை பயப்பிக்குமாகலின் அந்நயம் பற்றி அங்ஙனங்கூறியதுவு மாம்.

துர்க்கை துதி.

விருத்தம்

உத்தமஞ்சிவாடுசுமி நீவெனவேமனர்வடுகிலு
ரைத்தல்போல, அத்தமஞ்சிவாடுமிருநாடியினுமீசுரத்தைப்
போல வமரர்தம்மில், சுத்தமஞ்சிவாடு வேல் விசையை
யிந்நூலைக்காக்கச் சுங்கனோடு, சத்தமஞ்சிவாடு பொன்
போல் வைத்தியர்க்குக்கரிசலெனற் சகசந்தானே.

(பொருள்) உத்தமஞ்சிவாடுசுமி நீவென-வெறுமையான நல்ல மனிதன் நீ என்று (ஒரு காரியத்திற்கும் உதவாதவீணன்), வேம னர்-வேமனயோகீஸ்வரர், வடுகில் உரைத்தல்போல்-தெலுங்கில் பக்தியார்த்தமாய் உரைத்ததைப் போல் (பெரியோர் கூறினுல் சதா அவ்வார்த்தையை நினைத்து மயங்கி இளைப்பான்), அத்தம்-கையில், அஞ்சிவாடும் - பயந்து வதங்கும் (ஐயம் அதிகப்பட வாத மும் பித்தமும் குறையும்), இருநாடியினும் - இரண்டு நாடிகளாகிய வாதமும் பித்தமும், மீசுரத்தைப்போல்-மிக்க கோபத்தைப்போல், அமரர்தம்மில் - தேவர்களிடத்தில் , சுத்தம் - அதிகமாக; அஞ்சி - பயந்து, வாடும்-வாடுதற்குரிய, வேல் - வேலாயுதத்தையுடைய, விசையை- துர்க்கை, இந்நூலைக்காக்க-இந்த நூலைக்காத்து ரட்சிக் வும், சுங்கன்-சுக்கிரன், ஓடு-உடன், சத்தமம்-ஏழாமிடத்தில் இருக் கின்ற, பொன்-வியாழனுகிய குரு, சிவாடு போல் (ஜிவ்வாடு) - போட்டியிடு வதைப்போல் (நீ கொடுக்காவிட்டால் நான் கொடுக் கிறேன்-நற்பயன்உண்டாம் எ-று), வைத்தியர்க்கு - வைத்தியர் களுக்கு, கரிசல் எனல் சகசந்தானே - அப்பலன்களை கரிசல் கொடுக்கும் என்பது உண்மையாம்.

வைரவர் துதி.

விருத்தம்

பொறியோரைந்தி னுனுதலிரு பொறியாமுறை
போலிருவினைக்குங், குறியானத்த மொன்றேயாங்
கோள் போலிரண்டு முறைமைக்கும், நெறியாமின்னூல்
கரிசன் மணி நிலைக்குமாறு வடுகனெனு, மறியார்க
ரத்துக் காபாலி மணிமாத்திரை போற் காப்பாமே.

(பொருள்) பொறியோர் ஐந்தில்-கண், காது, ஊறு, நா, மூக்கு ஆகிய ஐம்பொறிகளில்; நா நுதல்-சுவையும் பேச்சும், ஒருபொறியாம் முறை போல-இவை இருதொழிலும் ஒரு பொறிக்கு இருக்கும் தன்மையைப்போல், இருவினைக்கும்-நல்வினை தீவினையாகிய இரண்டிற்கும், குறியா-குறியாக, நத்தம் ஒன்றே ஆம் கோள்போல்-புண்ணிய பாவம் என்று பொருள்படக்கூடிய வட மொழிச் சொல்லாகிய நத்தம் என்றசொல் ஒன்றையே கொள்வதுபோல, இரண்டு முறைமைக்கும் - வாதத்திற்கும் வைத்தியத்திற்கும் அல்லது நோய்க்கும் மருந்திற்கும் (இந்நூலில் வகாரவித்தை காணுமையின்) நெறியாமிந்நூல்-வழியாகும் இந்நூலாகிய, கரிசன்மணி-கரிசலாகிய இரத்தினம், நிலைக்குமாறு இப்பூஉலகில் நிலைத்திருக்க, வடுகன் எனும்-வடுகன் என்கிற (வைரவர்), மறி ஆர் கரத்து-மானைக் கையிலே அணிந்திருக்கின்ற, காபாலி-கபால பாணியான வைரவர். மணிமாத்திரை போல்-இரசமணியும் மாத்திரையும் சரீரத்தில் நோய் நெருங்காவண்ணம் எப்படி காக்கின்றதோ அதுபோல், காப்பாம்-காத்து இரட்சிப்பார் என்பதே.

நாரதமுனிவர், அகத்திய முனிவர் இவர்கள் துதி.

விருத்தம்

பித்தசுர மாறவடு பேய்ப்புடலை மானச்
சத்தசுர பாடக தபோவரசு காக்க
மத்தசுர காலரருள் வாய்த்தமுனி யாகி
யத்தசுர பூசிதனு மாகுமிது காப்பே.

(பொருள்) பித்த சுரம்-பித்தசுரம், மாற-நீங்க, அடு-கொல்லும், பேய்ப்புடலை (அருந்துவதற்குக் காய்ச்சப்பட்ட) பேய்ப் புடல்குடிநீருக்கு, மான-ஒப்பாக, சத்தசுரபாடக தபோவரசு-ஏழு ராகத்தையும் பாடப்பட்ட வீணையையுடைய, தவத்துக்கு அரசரான நாரதர்

காக்க-காக்க வேண்டும், மத்த-மதம்பிடித்த, அசுரகாலன்-பத்மா சுரனைக் கொன்ற முருகன், அருள்வாய்த்த-அருளைப்பெற்றவனும், அத்தசுர பூசிதனும்-இறைவனாகிய ஈஸ்வரனை பூசித்தவனுமாகிய, முனி-அகத்தியமுனிவர், இதுகாப்பே - இதைக்காத்து இரட்சிப் பார் என்றவாறு.

வீரபத்திரர் துதி.

குறு விருத்தம்

தேட்கொடுக்கினற் சீருளநீறு செய்
தாட்கருத்தற காசறலினலற
வீட்குமாறென வீரனுங்காக்க நூல்
கேட்குமாமிடி கெடுக்குமென்னவே.

(பொருள்) தேட்கொடுக்கினல்-தேட் கொடுக்குச் சமூலத்தினல், சீருளம்நீறுசெய் - ஈயத்தைச் சட்டியிலிட்டு அடுப் பேற்றி மேற்படி சமூலத்தினல் வறுத்து பற்பம் செய்து, அறலினல் காசம் ஆட்கு அருத்த-தக்கவளவு நீரிலே அனுபானித்து காசத்தி னல் வருந்தும் ஆளுக்குக் கொடுத்தால், அறவீட்குமாறென-கொஞ் சமும் இல்லாமல் நீங்குவது போலவும், கேட்கு மா மிடி கெடுக்கும் என்னவே-மாம்பருப்பானது (குழம்பு பக்குவம் செய்து அருந்தி னல் கிரகணி அதிசாரம் நீங்கும்) நோயைக் கெடுத்துக் கேட்பது போல, வீரனும் காக்கநூல்-வீரபத்திரர் இந்நூலைப் பாதுகாத்து இரட்சிப்பார் என்றவாறு.

பதினெண் சித்தர்கள் துதி.

விருத்தம்

பயப்படு பிரசமுன் பழகுமைச்சுரம்
பயப்படு மாறெனப் பதினெண் சித்தர்தாள்
செயப்படு பொருளினிற் சேர்க்குமுன்னமே
செயப்படு மிதற்கொரு திருகின்றுமரோ.

(பொருள்) பயம்-தண்ணீர், படு-கலந்த, பிரசம்-தேனுக்கு, முன்-எதிரில், பழகும்ஐசுரம்-சீதளத்தால் வந்த பழைய சுரம் (முன்பழகு மைச்சுரம் - நீண்டகாலமாக இருக்கின்ற சீதசுரம்), பயப்படுமா

றென-பயந்துஓடுவதைப்போல, பதினெண்சித்தர்தாள்-பதினெண் சித்தர்களுடைய பாதங்கள், செய-நான் வணங்கச் செய்ய, படு-பொருந்தின, பொருளினில்-பொருளாக, சேர்க்குமுன்னமே-நான் கொண்டுவணங்குவதற்கு முன்னமே, செயப்படும் - இந் நூல் யாதொரு இடையூறுமின்றி செயம் பெறும், இதற்கு-இச் செய லுக்கு; ஒரு திருகுமின்று-ஒருமாறுபாடுமில்லை, அரோ-அசை.

தன்வந்திரி வணக்கம்

பொன் மந்திரினேர் தன்மந்திரி தாள்
உன் மந்திரமா நன்மந்திரமே.

(பொருள்) பொன் மந்திரிநேர்-குருவாகிய அறிவாளிக்கு (வியாழ பகவானுக்கு) ஒப்பான, தன்மந்திரி தாள்-தன்மந்திரியுடைய திரு வடிகளை, மந்திரி-தியானிக்கத்தக்க மந்திரமாகக்கொண்டு, உன்-னினைப்பாயாக, (அது) நன்மந்திரமே-இந்நூலின் இடையூறு நீக்கு தற்குரிய நல்ல மந்திரமாகும்.

தருமசவுமியர் துதி.

குறு விருத்தம்

நிச தரு மசவுமி யசகுரு வசமே.

(பொருள்) நிச-உண்மையான, தருமசவுமியர் - தருமசவுமியர் குரு-என்னுடை ஆசிரியர், வசமே-(உடல், பொருள், ஆவிமூன்றை யும்) அவர்பட்சம் ஒப்புவித்தேன். ஆதலால் என்னையும் என்னாற் செய்யப்பெற்ற இந்நூலையும் காப்பார் என்பது கருத்து.

சித்தர்கள் துதி.

குறு விருத்தம்

கொத்தான குறுமுனி வித்தார மிகுமகி
மைத்தாவுமனுவர்கள் சித்தாதிதேவரே.

(பொருள்) கொத்தான - கூட்டாயுள்ள முனிவர்களின் தலைவ ரான, குறுமுனி-அகத்தியர், வித்தாரம்-மிகுந்த, மிகுமகிமைதாவு-உயர்ந்த மகிமைகளைப் பொருந்திய, மனுவர்கள்-யோக ஞான முடையவர்களும், சித்தாதி தேவர்-சித்தர்முதலான தேவர்களும் இந்நூலைக்காப்பார்.

அவையடக்கம்.

குறு விருத்தம்.

பண்டிதனியலுள பண்டித கணமே.

(பொருள்) பண்டு இதன் இயல்உள-பழை நூல்களில் யான் செய்திருக்கின்ற இந்நூலின் இலக்கணங்கள் எல்லாம் அடங்கி இருக்கின்றன, பண்டிதகணமே-வைத்தியக்கூட்டத்தவர்களேஎ.று.
(வேறு பொருள்) பண்டி தன் இயலுள-(இந்நூல்யான் செய்தது ஏதுக்கென்ருல்) வயிறுவளர்க்க வேண்டிய நிமித்தமேயாம். ஏனெனில் சகடக்காலானது எப்படி மேலும் கீழும் கீழும் மேலும் ஆமோ அது போல் யான் சுழல்வதே காரணமாம்; பண்டிதகணமே-(ஆகலின்) வைத்தியக் கூட்டத்தவர்களே! நீங்கள் என்னுடைய பிழைகளைப் பொறுப்பீர்களாக-(எ.று)
(வேறு பொருள்) பண்டிதன் இயலுள-(பாண்டித்தியம்நிறைந்த) பண்டிதனின் தகுதிகள் உள்ளன, பண்டிதகணமே-வைத்தியக் கூட்டத்தவர்களே.

இதுவுமது

உலகெலாமுணர் ஞான முயர்பரப்பிரம
மலர செய் சௌபாக்கிய மஹாகண பதியே!
சதாசிவசங்கர சம்புமாதேவ
மதலை சௌபாக்கிய மஹாகணபதியே
சுந்தரியுமைபரை சுமங்கலை கௌரி
மைந்த சௌபாக்கிய மஹாகணபதியே
நரஹரி தேவகி நந்தன் முராரி
மருகசௌபாக்கிய மஹாகணபதியே
கந்தவேள் சுவாமிசேய் கார்த்திகேயன் முன்
வந்த சௌபாக்கிய மஹாகணபதியே
நாகபூஷணகண நாயகமூஷிக
வாகன சௌபாக்கிய மஹாகணபதியே
நின்பதவனசமென் னெஞ்சில்வைத்துனது
நன்பதகன்னூ னவின்றமை விளங்கப்
பிரசவார்த்தவளப் பெரியதாமரையிற்
சரஸ்வதி தாளைச் சந்ததம் பரவி
மகத்துவமிகு தமிழ் வரப்பிரசாதி
அகத்திய முனிவரனடியிணைப்பரவி
தரும சவுமிய தன் மந்திரி சற்குரு

பரன் மகிமையுட் கொண்டு பேயகத்தேரன்
செயுமுறைத் தெரிகிலாத் தேரனுயடியேன்
உயுமுறை வைத்தியவுரைத் தமிழ்க்கரிசல்
தருங்குறுமகவற் ருழிசை மோனே
வகைபெறு சந்தவருக்கத்துறைக்கே
பூசினியெனவண்டம் பொம்மினுமாலலங்கல்
ஆசினிகழ னூறியப் பியுண்மகிழ்மாபோல்
பேசினூ ற்கமுத பேசினிகாப்பே
ஆயிலடுபுன லனலேயடு நெறி
ஆயிலடு பைரவிமுன் காப்பே
கபித்த பலமானதுமே கபித்த பலமோட்டவிற் பேய்
கபித்த பலமாகுமெழு கன்னியர்கள் காப்பே
பைத்திய சன்னிவேலிப் பருத்திக்குஅச் சுரலிற்சூர்
பைத்தியசன்னி வேலிப் பாரிடங்காப்பே
நிம்பவித்தெண்ணெய் மறியுணு மூலிபுண்ணீக்குதலென வீரன்
சம்பவித்தெண்ணே முடிக்குமிக்குரிசிலேதம்பிராளெனத்தாளே
சூதப்பிசினிச் சொறியைத் தெறல் போல்
சூதப்பிசகைச் சுடுமாருதியே
சித்திர மூலம சத்திரமடலிற்
பத்திரவரிஹர புத்திரனடுமே
மருந்து புள்ளிருக்கும் வேளூர் வைத்திய நாதத் தெய்வம்
பொருந்துமிருடல் போல்வாழ்வு புனே சிவசத்தியாளி
யையனுயகி யாதியளித்தருள்
தையனுயகி தந்த முத்தையனே
எட்டுக்கண்மறையவன் எழுதினும் புழு
வெட்டுக்கண் மறை கர வீரம்போக்கல் போல்
கூவிளம்பூவளி செய் குன்மமடல் போல்
கூவிளம்பூ வலிமை கொண்டு நனி காப்பான்
புரண்டரைக் காத மாத்திரையெதுவும்
புசிக்கினே யாளியையுடனே
இரண்டரைக்காத மாத்திரை மாற்று
ளெனச் செயுமப்படியின்றி
இல்லவித்தை மண்மயக்க
மின்றியற்றல் போற் பிழை
இல்லவித்தையில்லெனச் செய்
தென்னே வந்து காக்கவே
மறிகடலுலகிற் பொறியுடைமாந்தர்
குறிகொடுதுருவு நெறியிஃதாமே.

பொருள்: இவ்வுலகமனைத்தையும் அறிந்த ஞானதனையுடையவீனாய கக்கடவுளே! ஐந்தொழில்புரிந்து உலகைப்புரந்து வரும் சதாசிவத்தின் மைந்தனாகிய கணபதியே! திரிபுரசுந்தரியின் திருக்குமரனே! தேவகியின் மகனைப் பிறந்து அசுரகுலத்தையழித்த திருமாலின் மருகனே! கார்த்திகேயனுக்குமூத்தோனே! நாகங்களை மாலையாகக் கொண்டவனும் பெருச்சாளியை வாகனமாகக் கொண்டவனும் பூத கணங்களுக் கெல்லாம் தலைவனாக விளங்குபவனுமான சௌபாக்கிய கணபதியே! தாமரையை யொத்த நின்திருப்பாதங்களை மனதிற் கொண்டு உனதருள் பெற்று நன்னூற்களை யெல்லாம் சொல்லி அவைகளின் விளக்கம் அனைத்தும் பெற்று தேன் நிறைந்தும் மணம் பொருந்தியது மான வெண்டாமரையில் வீற்றிருக்கும் கலைவாணியின் பாதங்களை எப்பொழுதும் பணிந்தும், சிறப்புமிக்க தமிழ்மொழி கண்டு முத்தமிழை வரப்பிரசாதமாகக் கொண்ட மாமுனி அகத்தியருடைய பாதம்பணிந்தும், எனது சற்குருதெய்வப் பண்டிதராகிய தருமசவுமியரது பாதம் பணிந்து அவருடைய அருளைப் பெற்றும், இவ்வுலகை உண்மையாக எண்ணுபவனும் நாயினும் கடையனும் தேரனாகிய யான் உயிர்கள் உய்யுமாறு மருத்துவத்தைக் கூறுகின்ற அகவல் குறுந்தாழிசை மோனை சந்த வருக்கத் துறையில் செய்யப்பட்ட கரிசலுக்கு,

பூசினியென அண்டம் பொம்மினும் = அண்டம் பூசனிக்காயைப் போல வீங்கினுலும்

மாலவுங்கல் = துளசி

ஆசினி = பலாக்கொட்டை

கழல் = கழற்சிப் பருப்பு

நூறி = அரைத்து

அப்பியுண் = பீஜத்தில் தடவியும், உள்ளுக்கு அருந்தியும்

மகிழ்மாபோல் = மகிழ்ச்சியடைபவர்களைப்போல்

பேச இந்நூற்கு = சொல்லப்பட்ட இந்நூலுக்கு

அமுதபேசினி = கலைவாணி

காப்பே = காப்பாளாக

ஆயிலடுபுனல் = ஆயில் மரப்பட்டையிட்டுக்காய்ச்சிவரப்பட்ட குடிநீர்

அனலை = வெப்பு நோயை

அடுநெறி = போக்கி உடலைக் காத்தல் போல

ஆயி = தாயாகிய

அடுபைரவி முன் காப்பே = பகைவர்களைக் கொல்லும் காளி தேவி இந்நூலைக் காப்பாளாக

கபித்தபலமானது = விளாம்பழமானது

மேக பித்த பலம் ஓட்டலில் = மேக பித்த வன்மையை உடலிலிருந்து ஓட்டி உடலைக் காத்தல் போல

பேய்கபித்த பலமாகு எழு கன்னியர்கள் காப்பே = காட்டுத் தெய்வங்களால் பலத்த காவலுடன் வீற்றிருக்கும் ஏழு கன்னியர்கள் காப்பார்களாக

பைத்திய சன்னி = பித்த சன்னி

வேலிப்பருத்திக்கு = உத்தாமணிக்கு

ஆச்சுரலிற் = பயப்படுவதைப் போல

சூர் = வீரமாது

பைத்திய சன்னி = துன்பத்தையும் சரசத்தையுமுடைய

வேலிப்பாரிடங்காப்பே = வேலிபோல் வளைந்திருக்கும்பூதங்கள் காப்பாகும்.

நிம்பவித்தெண்ணெய் = வேப்பெண்ணெயுடன்

மறி உண்மூலி = (கலந்த) ஆடுதின்னாப்பாளை

புண்ணீக்குதலென = புண்ணை நீக்கி உடலைக் காத்தல் போல

வீரன் = வீரன்

சம்பவித்த = நேர்ந்திருக்கிற

எண்ணே = எண்ணத்தை (நினைப்பை)

இக்குறிசிலே முடிக்கும் = முடிக்கும் பெருமையிற்சிறந்தோனே முடித்துக் கொடுக்கும்

தம்பிரானெனத்தானே = எப்பொருட்கும் இறைவனாகிய சிவனைப் போலவே முடிப்பான்

சூதப்பிசினி = மாம்பிசினானது

சொறியை = தினவை

தெறல்போல் = கெடுத்து உடலைக் காப்பது போல்

சூதம் = வஞ்சனையையும்

பிசகை = குற்றத்தையும்

மாருதி சுடும் = அனுமான் அதம்பண்ணிக் காக்கும்

சித்திர மூலம் = சித்திர மூலமானது

அசத்திரம் = சத்திரம் செய்யாமல் (அறுவை) இயற்கையாய் வந்த புண்ணை

அடவில் = கொன்று உடலைக் காப்பது போல

பத்திரவரிஹரபுத்திரன் = பூமியில் வலுவுள்ளவராயும் புத்திர பாவனையாகவுமுள்ள அரிஹரபுத்திரன்

அடுமே = பகைவர்களைக் கொன்று இந்நூலைக் காப்பாராக

மருந்து = அமிர்தம் இருக்கும்

புள்ளிருக்கும் வேளூர் வைத்தியனாதத் தெய்வம் = புள்ளூரில் வீற்றிருக்கும் வைத்தீஸ்வரன்

பொருந்துயிர் உடல் போல் = உயிரும் உடலும் பொருந்தி யிருப்பதைப் போல

வாழ்வுபுனை = இல்லற வாழ்வைக்காட்ட, சிவசத்தியாகி = சிவனுக்கு சத்தியுமாகிய

ஐயை நாயகி = தலைவியாகிய அழகியதையல் நாயகி

ஆதியளித்தருள் = உலகங்களை அழித்து அருளின தலைவன்

தையனாயகி தந்த முத்தையனே = தையல் நாயகி தந்தருளிய முத்துக்குமரனே!

எட்டுக்கண் மறையவன் எழுதினும் புழுவெட்டுகண் = பிரமன் புழுவெட்டுக் கண்ணாய் இருப்பாயென்று விதிப்பினும் அவ் அடையாளத்தை

மறை = மறைக்கின்ற

கரவீரம் = ஆற்று அலரி

போக்கல்போல் = நீக்கிச் சரீரத்தைக் காத்தல் போல் இந்நூலைக் காத்தல் வேண்டும்.

கூவிளம்பூ = வில்வப்பூ

வளி செய் குன்மம் = வாதத்தினால் உண்டான குன்ம ரோகத்தை

அடல் போல் = நீக்கி உடலைக் காத்தல் போல்

கூ = உலகத்திலுள்ள உயிர்களுக்கு

விளம்பு = சொன்ன இந்நூலை

வலிமை கொண்டு = வன்மையுடன்

நனிகாப்பான் = மிகவும் காத்து ரடசிப்பார்.

புரண்டரைக்காத மாத்திரை எதுவும் = புரளும் படி அரைக்கப்படாத மாத்திரை யெல்லாம்

புசிக்கின் = அருந்தினல்

நோயாளியை = வியாதியஸ்தனை

உடனே இரண்டரைக் காதம்= இரண்டரைக் காத கால வரையறைக்குள்

மாத்திரை மாற்ருள் எனச் செய்யும் = பாண்டுவின் மனைவியாகிய மாத்திரா தேவியின்

சக்களத்தியாகிய (சக-களம்-ஸ்திரி) குந்தியாக்கும் அதாவது குந்தி நடக்கச் செய்யும்

அப்படியின்றி = அப்படித் துன்பம் நேராவண்ணம் இந்நூலைக் காக்கவும்

இல்ல வித்தை = தேற்ருன் கொட்டை

மண்மயக்கமின்றி இயற்றல் போல் = நீரில்கலந்திருக்கும் மண்ணைப் போக்கித் தெளிவித்தல்போல

பிழை இல்ல வித்தை = பிழை இல்லாத வித்தை இல்லையாகவின்

இல்லெனச் செய் = ஒருகுற்றமும் இல்லையென்னும்படிச் செய்வாய்

"நோய்க்குற்ற மாந்தர் மருந்தின் சுவை நோக்ககில்லார்
தீக்குற்ற காதலுடையார் புகைத்தீமை நோக்கார்
போய்க்குற்றம் மூன்று மறுத்தோன் புகழ் கூறுவேற்கென்று
வாய்க்குற்றசொல்லின் வழுவும்வழுவல்லவன்றே. (வளையாபதி)

என்னை வந்துகாக்கவே = என்னுடைய நூலைக்காப்பாயாக

மறி = மடிந்துவருகின்ற

கடலுலகில் = கடலால் சூழப்பட்ட உலகின் கண்

பொறியுடை மாந்தர் = ஐம்பொறிகளால் அறிவையுடைய பெரியோர்களின்

சூறிகொடு = வழியைக் குறிப்பாகக் கொண்டு

நுருவு = தாண்டுகின்ற

நெறியிஃதாமே = வழி இதுவேயாகும் வேறுமார்க்கமில்லை.

பாயிரம் முடிவுற்றது.

தேரையர் திருவாய் மலர்ந்தருளிய வைத்திய நூற்றிரேகை

விருத்தம்

சிகாமணி வெண்பா நிகண்டு சேகரப்பா
தேரையர் காப்பியந் தருநாடக மந்தாதி
மிகாவண்ணம் நாண்மாலை யமகவெண்பா
விளங்கெதுகைப்பாவிவையெல்லோரு மெச்சு
மகாமகிமைக் கரிசலெனு முறையீராறும்
வேதாந்த சித்தாந்த வைத்யவாத
முகாதியினுமசையாத விரிவுள் வேத
முத்தமமாவிளங்குமிது உண்மைதானே.

(விவரம்) தேரையர் சிகாமணி வெண்பா, தேரையர் நிகண்டு தேரையர் சேகரப்பா, தேரையர் காப்பியம், தேரையர் தரு, தேரையர் நாடகம், தேரையர் யமக அந்தாதி, தேரையர் வண்ணம், தேரையர் நட்சத்திரமாலை, தேரையர் மோனை யமகவெண்பா, தேரையர் எதுகைப்பா, தேரையர் வைத்திய மகா கரிசல் ஆகிய பன்னிரண்டும் வேதாந்த சித்தாந்த நன்னூற் சாஸ்திரங்கள் போல, பிரளய காலத்திலேயும் இலயப்படாமல் வாத வைத்திய மர்மங் களுடனே இருக்கும்.

தேரையர் அருளிய வைத்திய மகா கரிசல் மோனையாசிரியக் குறுந்தாழிசை வருக்கம்.

நூல்

நாடிவிவரம் - ஆசிரியப்பா

அ

அகர முதலென வாகிய கரியாய்
அங்கங்களாயதி லாதாரமாகி
அத்தமிகுந்த மகுத்துவமாய்ம
யக்கற நிற்கு மிலக்கியமாகி
அரனேடரியயனெனவுமுறை பவர்
அருளினுலகுற மருவுமுதல் வினை
அன்றுமுன் ஜனிக்கவே தன்படைதேகமே

அஃறிணையுயர் திணை யாயவிரண்டினுள்
அறிமாக்கட் கே நூ லமைப்பா மெய்ப்பிணிக்குள்
அரசாம்வாதமோ டமைச்சன் பொருநன்
அடை.வினிஞடிகளவை வெவ்வேறே
அனங்கலாயுத மோதிகட்செவி
அணிலட்டைக் கச்சப மரவட்டைத் தேளீ
அரிசேனமாகு மென்னவேநடை
அடைவினிலேயவை நாலுவடிவாகி
அதமாதமங்கடையாமெனச் சாத்தியம்
அசாத்தியமிஃதுடனஞமத்திவையை
அண்ணல் வைத்தியர் அண்ணல்வாகட நூல்
அண்ணலியானை அண்ணலியானை
அமுதாசனரினில் அமுதாசனரினி
அலவனிலரியினி லலரியிலனிலனில்
அனலியினகி யினினருண் முறை யறிவினில்
அஃதுறுகிரமத் தறிமிஞயுளரே.

அகரம் - எழுத்துக்களில் அகரமானது (எப்படி); முதலென ஆகிய கரியாய்-முதலாய் இருக்கின்ற சாட்சியத்தைப் போல (எல்லாவற்றிற்கும் முதன்மையாகி); அங்கங்கள்-உடல், அதில் ஆதாரமாகி-அதற்கு (உடலுக்கு) ஆதாரமாகி, அத்தமிகுந்த மகுத்தவமாய்-உட்பொருள் மிகுந்த மகிமையுடையதாய், மயக்கறஙிற்கும் இலக்கியமாகி-கண்டோருக்கு ஐயந்திரிபு இல்லாமல் இலட்சியப் பொருளாகி, அரனோடு அரிஅயன் எனவும் உறைபவர்-படைத்தல் தொழிலை உடைய பிரம்மா, காத்தல் தொழிலையுடைய விஷ்ணு, அழித்தல் தொழிலையுடைய சிவன் என்று சொல்லப்பட்ட வசிக்கின்றவர்களாகிய மும்மூர்த்திகளின், அருளின்-கிருபையினாலே, உலகுற-சரீரம் நிலைபெற, மருவு-பொருந்தி இருக்கின்ற, முதல் வினை-சிருஷ்டியை, அன்று-ஆதியிலே, முன்ஜனிக்க-முன்னே பிறப்பிக்க, வேதன் படைதேகம் - பிரம்மனால் படைக்கப்பட்ட தேகம், அஃறிணையுயர் திணை யாயவிரண்டினுள் = அஃறிணை உயர்திணை ஆகிய இரண்டினுள், அறிமாக்கட்கேநூலமைப்பாம் - அறிவையுடைய உயர்திணைக்கே இந் நூலைச் சொல்வோம் மெய்ப்பிணிக்குள்-உடலைபற்றிய நோய்களில், அரசாம் வாதம்- அரசனென்று சொல்லப்படுகின்ற வாதத்தினதும், அமைச்சன்-மந்திரி என்று சொல்லப்படுகின்ற பித்தத்தினதும், பொருநன்-சேனபதியென்று சொல்லப்படுகின்ற கபத்தினதும், அடைவினில்-முறையாக (உணர்த்தும்), நாடிகளவை வெவ்வேறே-மேற்படி முத்தோடங்களின் நாடிகள் வெவ்வேருகும் (அவையாவன), அனம்-

அன்னம், கலாயுதம்-கோழி, ஓதி-ஓந்தி, கட்செவி- கண்ணும் செவியும் ஒன்றேயான பாம்பு (இவைகளின் நடை நான்கும் வாதத்திற்கும்)அணில்-அணில், அட்டை-அட்டை, கச்சபம்-ஆமை, மரவட்டை-மரவட்டை (இவைகளின்நடைபித்தத்திற்கும்),தேள்-தேள் ஈ-தேனீ, அரி-தேரை, சேனம்-பருந்து (இவை நான்கின் நடையும் கபத்திற்கும் ஆகும், என்னவே நடை-மேற்கூறியபடியேமுத்தோடங்களின் நடையும் ஒக்கும், அடைவினில்-முறையே, அவை நாலுவடிவாகி-அந்நாடி நடைகள் நான்கு வடிவாகும், அதமாதமங்கடை-அவையான 1. உத்தமம், 2. மத்திமம், 3. அதமம், 4. அதமாதமம்-கடைசியாகவும் (அதமாதமம் கடையென்றதினுல் அர்த்தாபத்தியாக முன் மூன்றையும் கொண்டனம் என்று அறிக, ஆம்என-ஆம் என்றும், (அவைகள் முறையே) சாத்தியம் அசாத்தியமிஃதுடன் அனுமத்து இவையை-சாத்தியம் அசாத்தியத்துடன் அனுமத்து (துணிபு) என்று இவைகளை, அண்ணல் வைத்தியர்-பெருமையுடைய வைத்தியர்கள்,அண்ணல் வாகடநூல்-ஈசுவரன் சொன்ன வாகடநூல்,அண்ணலியானை-பொருந்திய நோயுள்ளவனை அண்ணல் இயானை-பெருமை பொருந்திய தேவேந்திரனும், அமுதாசனரினில்-தேவர்களும் அமுதத்தை உண்டு தேகத்தை வளர்ப்பது போல, அமுதாசனரினில்-மருந்து அருந்தி அவ்வாறு செய்ய, அலவனில்-நண்டைப்போல (கைமுறையாக) ஒழுங்காகவும், அரியினில்-தேரையைப்போல பரிசுத்தமாகவும் (கை), அலரியில்-சூரியனைப் போல பிரகாசமாகவும் (அறிவு), அனிலனில்-வாயுவைப்போல் ஸ்பரிசத்தாலும், அனலியின்-அக்கினியைப் போலக் காட்சியாலும் (வைத்தியன் நோய் பார்த்தல்)அகியினில்-கண்ணே காதான உயர் வாலும், அருள்-அருளப்பட்ட: முறை-முறையாக, அறிவினில் -அறிவுடன், அஃதுறு-அவைகள் பொருந்துகின்ற, கிரமத்து அறிமின்- கிரமத்துடன் அறியுங்கள் ,ஆயுளரே-வைத்தியர்களே என்றவாறு.

குறிப்பு : இந்நாடி நடைகளில் அன்ன நடையும், கோழி நடையும் தவிர மற்றவைகள் தமிழ்நூலுக்குப் பொருந்தா.

வாதம், பித்தம், சிலேஷ்மம் என்னும் இவற்றின் தொழிலிலக்கணம்.

ஆசிரியப்பா.

ஆ

ஆகங்கறுக்குநோ யாகந்துடிக்கும்
ஆருத்தியென்னமெய் யேகங் கொதிக்கும்
ஆருமெய் வியர்திமிர் மீமந்தம் வாய் மூச்சு

ஆகுமேயிது வாதமேவினி
ஆகுமந்திரி பாடலமுடலம்
ஆங்கசப்புவாய் அரக்கை நேர்கண்ணும்
ஆனன மேதினி மாதிரந்தலை
ஆட நடுங்குஞ் சலிலத் தேவாய்
ஆறுமிகுந்துஞ் சுரப்பாகும்மே
ஆயாசமிளைப் பரோசகமிகு மேல்
ஆயிரநனன் மெய்யாணையின்னிறமே
ஆஅமிருமலு முளைவுமசதியும்
ஆதாளிவாயுளறல் வேதாள நோய்
ஆயாசமேற் சுவாசமீதாகம்
ஆருதசுரஞ்சளி மாருதசன்னி
ஆவிவாய்ப்பாணைக மாவியோய் வேபோன்
ஆர்குவதப்பிசினர்க்குவதப்பிசின்
ஆர்கலித்தரங்கையார் கலித்தரங்கை
ஆனதிக்காளையாம மைச்சைமேவிடில்
ஆளைப்பரவசமாக்குதலன்றி
ஆற்றுத்தமிண்மறையாற்றுந்தமிழ்மறை
ஆமிறையுறின் மெய்யாதலுண்மைமெய்
ஆயுள் வேதியராயுள் வேதியராய்
ஆதரித்திவைவை யாதரித்தவரே.

ஆகங்கறுக்கும்-சரீரமானது கறுக்கும், நோய் - (சரீரம்) கடுக்கும், ஆகந்துடிக்கும்-உடல்துடிக்கும், ஆருத்தீயென்ன மெய்யேகங்கொதிக்கும்-நீங்காத தீயைப்போல் உடல் முழுதும் சூடாகும், மெய் வியர்வுஆரும்-உடலில் வியர்வை பொருந்தும், திமிர்-உடலில்திமிர் உண்டாகும், மீமந்தம்-அதிக மந்தமுண்டாகும், வாய்மூச்சு-வாயினல் மூச்சு வரும், இது ஆகும்-இக்குணங்கள் உண்டாம், வாதம்-வாதத்திற்கு (இக்குணங்கள் உண்டாம்), மேவினி ஆகும் மந்திரி-இனிமேல் ஆகுவது மந்திரியான பித்தத்திற்கு, உடலம் பாடலம்-சரீரமானது பாதிரிப்பூவின் நிறமான சிவப்பு நிறத்தையும், கசப்பு வாய் ஆம்-கசப்பு ருசியை உடைய வாயும் ஆகும், அரக்கை நேர் கண்ணும்- அரக்கைப் போன்ற சிவந்த நிறத்தை ஒத்த கண்களும், ஆனனம்- (முகம்) தலை, மேதினி-பூமியென்றும், மாதிரம்-திக்கென்றும் தெரியாதபடி, தலை ஆட நடுங்கும்-தலைஆடும்படி நடுக்கத்துடன் மயக்கமுண்டாகும், சலிலத்து வாய் ஆறு மிகுந்து சுரப்பாகும்-நீரானது வாயில் ஆற்றின் நீரை ஒத்து அதிகப்பட்டு சுரப்புண்டாகும் (சலிலம்-நீர்), ஆயாசம்-ஆயாசம், இளைப்பு-இளைப்பு (களைப்பு),

அரோசகம்-அருசி, மிகும்- அதிகப்படும், மேல்-இனிமேல் கூறப் படுவதான கபத்தின் குணங்களாவன, ஆயிரநயனன் யானையின் மெய் நிறமே-ஆயிரங் கண்களை உடைய தேவேந்திரனின் வெள்ளை யானையின் நிறத்தை உடல் அடையும், ஆஅ இருமலும் - ஆச்சரியப் படத்தக்க இருமலும், உளைவும்-உளைவும், அசதியும்-அசதியும்ஆதாளி வாயுளறல்-வீரப் பேச்சும் உளறலும், வேதாள நோய்-கடுமையான நோய் (உடல்வீக்கமும்), ஆயாசம்-களைப்பும், மேல்சுவாசம்-மேல் சுவாசமும், மீதாகம்-அதிக தாகமும், ஆருத சுரம்-நீங்காத சுரமும், சளி-சளியும், மாருத சன்னி- (நீங்காத) விடாத சன்னியும், ஆவி வாய் பானை கம்-தலையில் அடுப்பிலிட்ட பானையின் வாயிலின்று வருகின்ற ஆவியைப்போல் எழும்புதலும், ஆவி ஓய்வே போன்- உயிர் உடலை விட்டுப் போனதே போலும் இருக்கும், ஆர்க்குவதம்- தண்ணீர் (வியர்வை), பிசின்-பிசுபிசுத்து, ஆர்க்குவதப் பிசின்- கொன்றைப் பிசினைப் போலாகும், ஆர்கலி-சமுத்திரத்தின், தரங் கம்-அலையைப் போலவும், அரங்கை-நாடக சாலையைப் போலவும், ஆர்கலித்து-சப்திக்கும் (குணங்களைக் காண்பிக்கும்), ஆன-சொல்லி யான, இக் காளை-இக்கபமானது, அமைச்சை மேவிடில்-பித்தத்தைச் சேர்ந்தால், ஆளைப் பரவசமாக்குதலன்றி-நோயாளியைப் பரவசப் படுத்துவது அல்லாமல், ஆற்றுத்தமிழ்மறை-திருவையாற்றிற்கு சம்பந்த மூர்த்தியார் தமிழில் ஓதின திருப்பதிகத்தின் முதல் இலக்கணங்கள் எல்லாவற்றையும் இருக்கச் செய்யும், அஃதாவது,

"புலனைந்தும் பொறி கலங்கி நெறிமயங்கி
அறிவழிந்திட்டு ஐமேலுந்தி
அலமந்த போது ஆக அஞ்சேல் என்று
அருள் செய்வான் அருங்கோயில்
வலம் வந்த மடவார் கள்நடமாட முழவதிர
மழையென்றஞ்சிச்
சில மந்தியலமந்து மரமேறி முகில்
பார்க்குந் திருவையாறே''.

முழவு-பறைப்பொது
ஐமேல் உந்தி-கபம் மேலிட்டு
தம் இல் மறை ஆற்றும்-தாம் மறைப்பில்லாமல் காட்டும்
ஆம்-அதற்குப் பின்னுகின்ற, இறையுறின்-அரசாகிய வாதத்தைச் சேர்ந்தால்,

மெய் மெய்யாதலுண்மை-சரீரமானது (நோயாளி) இறத்தல் உண்மையாம்.

ஆயுள்வேதியர்-வைத்தியர், ஆராயுள் வேதியராய்-மனதில் ஆராய்கின்ற அறிவுடையவர்களாய், ஆதரித்து-விரும்பி, இவை-இவற்றை, வையாது அரித்தவரே-வைக்காமல் நீக்கினவரே என்ற வாறு.

சில மருந்துகள்-சுத்தி-உணவு முதலியவை

ஆசிரியப்பா

இ.

இலவணமிளகோம மிவைகள் பிரமாணம்
இறையுழையன் மீளிகுண மியல்பாலறிந்தே
இக்கிரசத்திலரைத் திருஜாமம்
இத்திரசத்திலுமிப்படிதானே
இனன் முனேவை குளிகையதாகவும்
இருவைகலிலும் நறியவறலிலீ
இங்குலிகமானே இலிங்கமாம் வாறு
இரதமும் ரசமுமே யேகமேயிவை
இரணப்புண் குட்டங்தீருந்திறத்தே
இரசம் நாற்றம் இடுகறிசமனே
இழுதிலே கொள இறுகுந்தேகம்
இமிழ் காதுவாய்வு மிறுமேவழுதிலையால்
இலிகு சமறதிக ளெவையுமுனடுமே
இரேவதிவரன் மாலை மந்திரம்
இகுத்திடுமேகவனலங்குப்பையெல்லாம்
இல்லமேக பித்தங்களைத்தெறும்
இந்தீவரமே கக்கிரந்தியடும்
இலாங்கலிவெட்டை யிலாங்கலிமாற்றும்
இருந்தைமோழையொடு இழைத்துணப்பாடறும்
இப்பிமெய்க்கேயிசைவதாகும்
இடம்புரிநரையை யிருக்கவொட்டாது
இடிபுன்மெய்க்கே யிரும்பாகும்மே
இறுங்குவரை மெய்யிறுங்குவையெடுக்கும்
இறடிமாமேனியிறடியையகற்றும்
இலதாமேட மெய்யிலதாஞ்சுக்கே
இறவுளர முதையை யிறவுளதாக்கும்

இழுதையதீயெனி விழுதையாக்கும்
இண்டைவேர் தொந்தி யிரண்டையும் போக்கும்
இந்திரையுற் பலமிரங்கலையறுக்கும்
இமகரன் றெடர்ச்சியிமிர் சிரங்கொழிக்கும்
இமையவர் மாதடியியற்கைக் கரணம்
இதைவளர் சுக்கையிடுக்கணை யொடுக்கும்
இளையுறுகந்தம் இறத்த லைத்துரத்தும்
இறைச்சியிற் செம்மறி இருப்புமெயிடுப்பே
இரலையிர லைமெய்யினுக்கரணமே
இகலன் தசையால் இரசிதஞ் சுத்தியாம்
இற்புலிமலத்தால் இர திநன்மையாம்
இருடிநெய்லோக மெவற்றையுந்துலக்கும்
இருளிநெய்சூதம் இறுக்குமோர்வழி
இந்துருணிப்பீ இழுக்குமீயநீர்
இரட்டை நோய்வெம்மையிரட்டையடிக்கும்
இரும்புலியையாம் இலந்தைமந்திரிப்பகை
இச்சிக்காய்பிணி இச்சிக்காயும்
இக்குவைநோயைவெல் இக்குவையாகும்
இருவாக்ஷிமூலி இருவாக்ஷியாமே
இலதையாக்கை நோயிலதையாக்கையே
இராசனியளையிலை இராசனி விராசனீ
இஞ்சி மாத்திரமே இஞ்சி மாத்திறமே
இலவங்கம் பூட்சி இலவங்கமாமே
இடையரைபிருட்டம் இடையரையுரமே
இளம்பிடியுடனடை இளம்பிடியாகா
இட்டிகையடு நீர் இட்டிகையறலே
இந்தரி குடாரியிரிக்குஞ் சிற்பரம்
இலஞ்சியளகம் இரைப்பையழிக்கும்
இமவரியாயுள்போம் இயற்கமுண்டாகும்
இடங்கர்மந்திரிக்குமெய் இடங்கராகும்
இவுளியையிவர்வோர் இவறுதல் சுதையே
இபமெனில்மைதுனம் இரதம் பானகம்
இயல் வாகனர் இளநீரியல்பே
இடபர்க்கபூபம் இயல்பினர்க் கசனம்
இத்திறவைத்திய இலிங்கத் தருண்முறை
இருமறையறிகுனர் இரும்பாண்டிதரே.

இறை-அரசனாகிய வாதம், உழையன்-மந்திரியாகிய பித்தம், ஈளி-சேனாபதியாகிய கபம்(இவைகளின்)குணம், இயல்பாலறிந்து-

ஏற்றத்தாழ்வைநாடி முதலியவற்ருலறிந்து,இலவணம்-உப்பு,மிளகு-மிளகு, ஓமம்-ஓமம், இவைகள் பிரமாணம் - இம்மூன்றும் முறையே அளவில் வாத,பித்த, கப அதிகம் குறைவிற்குத்தக்கவாறு ஏற்றியும் இறக்கியும், இக்கிரசத்தில் - கரும்பின் சாற்ருல், இரு சாமம் அரைத்து - இரண்டு சாமம் அரைத்து (பிறகு), அத்திரசத்திலும் - குரு ஆலின் ரசத்திஞலும், இப்படித் தானே-முன்போலவே இருசாமம் அரைத்து, குளிகையதாகவும்-மாத்திரையாகச் செய்து, இனன் முனேவை-சூரியனில் (முப்பது நாழிகை)வைக்கவும், இருவைகலிலும்-இருபொழுதும் (காலை,மாலை), நறி-நல்ல, அறலில்-வெந்நீரில், ஈ-கொடுக்க (இறை, உழையன், மீளி நோய்கள் நீங்கும்),மானே-பெண்ணே,இங்குலிகம் இலிங்கமாம்வாறு -இங்குலிகமே இலிங்கம் என்று அழைக்கப்படுவது போல (இரு சொல்லும் ஒருபொருளைக் குறிப்பது போல) இரதமும் ரசமுமே ஏகமே-இரதம் ரசம் என்ற இரண்டு சொல்லும் ஒரு பொருளையே குறிக்கும், இவை-இலிங்கமும் ரசமும் (முறையே) (சுத்தித்தலிங்கத்தை),இழுதிலே கொள-வெண்ணெயில் அரைத்து மேலுக்கும் பூசி உள்ளுக்கும் அருந்த,இரணம்புண் குட்டம்தீரும்-இரணமும்புண்ணும் குட்டமும் தீரும், இரசம் நாற்றம் கறி இடுசமனே-இரசம், கந்தகம், மிளகு இம்மூன்றையும் சரியளவாய் எடுத்து (அரைத்து), இழுதிலே கொள-நெய்யில் கொள்ள, இறுகுந்தேகம்-சரீரம் இறுகும், இமிழ் -ஒலியை உடைய, காது-காதும், வாய்வு-வாய்வும், வழுதிலையால்-கண்டங்கத்திரியினல், இறும்-நீங்கும், இலிகுசம் - எலுமிச்சம்பழம், மறதிகள் எவையும-புத்திக்குறைவு(சபலம்)எல்லாவற்றையும், முன் அடுமே-சீக்கிரத்தில் கொல்லும், இரேவதி-பலராமன் மனைவி, வரன்-அவள்வரன்(கணவன்)பலராமன், மாலை-அவன் மாலையாகிய பனம்பூ, மந்திரம்-அப்பனையின் கள்,இகுத்திடும்-சிந்தும்(போக்கும்), மேக அனலங்குப்பையெல்லாம்-மேகஉஷ்ணக் கும்பல் எல்லாவற்றையுமாம், இல்லம்-தேத்தான் வித்து, மேகபித்தங்களைத்தெறும்-மேகபித்தம்(மேகவெட்டையை) போக்கும், இந்தீவரம்-செங்கழுநீர், மேகக் கிரந்தியடும் - மேகத்திஞல் உண்டான கிரந்தியைக் கொல்லும், இலாங்கலி-தேங்காய்ப் பாலானது, வெட்டையில் ஆம் கலி மாற்றும் - அதிகஉஷ்ணத்திஞல் உண்டாகின்ற துன்பத்தை நீக்கும், இருந்தை-கரியை, மோழையொடு-கஞ்சியுடன், இழைத்துணப்பாடறும்-அரைத்து உண்டால் வயிற்று நோய் தீரும், இப்பி-சங்கம்பட்டை (குண்டலி), மெய்க்கு இசைவதாகும் - உடலுக்குப் பொருந்தும் மருந்தாகும் (நோய்நீக்கும் என்பதாம்), இடம்புரி நரையையிருக்க வொட்டாது-இடம்புரிக்காய் பித்தநரையை நீக்கும் (பித்தம் நீங்கும்), இடிபுல்-இடித்த நெல்மா, மெய்க்கேயிரும்பாகும் -சரீரத்தை இரும்பைப் போல் வலிவுண்டாம்படிச் செய்யும், வரை

இறுங்கு-மலைச்சோளம், மெய்யிறுங்குவை-மெய்யிளைத்தலை(உடம்பு இளைத்தலை),எடுக்கும்-போக்கும், இறடிமா-தினைமா ஆனது, மேனி யிறடியை அகற்றும்-தேகநிற மாறுதலைப் போக்கும், இலதாமேடம் (இல்லது-ஆம்-மேஷம்) -வீட்டிலே வளர்க்கின்ற ஆட்டின் கறி, மெய் சுக்கு இல்லது ஆம்-சரீரத்தை உலர்த்துதல் இல்லையாகப்பண்ணும், இறவுளர்-வேடர்கள், அமுது-அமுதாகிய தேன், ஐயை-சீத சுரம், உளது-இருப்பதை, இறஆக்கும்- இறக்கச் செய்யும், இழுதை -நெய்யை, அதீயெனில்-காய்ச்சா விட்டால், இழுதையாக்கும்-மந்தத்தை உண்டாக்கும், இண்டைவேர்-தாமரைக்கிழங்கு, தொந் தியிரண்டையும் போக்கும்-எல்லாவித தொந்தித்த நோய்களையும் போக்கும், இந்திரை-சீதா, உற்பலம்- செங்கழுநீர் (சீதேவிசெங்கழு நீர்), இரங்கலை யறுக்கும்-நோய் வருத்தத்தை நீக்கும், இமகரன் தொடர்ச்சி-அல்லி, இமிர்-வெளிப்பட்ட, சிரங்கொழிக்கும்-சிரங்கை ஒழிக்கும், இமையவர் மாது அடி-(தேவமாது அடி-அரம்பை அடி) வாழைக்கட்டை, இயற்கைக்கு அரணம்-உடலுக்குக் கோட்டை மதில் போலாம், இதை-காட்டில், வளர்சுக்கை-வளர்கின்ற சுக்கங் காய்-இடுக்கண் ஒடுக்கும்-நோய்த்துன்பத்தைப் போக்கும், இளை -காட்டில்,உறு-பொருந்திய,கந்தம்-கருணை -(காட்டுக்கருணை), இறத் தலைத்துரத்தும்-மூலவியாதியினால் சாதலை ஒழிக்கும், இறைச்சியில்-இறைச்சி வகுப்பில், செம்மறி - செம்மறி ஆட்டின் இறைச்சி, மெய் இடுப்பு இருப்பு-உடலிலுள்ள இடுப்பு இரும்பைப் போலாம்,இரலை -மான்,இரலை-கரி,மெய்யினுக்கு-சரீரத்தை பலப்படுத்தும், அரணம்--கோட்டையைப் போலாம், இகலன்-நரி, தசையால்-மாமிசத்தினால், இரசிதம்-வெள்ளி, சுத்தியாம்-சுத்தியாகும், இற்புலி-பூனை,மலத்தால் -மலத்தினால், இரதி நன்மையாம்- பித்தளை நன்மையை அடையும் (சுத்தியாம்), இருடி நெய்-ஆந்தை நெய்யினால், உலோகம் எவற்றை யும் துலக்கும்-உலோகங்கள் எல்லாம் சுத்தியாம்,இருளிநெய்-பன்றி நெய், சூதம் இறுக்கும் ஓர்வழி-இரசத்தை ஒரு வகையாகக் கட்டும், இந்துருணிப்பீ - பெருச்சாளியின் மலம், ஈயநீர் இழுக்கும் -வங்கம் சுத்தியாகும், இரட்டை-இரட்டைப் பிரமட்டை, வெம்மை நோய் இரட்டையடிக்கும்-சுரமிகுதியைத் துரத்தும், இரும்புலி-இரும்புலிப்பழம், ஐயாம்-சீதளப் படுத்தும், இலந்தை - இலந்தைப் பழம், மந்திரிப்பகை-மந்திரியாகிய பித்தத்துக்குப் பகையாம் (நீக் கும்), இச்சிக்காய்-குறு ஆலங்காய், பிணி இச்சிக்காயும்-பிணியினால் உண்டாம் தொந்தத்தைப் போக்கும், இக்கு-கரும்பின் சாறு, ஐ - கோழை நோயாகிய, நோயைவெல்-நோய்களை வெல்லுகின்ற, இக்கு-தடையாகிய, ஐயாகும்-அரசனை ஒப்பானதாகும், இலதை-கொடிக் கீரைகள், யாக்கை - உடம்பில், இலதை நோய்-இல்லாத நோய்களையெல்லாம், ஆக்கையே - உண்டாக்கு தலே யாம், இரா அளை சனி - இரவில் தயிர் உண்டால்

சன்னி நோய் உண்டாகும், இராசனில் இலை-பகலில் சன்னி இல்லை, இராசன் நீ-சன்னி இல்லாததினால் இராசனைப் போல் இருப்பாய் (இரா அனையில் ஐ சனி-இரவில் தயிர் உண்டால் சீதள சன்னி உண்டாம், இராசனில் சனி இரா-பகலில் சன்னி நோய் வராது, நீ- விகாரம் என்ற மாற்றுப் பொருளும் உண்டு), இஞ்சி மாத்திரம் - இஞ்சியை மாத்திரம் அருந்தி வந்தால், இஞ்சி கோட்டை மதில்போல் (சரீரத்திற்கு), மாதிறம்-மிக்க வலிமையுண்டாகும், இலவங்கம் - இலவங்கத்தை (வெற்றிலையுடன் அருந்தி வந்தால்), பூட்சி - உடம்பானது, இலவு அங்கம் ஆம் - இலவம்பூப் போன்ற சரீரம் உண்டாகும், அரைபிருட்டம்-அரைத்தமா, இடை-இடையிலே தேய்த்தால், இடை அரை உரமே-இடுப்பும் அரையும் உரமாம், இளம்பிடி - பெண், உடன் அடை-உடன் சேர்ந்தால், இளம்பிடி ஆகா-பெண் யானையைப் போல் வலி உண்டாகாது, இட்டிகையடுநீர்-செங்கல்லை யிட்டுக் காய்ச்சியநீர், இட்டிகையறலே கோட்டையை அகழி பாதுகாப்பதுபோல் உடலைப் பாதுகாக்கும், இந்து-கற்பூரமும்,அரிகுடாரி-சீரகமும், இரிக்கும்-போக்கும்,சிற்பரம் ஆம்- தலையில் இருக்கும் நீர், இலஞ்சி-ஏரியின், அளகம்-நீர் இரைப்பை-சுவாசத்தை, அழிக்கும்-நீக்கும், இமஅரி-சுடுகாட்டுப்புகை ஆயுள் போம்-ஆயுளைக் குறைக்கும், இயற்கம்-இயற்கைப்புகை (ஓமப்புகை) உண்டாகும்-ஆயுளை விருத்திபண்ணும், இடங்கர்-துன்பத்தை விளைவிக்கின்ற, மந்திரிக்கு-பித்தத்திற்கு, மெய்-வெங்காயம் இடங்கராகும்-துன்பம் செய்யும், இவுளியை யிவர்வோர்-குதிரை சவாரி செய்பவர்கள், இவறுதல் - விரும்பல்,சுதையே-பாலையே, இபமெனில்-யானை சவாரி செய்பவர்கள், மைதுனம்-புணர்ச்சி விரும்பல் வேண்டும், இரதம்-தேர் சவாரி செய்பவர்கள், பானகம்-பானகத்தை அதிகமாய் விரும்பவேண்டும், இயல்வாகனர்-பல்லக்கு சவாரி செய்பவர்கள், இளநீர் இயல்பே-இளநீரை இயற்கையாக அருந்த வேண்டும், இடபர்க்கு-ரிஷபத்தில் சவாரி செய்பவர்கள், அபூபம்-அப்பம் அதிகமாக அருந்துதல் வேண்டும், இயல்பினர்க்கு-நடப்பவர்களுக்கு, அசனம்-போஜனத்தை அருந்தல் வேண்டும், இத்திறம்-இக்கூறுபாடுகள், வைத்திலிங்கத்து அருண்முறை-வைத்தீஸ்வரர் அருளின முறைகளாம், இரு-பெரிய, மறை-ஆயுள் வேதம், அறிகுனர்-அறிந்தவர்கள், இரும்-பெரிய, பாண்டிதரே-வைத்தியர் ஆவார்கள் என்றவாறு.

வளி, அழல், ஐயம் ஆகிய முத்தோடம் மிகுந்தும் குறைந்தும் இருந்தால் அவைதன் நிலையிலிருக்க (முறைப்படி) கறியுப்பு, மிளகு, ஓமம் ஆகிய இம்மூன்றையும் முத்தோடங்களின் அதிகம் குறைவு என்னும் விகற்ப அளவுப்படி எடுத்துக் கொள்ள வேண்டும். (அதாவது வாதம் மூன்றுபங்கும், பித்தம் ஒருபங்கும்.

கபம் இரண்டு பங்குமாக இருக்கிறதாகக் கொண்டாம், உப்பு 3 பங்கும் மிளகு 1 பங்கும், ஓமம் 2 பங்குமாக எடுத்துக் கொள்ள வேண்டும்)

மேற்கண்ட மூன்று பொருட்களையும் கல்வத்திலிட்டு கருப் பஞ்சாற்றை சிறுகச் சிறுக விட்டு 15 நாழிகை யரைத்ததன் பின் ஆலின்கொழுந்து அல்லது விழுதின் சாற்றை முன்போல் விட்டு அரைத்து சுண்டையளவு மாத்திரைசெய்து 30 நாழிகை வெயிலி லுலர்த்திக்கொண்டு காலை மாலை இருவேளையும் நல்ல தண்ணீரில் உட்கொள்ள மேற்சொல்லப்பட்ட முத்தோடம் அதிகம் குறை வென்னும் பேதமின்றி தன்னிலையி லியங்கும். இது ஒரு சஞ்சீவி கற்பமாகும்.

இங்குலிகம்.........சரீரம்

இங்குலிக மென்னும் சாதிலிங்கத்தை முசு முசுக்கைச் சாற்றி லும் உத்தாமணிச் சாற்றிலும் முறைப்படி சுத்தி செய்து வெண்ணெ யுடன் சேர்த்தரைத்துக் குழைத்து மேகவிரணம், மேகப்புண்,குட்டப் புண் முதலியவைகளுக்கு மேற்பூசி சீயக்காய்த் தண்ணீரால் கழுவி விடத்தீரும்,

சுத்திமுறை:-

உலர்ந்த லிங்கம் ஒருபலம் (இதுஒரேகட்டியாயிருக்கவேண் டும்) முசுமுசுக்கைச் சமூலத்தையிடித்துப் பிழிந்து வடிகட்டின தனிச் சாறு அரைப்படி, உத்தாமணிச் சமூலத்தை யிடித்துப் பிழிந்து வடிகட்டின சாறு அரைப்படி, இலிங்கத்தை அப்பிரகத்தகட்டின் மீது வைத்து தனித்தனியே மேற்கூறப்பட்டுள்ள சாற்றுல் சுருக்கிட் டெடுத்துக் கொள்வதே சுத்தி முறையாகும்.

இந்த லிங்கத்தைத் தூளாகச் செய்து அளவுப்படி தக்க அனு பானங்களில் உட்கொண்டு மேலுக்கும், மேற் கூறப்பட்டபடி செய்து வர மேற்கண்ட ரோகம் சீக்கிரம் குணமாகும்.

இலிங்கம் ஒரு பங்கு, உலர்ந்த வெண்ணொச்சியிலை நான்குபங்கு வீதமெடுத்து இவ்விரண்டையும் தூளாக்கித் துணியில் வைத்துத் திரியாகத் திரித்து புகை பிடிக்கலாம் அல்லது இரணங்களில் புகை பிடிக்கலாம். இதனல் குழிப்புண் அழிவிரணம் முதலி யவைகள் தீரும்

இரசம்...........இறுகுந்தேகம்

வெற்றிலைச் சாற்றில் சுத்தி செய்யப்பட்ட இரசம், மிளகுத் தூள், சுத்தி செய்யப்பட்ட நெல்லிக்காய் கந்தகம் ஆகிய இம்மூன்றையும் வகைக்கு அரைப்பலம் வீதமெடுத்துக்கொண்டு முதலில் இரசத்தையும் கந்தகத்தையும் கல்வத்திலிட்டு மெதுவாக அரைத்து இரண்டும் நன்ருகக் கலந்து கருநிற மானவுடன் மிளகுத்தூளையும் சேர்த்து நன்ருக அரைக்க வேண்டும். பின் அதில் துளசிச் சாற்றைச் சிறுகச் சிறுகவிட்டு அரைக்க வேண்டும். நான்கு சாமமரைத்து மிளகளவு மாத்திரை செய்து நிழலிலுலர்த்தி வைத்துக் கொண்டு, ஒருமாத்திரையை பசுவின் நெய்யில் நனைத்து உட்கொள்ள வேண்டும். இவ்விதம் வேளையொன்றுக்கு ஒரு மாத்திரைவீதம் காலை மாலை இரு வேளையும் கொண்டு இச்சாபத்தியம் காத்து வரவேண்டும். இதனல் தேகம் பலப்பதுடன் திடமும் பெறும்.

இமிழ்...........இறுமேவழுதிலையால்

காதில் இரைச்சலோடு வலிக்கிற வாய்வு வியாதிகளுக்கு மருந்து; பத்துப்பலம் எள் எண்ணெயில் ஒருபலம் கண்டங்கத்தரி இலையை அல்லது வேரை அரைத்துப் போட்டுக் காய்ச்சிப் பதமாக வடிகட்டி அதை துளி வீதம் காதில் வார்த்துவர ஷ வியாதி நீங்கும்.

இலிகுசம்......... அடுமே

ஒன்றேகால் வராகனெடை எலுமிச்சை வேரின் தோலை வெண்ணெய் போலரைத்து ஆழாக்குப் பசுவின் மோரில் குடித்து வர பைத்திய ரோகங்கள் தீரும்.

இரேவதி......... குப்பையெல்லாம்

புளிப்பேருத பனங்கள்ளை காலைப் பொழுதில் மிதமாகக் குடித்து வர மேகவெட்டை தீரும்.

இல்லம்.........தெறும்

ஒரு வராகனெடை தேற்ருன் கொட்டையைத் தண்ணீரில் ஊறவைத்தரைத்து அரைப்பலம் வெண்ணெயிற் கலந்து கொள்ள மேகபைத்திய வியாதிகள் தீரும்.

இந்தீவரம்.........யடும்

செங்கழுநீர்க் கிழங்கு இரண்டு வராகனெடை யெடுத்து, நீர் விட்டரைத்து ஒருபலம் வெண்ணெயுடன் கலந்து உட்கொண்டு வர மேகத்தால் உண்டான கிரந்திக ளெல்லாம் தீரும்.

இலாங்கலி.........கலிமாற்றும்

தேங்காய்ப் பாலை உணவுகளுடன் உட்கொண்டுவந்தால் மேக உஷ்ண சம்பந்தமான வியாதிக ளெல்லாம் நீங்கும்.

இப்பி......... யிருக்கவொட்டாது

சங்கம் பட்டை, வேர் முதலிய சமூலத்தைத் தைலஞ் செய்து தலைமுழுகினல் நரை நீங்கும்.

சொர்ண பற்பமும் வங்க பற்பமும்

ஈ

ஈசான மோடல்பவனத்தினிலை போலே
ஈழத்தடலைநோயை யீழத்திலோட்டும்
ஈச்சரசத்திணைப் பாய்ச்சியரைத்திடு
ஈட்டியுலர்த்திவை யீட்டியையொப்பாய்
ஈகை நேர்வது ஈகைமாறினில்
ஈரமாறவை ஈரவே
ஈன்ற கோமயத்தினல் மெய் ஈர்ந்துமேலை மானவே
ஈருநாளினம் ஈசல்வீடு செய்
ஈண்டு புடஞ்செய் ஈதெடுத்துக் கொள்
ஈரபாகறல் ஈமுலைப்பாலினில்
ஈர்வாளினில்வாய் நோய்களை
ஈர்வாளென்னலா மேல் ஈயமுமேற்படி
ஈடுசெய் ஈங்கிவைகள்
ஈசன் வெற்றியின் சாறு சாயறல்
ஈமத்தலரியற லூமத்தை நீர்
ஈதாலரை முன் போல் கிழி

ஈர்க்கிலுலர்த்தரி ஈர்க்கது போல
ஈனமின்மேற்படி ஈனவையடலேயை
ஈவளவுதகம் ஈவளவுதகம்
ஈசத்துவமே ஈசத்துவமே
ஈறு செய்வினை ஈறு செய்யும்
ஈகை மாந்தருக்கே ஈரம் பெறவேய்
ஈர்ங்கதிர் வேணியார் ஈசுரர் வைத்தியர்
ஈரடியோர்க்கே ஈங்குகைவசமே.

சொர்ண பற்பம்.

ஈசானம்-வடகிழக்கு மூலே, ஓடல்-ஒருஅடி அதிகமாக ஓடியிருக்கின்ற, பவனத்தின் நிலே போல-வீடாகிய நிலேக்களம் போல, ஈழத்து அடலே-பொன்னினுல் செய்யப்பட்ட பற்பம், ஐநோய்-கப நோய்களாகிய சயம், காசம், இரைப்பு முதலியவைகளே, ஈழத்தி லோட்டும்-தீவிற்கு ஓட்டும், ஈச்ச ரசத்தினே-ஈச்சங்கள்ளேயாவது, ஈச்சங்குருத்தைப் பிழிந்தெடுத்த சாற்றையாவது, பாய்ச்சி (பொன் இராவினதூள் அல்லது குந்தனத்தகட்டிற்கு) விட்டு (ஒன்றிக்கு இரண்டாக), அரைத்திடு-அரைப்பாய், ஈட்டி- (அரைத்தவற்றை) சேர்த்து, ஈட்டியை யொப்பாய் உலர்த்திவை ஈரமாறவை ஈரவே-ஈட்டியின் முனேயை யொப்ப நீண்டு மெலிந்த மாத்திரையாய்த் திரட்டி அதில் உள்ள ஈரம் மாறும்படி உலர்த்தி வைப்பாய் (இதைப்போல் இருமுறை புடமிடாமல் செய்யவும்), ஈரவே-இழுத்துக்கொள்ள, ஈகை-இண்டங்கொடி, அதுநேர்வு-ஈச்சரசத்தில் முன் செய்தது போலவே ஈண்டிலும் செய்வாய், ஈகை மாறினில்-ஈச்சரசத்தில் எப்படி இருமுறை அமைத்தோமோ அப்படியே இரண்டிலும் மாருமல் செய்து, ஈர-இழுத்துக் கொள்ளும்படி, ஈர மாறவை-காயவைத்துக் கொள், ஈன்றகோ-கன்று ஈன்ற பசுவின், மயத்தினுல்-சாணிப் பாலினுலும், மெய் ஈர்ந்து-ஒரு நிலேயைஎடுத்து (முதற் சாணம்), மேலேமானவே-முன் சொன்னதை ஒப்பாக, ஈரு நாளினம்-முறைக்கு இரண்டு நாள் அரைத்து, ஈசல் வீடுசெய்-ஈசல் புற்றிலிருப்பது தோன்றுதவாறு போல சில்விட்டுச் சீலேசெய்து, ஈண்டுபுடம் செய்-பூமியில் குழிதோண்டி இப்பொழுது புடத்தைச் செய்வாய், ஈர்பாகு (ஈரம்அம்பாகு)-கரும்பினுடைய மணச்சாறும், அறல்-வென்னீர், முலேப்பாலினில்-முலேப்பாலிலும், ஈ-கொடுக்க (முறையே வாத, பித்த, கப நோய்களுக்கு), வாயநோய்களே-சம்ப

வித்த நோய்களை, ஈர்வாளினில் ஈர்வாளென்னலாம்-இரம்பத்தால் அறுத்துப் பிளத்தல் போல நோய்களை அறுத்தெரியும் என்று சொல்லலாம்.

வங்க பற்பம்.

மேல்-மேலும், ஈயமுமேற்படி ஈடுசெய்-ஈயத்திற்கு மேற்படி தங்கத்திற்குச் செய்தபடி ஒப்பாகச் செய்வாய், ஈங்கு இவைகள்-இங்கு இது பற்பமாம், ஈசன் வெற்றியின் சாறு-தும்பைச் சாறு, சாயறல்-கோரைக்கிழங்குச்சாறு, ஈமத்தலரியறல்-எருக்கம்பூச்சாறு ஊமத்தை நீர்-ஊமத்தையிலைச்சாறு, ஈதாலரை-இச்சாறுகளால் தனித்தனியே அரைத்து, முன்போல் கிழிஈர்க்கில்-முன்போல் (திரியை) ஈர்க்கைப்போல் பில்லை தட்டி, ஈர்க்கதுபோல-உலர்ந்த துரும்பைப்போல, அரி உலர்த்து-வெய்யிலில் உலர்த்து, ஈனமில்-கெடுதி இல்லாமல், மேற்படி-மேற்படியாக, ஈனவை- (பற்பத்தின் வடிவத்தைப் பெறும்படி) புடம்போடு, அடலையை-அவ்வாறு முடிந்த பற்பத்தை, அளவுதக-நோய்வன்மைக்கும் உடல்வன்மைக்கும் தக்கபடி, ஈவு-மருந்து ஈயும் அளவை உணர்ந்து, ஆம்-சிறந்த, வளவுதகம் -முப்பிணிக்கும் துணை மருந்தாகச் சொல்லப்பட்ட நீர்வடிவமான கருப்பஞ்சாறு, முலைப்பால், நீர் முறையாக வாத பித்த கபத்திற்கு, ஈ-கொடுப்பாய், ஏய்-பொருந்தி இருக்கின்ற, ஈசத்துவமே-கடவுள் தன்மையை அடைந்தவர்கள், ஈசத்துவம்-நோயை அத்தன்மையால் ஒட்டுவது போல, ஈறு செய்-மரணத்தைத் தரக்கூடிய, விணை -பெரு நோய்களையெல்லாம், ஈறு செய்யும்-கெடுக்கும் (முடிவு செய்யும்), ஈகைமாந்தருக்கு-தருமம் செய்கின்ற மனிதருக்கு, ஈரம் பெற-மனமானது எப்பொழுதும் குளிர்ச்சியாய் இருப்பது போல், வேய்-தரித்து, ஈர்ங்கதிர்-குளிர்ந்த கிரணங்களை உடைய சந்திரனை, வேணியார்-சடையிலணிந்துள்ள சிவபெருமானும், ஈசுர வைத்தியர் -வைத்தீஸ்வரரின், ஈரடியோர்க்கே-இரண்டு பாதங்களையும் மனத்திற்கொண்டு துதி செய்பவருக்கு, ஈங்கு-இவ்வுலகத்தில், கை வசமே-மேற்படி தங்கமும் வங்கமும் கைவசப்படுமாமே.

சொர்ண பற்பம்.

தங்கத்தைச் சுத்திசெய்து சன்னமாக இராவியதூள் ஒருபலம் எடுத்து நன்னிக்கல் கல்வத்திற் போட்டு ஈச்சங்கள் அல்லது ஈச்சங்குருத்தைப் பிழிந்து எடுத்தசாறு இவைகளில் ஏதாவதொன்றைச் சிறுகச்சிறுக விட்டுக் காலை முதல் மாலை வரை

விடாமல் அரைத்து இரவில் தூசு போன்றவைகள் விழுந்து விடாத படிக்கு பனியில் வைக்க வேண்டும். (பனியில்லாக் காலமானல் வெளியுள்ள இடத்தில் வைக்கவேண்டும்) மறுநாட்காலையில் முதல் நாள் செய்தது போன்றே சாறுவிட்டு காலை முதல் மாலை வரை விடாது அரைத்து இரவில் பனியில் வைக்க வேண்டும். இது போன்றே அடுத்த இருதினங்களும் செய்து ஷ அரவையை திரி யைப் போன்று நீண்டு மெலிந்த சிறுமாத்திரைகளாகச் செய்து பீங்கானிலிட்டு வெயிலில் வைத்துலர்த்த வேண்டும். இவ்விதம் 5 அல்லது 6 நாட்கள் வெயிலிலுலர்த்தி ஈரப்பசையில்லாதுலர்ந்த பின் முன் கல்வத்திலிட்டுப்பொடித்து ஈயக்கொடியை யூதியெடுத்த சாற்றைச் சிறுகச் சிறுக விட்டு மேற்செய்யப்பட்டது போன்று 16 சாமங்களரைத்து முன்செய்யப்பட்டது போன்றுலர்த்தி எடுத்து (மூன்ருவது முறையாக) கல்வத்திலிட்டுப்பொடித்துப் பசுவின் சாணப்பாலைச் சிறுகச் சிறுக விட்டு மேற்செய்யப்பட்டது போன்று 16 சாமங்களரைத்து சிறுவில்லைகளாகச் செய்து 12 நாட்கள் வெயிலில் வைத்து நன்ருக உலரச் செய்ய வேண்டும். உலர்ந்த பின் ஓட்டில் வைத்து மேலோடு மூடி சந்தில்லாமல் ஏழு சீலை மண் செய்து ஆறுநாட்கள் காய வைத்துக் கவசத்திற்கு 50 பங்கெடை வராட்டியிற் புடமிடவேண்டும். (இப்புடத்தைக் காற்று அடங்கிய இடம் அல்லது குழியிலிட வேண்டும்) புடம் போட்டு நன்ருகஆறின பின்னெடுத்துப் பொடித்து வைத்துக் கொள்ள வேண்டும்.

அனுபானம்:-

கருப்பஞ்சாற்றில் கொள்ள வாதசம்பந்த
மான நோய்கள் தீரும்.
நீரிலனுபானித்துக் கொள்ள பித்தசம்பந்த
மான நோய்கள் தீரும்.
மூலைப்பாலிலனுபானித்துக் கொள்ள கபசம்பந்த
மான ரோகங்களும் தீரும்.

வங்க பற்பம்

ஒரு பலம் சுத்தி செய்த வங்கப் பொடியை தும்பையிலைச்சாறு, எருக்கிலைச்சாறு, ஊமத்தையிலைச்சாறு ஆகிய மூன்றுவகைச்சாறு களாலும் தனித் தனியாக அரைத்து முன்பு சொல்லப்பட்டுள்ள சொர்ண பற்பத்திற்குச் செய்தது போன்று திரிபோன்ற மாத்திரை

களாகச் செய்து முன்போலவே உலரவைத்துப்புடமிட்டெடுக்கவும் (யமகவெண்பாவில் சொல்லப்பட்டிருக்கும் வங்கபற்பத்தைப்பார் வையிடவும்).

வார தான கால லக்ஷணம், விஷ பாண்டு லக்ஷணம் விஷ பாண்டுத் தைலம், ஆயுள் வேதியர் லக்ஷணம் ஆகியவைகள்.

ஆசிரியப்பா

உ

உடுவரையன் மேதைபொனன்
உசனன் பின்வுதிரன் உதயனலன்
உதவுபொருள் உருவாகுமெழில்
உத்தமமத்திமம் உற்றறிகஷ்டமில்
உற்றதுமிற்றதும் உற்பனமிற்றே
உலமீளிமன் உவாமந்திரி
உதளாரிடமுறவே உம்பலானிடஞ் சொன்மூவர்
உங்குலாவொண்ணுததே உமையிடமாமதை
உஞ்சொணுதினி உதையமிரண்டும்
உலந்துட்கும் உடுஞ்சத்தும்
உளுங்கா லேகள் உடையோனிகல்
உடல்வோன் மதி உழையோனிவர் அமைவே
உறைக்கனி உறைக்கனி உறைக்கனியாயாம்
உளையடிஉச்சிவெயர்வு மேலிட
உத்தமானிகந்தடி உத்தமாங்கம்
உதடானனங் கடுக்குங்குடல்
உப்பும் அலேசெறி உப்பெனவே
உந்துநீரெனவளி உந்தி உந்தியை
உதியன் கொடியின் மெய் உதியன் மேவிட
உபாதியாக்கையை உபாதியாக்கையை
உளுந்துருள் விடத்தை உளுந்துருள் பாண்டுவை
உச்சாடனமற உச்சாடனமுற
உணர்விளுலஃதை உபதையாய்ந்தறி
உதாசனன் சேர்ந்ததை உட்டணித்தடலின்
உலவையாவையும் உலவிக்காட்டல்போல்
உடைகணி காஞ்சிரை உதியிலேக்கள்ளி
உத்தாமணிபனே உழிஞை வெட்பாலே

உளியங் கோலமா உளியங் கோலமான்
உழுவையாமூத்திரம் உற்கடத்தமைத்தே
உச்சநீசத்தில் உறத்தைலஞ்செயல்
உரமிடருகம் உதரம்விலாவிவை
உலரத்திமிர்த்துமெய் உலரத்தனித்தனி
உண்டிநன்னென்மா உண்டி மூவாரம்
உறக்கந்தீருமே உறக்கந்தீருமே
உவச்சன் காருகி உலகன் காழியன்
உலவன் காஞ்சுகி உமணன் காவிதி
உரகன் கம்மியன் உவணியதோரணி
உபாசியேனுதி உபாத்திமாகதன்
உடோலிகாபாலி உசானிபாண்டிலி
உதாரிசாலினி உதாவியீங்கிவர்கள்
உண்மைப்பாண்டித உத்தியோகராகார்
உம்பரார் வேளூர் உருவைத்தீசர்
உரையாயுள்வேத உச்சவதரரே.

உடு - நட்சத்திரம், அரையன் - (நட்சத்திரங்களின்) அரசனுகிய சந்திரன் (இவன் நாள் திங்கட்கிழமை), உத்தமம் - உத்தமம், மேதை - புதன்கிழமை, மத்திமம் - மத்திமம், பொனன் - குருவாகிய வியாழக்கிழமை (அதமம்), உசனன் - வெள்ளிக்கிழமை (அதமாதமம்), பின் உதிரன் - பிறகு சிவப்பு நிறத்தையுடைய செவ்வாய்க்கிழமை (அதிலும் தாழ்ந்த நாள்),உதயன்-சூரியன் நாளாகிய ஞாயிற்றுக்கிழமை, அலன்-கருமை வடிவத்தை உடைய சனிக்கிழமை (இவ்விரண்டு நாட்களும் சுத்தமாய் ஆகாது).

குறிப்பு: இவைகள் வடநாட்டுக் கொள்கை, தமிழ்நாட்டிற்கு ஞாயிறு, செவ்வாய், வியாழன் என்னும் இம்மூன்று நாட்களே வாரலஷணமாம். இதனைக் கீழ்க்கண்ட மேற்கோளினுல் உணரலாம்.

"காரியும் புதனும் திங்கள் கருதிடில் மருந்து தீதாம்
சீரிய வெள்ளிநோயாம் செவ்வாய் வியாழன் பிணிதீரும்
பாரினிலுள்ள பேர்க்கு பரிகாரம் செய்ய வேண்டின்
ஆரியனருளினுலே அருக்க நாள் மருந்து செய்யே."

உற்றதும்-மருந்து கொடுத்தால் தீரா நாட்களையும், இற்றதும் -தீரும் நாட்களையும், உற்றறி - ஆராய்ந்து அறிவாய் (அப்படி அறிதல்), கஷ்டமில்-பின்னர் வருத்தப் படாமைக்கு வழியாகும்,

பொருள் உதவு - உயர்ந்த மருந்தைக் கொடு. உரு - உடல், எழில் ஆகும் - வனப்பு உண்டாம், உற்பனமிற்றே- நோய் நீங்கற்கு வழி இதுவேயாகும், உலம்-குறிஞ்சி நிலத்தில், மீளி-சிலேஷ்ம நோய் இருப்பிடமாகும், உவா - நெய்தல் நிலத்தில், மன்-வாத நோய்க்கு இருப்பிடமாகும், உதளாரிடம்-முல்லை நிலத்தில் (உதள்-ஆடு) மந்திரி-பித்த நோய்க்கு இருப்பிடமாகும், உம்பலானிடம் - இந்திரனைக் கடவுளாக உடைய இடமாகிய மருத நிலத்தில், சொல் மூவர்-அரசன் மந்திரி சேனுபதியாகிய மூவரும் வசிக்கலாம், உங்கு-அவ்விடத்தில், உற-பொருந்துமாறு, உலாவ-வசிக்க (வாழ) ஒண்ணுததே - முடியாத இடமாகும், உமையாளிடமாமதை-துர்க்கை வசிக்கும் பாலையாகுமதில், உஞ்சொணுது - பிழைக்க முடியாது, இனி - மேலே (கூறப்படுவதாகிய கால லக்ஷணம்,)

உதயம் இரண்டும்-சூரிய உதயகாலமும், சந்திரோதய காலமாகிய இரண்டும், உடையோன்-(எல்லா சம்பத்துக்களையும் உடைய) அரசனுகிய வாதம், இகல் உடல்வோன்-பகைவர்களைப் பொருதுகின்றவனுகிய சேனுதிபதியாகிய கபம் ஆகிய இரண்டினது காலமும் முறையேயாகும், உளுங்காலைகள்-மேற்கூறிய இரண்டிற்கும் உட்பட்ட காலங்களில், மதி உழையோன்-புத்திக் கூர்மையையுடைய மந்திரியாகிய பித்தத்தின் காலமாகும், இவர் அமைவே-இம்மூவருக்கும் பொருந்தும், (இக்காலங்களில்) உலந்து-நோயாளியை வதங்கச் செய்வதுடன், உட்கும் - பயத்தையும் செய்யும், உறை - உடலை, கனி - கிழப்பருவம் போல் கனியச் செய்தும் உறு ஐ கனி-உடம்பிற்கு இருந்த அழகை வெந்து போகும்படி செய்தும், உறை - நீர்வடிவமான, கனியாய் ஆம் - வெள்ளரிப்பழம் ஜில்லென்று இருப்பது போல உடம்பைச் சில்லிட்ச் செய்தும், அடி உச்சி - காலிலிருந்து தலைவரை இருக்கின்ற, உளை - மயிர்க்கால்களெல்லாம், வெயர்வு மேலிட-வியர்வை அதிகப்படும்படி செய்தும், தடி-உடம்பானது,உத்தம அனிகம்-சண்டையில் எதிரியையும் அவன் படையையும் கண்டால் அவனுக்கு எதிரியின் உடல்நடுங்குவதைப்போல்நடுங்குதலையும் செய்வதுடன், உத்தமாங்கம்-தலை, உதடு-உதடு, ஆனனம் - முகம், கடுக்கும்-இவ்விடங்களில் கடுகடுப்புடன், குடல்-குடலானது, அலை செறி உப்பு என-கடலின் அலைகள் முடங்கி முடங்கிக் கரையை மோதஉப்புதல் போலவும்,உந்து நீரென-முகத்துவாரத்தில் வந்து கலக்கும் ஆற்று நீரை எதிர்த்துத் தள்ளும் கடல் உப்புதல் போலவும், உப்பும் - உப்பும், உந்திவளி - கொப்புள் வளியானது மிகுந்து வயிற்றை உப்பச் செய்து, உந்து இயை - அடிக்கடி மோதி வருத்தத் துடன் தள்ளிக் கொண்டிருக்கும், உதியன் - சேர அரசனுடைய, கொடியின் - கொடியாகிய வில்லைப் போல, மெய்

உடம்பானது, உதியன் மேவிட - வளைதலை யடைந்து காணப் படவும், ஐ-ஐயமென்னும் சேத்துமத்துடன், ஐ-அரசனை வாதம் சேர்ந்தால், ஆக்கு - அவ்விரண்டும் சேர்ந்து செய்கின்ற, உபாதி-வருத்தத்தைப் போன்ற துன்பத்திலும், யாக்கையை - உடம்புக்கு, உபாதி-மிக்க துன்பத்தை உண்டாக்கும், விடத்தை-நோயால் ஏற் படும் குற்றமாகிய நஞ்சை, உளஉந்து-உட்கருவிகளிலிருந்து மோது தலினால், உளுந்து உருள்-(நற் குருதி கெடுதியடைந்து நீர்கோத்த வினால்) உளுந்தின் உருட்சியைப் போல, உருள் - முன் பின் பக்க மென்று வேற்றுமை இல்லாமல், உருள்-உருண்ட உருட்சி வடிவத் தைச்செய்து விடுகின்ற, பாண்டுவை-விடபாண்டு நோயின் குறிகளை யும் தன்மைகளையும், உலவை-காற்றானது, யாவையும் - எல்லாப் பொருள்களின் தன்மைகளையும், உலவி - அவ்வப்பொருள்களின் மேல் கலவாமல் கலந்து, காட்டல்போல் - ஊற்றால் (பரிசத்தால்), உணர்த்தல் போல, உச்சாடனம் - (கலைஞானம்) மருத்து நூல் ஆராய்ச்சியால், உற - மிகுதியாய் ஏற்பட்ட, உணர்வினால் - மருத் துவத்தில் பழகிய அறிவினால், அஃதை - நோய்வினையை, உபதை - சோதித்து, ஆய்ந்து அறி - ஆராய்ந்தறிதலைச் செய்து, உதாச னன் - நெருப்பானது, சேர்ந்ததை - தன்னிடம் சேர்ந்த பொருளை, உட்டணித்தடலின் - கொளுத்தியொழிப்பதைப் போல, அற-நோய் முழுதும், உச்சாடனம் - நீக்க வேண்டும், உடை - வேலம் பட்டை வேர், காஞ்சிரை - எட்டிப்பட்டைவேர், உதி-ஒதியன்பட்டைவேர், இலைக்கள்ளி - இலைக்கள்ளி வேர்ப்பட்டை, உத்தாமணி - உத்தா மணிச்சமூலம், பனை - பனைவேர்ப்பட்டை, உழிஞை - சிறுபூளை சமூலம், வெட்பாலை - வெட்பாலை வேர்ப்பட்டை, உளி - வெள்ளை வெங்காயம், அங்கோலம் - அழிஞ்சில் வேர்ப்பட்டை மா - மாமர வேர்ப்பட்டை (எடுத்துக்கொண்டு), உளியம் - கரடி, கோலம் - பன்றி, மான் - மான், உழுவை - புலி, ஆ - பசு, மூத்திரம் - இவை களின் மூத்திரம், உற்கடத்து அமைத்தே - மேற்படி பட்டைத்தூள் கள் நன்றாய் ஊறி மேற்கொண்டு நிறையும் படியான அதிக அள வில் பெய்து அடுப்பேற்றி, உச்சம் - அதிக அளவாக $1\frac{1}{4}$ பங்குள்ள நீரை, நீசத்தில்-கால் பங்களவு குறையும்படி எரித்து வடித்து (மீதி ஒரு பங்கு இருக்க வேண்டும்), உற-அக்குடிநீருக்குப் பொருந்து மாறு, தைலம் - நல்லெண்ணெயை விட்டு (சமஅளவு), செயல் - செய்தல் வேண்டும்.

உச்சம் நீச மென்பதற்கு மேற்கோள் :-

" உச்சமொன்றுடன் காலொன்று கேந்திரம்
அச்சமுக்கால் அதிபதியோர் பலம்
மெச்சு நட்புக்கரைப்பல மிக்க கால்
துச்சநீசர் பலனென்று சொல்லுமே. "

—— சாதகாலங்காரம்.

உரம் - மார்பு, மிடர் - கழுத்து, ஆகம் - சரீரம் (மேனி), உதரம் - வயிறு, விலா - பக்கங்கள், இவை - இவ்விடங்களில், உலரத் திமிர்த்து - உலர உலரப் பூசிப்பிடித்து, மெய் உலர-தைலம் பூசிய உடம்பை நன்ருய் இரண்டு அல்லது 3 மணிநேரம் ஆறும்படிவிட்டு, தனித்தனி - மீண்டும் மீண்டும் முன்போலவே செய்து, உண்டி - உண்ணுதற் குரித்தான, நல் - உயர்ந்த, நெல்மா - கருங்குருவை அரிசிமாவில், மூவாரம் உண்டி (உண்ணுதி) - மூன்று வாரம் உண்பாய், உறக்கம்-தூக்கத்தை உண்டு பண்ணுகின்ற சோர்வு (பின்னர்), கம் - அவ்வுடம்பில் இயற்கையாய் இருந்த செம்பால் கெட்டு நீரானமையாலும் (உடல் வெளுத்தலானும்), உற - மிகுதி யும், தீரும் - நீங்கும்.

குறிப்பு : மேற்கூறியபடி தைலங்காய்ச்ச பழைய உரை இருப் பினும் எண்ணெய் சேர்ப்பதைப் பற்றிச் செய்யுளில் கூறவில்லை. அதுவுமின்றி நெல்மாவில் துளிக் கணக்கில் சாப்பிடும் தைலங்கள் சாதாரணமாகக் குழித்தைலமே யாதலின், மூத்திரத்தில் பட்டை களை ஊறவைத்து உலர்த்தித் தூளாக்கிக் குழித்தைலமாக இறக் கிக் கொள்ளலாம்.

வைத்தியர்களாகத் தகாதவர்கள் இன்னுர் எனல்.

உவச்சன் - பூசாரி (ஓச்சன்), காருகி-கைக்கோளன், உலகன் - குயவன், காழியன் - வண்ணுன், உலவன் - மலையாளி (உலம்-மலை கல்) காஞ்சுகி - கொல்லன், உமணன்-சோணகன் (உப்பு விளைவிப் போன்), காவிதி - கணக்கன், உரகன்-பாம்பாட்டி (உரகம்-பாம்பு) கம்மியன் - கம்மாளன், உவணி - காருட வித்தைக்காரன், அதோ ரணி - யானைப்பாகன், உபாசி - மந்திரவாதி, ஏனுதி - வேட்டைக் காரன், உபாத்தி-உபாத்தியாயன், மாகதன்-பட்டுவான், உடோவி- மேளக்காரன், காபாலி - அங்காளம்மை மருளன், உசானி - பாட கன், பாண்டிலி - தேர்ப்பாகன், உதாரி-வள்ளல், சாலினி - தெய்வ உபாசகன், உதாவி - ஆபத்துவ மானவன், ஈங்கு இவர்கள் - இப் பேர்ப்பட்டவர்கள், உண்மைப் பாண்டித உத்தியோகராகார் - உண்மையான பாண்டித்யம் உடைய வைத்தியராக மாட்டார்கள் (வயிறு வளர்க்க வைத்தியம் செய்பவர்கள் என்றவாறு), உம்பரார். தேவர்கள் எப்பொழுதும் வந்து வணங்கும், வேளூர்-புள்ளிருக்கும் வேளூரிலே, உரு - பொருந்தி இருக்கின்ற, வைத்தீசர் - வைத்தீஸ் வரர், உரை - சொன்ன, ஆயுள் வேத உச்சவதரரே - மருத்துவ மறை அறிந்த மருத்துவர்களால், மருத்துவர்கள் அல்லாதவர்கள் என்று கொள்ளப்பட்டவர்கள் ஆவார்கள் என்றவாறு.

மதனகாமேஸ்வரம்

ஆசிரியப்பா

ஊ

ஊதைநாள்படிவம் ஊர் கடைசியான
ஊனுருவுவிதியாதி ஊசலெனலாமே
ஊத்தைமலப்பையை ஊக்கியசைப்பதை
ஊக்கமெனத்திரி ஊழ்த்தலினுலோ
ஊணினுலடர் காமவாரிதி
ஊகமானிடர் போகமே
ஊதியன் புகைத்திரும்பை ஊதியன் பிழைத்தல் போல்
ஊருணி ரேதசை ஊருணியாமே
ஊசிநுழைந்தோடிடுஞ் செயற்போல்
ஊறுகமுஞ் சேர்வுறத்தான்
ஊர்போனவரூர் கோளடி
ஊழிற்படற்பொடி செய் ஊமத்தையாரணி
ஊதைக்கிகலலர் ஊடரையிருசாமம் முடனதை
ஊட்டி யிளவத்திரியை ஊட்டியிலே
ஊண்வாய்முலைப்பாலுந் தொந்தி
ஊறுமுன்னேயதை யூறுசெய்தே
ஊத்தின் முக்கடு ஊபமுன் கலந்தரை
ஊழல் சேயரத்தை யூழல் செவாதெடு
ஊரகன் பாயலிலூ ண்டிசிந்தொழிந்தே
ஊருமின்னுர் விழையூப்பவுமிகுமே
ஊழியல்பாகி யூழியல் பாகி
ஊழியம் பொழுதிடை யூழியம்பொழுதே
ஊன்றியகுறியாவூன்றியலாமே
ஊமனுண்மைக்கே யூமனுண்மைக்கே
ஊவுதல் வேண்டிலே யூண்மையருணமே
ஊர்தியாவீமலி யூர்திகாடைய
ஊபதையாயுனூல் யூரியர் நெறியே.

மதனகாமேஸ்வரம்

ஊ

ஊது - கனத்த, ஐ - பெரிய (இது ஊது + ஐ - ஊதை எனப் புணர்ந்து நின்றது), நாள் - பலத்த ஆயுளையுடைய, படிவம் - வடிவத்தையுடைய யானை முதல், ஊர்-ஊர்ந்து செல்வதாகிய எறும்பு,

கடைசியான - கடைசியாக இருக்கின்ற, உருவு - உயிரோடு கூடிய உடல்களை, விதி - பிரமனானவன், ஆதி - சிருஷ்டிகாலத்தில் உண்டாக்கினன், ஊசலெனலாம் - ஊஞ்சல் இங்கு மங்கும் ஆடுவதைப் போல் (இவ்வுலகில் பிறப்பும் அதனாலுண்டாகிய இறப்பும் நடைபெற்று வருவதனை குறிப்பாலுணர்த்தியவாறுஎன்பதாம்). ஊத்தை - அசுத்தமாகிய, மலம் - மலத்தை நிறைத்து வைத்துள்ள, பையை - பைபோன்ற தேகத்தை (மலப்பையை எனக்கொள்க), ஊக்கி - சுமந்து, அசைப்பதை - நடமாடுவதையே, ஊக்கமெனத் திரி - உறுதியெனக்கொண்டு திரிந்து, ஊழ்த்தலினலோ - (எதிர்மறை) பாழாக்குவதற்கன்று, ஊணினல் - வன்மையுள்ள உணவினல், அடர் - அதிகப்படுகின்ற, காமவாரிதி - கடலையொத்த காமமானது, ஊக - அறிவுள்ள, மானிடர் போகமே - மனிதர்களுடைய போகமாகும் (விருப்பாகும்), ஊதியன் - ஊதியம் அடையவிரும்பி (வாதி), புகைத்திரும்பை - இரும்பை பொன்னுக்கற் பொருட்டு ஊதி, ஊதியன் பிழைத்தல் போல் - ஊதியவன் தவறுசெய்தல் போல (பயனற்றது போல்), ஊர் உணி - இரத்தத்தை உண்டு மெதுவாக ஊர்ந்து செல்லுகின்ற உண்ணியைப் போன்றும், ஊசி நுழைந்தோடிடுஞ் செயல் போல்-ஊசியின் காதின் வழி நூல் மெதுவாகச் செல்லுவதைப் போன்றும், ரேதசை - சுக்கிலமானது ஊருணியாம் - கொஞ்சம் கொஞ்சமாகச் சேர்ந்து குளம்போலாகிற, ஊறு கம் - சுரந்த நீரானது (சுக்கிலம்), சேர் உறத்தான் - சேர்ந்து பொருந்தி உலகம் வளர்ச்சியடையத்தான் (பாழாக்குவதற்கு அல்ல வென்றவாறு), ஆகவே ஊதியன் பிழைத்தவன் செய்ய வேண்டுவது யாதெனில்:-

ஊர்போனவர் - ஊர்விட்டு வெளியேறி புதிதாக வேறூர் இடத்தில் குடியேறியவர், ஊர் - அவ்விடத்தை ஊராகச் செய்வதற்கு, கோள்-முதலாகக் கொள்ளுகின்ற ஊர் முதலி (முருங்கை), அடி - வேரும், ஊழிற்படர் - ஊழிகாலத்திலும் படர்ந்திருக்கின்ற மாமரத்தின் அடியும், பொடிசெய் - பொடிசெய்து, * ஊமத்தையார் அணி - ஊமத்தையை அணியக்கூடிய சிவபெருமான் அணிந்துள்ள கொன்றைப் பூச்சாற்றால், ஊதைக்கிகலலர் - இலவம் பூச்சாற்றால் (ஊதை — காற்று, இகல் — பகை, அலர் - மலர், எனப்பிரித்துப் பொருள் கொள்க), ஊடு - கூட, அரை இருசாமம் - அரைப்பாயாக, (ஒவ்வொரு சாற்றாலும் இரு சாமம் அரைக்க வேண்டும் என்றவாறு), உடன்

* குறிப்பு : ''மின்னார் செஞ்சடைமேல் மிளிர் கொன்றை யணிந்தவனே'' (தேவாரம்),

அதை - அரைத்த உடனேயே அதைக் கோதுமை மாவிற்குள் புதைத்து, இள அத்திரியை ஊட்டி - ஒட்டகத்தின் குட்டிக்கு ஊட்டி, ஊண்வாய் - உண்ட அந்த வாயினல், முலைப்பால் - ஒட்டகையின் பால், தொந்தி ஊறுமுன் - வயிற்றில் சேர்ந்து செரிப்பதற்கு முன்னே, அதை - அக்கன்றை, ஊட்டியிலே - கழுத்திலே, ஊறு செய்து - அறுத்து.

செய்முறை

தேவையான சரக்குகள் :

1. முருங்கை வேர்ப்பட்டை 2. மாவேர்ப்பட்டை 3. கொன்றைப்பூச்சாறு 4. இலவம்பூச்சாறு 5. மிளகு 6. அரிசித்திப்பிலி 7. மேல் தோல் சீவப்பட்ட சுக்கு 8. காராம்பசுவின் நெய்.

முறை : மேற்சொல்லப்பட்ட இருவேர்ப் பட்டைகளையும் நிழலிலுலர்த்திப் பொடித்த பொடி வகைக்கு ஒரு பலம் வீதமெடுத்து கல்வத்திலிட்டுக் கொன்றைப்பூச் சாற்ருலும் இலவம்பூச் சாற்ருலும் சிறுகச் சிறுக விட்டு தனித்தனியே ஒவ்வொரு சாமம் நன்ருக வரைதது உருண்டை செய்து கோதுமை மாவிற்குள் பொதிந்து ஒட்டகக் குட்டிக்குக் கொடுத்து அக்குட்டிக்கு அதனுடைய தாய்ப்பாலை ஊட்ட வேண்டும். அக்குட்டியின் இரைப்பையில் பால் இறங்கும் பக்குவத்தில் அக்குட்டியின் கழுத்தை கவனமாக அறுத்து மருந்தும் பாலும் கலந்தும் கலக்காததுமாயிருக்கிற பருவமறிந்து எடுத்து அதில் மிளகு, அரிசித்திப்பிலி, மேற்ருேல் சீவப்பட்ட சுக்கு ஆகிய மூன்றையும் வகைக்கு முன் மருந்திற்குக் கால்வாசியெடை வீதமெடுத்துச் சூரணித்துச் சேர்த்து, இக்கூட்டிற்குச் சமமாக காராம் பசுவின் நெய்விட்டு அரைத்துப் பக்குவம் செய்து சுண்டைக் காய்ப்பிரமாணம் மாத்திரையாகச் செய்து பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்தி வைத்துக் கொள்ள வேண்டும்.

அனுபானம் : உடல் வன்மைக்குத் தகுந்தாற்போல் ஒன்று அல்லது இரண்டு மாத்திரையை தேவையான காலத்திற்கு மூன்று மணி முன்னதாக உட்கொள்ள வேண்டும் (புளிப்பு நீக்க வேண்டும்). போக பலம் கிடைக்கும். இதைத் தொடர்ந்து உட்கொண்டு வந்தால் தேக பலம், ஜனனேந்திரிய பலம், கவர்ச்சி, சந்தான விருத்தி முதலியன உண்டாகும். நரம்புகளெல்லாம் முறுக்கேறி வைரம்போலாகும். இதற்கு மாற்று எலுமிச்சம்பழம்.

குறிப்பு : இம்முறை நம்மனேர்க்கு எளிதன்று. இதுபோன்ற முறை யூநானி கிரந்தத்திலும் காணப்படுகின்றது. இவை ஒன்ருே

டொன்று பெரும்பான்மையும் பொருந்தியிருப்பதை நோக்குங்கால் இப்பாக முறையானது மிகச்சிறந்தது என்பது நன்கு விளங்கும். மேலும் இப்பாகமானது பெரியோர்களால் மிக இரகசியமாகவே கையாண்டு வரப்பட்டது.

மதனகாமேஸ்வரம் (வேறு)

தேவையான பொருட்கள் :

1. பத்துப்படி சீமை ஒட்டகப்பால் *2.* நிழலிலுலர்த்தி இடித்து வஸ்திரகாயஞ் செய்த ஒரு பலம் மாவேர்ப் பட்டைச் சூரணம் *3.* நிழலிலுலர்த்தி இடித்து வஸ்திரகாயஞ் செய்த ஒரு பலம் முருங்கை வேர்ப்பட்டைச் சூரணம் *4.* கொன்றைப்பூச்சாறு *5.* இலவம்பூச்சாறு *6.* அரைப்படி ஒட்டகப்பால் அல்லது பசுவின் பால் *7.* மேற்றேல் சீவப்பட்ட சுக்கு *8.* மிளகு *9.* அரிசித் திப்பிலி *10.* உலர்த்தின பொதினு *11.* பத்துப்பலம் பசுவின் நெய் *12.* விரும்பினல் கொஞ்சம் தேன்.

செய் முறை : *2, 3*ல் சொல்லப்பட்ட சூரணங்கள் இரண்டையும் கல்வத்திலிட்டுக் கொன்றைப்பூச்சாறு சிறுகச்சிறுக விட்டு இரண்டு சாமமரைத்து மாத்திரைகளாகச் செய்து நிழலிலுலர்த்தி, நன்குலர்ந்த பின் மறுபடியும் கல்வத்திலிட்டுப் பொடித்து இலவம் பூச்சாற்றைச் சிறுகச்சிறுகவிட்டு இரண்டு சாமமரைத்துச்சுண்டைக் காய்ப் பிரமாணம் மாத்திரை செய்து நிழலிலுலர்த்தி எடுத்துக் கொள்ளவேண்டும். பின் ஒரு மண்பாத்திரத்தில் அரைப்படி ஒட்டகப்பால் அல்லது பசுவின் பாலேவிட்டு அதனுடன் கொஞ்சம் நீரும் சேர்த்து அப்பாத்திர வாயை மெல்லிய துணியால் வேடு கட்டி அதன்மேல் முன்செய்துள்ள மாத்திரையை வைத்துப் பானையின் வாயை மற்றெரு சட்டியால் மூடி சிறு தீயாக பால் வற்றும் வரை எரித்து, அப்படியே ஆற விட்டு நன்ருகக் குளிர்ந்து ஆறின பின் எடுத்து வெயிற்படாமல் நன்ருக நிழலிலுலர்த்திப் பின் கல்வத்திலிட்டுப் பொடித்து வைத்துக் கொள்ள வேண்டும்.

பின் மேற்றேல் சீவின சுக்கு, மிளகு, அரிசித்திப்பிலி, உலர்த்தின பொதினு ஆகியவற்றை யெடுத்து சுக்கு நீங்கலாக மற்றவைகளே இளவறுப்பாக வறுத்து எல்லாவற்றையும் தனித்தனியாக இடித்து வஸ்திரகாயஞ்செய்த சூரணம் வகைக்கு முக்காற் பலம்வீதமெடுத்து, இதையும் மூன்பு தயாரித்துள்ள சூரணம், ஒட்டகத்தின் பால் ஆகிய மூன்றையும் கல்வத்திட்டு ஒன்ருகக் கலக்குமாறு நன்ருக அரைத்துப் பின்பு பத்துப் பலம் உருக்கின பசுவின்

நெய்யைச் சிறுகச்சிறுக விட்டரைத்து இலேகியப் பருவமானவுடன் பீங்கான் பாத்திரத்தில் வைத்துக் கொள்ளவும். (நெய் தேவையானவரை சேர்த்துக்கொள்ளலாம்). விருப்பமுள்ளவர்கள் கொஞ்சம் தேனையும் சேர்த்து அரைத்துக் கொள்ளவும்.

அளவு: உடல் வன்மைக்குத் தக்கவாறு கால் வராகனெடை முதல் ஒன்றேகால் வராகனெடை வரையில் காலை மாலை இரு வேளையும் உட்கொள்ளலாம். அவசியமான காலங்களில் இரண்டு மணிக்கு முன்னதாக ஒரு வராகனெடை மருந்தை உட்கொண்டு அதற்கு மேல் பாலன்னம், இனிப்புப் பொருட்களை உட்கொள்ளலாம்.

புளிப்பினங்களை அறவே நீக்க வேண்டும். இப்பாக முறையில் அபினி, கஞ்சா, ஊமத்தன்வித்து முதலியவைகள் சம்பந்தப்படவில்லையாதலால் இது விசேஷத் தன்மை பெற்றது எனச்சொல்லப்படுகின்றது.

எஃகு பற்பம்

ஆசிரியப்பா

எ

எஃகாகுமய பற்பம் எழுகாகமெனவே
என்றைக்கு முரமாவை என்றைக்கும் விடையே
எச்சநிமித்தம் எச்சமெனச் சொலை
எச்சமெனச் செயும் எச்சமதாமே
எண்கணன்மதி எண்கணன்வலி
எண்கணன் கதி எண்கணே எருமை
எருமை எருமையாக்கி எருமையிணையை எஃகுதான்
எருதின்றனறலாம் எழுநாழிவாருடன்
என்றிலழுந்துந் திறத்திற் செய்து
எழுநாளளவெனப் போனதற்பின்
எயினற்குடி எயினற்படு
எயினற்றசை தருநெய்
எழுதிவை யுடனரை எழுதிவைமுறையே
எகினீரும் அப்படியேயரை
எட்டி விரை யெண்ணெயை எட்டி விரைவாய்
எச்சொடுத்தக்கில தாய் அதை
எட்டுணேயாய் வின்றி எட்டு தினம்
எலிப்பறழ்தனைக்கடி எருவையும் அப்படி

எறும்பியண்டாவெரி எறும்பியண்ட நீர்
எருந்து நீர்மேற்படி எடுத்தரைத்தானபின்
எத்தனமாறெணி எத்தனமானபின்
எந்திரவில்லே செய் எந்திரமாக
எல்லேக்காணவை எல்லேக் காணவை
எதிரதனத்திலே எதிரதனத்தி
எவ்வமிலாப்புடம் என்பெனச் செய்தெடு
எள்ளிண விடுத்திணே எள்ளினளவை
எட்டியரலங்கலே எவளேயானலங்கலே
எக்கியமுதன்மையுண் எட்டிருதிவாவே
எள்ளுகவையவி எள்ளுகசிந்தே
எகினமாவாதி எமர்பரவுடனே
எப்படிப்படினுமே எய்ப்படிபடுமே
எயிறுதுரகதமே எயிறுரமாமே
எமுணயோதிமெய் எமுணயோதிமெய்
எப்போதுமின்னேய் என்னவாழ்வுறுமே
எந்தையார் வேளூர் எஞ்சாக்கருணையை
எச்சரிப்பாயுளர் எடுத்துரையிஃதே.

எஃகாகுமய பற்பம் - அயத்திலே ஒரு பிரிவான எஃகு வின் பற்பம் செய்தருந்தினல், ஆகம் - சரீரம், எமுகு எனவே என்றைக்கு முரமாவை - எஃகைப் போல பலத் துடன் எப்பொழுதும் இருப்பாய், என்றைக்கும் விடையே - எப்பொழுதும் காளேப்பருவம் உள்ளவனுகவே இருப்பாய், எச்ச நிமித்தம் - பிள்ளே வேண்டுமென்கின்ற காரணத் தினலே, எச்சமென - வேள்வி செய்ய வேண்டுமென்று சொல்லு கின்ற, சொலே - சொல்லே, எச்சமெனச் செயும் - காரி உமிழும்படி செய்யும், அஃது எச்சமதாம் - அது உண்மையாம், எண்கணன்-பிரம மன், மதி - மதித்து, எண்கணன் வலி(எண்கு+அணன்) - கரடியாக அவதரித்தவனுடைய (சாம்புவன்) வலிமையும், எண்கணன் - ஆயுள் அளவைக் கணக்கிடுவதற்கு உரியவன் ஆவான், கதி - இதனுடைய செயல் இப்படியாம், கண்ணே - கண்ணுக்கு ஒப்பானவனே, எண் - இதை நன்ருய் ஆராய்ச்சி செய் (இது செய்யும் விதம் எப்படி எனில்), எருமை எரு - எருமைச் சாணத்தையும், மைஎரு - வெள் ளாட்டுப் புழுக்கையையும், மையாக்கி - சரியளவெடுத்து மைபோ லரைத்து அதில், எருமையிணேயை - இரண்டு சாணத்துக்கும் வந்த எடை, எஃகுதான் - எமுகு சேர்த்து, எருதின் தன் அறல் - எருதின் நீர், எமு நாழிவார்-எமுபடி சேர்த்து, உடன் - உடனே, எமுநாளள வெனப் போனதற்பின் - எமு நாளரைத்த பிறகு, என்றில் அமுந் தும் திறத்தில் செய்து - சூரியனில் அமுந்துவதைப் போலத்

திறமாகச் செய்து, எயினற்குடி - வேடருடைய குடியில் வந்த, எயினற்படு - வேடராலே வேட்டையாடிப் பிடிக்கப்படுகின்ற, எயின் - முள்ளம் பன்றிகள், நற்தசை தருநெய் - நல்ல தசையி லிருந்து வேக்காடு கொடுப்பதனாலே வருகின்ற நெய், எழுதிவை உடனரை - சூரியன் எழுவது முதல் படும்வரை அரை, எழுதிவை முறையே - முறையாக முன்போலவே ஏழுநாளரைத்து, எகின் நீரும் அப்படியே - நாய் மூத்திரத்தாலும் அப்படியே அரைக் கவும், எட்டிவிரை யெண்ணெயை - எட்டியிலிருந்து குழித்தைலம் எடுத்து அந்த எண்ணெயை, எட்டி - தொடர்ந்து, விரைவாய் - அரைப்பதிலே துரிதப்படுத்துவாய், எச்சொடு தக்கிலதாய்-அதி கப்படாமலும் குறையாமலும் மிதமாய் விட்டு, அதை எட்டுணை யோய்வின்றி எட்டு தினம் - எள்ளளவு கூட ஓய்வில்லாமல் எட்டு நாள் அரைக்கவும், எலிப்பறழ்தனைக்கடி - எலிக் குட்டிகளைச் சேர்த்துக் கொன்றதனால் வந்த, எருவையும் அப்படி - அந்த இரத் தத்தினாலும் மேற்படியே அரைப்பாய் (எட்டி போல்), எறும்பு இ அண்டா - எறும்பும் ஈயும் நெருங்காதபடி, எரி - நெருப்பைப்போல் வேகத்தைக் காட்டுகின்ற, எறும்பியண்ட நீர் - யானையின் நீரினாலும் முன்போலவே அரைக்கவும், எருந்து நீர் மேற் படிஎடுத்தரைத்தானபின்-கிளிஞ்சல் நீரினால் முன்போல அரைத்த பின்பு, எத்தனம் ஆறு - எத்தனித்துப் பார்க்க வேண்டியதெல் லாம், எணி - எண்ணி, எத்தனமானபின் - எத்தனங்களெல்லாம் முடிந்த பிறகு, எந்திரமாக - எந்திரங்களின் வன்மைபோல், எந் திரம் - பண்டி உருளைபோல், எல்லை காண வில்லை செய் - அளவு காண வில்லை செய், (பிறகு அப்பில்லையை) வை - சுருக்காய் காய் கின்ற, எல்லை காணவை - பகலைக் காண வைப்பாய் (பில்லை உலர்ந்த பின்), எதி - சந்நியாசியின், இரதனத்தின் எதிர் - பல் லின் மங்கல் நிறம் போன்ற, அதனத்தி - அப்பில்லையின் அரை செம்மையும் அரை வெண்மையும் நல்ல வெண்மையாக வெளுக்கும் படி, எவ்வமிலாப்புடம் - குற்றமில்லாத புடமாகச் செய்து, என் பெனச் செய்தெடு-என்பினது வெள்ளையைப்போல் செய்திடுவாய், எள்ளினை விடுத்து-ஒரு எள் என்கிற அளவைவிட்டு, இணைஎள்ளின் அளவை - இரண்டு எள் அளவாக, எட்டியரலங்கலை - செட்டி களின் மாலையாகிய செங்கழுநீர்ச்சாற்றிலும் (கொடுக்க வாத நோய் தீரும்), எ (ஏ) - விஷ்ணுவாகிய, அளையான்-வெண்ணெயுண்டவன், அலங்கல் - மாலையாகிய துளசிச் சாற்றிலே (கொடுக்க பித்த நோயும்), எக்கிய முதன்மை - ஓமத்திற்கு உபயோகிக்கின்ற நெய் யிலே (அருந்தக் கபநோய்களும்), உண் எட்டு இருதி வாவே - பதினறு நாட்கள் அருந்தவும், எள்ளுக ஐயவி - கடுகைத் தள்ளவும், எள்-எள்ளை, உக - நீக்கிவிடும்படி, சிந்து - தள்ளிவிட வேண்டும் (இவைகளல்லாமலும்), எகினம் - புளியும் புளிப்பு வகை

களும், மா - மாங்காய் வகைகளும், ஆதி - முதலாகச் சொல்லப் பட்ட, எமர் பரவுடன் - எமனை ஒத்தவர்களாகிய பெண்களை விரும் புவதும் தள்ளவேண்டும்,(இவ்வாறு பத்தியக்கிரமமாக இருந்தால்) எப்படிப்படினும் - எப்படிப்பட்டதாக இருந்தாலும், எய்ப்பு - நெடுங்காலமாய் இருக்கும் இளைப்பானது, அடிபடும் - நீங்கும், எயிறு - அசைந்து கொண்டிருக்கும் பல்லானது, துரகதமே - குதிரையின் திமிர் போல் வலுக்கும், எயிறு - பல்லடிகள், உர மாம் - வலிமையடையும், ஓதி - நரைத்த மயிரானாலும், அதுயமுனை - காளிந்தி நதியின் நிறமான கருப்பாகும், மெய் - உடம்பானது, எமுனை (எ-முனை) - எப்படிப்பட்ட சண்டையிலும் வெற்றிபெறக் கூடியதாகும்படி, ஓதி - மலைக்கு ஒப்பானதாகும், மெய் - இவைக ளெல்லாம் உண்மையாகும், நோய் - எவ்விதமான நோய்களும், எப்போதும் இல் - எந்தக் காலத்தும் உண்டாகாது, என்ன வாழ்வுறும் - என்று சொல்லும்படியான உயர்ந்த வாழ்க்கை உண் டாம், வேளூர் எந்தையார் - புள்ளிருக்கும் வேளூரில் இருக்கின்ற என் தந்தையாகிய வைத்தீஸ்வரர், எஞ்சாக் கருணையை எச்சரிப்பு - குறையாத கருணையால் எச்சரிப்பாகிய இதை, ஆயுளர் - மருத்து வர், எடுத்துரை இஃதே-எடுத்துரைத்தது இதுவேயாகும்.

எஃகாகுமயபற்பம் .... எடுத்துரையிஃதே

பொன், வெள்ளி, இரும்பு என்பன உலோகங்கள் என வழங்கப் படுகின்றன. இவ்வுலோகங்களில் தங்கம் சிறப்புடையதாகக் கருதப் பட்டபோதிலும், தேகத்திற்கு, தங்கத்தினும் சிறப்புடையது இரும் பேயாகும். இவ்விரும்பானது உடலை நிலையாகச் செய்கின்றது. மனப்பூர்வமாகச் செய்த புண்ணியவான்கள் எண்ணியதை எண் ணியவாறு அடைதல் போன்று, இரும்பு என்ற பெயர் கொண்ட எஃகைப்பற்பமாக்கி உட்கொண்டவர்களது உடம்பிற்குப் பற்பல நன்மைகள் தவருது உண்டாகின்றன.

இச்சிறப்பு மிக்க எஃகு பற்பத்தின் செய்முறை :-

இராவிப் பொடி செய்த எஃகுத்தூள் 10 பலம் எடுத்துக் கொண்டு, 5 பலம் எருமைச்சாணியும், 5 பலம் வெள்ளாட்டுப்புழுக் கையும் எடுத்து இவ்விரண்டையும் கல்வத்திலிட்டு வெண் ணெயைப்போன்று அரைத்து அதன்பின் ஷை பொடியையும் கூடச் சேர்த்து அரைக்க வேண்டும். இவ்விதம் அரைக்கும் பொழுது எருதின் மூத்திரத்தைச் சிறுகச் சிறுக விட்டுக் காலை முதல் மாலை வரை கை விடாமலரைக்க வேண்டும். இவ்விதம் ஏழு நாட்கள் அரைக்க வேண்டும். அதன்பின் ஷை மூத்திரத்தை விடாமல், ஷை அரவை கெட்டிப்பதமாகும் வரை அரைக்க வேண்டும். பிறகு முள்ளம்பன்றியின் கொழுப்பை உருக்கிய

நெய்யைச் சிறுகச் சிறுக விட்டு காலை முதல் மாலை வரை கை விடாமல் ஏழுதினங்களரைக்க வேண்டும். அதன் பின் இரண்டு நாள் கெட்டிப்பதமாகும்வரை நெய் விடாமலரைத்து மூன்றுவதாகநாயின் சிறு நீரைச் சிறுகச் சிறுக விட்டு காலை முதல் மாலை வரையில் கை விடாது ஏழுதினங்களரைத்துப் பின் நீர்விடாது கெட்டிப்பதமாகும் வரை அரைக்க வேண்டும். நான்காவதாக எட்டிக் கொட்டையைக் குழித்தைலமிறக்கி அதையும் முன் போலவே சிறுகச் சிறுக ஊற்றி காலை முதல் மாலை வரை கைவிடாது ஏழுதினங்களரைத்துப் பின் தைலம் விடாது கெட்டிப்பதமாகிற வரையிலும் அரைக்கவேண்டும். ஐந்தாவதாக கருநிற எலிகளின் இரத்தத்தை விட்டு எட்டுத்தினங்கள்முன்போலரைத்து, ஆறுவதாக யானையின் மூத்திரத்தை விட்டு முன்போலரைத்தானபின் ஏழாவதாக கிளிஞ்சில் செயநீரை விட்டு முன்போலவே அரைத்து கெட்டிப்பதமாகிப் பக்குவமானவுடன் சிறு சிறு வில்லைகளாகச்செய்து வெயிலில் வைத்து நன்றுகஉலர்த்த வேண்டும். உலரும்போது அடிக்கடி வில்லைகளைப் புரட்டிப் புரட்டி வைக்க வேண்டும். இவ்விதம் 10 நாட்கள் உலர்த்த வேண்டும். வில்லையையெடுத்துத் தட்டினால் கலீர் என ஓசை கேட்கும் வரை உலர்த்த வேண்டும். பின் அதை ஓட்டில் வைத்து மேலோடு மூடி ஏழு சீலைமண் செய்து நன்றுக உலர்ந்தபின், கஜபுடம் போட்டு நன்றுகக் குளிர்ந்து ஆறியபின்பெடுத்துக் கவசத்தைப் பிரித்தெடுக்க, வெண்மையான பற்பமாயிருக்கும்.

உபயோகிக்கும் விதமும் அளவும் :- ஒன்று முதல் இரண்டு எள்ளெடை செங்கழுநீர்ப் பூச்சாற்றில் மத்தித்துக் கொடுக்க வாத ரோகங்கள் தீரும்.

துளசிச் சாற்றில் கொடுக்க பித்த ரோகங்கள் தீரும்.

நெய்யிற் கொடுக்க சிலேத்தும சம்பந்த நோய்கள் தீரும். இரு வேளையும் 16 நாட்கள் சாப்பிட வேண்டும்.

பத்தியம் :- கடுகு, எள்ளு, புளி, மாங்காய், மாப்பண்டங்கள், போகம் முதலியவைகளை நீக்க வேண்டும்.

இவ்விதம் செய்துவந்தால் மூவகை ரோகங்கள் தீர்வதுடன், அசைவுற்ற பல் இறுகி அரத்தைப் போலாகும். நரைத்திருக்கும் மயிர் கருநிறத்தையடைவதோடு பளபளப்பையும் கவர்ச்சியையும் பெறும்.

இவ்வுடலானது மெய்யென்று நம்பும்படியான் உறுதியையும் திடத்தினையும் நல்கவல்லது. வயோதிகத்தில் ஏற்படக் கூடிய நோய்களை வரவொட்டாது தடுத்து விடும்.

கற்பம், வைத்திய நற்சகுனம், துற்சகுனம் ஆகியவைகள்

ஆசிரியப்பா

ஏ

ஏடேக கோகனகி ஏயளையோடுண்பை
ஏமாறுமேகவலி ஏமாறுருதே
ஏப்பமறக்கறி ஏற்றுணிலைக்கிதை
ஏச்சறுசுக் கொழி ஏற்குமிறைக்கே
ஏலமந்திரி ஏலமந்திரி ஏலமந்திரியாது நோய்
ஏங்குமிஞ்சி சீரகங்கை ஏங்குமிஞ்சி சீரகம்
ஏமறுமானையை ஏவணங்கியுண்
ஏங்கலொடுங்குங் கடுக்காயுணே லவங்கத்தான் மிகச்சீர்வரும்
ஏஞ்சலின் மிக்காயுளைத் தாவிடுமேயிலந்தைக் கோநெலிக்கா
[மெழில்
ஏறுதிவிலியன் வாணிபன் ஏமாதுலன் விளையன்
ஏமலன் வாச்சியன் ஏவலன் வசியன்
ஏறூ தியன்மடையன் பனை
ஏட்டையன் இந்தளி ஏட்டையன் முன்
ஏகாசனிமுண்டிதன் பள்ளி
ஏதிலன் வாதுவி ஏணியார்
ஏழகமாண்டலை ஏனங்கருப்பை
ஏடகன் சந்தன் ஏடகன் சந்தன்
ஏயிவர் முன்னே ஏலாதேல்பவை
ஏகாலி வாரணி ஏணியன் கோவலன்
ஏதியனரசன் ஏடன்பண்டிதன்
ஏனலன் மந்திரி ஏலவையன் புலையன்
ஏடன் சதுர்த்தன் ஏமாப்பினன் வரன்
ஏரகனூர்திமா ஏரமுர்சாத்திரி
ஏர்விடை கருணி ஏணங்கரண்டம்
ஏகாதசிநவம் ஏற்குமற்றவையே

ஏறுரேவதியார் ஏற்குமற்றவையேழ

ஏழையிரட்டைவில் ஏற்குமோரையே

ஏதுவாய் வைத்தியர் ஏசா பாண்டித முறை

ஏசறுமாயுளர் ஏற்பாடிஃதே.

ஏடேக - ஓரிதழ்
கோகனகி - தாமரை
ஏ - பசு
அளேயோடு - தயிருடன்
உண்பை - உண்டுவந்தால்
ஏமாறுமேகவலி - இன்னல் கொடுக்கும் மேகவெட்டையை
ஏமாறுருதே - ஏமாற்ற மடையச் செய்யும் (நீக்கும் என்பது பொருள்)
ஏப்பமற - வாய்வு சம்பந்தமான குன்மம் நீங்க
கறி - மிளகு
ஏற்றுண் - விரும்பி உண்
ஏற்று + உண் + இல் + ஐக்கு + இது + ஐ
ஏற்றுணில் + ஐக்கு + இதை
ஏச்சறு - கெடுதல் இல்லாத
சுக்கு - சுக்கு
ஒழி - நோயை ஒழித்து
ஏற்குமிறைக்கே - உடம்பை நிலேக்கச் செய்யும்
ஏலம் - ஏலம்
மந்திரி - பித்தம்
ஏல - நீங்க
ஏலம் - மந்திரி - ஏல - மந்திரியாது
இஞ்சி + சீரகம் + ஐ + ஏங்கும் கபத்தை இஞ்சியும் சீரகமும் போக்கும் (பித்த சம்பந்தமான நோயைப் போக்கும்)
சீரகம் - அகத்தைச் சீர்படுத்தி
இஞ்சி - (உடம்பைக்) கோட்டை போலாகச் செய்யும்
ஏவணங்கி - யானேயே வணங்கக் கூடிய
யானேயை - நெருஞ்சியை
உண் - உட்கொள்ள
ஏமறும் - குற்றம் நீங்கும் (மேகவெட்டை காரிக்கம் அசாத்திய மான பைத்தியம் போன்ற)
கடுக்காயுணே - கடுக்காய் உண்ண
ஏங்கலொடுங்கும் - இளேப்பு நீங்கும்
லவங்கத்தான் - இலவங்கத்தைக் கொள்ள

மிகச் சீர்வரும் - உடம்பு நன்னிலை பெறும்
இலந்தைக்கோ - இலந்தம் பழத்திற்கோ
மிக்காயுளை - நீடித்த ஆயுளை
தாவிடும் - கொடுத்திடும்
நெலிக்கா மெழில் - நெல்லிக்காய் உண்ண உடல் அழகைப் பெறும்.

கற்பம்

ஏடேக .... ஏமாறுருதே

விரேசனம் போன்றவைகளால் உடலைச் சுத்தம் செய்ய வேண்டும். அதன்பின் ஓரிதழ் தாமரையின் இலையை மை போலரைத்த விழுது ஒரு வராகனெடை எடுத்து அரையாழாக்குப் பசுவின் தயிரில் குழைத்துக் காலையில் கொள்ள வேண்டும். மறுநாட்காலை ஒன்றரை வராகனெடை ஷை விழுதை ஷை தயிரில் கலக்கி உண்ண வேண்டும். இது போன்று இருபத்தொரு நாட்கள் வரையிலும் நாள்தோறும் அரையரை வராகனெடை வீதம் விழுது கூட்டிக் கொண்டே உண்டு வர வேண்டும். இருபத்திரண்டாவது நாள் முதல் அரையரை வராகனெடையாய்க் குறைத்துக் கொண்டே உண்டுவர வேண்டும். இவ்விதம் செய்தால் மேகவெட்டை யென்கிற துன்பத்தைப் போக்கி தேகத்தை வளர்க்கும். தாது விருத்தியை உண்டாக்கும். இலையின் அளவைக் கூட்டியும் குறைத்தும் வந்தது போல் தயிரின் அளவையும் செய்துகொள்ள வேண்டும். இவைகளை வியாதியின் தன்மை, காலசுபாவம், தேகசுபாவம் முதலியவைகளுக்கேற்ப நிதானித்துக் கொள்வது மருத்துவர் கடமையாகும்.

ஏப்பமறக் .... ஏற்றுணிலைக்கிதை

காலையில் ஒரு மிளகை மென்று உட்கொள்ள வேண்டும், மறுநாட்காலையில் இரண்டு மிளகைக் கொள்ள வேண்டும். இப்படி ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு மிளகை அதிகப் படுத்திக் கொண்டு வியாதியின் தன்மைக் கேற்ப 21 நாள் அல்லது 12 நாள் வரைக் கொள்ள வேண்டும்.பின்னர் முன் மிளகை ஏற்றியுண்டது போன்று ஒன்று ஒன்ருக இறக்கி முடிவில் ஒன்றுமில்லாத வரையில் கொள்ள வேண்டும். இவ்விதம் முறையாகச் செய்து குன்மரோகத்துக்குரிய பத்தியம் காத்துவர வாயுசம்பந்தமான குன்ம ரோகம், புளியேப்பம், வயிறுப்புசம், அசீரணம் என்னும் பலவித கொடுரங்களைச் செய்யும் மந்தாக்கினி ரோகங்களும் தீர்ந்து உடல் வலுவடையும்.

குறிப்பு :- ஷ தேவையான அளவு மிளகை இஞ்சிச் சாற்றில் மூன்றுநாள் ஊறவைத்து 4ம் நாள் வெயிலில் உலர்த்திக் கொள்ள வேண்டும். சரக்கிற்கு 5, 6 பங்கு சாறு இருக்க வேண்டும். பின் பூண்டையிடித்துப்பிழிந்த சாற்றில் முன் போல் ஊறவைத்து உலர்த்திக் கொள்ள வேண்டும். பின் பொதினா இலைச்சாற்றில் ஊறவைத்து உலர்த்திக் கொண்டு மேற்கண்ட முறைப்படி கையாடிவரின் மேற்கூறப்பட்ட ரோகங்களும் தீரும். மேலும் கீல் வாயு, முடக்குவாயு, மேகவாயு, பக்கவாயு, ஓடுவாயு முதலிய வாயு ரோகங்கள் தீரும். பொதினாயிலை கிடைக்காவிடில் பெப்பர் மெண்ட் நீரைச் சேர்த்துக் கொள்ளலாம்.

மேற்கூறப்பட்டபடி பக்குவம் செய்யப்பட்ட மிளகைத் தூள் செய்து தேன்விட்டு 5 சாமம் நன்ருக அரைத்து வேளையொன்றுக்கு அரை அல்லது ஒருவராகனெடையாகக் காலை மாலை இரு வேளை யும் சாப்பிட்டு வர மேற்கண்ட வாயு சம்பந்த ரோகம் தீரும்,

எச்சறு .... மிறைக்கே

முசுமுசுக்கைச் சமூலத்தை இடித்துப்பிழிந்து வடிகட்டின சாற்றில் மாச்சுக்கை மேற்ருேல் சீவி சுத்தி செய்து சிறு சிறு துண்டு களாகச் செய்து மூன்று நாள் ஊற வைக்க வேண்டும். (சுக்கைப் போன்று நான்கு பங்கு சாறு எடுத்துக் கொள்ள வேண்டும்) நான்காவது நாள் அதை வெய்யிலில் உலர்த்த வேண்டும். நன்ருக உலர்ந்தபின் கண்டங்கத்திரி சமூலத்தை இடித்துப் பிழிந்து வடி கட்டின சாற்றில் முன்போல ஊறவைத்து உலர்த்திப் பின்பு, இஞ்சியின் மேற்ருேலைச் சீவி இடித்துப் பிழிந்து சுண்ணும்பு நீக்கின இஞ்சிச் சாற்றில் முன்பு செய்யப்பட்டதுபோல் ஊற வைத்து எடுத்து உலர்த்தி இடித்து வஸ்திரகாயஞ் செய்து வைத்துக் கொள்ள வேண்டும், இச்சூரணத்தை முதல் நாள் முக்கால் வராகனெடை யெடுத்துக் கெட்டித்தேனில் குழைத்து உண்ண வேண்டும். மறுநாள் காலையில் முக்கால் வராகனெடை சூரணத் தைக் கூட்டி முன் போலவே தேனில் குழைத்துண்ண வேண்டும். இவ்விதம் ஒவ்வொரு நாளும் முக்கால் முக்கால் வராகனெடை சூரணமாக அதிகப்படுத்தி 24 நாள் வரையில் உபயோகித்து அதன் பின்பு 25 ம் நாள் முதல் முக்கால் முக்கால் வராகனெடை யாய்க்குறைத்து உபயோகித்து வந்தால் வாதசம்பந்த ரோகங்களை நிவர்த்தி செய்து தேகத்தை வளர்க்கும், இன்னும் இச்சூரணத்தை தேக சுபாவம் வியாதியின் தன்மை முதலியவைகளுக்கேற்ப காலை மாலை இரு வேளையும் வேளை ஒன்றுக்கு 1 முதல் 4 வராகனெடை வரையில் தக்க அனுபானங்களில் கொடுக்க கப சம்பந்த ரோகங் கள் தீரும்.

ஏல மந்திரி .... நோய்

தேவையான அளவு ஏலஅரிசியைச்சுத்திசெய்து முசுமுசுக்கைச் சாற்றில் ஊறவைத்து மறு நாள் வெய்யிலில் உலர்த்திக் கொள்ள வேண்டும். (சாறு சரக்கிற்கு மூன்று அல்லது நான்கு பங்கு இருக்க வேண்டும்) இதன்பின் பொடுதலை, இஞ்சி, எலுமிச்சம் பழம் ஆகியவைகளின் சாறுகளில் தனித் தனியே ஒன்றன்பின் ஒன்ருக முன்போல் ஊற வைத்துலர்த்தி யிடித்து வஸ்திரகாயஞ் செய்து வைத்துக் கொள்ள வேண்டும். முதல் நாள் 2 குன்றிமணி யெடை யெடுத்து வெள்ளைச் சர்க்கரையுடன் கலந்து உண்ண வேண்டும். மறுநாட்காலையில் நான்கு குன்றிமணியெடை சூரணத்தை முன்போல சர்க்கரையுடன் கலந்துண்ண வேண்டும். இவ்விதம் இரண்டிரண்டுகுன்றிமணியெடை கிரமமாகக்கூட்டி 48குன்றிமணியெடை வரையில் உட்கொண்டு அதன் பின் 25ஆம் நாள்முதல் நாளொன்றுக்கு இரண்டு குன்றிமணியெடை குறைத்து வந்து நிறுத்திவிடவேண்டும். இவ்விதம் செய்வதால் பித்தரோக சம்பந்த ரோகங்களெல்லாம் தீர்ந்து தேக போஷணையுண்டாகும்.

ஷை சூரணத்தை வேளை ஒன்றுக்கு 1 முதல் 2 வராகனெடை காலை மாலை இரு வேளையும் சமயோசிதமாகத் தக்க அனுபானத்தில் கொடுத்து வந்தாலும் ஷை ரோகங்கள் நீங்கும்.

குறிப்பு : மேற்கண்ட பாகப்படியே சீரகத்தைச் சுத்தப்படுத்தி சர்க்கரை, தேன், கருப்பஞ்சாறு, பொதினயிலைச்சாறு ஆகியவற்றுள் ஒன்றில் அனுபானித்துக் கொடுத்து வர பித்த கிறுகிறுப்பு பித்த மயக்கம், வாந்தி, அரோசகம் முதலிய பித்த சம்பந்த ரோகங்கள் தீரும்.

ஏங்குமிஞ்சி .... இஞ்சி

இஞ்சிமுறப்பா அல்லது இஞ்சித்தித்திப்பு.

இஞ்சியை முறைப்படி பக்குவம் செய்ய வேண்டும். இதற்கு இஞ்சிமுறப்பா என்று பெயர். இதை முதல் நாள் ஒருவராகனெடை சாப்பிட வேண்டும். மறு நாட்காலையில் $1\frac{1}{4}$ வராகனெடை சாப்பிட வேண்டும். இவ்விதம் ஒவ்வொருநாளும் கால்வராகனெடை வீதம் அதிகப் படுத்தி நாற்பது நாள்வரை உபயோகித்து நாற்பத்தோராம் நாளிலிருந்து ஒவ்வொரு நாளும் கால்வராகனெடை வீதம் குறைத்துச் சாப்பிட்டு வர வேண்டும் இப்படி 40 நாள் சமயோசிதம் போல் இரண்டொரு தடவை செய்ய கப சம்

பந்தமான எல்லா வியாதிகளையும் தீர்த்து உடம்பைக் கோட்டையைப் போல் காத்துப் போஷிக்கும்.

குறிப்பு :- இஞ்சிஊறுகாய், இஞ்சித்துவையல், இஞ்சிக்கறி முதலியவைகளையும் கற்பமுறைப்படி உபயோகிப்பின் மேற்கண்ட குணம் உண்டாகும். ஆனால் மருத்துவர்கள் சமயோசிதமாய் தேக சுபாவ முதலியவைகளுக்கேற்றபடி செய்ய வேண்டியது அவசியமாகும்.

இதனைச் சித்தப்படுத்தும் முறை யூநானி வைத்திய தாருட்ய விர்த்தி போதினியில் விளக்கமாகச் சொல்லப்பட்டிருக்கின்றது.

இஞ்சியைக் கூறியிருக்கிற பாகமுறைப்படி சீரகத்தையும் செய்து உண்டுவர பித்த சம்பந்தரோகத்தைத் தீர்த்து தேகத்தைப் போஷித்து வலுத்த கோட்டையைப் போலாக்கும்.

ஏமறு .... உண்

நெருஞ்சி சமூலம் ஒருவராகனெடை எடுத்து நீர்விட்டு மை போலரைத்துக் கொஞ்சம் நீரில் கரைத்து காலையிற்பானம் செய்ய வேண்டும். மறு நாட்காலையில் $1\frac{1}{2}$ வராகனெடை நெருஞ்சி சமூலத்தை முன் போலரைத்துப் பானம் செய்ய வேண்டும். இவ்விதம் ஒவ்வொரு நாளும் அரைவராகனெடை அதிகப் படுத்தி 20 நாள் வரை உட்கொண்டு வர வேண்டும். 21 ம் நாள் முதல் ஒவ்வொரு நாளும் அரைவராகனெடை வீதம் குறைத்துக் கொண்டே உபயோகித்துவந்தால் அசாத்தியமான மேகவெட்டை, மேககாரிக்கம், அசாத்தியமான பைத்தியரோகம், உன்மத்தரோகம் முதலிய உஷ்ணசம்பந்த ரோகங்களை நீக்கி உடம்பைக் காக்கும்.

நெருஞ்சி சமூத்தை நிழலிலுலர்த்தி இடித்து வடிகட்டி வைத்துக் கொண்டு மேற்கண்ட முறைப்படி உபயோகித்து வருவதாலும் மேற்கண்ட ரோகங்கள் தீரும்.

இதன் அளவை தேக சுபாவ முதலியவைகளுக் கேற்றபடி கொள்வது மருத்துவர்கள் கடமையாகும்.

ஏங்கலொடுங்க .... மிகச்சீர்வரும்.

பச்சைக் கடுக்காயை முறைப்படி தேனிலூறவைத்ததற்கு கடுக்காய்த்தித்திப்பு அல்லது கடுக்காய் முறப்பா என்று பெயர். இக்கடுக்காய் முறப்பாவை முன் சொல்லப்பட்ட இஞ்சி முறப்பாவைப் போல உபயோகித்து வந்தால் உடம்பை தினம் தினம்

ஒடுக்கிவரும் அசாத்திய வாதமென்கிற நோயையொழித்து தேகத்தைப் போஷித்துக் காப்பாற்றும்.

பச்சைலவங்கத்தை வேகவைத்து நன்ருக வெந்த பின்பு நீரையிறுத்துவிட்டுக் குளிர்ந்த நீரால் கழுவி யெடுத்து மெல்லிய துணியில் வைத்துப் பக்குவமாய் ஈரத்தை நீக்கி, இதற்கிரண்டு பங்கு தேனைக் காய்ச்சிச் சேர்த்து ஒரு ஜாடியில் போட்டு மூடி 40 நாள் வெயிலில் வைத்து வர வேண்டும். (ஈரப்பசையிருந்து புளிப்பேறினல் மறுபடியும் காய்ச்சி ஈரத்தை நீக்கிவிட வேண்டியது.)

பச்சைலவங்கம் கிடைக்காத விடத்தில் உலர்ந்த இலவங்கத்தையும் மேற்கண்டபடி செய்து உபயோகித்துக் கொள்ளலாம். இதற்கு இலவங்கத்தித்திப்பு அல்லது இலவங்க முறப்பா என்பது பெயர்.

இந்த லவங்கத்தில் ஒன்றைக் காலையில் உண்ண வேண்டும். மறு நாட்காலையில் இரண்டு லவங்கத்தை உண்ண வேண்டும். இவ்விதம் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு லவங்கமாக அதிகப் படுத்தி வந்து 21 நாள் வரையில் உட்கொண்டு 22 ம் நாளிலிருந்து ஒவ்வொன்ருகக் குறைத்து உண்ண வேண்டும். இவ்விதம் உண்டு வர மூர்ச்சை ரோகங்கள் நீங்கும். சிலருக்குத் தாம்பூலம் தரித்தவுடனேயே மூர்ச்சைஏற்படுகிறதும் உண்டு. அந்தரோகமும் நீங்கும். தாது விருத்தியுண்டாகும். மன மகிழ்வு உண்டாகும். கிராணி முதலிய ரோகங்களும் தீரும்.

இதன் அனுபானத்தையும் சமயோசிதமாகத் தெரிந்து செய்யின் எல்லாவித நன்மைகளும் உண்டாகும்.

எஞ்சலின் .... இலந்தைக்கு

பருத்தும் செந்நிறத்துடனும் கூடிய இலந்தம் பழங்களை ஈச்சன்முட்கற்றையால் குத்தி, தண்ணீரை நன்ருகக் கொதியெழும் படியாகக்காய்ச்சி அதில் போட்டுப்பத்து நிமிட நேரம் மூடி வைத்துப் பின்பு நீரை இறுத்து விட்டுப் பழங்களிலுள்ள ஈரத்தை மெல்லிய துணியால் ஒற்றித் துடைத்து வைத்துக் கொள்ள வேண்டும். இப்பழங்களினெடைக்கு மூன்று பங்கு தேனைக் காய்ச்சி நுரை நீக்கி அதில் முன்பக்குவப் படுத்தி வைத்திருந்த பழங்களைப் போட்டு ஜாடியிலிட்டு வாய்ப்பந்தனஞ் செய்து வெயிலில் வைத்து வர வேண்டியது. ஈரப்பசையிருந்தால் சூட்டடுப்பின் மீது வைத்து ஈரத்தைப் போக்கிக் கொள்ள வேண்டியது. இப்பழத்தினை நாற்பது நாளைக்குப் பின் உபயோகிக்க வேண்டும்.

ஷி பழங்களில் ஒன்றைக் காலையில் சாப்பிட வேண்டும். மறு நாட் காலையில் இரண்டு பழங்களைச் சாப்பிட வேண்டும். இவ் விதம் நாளொன்றுக்கு ஒரு பழம் வீதம் கூட்டிக்கொண்டே 21 நாள் வரை சாப்பிட்டு வர வேண்டும். பின் 22 ம் நாள் முதல் முன் ஒவ்வொன்ருக அதிகப்படுத்தினது போலவே ஒவ்வொன்ருகக் குறைத்து வர வேண்டியது.

புளியை அறவே நீக்க வேண்டும். புளிக்குப் பதிலாகத் தேனில் ஊற வைக்காத பழவற்றலையே பொருட்களில் சேர்த்து வர வேண்டும். இக்கொட்டையின் பருப்பை மா வாக்கி விரும்பிய பல காரங்களாகச் செய்து உண்டு வரவேண்டியது. இப்படிச் செய்து வருவதால் உடம்பிலுள்ள எல்லா வியாதிகளும் நீங்குவதுடன், உணவையும் நன்ருகச் செரிக்கச் செய்யும். மிகுந்த பலத்தைக் கொடுப்பதுடன் நரை திரையை மாற்றி காயசித்தி, ஆயுள் விருத்தி ஆகியவைகளைக் கொடுத்து உடம்பை உறுதியாக்கும்.

இங்கு ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு பழத்தை யதிகப்படுத்த வேண்டுமெனச் சொல்லப் பட்டபோதிலும் உடல் வன்மைக்கு ஏற்ருற்போல் கால் அரை பழமாகவும் அதிகப்படுத்தலாம்.

நெல்லிக்கா மெழில்

நெல்லிக்காயை முறைப்படி தேனிலூறவைத்ததற்கு நெல்லிக் காய்த் தித்திப்பு அல்லது நெல்லிக்காய் முறப்பா என்பது பெயர். இதனையும் மேற் கூறப்பட்ட முறைப்படியே உட்கொண்டு வர வேண்டும். அப்படி உபயோகிக்கும் காலத்தில் நெல்லிக்காய் வற்றலை அரைப்பிற்குப் பதிலாகவும் புளிக்குப் பதிலாகவும் சேர்த்து வர வேண்டும். மேலும் இக்காயை ஊறுகாயாகவும் துவையலாகவும் உபயோகிக்க வேண்டும். நெல்லிக்கொட்டையின் பருப்பை அரைத்துப் பலகாரமாகச் செய்து உண்டு வரலாம். இவ்விதம் உண்டு வருவதால் உடம்பின் வெப்பையும், காங்கை யையும் நீக்கி நலம் பெறுவதுடன், பலமும் பெறலாம். தேக அழகையும் கொடுக்கும்.

இங்கு சொல்லப்படாத வேறு அனேக கற்ப முறைகளுமுண்டு. அவற்றையெல்லாம் அனுபவம் பெற்ற மருத்துவர்கள் மூலமாய்த் தெரிந்து விதிப்படி உபயோகித்துவரின் அச்சரக்கிற்குள்ள ஒவ் வொரு குணத்தையும் தப்பாமல் பெற முடியும்.

துர்ச்சகுனங்கள்

ஏனதி - அம்பட்டன்
விலியன் - வேட்டைக்காரன்

வாணியன் - எண்ணெய் விற்போன்
ஏமாதுலன் - தட்டான்
வினையன் - கூலி வேலை செய்பவன்
ஏமலன் - கிளிஞ்சல் சுடுபவன்
வாச்சியன் - மேளவாத்தியம் கொட்டுபவன்
ஏவலன் - வேலைக்காரன்
வசியன் - செட்டி
ஏறாதியன் - எருதுமீது பொதி போட்டு வருபவன்
மடையன் - சமையலாள்
பனைஏட்டையன் - கையில் பனையோலை கொண்டு வருபவன்
இந்தளி - விறகுக்கட்டை கொண்டு வருபவன்
ஏட்டையன் - தரித்திரன்
முன் ஏகாசனி - மேலாடையுடன் வருபவன் (உத்தரீயத்துடன்)
முண்டிதன் - மொட்டைத் தலையன்
பள்ளி - அடிமையான்
ஏதிலன் - அந்நியன்
வாதுவி - குதிரையைப் பழக்கக் கூடியவன்
ஏணியார் - மான்குட்டி, பாம்பு போன்றவைகளை கொண்டு வருபவன்
ஏழகன் - ஆட்டுக்கடா
ஆண்டலை - சேவல்
ஏனம் - பன்றி
கருப்பை - எலி
ஏடகன் - சந்தன் (செய்தி கூறுவோன்) விபூதி பூசிக் கொண்டு வருபவன்
ஏடகன் - கைக்கோளகன் (கைக் கிளையன்)
சந்தன் ஏயிவர் - எப்பொழுதும் தூது செல்பவர்
முன்னே ஏல்பவை ஏலாது - முன்னே வருவது கூடாது.

நற்சகுனம்

ஏகாலி - வண்ணான்
வாரணி - மாவட்டிக்காரன்
ஏணியன் - சாணான்
கோவலன் - இடையன்
ஏதியன் - ஏனாதி
அரசன் - அரசன்
ஏடன் - தோழன்
பண்டிதன் - வித்துவான்
ஏனலன் - குறவன் (கூட்டுடன் வருபவன்)

மந்திரி - அமைச்சன்
ஏலவையன் - பயிர்களுக்குத் தண்ணீர் பாய்ச்சுகிறவனுன கம்பு கட்டியான்
புலேயன் - பறையன்
ஏடன் - பூக்காரன்
சதுர்த்தன் - சாதுர்யமாகப் பேசுபவன்
ஏமாப்பினன் - வெகுமதி பெற்றிருக்கிறவன்
வரன் - தெய்வ வரம் பெற்ற உத்தமன்
ஏரகன் ஊர்தி - மயில்
மா - குதிரை
ஏரமூர் - நாகாரு போட்டிருக்கிற எருது
காத்திரி - காருடமாரம் பொறுக்கிற ஒட்டகம்
ஏர்விடை - ஏரில் பூட்டியிருக்கிற எருது
கருணி - பெண் யானே
ஏணம் - கூட்டுடன் கூடிய புனுகுப் பூனே
கரண்டம் - நீர்க்காக்கை
ஏசா - ஏற்பவையே.

வைத்தியம் செய்வதற்கு ஏற்கும் திதிகள்

ஏகாதசி - ஏகாதசி
நவம் - நவமி
மற்றவையே - இவை நீங்கலாக
ஏற்கு - மற்ற திதிகள் எல்லாம் ஏற்கும்
ஏறு - அசுவனி, ரேவதி - ரேவதி, ஆர் - ஆயில்யம்
மற்றவை ஏற்கும் - இவை நீங்கலாக மற்றவை யெல்லாம் வைத்தியம் செய்யக்கூடிய நட்சத்திரங்களாகும்.

ராசி

ஏழை - கன்னிராசி, இரட்டை - மிதுனராசி, வில் - தனுர் ராசி நீங்கலாக, ஏற்கும் ஓரையே - மற்ற ராசிகள் எல்லாம் ஏற்கும்.
ஏசறும் - குற்றமற்ற
ஆயுளர் - மருத்துவர்களுக்கு
ஏதுவாய் - சாதகமாக
ஏசாபண்டிதர் முறை - குற்றமற்ற மருத்துவ முறையைக் கூறிய வைத்தீஸ்வரர்
ஏற்பாடிஃதே - கூறியுள்ள முறையிதுவேயாகும்.

ஒற்றிடம்

ஒ

ஒளிவட்டமானகவுள் செவிநாசிகுக்கி
ஒடுநெற்றிவெரிங்வாகுபதமுச்சிநாபி
ஒக்கலிடுப்பரை ஒக்கல்விடுத்தெறி
ஒட்டலர் வெப்பென ஒட்டிவலித்தே
ஒதிமெயொப்பென ஒசிநலிப்பிணி
ஒழியநற்றுறை ஒருவகை
ஒற்றிடத்திணைப் பரப்பி ஒற்றிடப்பறக்குமே
ஒலிசுதையடலைகொள் ஒமமிட்டிகை நெல்
ஒலிதவிடறலறல் ஒவுசிட்டமுமே
ஒன்பதுமொன்றும் பொருந்தத்தீபடுந்திட்பால்
ஒடும்பொற்பாய் ஒன்றலறிந்தங்கிடுஞ் சற்றே
ஒடுங்கத்தான் செலும் மற்றினி யொன்றுரென
ஒழுக்கத்தகும் ஒறுவந்தமுமொழியும்
ஒட்டடை முன்னென ஒட்டடைதனையும்
ஒருவுமுனிகழிடமு மென்றும்
ஒப்பமெனவேமனதை ஒப்பவிடுவாய்
ஒற்றுளருமெனவேபிணி
ஒல்லையிற் போமுரை சொல்லயிலே
ஒழுக்கந்தரமென ஒழுக்கந்தரவே
ஒட்டகமலப்புகை ஒட்டகமலமே
ஒட்டைக்கொருவிசை ஒட்டைக்கொருவிசை
ஒளித்தலமேனிநோய் ஒளித்தலமுறவே
ஒழுங்குறுமியாக்கை ஒச்சமற்றிடுமே
ஒத்துரைப்போருரை ஒட்டிய முதலிய
ஒய்யெனச் சொலுமிதை ஒத்தெனவேளூர்
ஒற்றையாழியனென ஒளிதிகழ் வேந்தருள்
ஒருமையாயுணூல் ஒண்மையீங்கிஃதே.

ஒளிவட்டம் - கண்ணுடியை, ஆன - ஒப்பான, கவுள் - தவடை, செவி - காது, நாசி - மூக்கு, குக்கி - வயிறு, ஒடு - உடன், நெற்றி- நெற்றி, வெரிந் - முதுகு, வாகு - தோள், பதம் - பாதம், உச்சி - உச்சந்தலை, நாபி - தொப்புள், ஒக்கல் - விலாப்பக்கங்கள், இடுப்பு - இடுப்பு, அரை - அரை, ஒக்கல் விடுத்து - சுற்றம் என்னும் முறையை விட்டு, எறி - துன்பத்தைச் செய்து கொண்டிருக்கின்ற, ஒட்டலர் - பகைவர்களுடைய, வெப்பென - தீமையைப் போல், ஒட்டி - உடலில் சேர்ந்து, வலித்தே - வலித்து ஆங்காங்கு தாங்கமுடியாத நோய்களை உண்டு பண்ணி, மெய் - உடலை, ஒதி ஒப்பென - காற்றில்பட்டு முறியும் ஒதிய மரத்தைப் போல, ஒசி - முறித்துத் தள்ளுகிற, நலிப் பிணி ஒழிய - மிகவும் வருத்தும் நலி ஆகிய பிணிகள் உடலை விட்டு நீங்கச் செய்தற்கு உரியதான, நல்துறை ஒரு வகை - ஒரு தினுசான நல்வழியாகிய, ஒற்றிடத்தினை - ஒற்றப்படும் பொருள்களைக் கொண்டு, பரப்பி - நோய் உள்ள இடங்களில் பரவிப்படும்படி, ஒற்றிட - ஒற்ற, பறக்கும் - நோய்கள் விரைவில் நீங்கும், ஒலி சுதை - ஒலிக்கின்ற சுண்ணம்புக் காரை, அடலை - எருமுட்டைச் சாம்பல், கொள் - கொள்ளுமாவும், ஓமம்-ஓமம், இட்டிகை - செங்கல்பொடியும், நெல் - நெல்லும், ஒலி தவிடு - நல்ல தவிடும், அறல் - கருமணலும், அறல் - காய்ச்சிய நீர், ஒவுசிட்டம் - சிட்டமும், ஒன்பதும் ஒன்றும் - இந்தப் பத்துப் பொருள்களும், இவையன்றி மஞ்சள், எண்ணெய் அகல் ஆகிய இரண்டு பொருள்களும், தீப்படுந்திட்பால் - மேற் சொல்லப்பட்ட பொருள்களைச் செய்ய வேண்டியவாறு, பொற் பொடும் ஆய் - அழகினுடன், ஒன்றல் அறிந்து - எப்பொருளை எந்நோய்க்கு எவ்விடத்தில் ஒற்றிடமிடவேண்டுமென்பதை யறிந்து, சற்று அங்கு இடும் - கொஞ்சம் கொஞ்சம் நேரம் இந்நோய்களுக்குத் தகுந்த பொருத்தமான இடங்களில் நன்ருய்ச் சூடுபடுமாறு ஒற்றிடம் செய்யுங்கள் (அப்படிச் செய்தால்), அற்று - நோய் நீங்கி, ஒடுங்கத்தான் செலும் - தாங்கள் மறைய வேண்டிய இடங்களைத்தேடிக் கொண்டு போம், மற்று இனி - மேலும், ஒன்ருரென ஒழுகத்தகும் ஒறுவந்தமும் ஒழியும் - பகைவரைப் போல் வருத்தப் படுத்தும் தகுதியுள்ள நோய்களால் உண்டாம் துன்பங்கள் பின்னரும் வராமல் ஒழியும், ஒட்டு அடை முன் என ஒட்டடை தனையும்- ஒட்டிக் கொள்ளுகின்ற அடையை அல்லாமலும் ஒட்டடையையும் (முன் சொன்னபடியே) ஒற்றிடமிடப்படும், ஒருவுமுன் நிகழ் இடமும் என்றும் - முன் சொன்ன இடங்களில் அன்றியும் மற்றுமுள்ள இடங்களில் தக்க இடங்களில் வேளைக்குத் தக்கபடி ஒற்றிடம் பண்ணிக் கொள்ளத்தகும், ஒப்பம் எனவே மனதை ஒப்பவிடுவாய் - (இவ்வாறெல்லாம் செய்வதற்கு) பஞ்சபூத சாட்சியான மனதை ஒரு வழிப்படுத்துவாயாக, ஒற்ருளருமென - வேவுகாரரால் எதி

ராளியின் படை வன்மைகளைத் தெரிந்து கொள்வதற்கு முன்னரே அப்படைகளோடு எதிராளிகள் ஓடிப்போய் விடுமாறு போல, உரை சொல்லையிலே பிணி ஒல்லையிற்போம் - ஒற்றிடம் செய்யப் போகிறுர்கள் என்கிற சொல்லை சொல்லிக் கொண்டிருக்கிற போதே நோய்கள் விரைந்து போய்விடும், தரம் ஒழுக்கம் என ஒழுக்கம் தர - சில்லிக் குடத்தில் அச்சில்லியினின்றும் ஒழுகும் நீர் ஒரே ஒழுங்காகப் பாய்வதைப் போல உடல் நன்மையாய் ஒழுங் கடைய, ஒட்டகம் மலம் - ஒட்டகத்தினுடைய மலத்தை, கமலம் ஒட்ட - நீர் ஒட்டிப் போகுமாறு உலர்த்தி, ஒட்டைக்கு ஒரு விசை - ஒவ்வொரு ஒட்டை இட அளவுக்கு ஒவ்வொரு முறையாக, புகை- புகை போட்டால், ஒட்டு - உடலைப் பற்றித் தொடர்ந்து வருகிற, ஐக்கு - அரசனை வாதப் பிணியை ஓட்டுவதற்கு, ஒரு விசை - ஒப் பற்ற வன்மையான புகையாம், ஒளிதல மேனி நோய் - விளக்க மாகிய உடலில் உள்ள மற்ற நோய்கள், ஒளித்து - மறைந்து, அலம் உற - துன்பத்தை அடைதலால், ஒழுங்கு உறும் யாக்கை - நோயில்லாமல் செம்மையாய் இருந்த உடம்பின், ஒச்சமற்றிடும் - பங்கம் நீங்கிடும், ஒட்டிய முதலிய ஒத்து - ஒட்டியம் சல்லியம் முத லாகிய நூல்களை, உரைப்போர் உரை - சொன்னவர்கள் சொன் னது இப்படியே யாகும், இதை - இவ்விதிகளை, வேளூர்-புள்ளி ருக்கும் வேளூரில் எழுந்தருளியிருக்கின்ற, ஒற்றையாழியன் என - ஒற்றைச் சக்கரத்தை உடைய தேரினை உடைய கதிரவனைப்போல, ஒளி திகழ் - விளங்குகின்ற, வேந்து - வைத்தீஸ்வரன், ஒத்தென - மறையைப் போல், ஒய்யென - விரைந்து, அருள் சொலும் - திரு வருளால் சொன்ன, ஒருமை - தனித்த, ஆயுள் நூல் - மருந்து நூலின், ஒண்மை - விளக்கமானது, இங்கு-இவ்வுலகத்தில், இஃதே- இதுவேயாகும் என்றவாறு.

ஒற்றிடம்

மருத்துவர்கள் தங்களுக்கு இயற்கையாக உள்ள மனோ பலத் தாலும் மருத்துவ நூல்களில் கூறப்பட்டுள்ள பயிற்சியினுலுண் டான செயற்கை யூகத்தினுலும் சமயோசிதமாக ஒற்றிட சிகிச்சை களைச் செய்து வருவார்களேயானுல் மேற் கூறப்பட்ட நோய்களெல் லாம் நீங்கிவிடும்.

1. பழம் சுண்ணும்புக் காரையைப் பொடித்து ஓட்டிலிட்டு வறுத்துத் துணியில் வைத்துச் சுருட்டி நோயுள்ள விடத்தில் ஒற்றிடமிட அவ்வேதனை தீரும்.

2. முட்டைச் சாம்பலை மேற் கண்டபடி வறுத்து ஒற்றிட மிடலாம்.

3. ஓமம் அல்லது கொள்ளை வறுத்து ஒற்றிடமிடலாம்.

4. செங்கற்றுண்டுகளை நெருப்பிற் போட்டு சூடுண்டாக்கி எருக்கிலைப் பழுப்புகளை யடுக்கி அதன் மீது வைத்துத் துணியில் முடிந்து ஒற்றிடமிடலாம்.

5. நெல், தவிடு, மெல்லிய கருமணல் ஆகியவைகளையும் தனித்தனியே வறுத்துத் துணியில் முடிந்து ஒற்றிடமிடலாம்.

6. தண்ணீரைக் கொதிக்க வைத்துச் சீசா அல்லது தகுந்த பாத்திரங்களில் விட்டு ஒற்றிடமிடலாம்.

7. இரும்புச் சிட்டத்தை யிடித்துத் தூள் செய்து வறுத்துத் துணித்துண்டில் முடிந்து ஒற்றிடமிடலாம்.

8. மஞ்சளை யிடித்துத் தூளாக்கி ஓட்டில் வறுத்து முன் போலவே ஒற்றிடமிடலாம்.

9. எண்ணெய்க் கலசத்தை நெருப்பில் தீப்பறக் காய்ச்சி இடத்திற்குத் தகுந்த விதமாக சமயோசிதமாக ஒற்றிடமிடலாம்.

10. ஒட்டடை (புகையுறை) யையும் வறுத்து ஒற்றிடமிடலாம்.

11. இவ்விதமாக ஒட்டையின் லத்தியை யுலர்த்திப் புகையிட்டாலும் ஷி நோய் நீங்கும்.

தீரும் நோய்கள்

வாதப்பிணி நீங்கும், தேகபங்கம் ஒழியும்.

வியாதியுற்பத்தி முதலியவைகள்

ஆசிரியப்பா

ஓ

ஓலத்தினலதிக பாரத்தினுலே
ஓவாதவுரையாற் சையோகத்தினுலே
ஓச்சலினுலே யோட்டலினுலே
ஓட்டவிலாழிபல ஓட்டுதலாலே
ஓடமேறலினுல் விடாமழை

ஓதமேவலினல் வினை
ஓதிமத்தன் ஓதிமத்தன்
ஓதி மத்தனுட்டினல்
ஓதியிதாமென ஓதியேதலை
ஓரசைவால்வரி ஓகையால் வகை
ஓதனமிஞ்சும் புசிப்பால் நீர்
ஓடையிலுந்துங் களிப்பாலே
ஓணம்புணை ஓதைப்பெயர்
ஓடஞ் சாடுறலால்
ஓங்கலிலேறிமெய் ஓங்கலினலே
ஓரைவிலரிதேள் சேவுறுதலால்
ஓரிசிரல் கூகையிசை ஓரிளிவினல்
ஓமாயுதீதைலம் பணி
ஓலைவிறகுபாய் ஓலையவி
ஓவியம் நெல்லிலை ஓவியம் மஞ்சள் பால்
ஓமமெள்வைகலை ஓர்மறை இவையெதிர்
ஓரம்பின் வர ஓம்புதலானலி
ஓவாக்காதர ஓளிமேலுறுமென
ஓதுமாவைத்திய ஓதுமாவேளூர்
ஓமதூ மாதரர் ஓர் விஃதாலோ.

ஓலத்தினல் - எப்பொழுதும் கூச்சலிட்டுப் பேசுவதாலும், அதிக பாரத்தினலே - அதிக சுமைகளை எடுப்பதினலும், ஓவாத உரையால் - அளவுகடந்து பேசுவதாலும், சையோகத்தினல் - அளவு கடந்து பெண்களைக் கூடுவதாலும், ஓச்சலினல் - (எப்பொழுதும்) கையை ஓங்கி எறிதலினலும், ஓடலினல் - எப்பொழுதும் ஓடுவதாலும், ஓட்டம் - விரைவினையுடைய, வில் - வில் வித்தையையும், ஆழி - சக்கரத்தையுடைய வண்டிகளையும் அது போன்ற பலவற்றையும், ஓட்டுதலாலே - ஓட்டுதலினலும், ஓடம் ஏறலினல் - (அடிக்கடி) ஓடத்தில் ஏறிச் செல்வதாலும், விடா மழையாலே - அடர்மழையில் நனைவதாலும், ஓதம் மேவலினல் - எப்பொழுதும் ஈரமாயிருக்கின்ற சதுப்பு நிலத்தில் வசிப்பதாலும் (அல்லது ஈரத்துணியைக்கட்டி இருந்தாலும்), வினை ஓதிமத்தன் - எப்பொழுதும் பனியிலேயே திரிகிறதினலும், ஓதிமத்தன் - கட்

குடித்து வெறிகொண்டு மயங்கிப் பேசுவதனுலும், ஓதிமத்த நட்டினல்-பிரமனது வீடாகிய தாமரைக் கிழங்கையே கறி செய்து சாப்பிடுவதனுலும், ஓதியிது ஆமென ஓதியே தலை ஓர் அசைவால்-இராகங்களைப் பிறருக்குத்தான் சொல்லித்தரும்போது இதுதான் இதுதான் என்று சொல்லித் தலையை ஒரு புறமாய் இயற்கைக்கு மாருக அசைத்தலினுலும், வரி ஓகையால் - மிக்க களிப்பினுலும், ஓதனம் வகை மிஞ்சும் புசிப்பால் - பலவகை உண்டிகளை அளவுக்கு அதிகமாய்ப் புசிப்பதாலும், நீர் ஓடையில் உந்தும் களிப்பாலே - நீர் நிறைந்த ஓடையில் எப்பொழுதும் அமர்ந்து நீராடிய களிப்பாலும், ஓணம்புணை ஓதைப்பெயர் ஓடம் சாடுறலால்-ஓணம் என்னும் பெயர் வழங்குமாறு பெருமையும் குளிர்ச்சியும் பொருந்திய கடலில் ஓடம், பெருங்கூடை முதலியவைகளிலேறிக் கடத்தினுலும், ஓங்கலிலேறி மெய் ஓங்கலினுல் - மலை மேலேறிக் குதித்து உடம்பு ஓங்காமல் சோர்தலினுலும், ஓரைவில் அரிமதள் சேஉறுதலால் - தனுசு, சிம்மம், விருச்சிகம், இடபம் ஆகிய இராசிகளில் நோய் வந்தாலும், ஓரிசிரல் கூகை ஓர் இசை இளிவினுல் - ஆண் கிழநரி, கௌதாரி, கோட்டான் இவைகளின் இளி ஒலியைக் கேட்டாலும், ஓமாயுதீதைலம் பணி ஓலை விறகு பாய் ஐயவி இவை எதிர் - நெருப்பு, எண்ணெய், பாம்பு, ஓலை, விறகு, பாய், கடுகு அபயக்குரல் ஆகிய இவைகள் எதிரிலும், ஓவியம் நெல் இலை ஓவியம் மஞ்சள் பால் ஒரம் - சித்திரப்படம், நெல், இலை, மேளம் மஞ்சள், பால் ஆகியவைகள் பக்கத்திலும், ஓமம் எள் வை கலை ஓர் மறைபின் - ஓமம், எள், வைக்கோல், சேலை, ஒற்றைப் பார்ப்பனர் ஆகியவைகள் பின்னும், வர ஓம்புதலால்நலி - வருவதால் நோய் பலப்படும், ஓவாக்காதர ஒளி - ஒளி நீங்காத் துன்பத்தை விளைவிக்கின்ற நோயானது, மேல்உறும் என - வெளிப்படும் என்று, ஓதுமாவைத்தியம் - சிறந்த மருத்துவத்தை, ஓதுமாவேளுர் - கற்ருரால் துதிசெய்யப்பட்டு வருகின்ற புள்ளிருக்கும் வேளூரில் எழுந்தருளியிருக்கின்ற ஓமதூம ஆதரர் - வேள்வி விருப்பினரான வைத்தீச்வரர், ஓர்வு இஃது - ஓர்ந்து உணர்த்தின விதி இஃதாம்.

வைத்தியரிலக்கணம்

ஆசிரியப்பா

ஔ

ஔவைக்கு நேராகி ஔவைக்கு நேராய்
ஔவைப்பருவமெய்தி ஔவைப் பிணிடி
ஔவியமோவுத லாயுளர்க்கியல்பே.

ஔவைக்கு நேராகி - (கடவுள் வழிபாட்டிலும் பலநூல்களை நன்ருய் ஆராய்ந்தறிவதிலும்) ஔவைக்கு ஒப்பாகி, ஔவைக்கு நேராய் - (தன் சொந்தப் பிள்ளைக்கு நோய் வந்தவிடத்து நற்ருயானவள் அந்நோயைத் தீர்க்க எவ்வளவு கவலை, எவ்வளவு அன்பு உடையவளாய் இருப்பாளோ, அவ்விதமே நோயாளியிடத்தில் அன்பு, கவலை, பட்சம் செலுத்துதலில்) தாயனையவராய், ஔவைப் பருவம் எய்தி - (மிக்க மூப்பைப் பெற்ற கிழவன் இவ்வுலக வாழ்க்கையில் பழக்கம் பெற்றிருத்தல் போல, நோயினிலக்கணம், மருந்தருத்தல் முதலியவைகளில்) விருத்தராய், (அதாவது முழு அனுபவ சித்தராய்) ஔவைப்பினடி - (ஆழ்ந்த கருத்து, புத்தி நுட்பம் முதலியவைகளையுடையராயிருத்தலில்) ஔவையைப் பின் பற்றி, ஔவியம் ஓவுதல் - (பிறர் ஆக்கம் கண்டு) பொருமை கொள்ளுதலை விட்டிருத்தல், ஆயுளர்க்கு இயல்பு - உத்தம மருத்துவர்களுக்குரிய இலக்கணமாகும், ஏ - அசை.

உயிர் மெய்யெழுத்து வருக்கங்களில் ககரவருக்கம்

கலிக்கம், அஞ்சனம்

க. கை. கௌ

கலிக்கமஞ்சன முலகு கலிக்கமஞ்சனமே
கழறுமிருவகையுள் கழறுதுமதுணரக்
கணிகடு கரிதகி கணிதிரிகடுகே
கண்டு பாரங்கி கண்டு பாரங்கி
கழல் வித்திருதொடி கஃசாம் வகைக்கே
கல்வத்திடுமதி கல்வத்தறலிற்
கனியருணத்தொடு கனியருணத்தை
கலிகையைநிகரிடு கலிகை மாத்திரையே
கதிரெதிர் பெறவிடு கதிரெதிரதனைக்
கம்மினிலுரைத்திடு கண்ணின் கண்ணே
கமலனுலமைத்திடு கமலநோயெனினுங்
கணத்தினில் வேம்பெதிர் கணத்தினிலோடும்
கன்னபூடணவடு கப்பெயர் இடருங்
கணமறுகண மறுகண மறுமுனமே

கழறுபுதனித்தனி கலிக்கமுக்கடுகு
கந்திகொள் வெற்றிலை கடுதினைவரகே
கசகசாவாடகி காந்திமெய்யுடனே
கருநிகரஞ் சனக் கருமையினருமை கேள்
கடிப்பகைவேயரி கஞ்சவித்தால் விரை
கரும்பொற்றெறு வெயிற் கருப்பெனவறுத்தே
கபிலை நெய்யயிர்பால் கடிகைப்பருவமாய்
கல்லெனமதியா கல்லென மதித்தே
கருப்புரப்பரணிவை கருப்புரமெனவுங்
கறைப்பொழுதறுவை கறைப்பொழுதிடுகண்
கணலியுமாக்கைக் கணலியுமறுமே
கையடையுயிர்க்கினிக் கௌவையுமின்றே.

கலிக்கம் - கண்ணுக்கிடும் மருந்தும், அஞ்சனம் - கண்ணுக்கிடும் மையும், உலகு உகத்தார்கள், கலிக்க - சந்தோஷிக்கும்படியான, மஞ்சனமே - திருக்குளியல் (அபிஷேகம்) போன்றதாகும், கழறு சொல்லப்படுகின்ற, இரு வகையுள் - இரண்டு வகைகள் இருக்கின்றன, அது உணரக் கழறுதும் - அதைத் தெரிந்து கொள்ளும்படி கூறுதும் கேட்பாயாக, கணி - வேங்கை, கடு - கடுகு, அரிதகி - கடுக்காய், கணி - பொன்னுங்காணி, திரி கடுகு - சுக்கு மிளகு, திப்பிலி, கண்டு - கற்கண்டு, பாரங்கி - பரங்கிச் சக்கை, கண்டு பாரங்கி - சிறு தேக்கு, கழல் வித்து இருதொடி - கழற்சிப் பருப்பு இரண்டு பலம், கஃசாம் வகைக்கே - மற்றவைகள் ஒவ்வொன்றும் கால் பலமாம், கல்வத்திடு - கல்வத்திலிட்டு, அருணக் கனியொடு - எலுமிச்சம்பழச்சாற்றுடன், கல்வத்தறல் - செங்கழு நீர்ச்சாற்ருல், மதி - மத்தித்தல் (அரைத்தல்), கனியருணத்தை - மிக்கசெங்கருப்பாகிய மருந்தை, கலிகையை நிகரிடு - பூவின் மொட்டை நிகராகச் செய், கலிகை மாத்திரையே - கலிக்க மாத்திரையை உருட்டுவாய், கதிர் எதிர் அதனை கதிர் எதிர் பெறவிடு-சூரியனுக்கெதிராகிய அந்தக் கருப்பை உலர்த்துவாய், கம்மினில் உரை - நீரினில் உரைத்து, கண்ணின் கண்ணேயிடு - கண்ணிடத்திலே இடுவாய், கமலனுல் அமைத்திடு - பிரமனுல் உண்டாக்கப்பட்ட, கமல நோய் எனினும் - நீர்கொண்ட நோயானுலும் (பூவிழுந்த நோய்-கண்காசம்),கணத்தினில்-க்ஷணநேரத்தில்,வேம்பெதிர்-வேப்பிலையை எதிர்த்த, கணத்தினில் ஓடும் - பூதக்கூட்டம் போல் நீங்கும், கன்ன பூடணவடுகப்பெயர் இடரும் - கர்னபூடணம் கன்ன

பூடணம் என்று பலபெயர்களை உடைய கண்ணிலே உண்டாகின்ற "கம்மல்" (புகைக்கம்மல்) நோய் நீங்கும், கணம் மறுகணம் மறு கணம் முனம் அறும் - க்ஷணம் மறுக்ஷணம் அடுத்த க்ஷணம் என்று சொல்லப்பட்ட மூன்று கணத்தில் கண்ணில் கலிக்கம் படும் முன்னமே நோய்கள் நீங்கும், தனித்தனி கலிக்கம் - தனித்தனியாய் செய்யப்படுகின்ற கலிக்கவகைகளை, கழறுபு - கூறுகின்றேன் கேட்பாயாக, முக்கடுகு - சுக்கு, மிளகு, திப்பிலி, கந்தி - துவரை, கொள்-கொள், வெற்றிலை-வெற்றிலை, கடு-கடுகு, தினை-தினை, வரகு - வரகு, கசகசா -கசகசா, ஆடகி - சிறுநாகப்பூ, காந்திமெய்யுடன் - குப்பைமேனி முதலியவைகளாம், கருநிகர் அஞ்சனக்கருமையின் - கரிய நிறத்திற் கொப்பான அஞ்சனமையின், அருமை கேள் - அருமையைக் கேட்பாயாக, கடிப்பகை - கடுகு, வேயரி - மூங்கிலரிசி, கஞ்சவித்து - தாமரை விதை, ஆல்விரை - ஆலம் வித்து, கரும்பொன் - இரும்பின் நிறமாகிய கருத்த நிறத்தை, தெறு - பகைக்கின்ற, எயின் - வேடர்களின் உடல் நிறத்தைப் போன்ற, கருப்பென - கருப்பாக (கருநிறமடையும்படி), வறுத்தே - வறுத்து, கபிலநெய் - பசு நெய்விட்டு, அயிர் - நுண்மையாக, பால் கடிகை - அரைநாழிகை வரையில், பருவமாய் - பக்குவம் ஆகும்படி, கல்லென மதியா - கல்லொடு கல்தேய்ப்பது போல் தேய்த்து, கல்லென - நாகமணி போலவும், கருப்புரமெனவும் - கர்ப்பூரம் போலவும் உயர்வாக, மதித்து - எண்ணி, கருப்புரப்பரணிவை - உயர்ந்த பரணியில் சேகரித்து வைப்பாயாக, கறைப்பொழுது அறு - குமரி இருட்டு நீங்கி, வைகறைப்பொழுது இடுகண் - விடியற்காலையில் கண்ணில் இடுவாய், கண்நலியும் - கண்நோயும், ஆக்கைக் கணலியும் - சரீரத்தின் இடத்திலுள்ள நோய்களும், அறும் - நீங்கும், கையடைஉயிர்க்கு - பாது காத்தலுடைய உயிர்க்கு, இனிக் கௌவையுமின்றே - இனிதுன்பம் ஒன்றும் உண்டாகா (துக்கத்தினுல் உண்டாகும் சப்தம் உண்டாகாது) என்றவாறு.

கண்ணுக்கிடும் மருந்தும் மையும் :-

கடுகு, கடுக்காய், பொன்னுங்காணி, சுக்கு, மிளகு, திப்பிலி கற்கண்டு, பரங்கிச் சக்கை, சிறு தேக்கு, கழற்சிப்பருப்பு இரண்டு பலம் மற்றவைகள்யெல்லாம் காற்பலம் வீதம் எடுத்து கல்வத்தி லிட்டுப்பழச்சாற்றுடன், செங்கழுநீர்ச்சாற்ருல் அரைத்து மொட்டுப் போன்ற மாத்திரைகளாகச் செய்து வெயிலில் உலரவைத்துக் கொள்ள வேண்டும்.

அம்மாத்திரையை நீரில் உரைத்து கண்ணில் இட நீர் கொண்ட நோயானுலும் நீங்கும். கண்ணில் பூவிழுந்த நோய் உடனே மாறும். கம்மல் நோய் மறு கணமே நீங்கும்.

தனித்தனிக் கலிக்க வகைகள் :-

சுக்கு, மிளகு, திப்பிலி, துவரை, கொள், வெற்றிலை, கடுகு தினை, வரகு, கசகசா, சிறுநாகப்பூ, குப்பைமேனி முதலிய வைகள்.

அஞ்சனம் :-

கடுகு, மூங்கிலரிசி, தாமரை விதை, ஆலம் விதை ஆகியவை களையெடுத்து நன்ருகக் கரு நிறமாகும் வரை வறுத்துப் பசுவின் நெய்விட்டு அரை நாழிகை வரையில் பக்குவப்படும் வரை கல் லோடு கல் தேய்ப்பது போன்று தேய்த்து எடுத்து அதை கர்ப்பூரம் போன்று உயர்வாகக்கருதி பரணியில் வைத்துக்கொள்ள வேண்டும்.

காலைப் பொழுதில் கண்ணில் இட வேண்டும்.

தீரும் நோய் - கண்ணிலுள்ள நோய்களும், உடலைப்பற்றி யுள்ள நோய்களும் நீங்கும்.

காந்த பற்பம்

கா

காந்த விபூதியு காந்த விபூதி
காதரமிலையது காதரமெனவே
காந்தப்பொடி முதல் காலுக்கிருகால்
காந்தளினறனல் காந்தளினறல்வார்
கான்றிடமுப்பகல் காணமத்தித்துக்
காவிலை போலமகாவிலை தட்டிக்
காலசோதரன் முனர்க்காலறிவித்ததைக்
காழலத்துட்படு காசினியமைத்துக்
காமரச்சுல்லியாற் காமரச்சுல்லி
காலமுப்பகலெரி காலவைய்ப்படி
காந்திமெய்வழுதுணை காவேளையிற் செய்
காகதுண்டத்து மோர் கால்புரியப்பால்
காவிகாவிற்கதிர் காவியிற் சிவக்கும்
காமனைப்போலமீ காமனைப் போலாம்

காஞ்சுகியாமழ காஞ்சுகியாமே
காண்டத்தினிலுணிற் காண்டத்திலேயே
கானிலயின்றிடிற் கானலியிலேயே
காமனிலுண்டிடிற் காமனேயாவர்
காயறலிற் கொளிற் காயமார் வினைபோம்
கார்பாசத்திலுண் காற்பாசமறுமே
காந்திமெய்நீரிலுண் காந்தி மெய்க்குறுமே
காரவல்லியிலுணிற் காரகமறுமே
காரையிலுண்டிடிற் காரணுரறுமே
காணுனிற் கொளக் கானலியகலும்
காத்திரத்திற் கொள்ளக் காத்திரமுரமே
காயரசத்துணிற் காயமாறிடுமே
காராவினெய்யிலுண் காண்மது மேகங்
காருடன் முன்கெடுங் காலாசனியெனக்
காம்பிரதத்திலுண் காம்புமூலங்கெடும்
கான்மையாச்சியத்திலுணகாச நோயறுமே.

காந்த விபூதி - காந்தத்தினல் செய்யப்படும் வெண்பொடியானது, யுகாந்த விபூதி-சர்வசங்காரகாலத்தில் ஏற்படும் நீற்றைப் போன்றதாகும் (அன்றி சர்வசங்காரஞ்செய்கின்றவனை மகா பற்பம் என்று சொல்லப்படுகின்ற சிவபெருமானுக்கொப்பானதாகும், அதனைக் காந்த புராணத்துபதேச காண்டத்தில் கீழ்க் கண்டவாறு கூறப்பட்டுள்ளது,

"முழுஞான மினிதளித்து மகாபாவமுருக்குதலால்
மழுமானங்கைப் பரமனே மகாபற்பமெனப்படுவான்".

காதரமிலே - கெடுதியில்லே, அது - அந்த காந்தம், காது அரமெனவே - மோதி இராவுகின்றதினல் வரப்பட்ட அயத்தூளைப் போன்ற, காந்தப்பொடி - காந்தத்தின் தூள், முதல்கால் - ஒரு (முதல்) பங்கிற்கு, இருகால் - இரண்டு பங்கு, காந்தளின் அறல் - கலப்பைக் கிழங்கின் சாறு, அனல் - சித்திர மூலச் சாறு, காந்தளின்அறல் - மூன்ருவதாக மறுபடியும் கலப்பைக்கிழங்கின் சாறு, வார் - விட்டு, கான்றிட - உலர உலர (கக்கக்கக்க), முப்பகல் காணமத்தித்து - ஒவ்வொரு சாற்றிற்கும் ஒரு நாள் விகிதமாக மூன்று சாற்றினுக்கும் மொத்தத்திலே மூன்றுநாள் நன்ருக பற்பம் முடிவதற்கு அரைத்து, கா - சோலேயிலே உள்ள, இலே - இலேயைப்போல், மகாவில்லதட்டி - 1. பெரிய வில்லே ஒன்று செய்து 2.

பெருமைபொருந்தியவில்லை செய்து, கால சோதரன் முனர் காலத்தின் துணைவனான சூரியன் முன்னர், கால - கக்க, அறிவித்து - சூரியனுக்குத் தெரிவித்து (வைத்து), அதை - அந்த வில்லையை, காழ் அலத்து - வயிரம் பொருந்திய அலப்படை (அலப்படை - ஏர் முனையிலுள்ள இரும்புப்பட்டை), உட்படு - (அலப்படை) யினின்று வெளிப்பட்டிருகின்ற, காசினியமைத்து - நுண்மையான மண்ணினால் சீலைசெய்து (மண்சீலை செய்து), காமரம் - அடுப்பு, சுல்லி - அடுப்பு, (காமரம் - அடுப்பு: சுல்லி-அடுப்பு இருபெயரொட்டுப் பண்புத் தொகை), காமரச்சுல்லியாற்-காமரமென்றும் சுல்லியென்றும் சொல்லப்பட்ட அடுப்பில், காமரம்-வண்டுகள் மொய்க்கும்பருவமமைந்த மரத்தின், சுல்லி - சுள்ளி (சிறு விறகு) கொண்டு, கால - உலர, முப்பகல் காலம் எரிவை - மூன்று நாள் அடுப்பில் வைத்து சுள்ளி கொண்டு எரிப்பாய், அப்படி - முன் செய்ததுபோல், காந்தி மெய் - குப்பை மேனியிலைச்சாறு, காவேளையில் செய் - கொள்ளுக்கா வேளைச் சாற்றிலும் முன் செய்தது போலவே சாறு விட்டரைத்து உலர்த்தி எரிக்கவும், 3. காக துண்டம் ஓர் கால்புரி - நொச்சியிலும் ஒரு முறை செய்வாய், அப்பால் - பிறகு, காவி - நீலோற்பலம் விளைகின்ற, காவில்-சோலையில், கதிர் காவியிற் சிவக்கும்-சூரியனின் வெண்மைநிறக்கதிரும் முன்னே கூறப்பட்ட நிலோற்பலத்தின் நிற மான நீலநிறமும் கலந்தக்கால் உண்டாம் நிறமான காவிநிறத்தைப் போலாம் (சிவன் நிறமும் இதுவே), மீகாமனைப்போல் - (இப்பற் பத்தையாண்டால்) கப்பல் ஒட்டுகின்ற மாலுமியான மீகாமனைப் போன்ற வலிவும், மீ - உயர்ந்த, காமனைப் போலாம் - மன்மதன் (காமனைப்) போலும் அழகு உண்டாகும், காஞ்சுகி - சட்டையென்று சொல்லப்பட்ட தோலானது, ஆம் - அழகு உண்டாம் (மினுமினுப் புண்டாம் என்றவாறு), ஆம் - இருக்கவேண்டிய, சுகியாம் - சுக போகியாவான், காண்டம் - சீந்தில் சாற்றில் உண்டால், காண் தத்து இலையே - எவ்விதமான நோய்களினாலும் ஆபத்து இல்லை, கானில் அயின்றிடில் - காட்டாற்று நீரில் உண்டால், கால் நலி இலையே - கால் நோய் இல்லையாம், காமனில் உண்டிடில் - திப்பிலி யிலே உண்டால், காமனேயாவார் - தாதுவிருத்தியுண்டாம், காய் அறல் கொளில் - வெந்நீரிலே உட்கொண்டால், காயம் ஆர் வினை போம் - உடற்பிணிகளைப் போக்கும், கார்பாசத்திலுண் - பருததிச் சாற்றிலே உண்ண, கால்பாசம் அறும் - காலைப் பாசத்தினால் (கயிற்றினால்) இழுப்பது போன்ற நோய் போகும், காந்திமெய் நீரிலுண் - குப்பைமேனிச் சாற்றிலே உண்ண, காந்திமெய்க்குறும் - மெய்க்கு ஒளியுண்டாம், காரவல்லியில் உணில் - பிரண்டைச் சாற் றிலே உண்டக்கால், காரகம் அறும் - காரக நோய் தீரும், (புண் - காரீக்கம் முதலியன), காரையில் உண்டிடில் - காரையின் சாற்றிலே உண்டக்கால், காரனூர் அறும் - வாதத்தினால் உண்

டாம் கருநிறம் போம் (கருமேகம் இரத்தம் சுத்தியாவதினல் தீரும் என்றவாறு), காஞனிற்கொள - காஞன் வாழையிலை யின் சாற்றில் கொள்ள, கால் நலியகலும் - வாதத்தினல் உண்டாம் நோய்கள் தீரும், (காத்திரம் - மெய்-வெங்காயம்), காத் திரததில்கொள்ள-வெங்காயத்தின் சாற்றிலேகொள்ள,காலத்திரம் உரமே - (உஷ்ணம் தீருவதினல்) உடல் உரமாகும், காயரசத்தில் உணில் - மிளகு ரசத்தில் உண்ண, காயமாறிடும் - அடிபட்டதி ஞல் உண்டான காயம் தீரும், காராவின் நெய்யில் உண் - கருப்புப் பசுநெய்யில் உண்ண, காண் - உண்டாகின்ற, மதுமேகம் - தித்திப்பு நீர் நீங்கும், காருடன் முன் - அச்சத்தோடு முன்னே, காலாசனி யெனக்கெடும் - எமனைப்போன்ற இடிவிழுந்தால் எல்லாம் கெடு வது போல் அச்சத்தோடு போகும் (அசனி - இடி), காம்பு - மூங்கி லின், இரதம் - சாற்றில், உண் - உண்டக்கால், காம்பு மூலம் கெடும் முளைமூலம் தீரும், கான்மை - வெள்ளாட்டின், ஆச்சியம் - நெய் யில், உண - உண்ண, காச நோய் அறும் - காசநோய் தீருமென்றவாறு.

கிளிஞ்சிற் பற்பம்

கி

கிளிஞ்சியினட லையைக் கிளத்தலுற்றனங்
கிளிநகமென விளர் கிளிஞ்சிற் பொடிகால்
கிளித்தாரறலொடு கிளியெச்சத்தறல்
கிளறி முக்காலெடு கிரிகை முப்பகலே
கிச்சிலிநரத்தை கிடாரமுற்படியே
கிடுகினின் மூசை செய் கிட்டற்கமெட்டு நாள்
கிடையெருப் புடமிடக் கிடையெழுதினமே
கிரமத்தட லவிக் கிரமத்துடனுங்
கிளைத்திடு பிணிகளின் கிடைத்தொட ரகலக்
கிண்ணத்தரியிடைக் கிளிஞ்சில் விபூதியைக்
கிருதத்தினிலுணக் கிரந்திகளறுமே
கிஞ்சுக நீரிலுண் கிராணியகன்றிடும்
கிட்டிக்கிழங்கிலுண் கிராதகச் சன்னிபோம்
கிசலயரசத்திலுண் கிங்கரச்சுரமறும்

கிடையிலே ரசத்திலுண் கிருமி நோயறுமே
கிட்டிச்சுதையிலுண் கிள்ளைப் புண்ணறும்
கிரகபதி நட்பிலுண் கிழத்தனமகன்றிடும்
கிராமச் சாற்றிலுண் கிறு கிறுப்பகன்றிடும்
கிலாலத்தினிலுணக் கிட்டாதனில நோய்
கிருத்திமப்பாலிலுண் கிறுத்திமத்திமிரறும்
கின்னரவமுதிலுண் கிளர்சுரப்பிணிபோம்
கிழமைப்படவிக் கிரிகைப் பொருணிலே
கிட்டிணபகவான் கிரீடிக்குரைத்ததாம்
கிம்புருடர்க்குமுன் கிருபருரைத்ததாம்
கிரிவரனருளிறைற் கிரணபந்திகளார்
கிளிஞ்சியினட லேயைக் கிண்கிணிச்சரணக்
கிரீடவேலறுமுகங் கிணத்தெழுமமுதெனக்
கியாபகத்துடனருள் கிருபையுமிதுவே.

கிளிஞ்சியினடலேயை - கிளிஞ்சியின் பற்பத்தை, கிளத்தல் உற்றனம் - சொல்லலுற்றோம், கிளிநகமெனவிளர் - கிளியின் நகம் எவ்வளவு வெள்ளையாய் இருக்கின்றதோ அவ்வளவு வெள்ளையாகின்ற, (விளர் - வெளுப்பு), கிளிஞ்சிற்பொடி கால் - கிளிஞ்சிலின் பொடிகால்பங்கு எடுத்துக்கொண்டு, கிளித்தார் அறலொடு - (கிள்ளி என்பது கிளியென்றாயிற்று) கிள்ளிஎன்று சொல்லப்படுகின்ற சோழனுடைய மாலையாகிய ஆத்தியின் சாற்றிெனடு, கிளியெச்சத்தறல் - கிளியின் மலத்துநீர், முக்கால் எடு - இரண்டும் சேர்த்து முக்கால்பங்கு எடுத்து, கிளறி - கிளிஞ்சிலுக்கு விட்டுக் கிளறி, கிரிகை முப்பகலே - கிளறுதல் செய்தல் மூன்று நாளேயாம் (அரைத்தாலும் அரைக்கலாம், சுண்ணம்பு பூத்துப்போம் ஆதலினுல் தேவையில்லை), கிச்சிலி - கிச்சிலியிலும், நரத்தை - நாரத்தைச் சாற்றிலும், கிடாரம் முற்படியே - கிடார நாரத்தஞ்சாறு ஒவ்வொன்றிலும் முன்போலவே மூன்று பகல் கிளறுதல் செய்ய வேண்டும், கிடுகினின் மூசை செய் - நடுவில் பள்ளமில்லாமல் (கிடுகு - நெருக்கம்) மூசை செய்யவும் (உருட்டிவிடவும்), கிட்டற்கமெட்டு நாள் - சூரியனில் காயவைக்க வேண்டிய நாள் எட்டாகும், கிடை எருப் புடமிட - ஆட்டின் மலத்திஞல் புடமிடவும், கிடை எழுதினம் - கிடக்கையைவிட்டு எழுகின்றநாள் (அஃதாவது ஒரு நாள் ஆறவிட்டு மறுநாள் எடுக்கவும்), கிரமத்து அடலே - கிரமப்படி முடிந்த மருந்து, விக்கிரமத்துடன் ஆம் - நல்லபலத்துடன் ஆகும், கிளைத்

திடு பிணிகளின் - கிளைக்கின்ற நோய்களின் (பெருநோய்கள்), கிடைத்தொடர் அகல - உட்கிடையாய் இருக்கின்ற நோய்களின் தொடர்பு நீங்க, கிளிஞ்சல் விபூதியை-கிளிஞ்சல் பற்பம் நோய் வன்மைக்கும் உடல் வன்மைக்கும் தக்கஅளவு எடுத்து, கிண்ணத்து - ஒரு கிண்ணியில் இட்டு, கிருதத்தினில் - அதில் நெய்விட்டு, அரியிடை - சூரியனில் வைத்து (மறுமுறை நெய்யைக் காய்ச்சாமல் இருக்கும் பொருட்டு), உண - அருந்த, கிரந்திகள் அறுமே - ரண நோய்கள் தீரும் (18 கிரந்தியென்றும், கருங்கிரந்தி, செங்கிரந்தி இரண்டுதான் என்றும் எழு வகை என்றும் நச காண்டத்தில் குறிப்பிட்டிருக்கின்றது), கிஞ்சுக நீரிலுண் - வாயினுக்கு நிறத்தைக் கொடுப்பதினால் கிஞ்சுகமென்று சொல்லப்படுகின்ற வெற்றிலையின் சாற்றில் உண்ண, கிராணியகன்றிடும் - கிராணி பேதி நோய்கள் தீரும், கிட்டிக்கிழங்கிலுண் - நெய்தல் கிழங்குச் சாற்றிலே உண்ண - கிராதகச் சன்னி போம் - கொடுமை செய்கின்ற சன்னி நோய்கள் அகன்றுவிடும், கிசலயரசத்திலுண் - தளிர் ரசத்திலேயுண்டால்- கிங்கரச் சுரமறும் - கிங்கரர்களைப் போல் வருத்தா நின்ற சுரம் நீங்கும், கிடையிலை ரசத்திலுண் - நெட்டியிலைச் சாற்றிலே அருந்த, கிருமி நோய் அறும்-கிருமி ரோகங்கள் தீரும், கிட்டிச் சுதையிலுண் - கொட்டிச் சாற்றிலே அருந்தினால், கிள் ஐ புண் அறும்-பள்ளம் (வடு) விழுகின்ற சீதளத்தால் உண்டாகின்ற புண்கள் தீரும், கிரகபதி நட்பிலுண் - கிரகங்களுக்கு அரசாகிய சந்திரன் நட்பாகிய அல்லியின் சாற்றிலே உண்டால், கிழத்தனம் அகன்றிடும் - வயோதிகம் தீரும், (வாலிபத்தைக் கொடுக்கும்), கிராமச் சாற்றிலுண்-கிராம்பு ரசத்திலுண்ண, கிறுகிறுப்பகன்றிடும்-மயக்கம்தீரும், கிலாலத்தினிலுண - நீரிலே யருந்தியக்கால், கிட்டாதனில நோய் - வாத நோய்கள் நெருங்காது, கிருத்திமப்பாலிலுண் - பாலில் அருந்தினால், கிறுத்திமம் - துன்பம் விளைவிக்கின்ற, திமிர் அறும் - திமிர் வாதம் போம், கின்னர வமுதிலுண் - தகரைச்சாறு கிலுகிலுப்பைச் சாறு ஏதாவதொன்றில் அருந்த, கிளர் சுரப்பிணி போம் - சப்த சுரங்களையும் எழுப்புகின்ற குரலைப் பற்றிய நோய்களெல்லாம் தீரும், கிழமைப்பட - உரிமையாக, இக்கிரிகை பொருள் நிலை - இச்செய்கையின் அர்த்த புஷ்டியை, கிட்டிண பகவான் - கண்ணன், கிரீடிக்கு உரைத்ததாம் - அர்ச்சுனருக்கு உபதேசித்ததாம், கிம்புருடர்க்குமுன் - கந்தர்வர்களுக்கு முற்காலத்தில் (கிஞ்சித் புருடஹா கிம்புருடஹா), கிருபர் உரைத்ததாம் - ஈஸ்வரன் உரைத்ததாகும், கிரிவரன் அருளினால் - ஈஸ்வரனின் அருளினால், கிரணபந்திகள் ஆர் - ஒளிக்கூட்டங்கள் நிறைந்த, கிளிஞ்சியின் அடலையை - கிளிஞ்சி பற்பத்தை, கிண்கிணிச் சரண - சலங்கையைத் தரித்த பாதங்களையுடைய, கிரீடவேல் அறுமுகம் -

கிரீடம் தரித்த வேலையுடைய ஆறுமுகத்தையுடைய, கிணத்தெழும் அமுதென-க்ஷண நேரத்தில் உண்டாகின்ற (அருள்) அமுதத்தைப் போல, கியாபகத்துடன் அருள் கிருபையுமிதுவே - வைத்தியர் களுக்கு ஞாபகத்துடன் அருளிச் செய்த அருளும் இதுதான் என்றவாறு.

கீழாநெல்லிக் கிருதம்

கீ

கீழா நெல்லிக் கெனமருவு கீழா நெல்லிக் கிருதமுமீதே
கீழா நெல்லிவேர் கீறுமுப்பகுதியே
கீசகவேர் சிறுகீரைவேர் பனைவேர்
கீரைவேர் கணிவேர் கீட்டிசைக் கொமண்வேர்
கீடவேரிவைகளைக் கீன்று முன் வேரையும்
கீன்ருதபத்தில்வை கீர்வாணத்திடு
கீதைநேர்பாத்திரக் கீழுடன்மீதிடு
கீரநேரான பாகீரதியுடனிடு
கீறியநூ னெறி கீறிலாதட்டிடு
கீலத்திமுப்பலை கீரை வித்தேலமால்
கீரச்சருக்கரை கீடில் நெய் முக்கனி
கீலக முறைப்படி கீழ்படாதியற்றிக்
கீற்றுப் பிறைசெலக் கீதாசனியெனக்
கீறியக்கிருதக் கீடிலா மருந்தினைக்
கீழ்ப்படாதயின்றிடக் கீர்த்திவாகட முறை
கீலைப்பிடிவாதக் கீட்டையுமறுத்திடுங்
கீழ்வாய்ப்பருவரற் கீட்டையுமறுத்திடுங்
கீலெலாம் வேதை செய் கீலாவநோயறுங்
கீசக வலிப்பிணிக் கீட்டி னையறுத்திடுங்
கீரிபோல் வடுக்கனல் கீட்டி னையறுத்திடுங்
கீச்சு கக்குரற்சனி கீட்டையுமறுத்திடுங்
கீழ் வயிற்றெரிப் பிணிக் கீட்டையுமொழித்திடுங்
கீணேக்கியெனநலி கீட்டையுமறுத்திடுங்

கீழரற்றலப் பிணிக்கீட்டையுமொழித்திடுங்
கீசகவைரியின் கீர்த்தியைத்தருமே
கீரைவித்தென மயிர் கீர்த்தியைக் கொடுக்கும்
கீழா நெல்லிநெய்க் கீர்த்தியிதாமே.

கீழாநெல்லிக்கென - கீழாநெல்லிக் கென்று
மருவு - பொருந்திய
கீழாநெல்லிக் கிருதமும் - கீழாநெல்லிக் கிருதமுறையும்
ஈதே - இதுவே
கீழாநெல்லிவேர் - சொல்லப்பட்ட கீழாநெல்லி வேர்
கீறு முப்பகுதியே - மூன்று பங்கு வெட்டி எடுத்துக் கொண்டு
கீசக வேர் - மூங்கில் வேர்
சிறுகீரை வேர் - சிறுகீரை வேர், பனைவேர் - பனைமரவேர்
கீரை வேர் - கீரையின் வேர்
கணி வேர் - வேங்கைமர வேர்
கீட்டிசைக் கொமண் வேர் - கிழக்குத்திசை நோக்கிச் செல்லும் கொமண் வேர்
கீட வேர் - கீட வேர் (புழு)
இவைகளைக் கீன்று - ஆகிய இவைகளை வெட்டியெடுத்து
முன்வேரையும்-முன்பு சொல்லப்பட்ட கீழாநெல்லிவேரையும்
கீன்ருதபத்தில் வை - வெயிலில் காயவைத்து
கீர்வாணத்திடு கீதை நேர் - கீர்வாண மொழியில் செம்மை யாகச் செய்யப்பட்டுள்ள கீதைக்குச் சமமாக
பாத்திரக்கீழுடன் மீதிடு - பாத்திரத்தில் வைத்து
கீர - பாலும்
நேரான - சமமாக
பாகீரதி உடனிடு - தண்ணீரும் சேர்த்து
கீறிய நூல்நெறி - நன்னூற்களில் கூறப்பட்டுள்ள முறைப்படி
கீறிலாதட்டிடு - குறைவு வராமல் காய்ச்சு
கீலத்தி - அத்தி
முப்பலை - முப்பலை
கீரை வித்து - கீரை வித்து
ஏலம் - ஏலம்
ஆல் - ஆல்
கீரச் சருக்கரை - சர்க்கரை
கீடில்நெய் - குற்றமில்லாத நெய்
கீலக முறைப்படி - சொல்லப்பட்ட முறைப்படி
கீழ்படாதியற்றி - அடி பிடிக்காது காய்ச்சி
கீற்றுப்பிறை செல - மூன்றும் பிறையைப் போல்

கீறியக் கிருதம் - எடுக்கப்பட்ட நெய்
கீடிலா மருந்தினை - இணையற்ற மருந்தினை
கீழ்ப்படாது அயின்றிடக் கீர்த்தி வாகட முறை - மருத்துவ முறை
யிற் கூறப்பட்டுள்ள அளவுப்படி கொள்ள
கீலைப் பிடிவாதம் - கீல்களைப் பற்றியுள்ள வாதம்
கீட்டையு மறுத்திடும் - கேட்டைப் போக்கிடும்,
கீழ்வாய்ப் பருவரல் - கீழ் நோக்கிடும் வாயு
கிட்டையும் மறுத்திடும் - கெடுதலைப் போக்கிடும்
கீலெலாம் வேதை செய் - கீல்களிலெல்லாம் வலியைக் கொடுக்
கின்ற
கிலாவநோயறும் - கில்வலி நோய் நீங்கும்
கிசக வலிப்பிணி - குரக்கு வலி நோய்
கிட்டினையறுத்திடும் - கெடுதலைப் போக்கிடும்
கிச்சுகக் குரற் சனி - மெலிந்த குரலையுண்டாக்கும் சன்னி
கிட்டையு மறுத்திடும் - கெடுதலை நீக்கிடும்
கிழ்வயிற்றெரிப்பிணி - அடிவயிற்றில் உண்டாகக் கூடிய வெப்ப
நோய்
கிட்டையுமொழித்திடும் - கெடுதலை யொழித்திடும்
கிணேக்கியெனநலி - மெலிவைக் கொடுக்கும் நோய்
கிட்டையு மறுத்திடும் - கெடுதலையொழித்திடும்
கிழரற்றல் பிணி - அரற்றலைக் கொடுக்கும் நோய்
கிட்டையுமொழித்திடும் - கெடுதலையொழித்திடும்,
கிசகவைரியின் - மேகப்பிணிக்கு ஒப்பிடப்பட்ட கிசகனுக்கு எதிரி
யாகிய இரசத்திற்கு ஒப்பிடப்பட்டிருக்கின்ற பீமனின்
கிர்த்தியைத் தருமே - புகழைக் கொடுக்கும்
கிரை வித்தென - கிரை விதையைப் போன்ற கரு நிறத்தைக்
கொடுத்து
மயிர் கிர்த்தியைக் கொடுக்கும் - கேசத்தை அழகுறச் செய்யும்
கிழா நெல்லி நெய் - கிழா நெல்லி நெய்யின்
கிர்த்தியிதாமே - குணங்கள் இவைகளாகும்.

கீழாநெல்லிக் கிருதம் செய்முறை:-

மூன்றுபங்கு கீழாநெல்லி வேரை வெட்டியெடுத்துக் கொண்டு மூங்கில் வேர், சிறுகீரை வேர், பனைமரவேர், கீரையின் வேர், வேங்கை மரவேர், கிழக்குத்திசை நோக்கிச் செல்லும் கொமண் வேர், கீடவேர் ஆகிய இவ்வேர்களை ஒவ்வொரு பங்கு வீதம் வெட்டியெடுத்துக் கொண்டு இவைகளையும் கீழாநெல்லி வேரை யும் வெயிலிலுலர்த்திச் சிறந்ததொரு பானையிலிட்டு, எட்டுப்பங்கு பாலை ஊற்றி அதற்குச் சமமாக நீரையும் விட்டு நன்நூற்களில்

கூறப்பட்ட முறைப்படிக்காய்ச்சி வடித்த குடிநீரில் அத்தி, முப்பலே, கீரைவித்து, ஏலம், ஆல், சர்க்கரை, நெய் ஆகியவைகளைச் சேர்த்து அடிபிடிக்காமல் பதமாகக் காய்ச்சியெடுக்க வேண்டும்.

தீரும் நோய்கள் :- அளவுப்படி கொள்ள கீல்களைப் பற்றி யுள்ள வாதக் கேட்டைப் போக்கும். கீழ் நோக்கிய வாயுவின் கேட்டையும் போக்கும். கீல்வலி நோயும், வலிப்பு நோயும் நீங்கும். குரலைக் கெடுக்கின்ற சன்னியைப் போக்கும். அடிவயிற்றில் உண் டாகக்கூடிய வெப்ப நோயைப் போக்கும். உடலை மெலியச்செய் கின்ற நோயைப் போக்கிடும். அரற்றல் நோயை ஒழித்திடும். மேக நோயை யொழித்துப் புகழைத்தரும். கீரை விதை நிறத்தை யொப்ப கேசத்தைக் கறுக்கச் செய்து அழகைக் கொடுக்கும்.

குடி நீர்

கு

குடிநீர்விளையற மோதிடு குடிநீரினிதறைவாம்
குதிர் பஞ்சமூலக் குடிநீர்வகைகேள்
குறி முக்கடுகரி குடசவேர் பணிலவேர்
குல்லிவையடுவது குடி நீர் பருகிடிற்
குடிலமெனத்தரு குடிலமெலாமறுங்
குன்றிவேர் ஆயில்வேர் குலவுமுப்பலையிவை
குன்று மோரைவகைக் குடி நீரட்டது
குடித்திடிற் சுரப்பிணி குன்மநோயறுமே
குல்லைவல்லாரை குவலயமாகறி·
குலவு மோரைவகைக் குடிநீர்பருகிடிற்
குயவலிபுயவலி குயவலியறுமே
குதிரைவால்புல் கறி குஞ்சரவணங்கி வேர்
குடிநீரட்டவைக் குடித்திடவறியிற்
குக்குடவளிக்கனல் குன்மமுமறுமே
குறிஞ்சிவெட்பாலைவேல் குலவுமிம்மூவேர்
குடி நீரட்டவைக் குடித்திடவறியிற்
குமட்டெரி குன்மமைக் குன்மமுமறுமே
குடுமித்தலையுறு குஞ்சி நோயறுமே

குறங்கினில்வருமங் குரப்பிணியறுமே
குக்கியிலெரிநிகர் குணுங்கப் பிணியறுமே
குற்பமானது கொலங்குலிப்பிணிவிடுமே
குஞ்சிதமிடுமருங் குப்பிணியறுமே
குமரிவேர் முல்லைக் குடிநீர்பருகிடிற்
குலைப்பருவரலெனுங் குற்றநோயறுமே
குறும்பிமேலிடு செவிக் குண்டலப்பருவறும்
குறிவழியிழியறற் குற்றப்பிணியறுங்
குணமினிது தவுமிக்குடிநீர்விதியே.

குடி - குடித்தனத்தின், நீர் - தன்மையால் உண்டாம், வினை - நோய் - (அஃதாவது உணவு செயல்களினால் உண்டாகின்ற நோய்கள்), அற - நீங்க, மோதிடு - அடித்துப் போக்குகின்ற, குடிநீர்-கஷாய வருக்கங்களை, இனிது அறைவாம் - நன்ருய்ச் சொல்லுவோம், குதிர் - கூட்டமான (தொகையான), பஞ்சமூலக் குடிநீர் வகைகேள் - பஞ்ச (ஐந்து) வேர்களைக் கொண்டு செய்யப்படுகின்ற கஷாயத்தின் வகையைக் கேட்பாயாக, குறி - குறிக்கின்ற, முக்கடு - சுக்கு, மிளகு, திப்பிலி, அரி - விஷ்ணுகிராந்தி, குடசவேர் - வெட்பாலை, பணில வேர் - சங்கவேர், குல் - துளசி, இவை அடுவது - இவைகளைக் காய்ச்சுவதாகிய, குடிநீர் பருகிடில் - குடிநீரைப் பானம் செய்தால்,குடிலம்எனத்தரு-உடம்பிலேவரப்பட்ட, குடிலம் எலாம் அறும் - இடஞ்சலான நோய்கள் தீரும், குன்றிவேர் - அதிமதுரம், ஆயில்வேர் - ஆயில் பட்டையின் வேர், குலவு - விளங்குகின்ற, முப்பலை - கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், இவை - இவைகளைக் கொண்டு, குன்றுமோர் ஐவகைக் குடிநீர் அட்டு - குறைவதற்குக் காய்ச்சிய இந்த ஐந்து சரக்குகளின் தனித்தனிக் குடிநீரும் (தொகையாகவும் இட்டுக் காய்ச்சலாம்), அது குடித்திடில் - அக்கஷாயத்தைக் குடித்தால், சுரப்பிணி - சுரநோயும், குன்ம நோயறுமே - குன்மநோயும் தீரும், குல்லை - துளசி, வல்லாரை - வல்லாரை, குவலயம் - யானைத்திப்பிலி, மா கறி - மிளகு, குலவும் ஓர் ஐவகைக் குடிநீர் பருகிடில் - இந்த விளக்கமமைந்த ஐந்து சரக்கையும் இட்டுக்காய்ச்சிய குடிநீரை அருந்திஞல், குயவலி - ஸ்தன வலி, புயவலி - தோள்வலி, குயவலி அறுமே - யோனிவலி நீங்கும், குதிரை வால்புல் - குதிரைவால்புல், கறி - மிளகு, குஞ்சர வணங்கி வேர்-யானை வணங்கி என்று சொல்லப்படுகின்ற நெருஞ்சி வேர்,குடிநீர்அட்டு-இவைமூன்றையும் இட்டுக் குடிநீராகக் காய்ச்சி, அவை குடித்திட அறியின் - அக்குடிநீரைக் குடிக்க உணர்ந்தால், குக்குடவளி - குக்குடவாயு (குக்குடம் - கோழி), கனல் -

சுரம், குன்மமுமறுமே - குன்ம நோயும் தீரும், குறிஞ்சி - சிறு குறிஞ்சான், வெட்பாலே - வெட்பாலே, வேல் - கரு வேல், குலவும் இம்மூவேர் - விளங்குகின்ற இந்த மூன்றின் வேரை யும், குடிநீர் அட்டு - கஷாயமாகக் காய்ச்சி, அவை குடித்திட அறி யின் - அதைக் குடிக்கத் தெரிந்து கொண்டால், குமட்டு - ஓக்கா ளிக்கின்ற, எரிகுன்மம் - எரிகுன்மமும் (பித்தம்), ஐக்குன்மம் - ஐய குன்மமும், அறும் - நீங்கும், குடுமித்தலையுறு - தலை மயிருக்குரிய நோய்கள் அஃதாவது பிளத்தல், வெளுத்தல், உதிர்தல் முதலியன, குஞ்சி நோய் அறுமே-மயிரைப்பற்றிய நோய்கள் தீரும், (குறங்கு - தொடையிடுக்கு, அங்குரம் - முளை அஃதாவது மூலம்) குறங்கினில் வருமங்குரப் பிணியறும் - தொடையிடுக்கிலேயுள்ள ஆசனத்திலே முளைக்கின்ற மூல நோய் தீரும், குக்கி - வயிற்றில், எரி நிகர் - அன லைப் போன்ற (குணு - வளைவு), குணுங்கப்பிணி அறும் - உடலை வளைத்து விடுகின்ற நோய் தீரும், குற்பமானது கொலங்குலிப்பிணி விடுமே - விரல் நோய்கள் நீங்கும், குஞ்சிதமிடு - அங்குமிங்கு மசைகின்ற (ஓடுகின்ற), மருங்குல் பிணி அறும் - இடுப்பு நோய் (இடுப்பு வாதம்) நீங்கும், குமரி வேர் - கற்றாழை வேர், முல்லை - முல்லை வேர், குடி நீர் பருகிடில் - இவையிரண்டையுமிட்டுக் காய்ச் சிய கஷாயத்தை அருந்த, குலைப் பருவரல் - குலைநோய், எனும் குற்ற நோய் அறும் - (குற்றம் - தோடம்) முத்தோடத்தினுல் உண் டாம் பிணிகள் தீரும், (குறும்பி - சிறு மலம்) குறும்பி மேலிடு - குறும்பி அதிகமாகின்ற, செவிக் குண்டலப்பரு அறும் - காதில் உண்டாகின்ற குண்டலப்பரு நோய் நீங்கும், குறிவழி இழியறற் குற்றப்பிணி அறும் - தாதுக்ஷீண நோய் நீங்கும், குணம் இனிது உதவும்-குணங்களைக் கொடுக்கின்ற, குடிநீர் விதியே - கஷாய வருக்கங்களின் முறைகளாகும் என்றவாறு.

கூவிளை லேகியம்

கூ

கூவிளை லேகியங் கூறுதுமினியெண்
கூர்கூவிளைவேர்க் கூறுமுன்னஃதே
கூடிய மற்றவேர் கூதாளிப் பகண்டைமா
கூலமதுவழை கூத்தன் குதம்பையார்
கூரைமூதண்டைவில் கூரையால் நெல்லிவேர்
கூவிரையல்லிவேர் கூடினவகையிரு
கூறுவெவ்வேருய்க் கூனிருப்பதறை

கூறுபடுத்திக் கூவநேர்கடத்தறல்
கூடவிடுத்தெரி கூர்குடிநீரிறு
கூறுமுத்திரமீ கூலமுக்கடுதுடி
கூளமுப்பலையகில் கூடயிரிழுதுபால்
கூம்பற்கனிவகை கூட்டிருற்பிரசநீர்
கூந்தற்கமுகவை கூடியசரக்குகள்
கூர்மையிற் பொடித்திவை கூட்டிமுன்னுரைத்த
கூரிடை தெரிந்திடு கூடிய பருவக்
கூழினிலடரனு கூலமாமெழுகிற்
கூருறக்கிளறியே கூடுமிலேகியக்
கூட்டுவறியெடு கூடையார்த்தானியக்
கூட்டினிலிருமதி கூட்டிவையெடு பின்
கூத்தன் மெய்தேறவுண் கூர்கழற்காயெடை
கூசுதலின்றியே கூறிருபொழுதும்
கூறுபத்தியத்துடன் கூர்மை நாற்பதுநாள்
கூன்வலியுப்புசங் கூர்மக்கட்டு நோய்
கூகைமருட்டுநோய் கூளி முற்சனைவலி
கூதைச்சுரப்பிணிகூட்டுநோய்ச் சன்னிகள்
கூட்டுடன கன்றிடுங் கூர்ப்பவாயிலைப்பறுங்
கூடுமெய்க்குரமேல் கூவிளைலேகியம்
கூப்பிடுவினவுமுன் கூகாவெனக்கரங்
கூப்பு நோயினமே.

கூவிளை லேகியம்-வில்வாதி இலேகியம், இனி கூறுதும் - இங்கு கூறப்படும், கூவிளைவேர் - வில்வ வேர், எண் கூர் - எட்டுப் பங்கு, கூறு முன்னஃதே - முன்பு கூறப்பட்டதுபோல், கூடிய மற்ற வேர் - சேர்க்கப்பட வேண்டிய பிற வேர்களாவன, கூதாளி - பனை வேர், பகண்டை - இலந்தை வேர், மா - மாவேர், கூலம் - கொம் புப் பாகல் வேர், மது - அதிமதுரம், வழை - சுரபுன்னை வேர், கூத்தன் குதம்பை - கூத்தன் குதம்பை வேர், ஆர் - ஆத்தி வேர், கூரை மூதண்டை - அறுகன்வேர், வில் - கரும்பு. கூரையால் - கூரை போன்று படர்ந்துள்ள ஆலவேர், நெல்லி வேர், கூவிரை யல்லி வேர் - அல்லி வேர், கூடின - சேர்க்கப்பட வேண்டிய, வகை

யிரு - இவ்விரு வகையானவேர்களை, கூனிருப்பதனுற் - அரிவாளால், கூறு வெவ்வேருய் - தனித் தனியாக, கூறுபடுத்தி - கூறு செய்து, கூவநேர் கடத்தறல் - பதக்குக் கிணற்று நீரில் போட்டு, கூடவிடுத்தெரி - நன்ருக எரித்து, கூர்-சொல்லப்பட்ட, குடிநீரிறு - - குடி நீராக்கி இறுத்து, கூறு முத்திர மீகூல - மேற்கொண்டு சேர்க்கப்பட வேண்டிய சரக்குகள், முக்கடுகு - சுக்கு, மிளகு, திப்பிலி, துடி - ஏலம், முப்பலே - முப்பலே, அகில் - அகில் கட்டை, அயிர் - சர்க்கரை, இழுது - நெய், பால் - பால், கூம்பற்கனி வகை- பேரீச்சம்பழம், திராட்சைப்பழம், எலுமிச்சம்பழம், நாரத்தம்பழம், கூட்டு இருற் பிரசநீர் - தேன், கூந்தற் கமுகவை கூடிய சரக்குகள் - சேர்க்கப்பட வேண்டிய இச்சரக்குகளை, கூர்மையிற் பொடித்திவை - நன்ருகத் தூளாக்கிக் கொண்டு, முன்னுரைத்த - முன்பு சொல்லப்பட்டுள்ள, (அளவுப்படி) கூட்டி - சேர்த்து, கூரிடை தெரிந்திடு - முன் சொல்லப்பட்ட நீரில் போட்டு, கூடிய பருவம் - பக்குவமாக, கூழினிலடரனு கூலமாமெழுகிற் - மெழுகு பதமாக, கூருறக் கிளறியே - நன்ருகக் கலக்குமாறு கிண்ட, கூடும் இலேகியம் - இலேகிய பருவம் அடையும், கூட்டு வறியெடு - அப் பருவமறிந்து இறக்கி, கூடையார் தானியக் கூட்டினில் இருமதி கூட்டிவை - நெற் குதிருக்குள் இரண்டு மாதம் வைத்திரு, எடு பின் - அதன் பின் எடுத்து, கூத்தன் - மெலிவுற்ற, மெய் - உடல், தேற - உரம் பெற, கூர்கழற்காயெடை - கழற்சிக்காயெடை, கூறிரு பொழுதும் - இரு பொழுதும், கூசுதலின்றியே - கூச்சமின்றி, கூர்மை நாற்பது நாள் - நாற்பது நாட்கள், கூறுபத்தியத்துடன் - சொல்லப்பட்ட பத்தியத்துடன், உண் - உண்பாயாக, கூன்வலி - உடம்பை வளைக்கக் கூடிய வலி, உப்புசம் - உப்புசம், கூர்மக்கட்டு நோய் - ஆமைக்கட்டு நோய், கூகை மருட்டு நோய் - விழியை மருட்டும் நோய், கூளி முற்சனை வலி -..., கூதைச் சுரப்பிணி - குளிருடன் கூடிய சுர நோய், கூட்டு நோய்ச் சன்னிகள், பலவிதச் சன்னிகள், கூட்டுடன் - அடியோடு, அகன்றிடும் - நீங்கிப் போகும், கூர்ப்ப வாயிலைப்பறும் - வாய் இலைப்பு நீங்கும், கூடு மெய்க் குரமேல் - உடம்பைப் பேணிவளர்க்கக் கூடிய, கூவிளை லேகியம் - வில்வாதி லேகியத்தை, கூப்பிடு வினவு முன் - கூப்பிடுவதன் முன், நோயினமே - நோய்கள் எல்லாம், கூகா வென - ஆஊவென அலறி, கரங்கூப்பும் - கைகுவித்து நீங்கும்.

கூவிளை லேகியம் செய் முறை

தேவையான பொருட்கள் :-

1. வில்வ வேர் 8 பங்கு 2. பனை 3. இலந்தை **4.** மா 5. கொம்புப் பாகல் 6. அதிமதுரம் 7. சுரபுன்னை 8. கூத்தன்

குதம்பை 9. ஆத்தி 10. அறுகு 11. கரும்பு 12. ஆல் 13. நெல்லி 14. அல்லி ஆகியவைகளின் வேர் 15. முக்கடுகு 16. ஏலம் 17. முப்பலை 18. அகில்கட்டை 19. சர்க்கரை 20. நெய் 21. பால் 22. பேரீச்சம் பழம், திராட்சைப் பழம், எலுமிச்சம்பழச்சாறு, நாரத்தைச்சாறு, 23. தேன்.

செய் முறை :-

வில்வவேர் 8 பங்கும் சொல்லப்பட்ட மற்ற வேர்கள் எல்லாம் மொத்தத்தில் வில்வவேர் எடைக்குச் சமமாக எடுத்துக் கொண்டு சிறு சிறு துண்டுகளாகக் கூறு செய்து பதக்குக் கிணற்று நீர் விட்டுக் குடி நீராகக் காய்ச்சி அதன் பின் எலுமிச்சம்பழச்சாறு, நாரத்தையின் சாறுகளைக் கூட்டி, பாலில் சர்க்கரை சேர்த்து வடித்து ஷை குடி நீருடன் கலந்து எரித்துப்பாகு பருவத்தில் முக் கடுகு, ஏலம், திரிபலை, அகில் ஆகிய சரக்குகளின் சூரணத்தைத் தூவி திராட்சையையும், பேரீச்சையையும் அரைத்து அதனுடன் கூட்டி முத்தீயால் எரித்து பதமாகக் கிண்டி கடைசியில் நெய்யை யும் தேனையும் சேர்த்துக்கிண்டி மெழுகு பதமானவுடன் இறக்கிக் கொள்ள வேண்டும். அதன்பின் இரண்டு மாதங்கள் முறைப்படி தானிய புடம் வைத்து எடுக்க வேண்டும்.

அனுபானமும் தீரும் நோய்களும் உரையில் காண்க.

கெந்தக பற்பம்

கெ

கெந்தகவடலையான நீறது கெந்தமான நாகமே
கெழுமியமலமறு கெவியமாகியதோர்
கெந்தகமொருதொடி கெண்ணிய நிறைக்கோர்
கெஞ்சாவிலைரசங் கெழுமுத்தொடிவிடு
கெடுவிருநாளரை கெல்லிக்கிழங்கு நீர்
கெடுவிரு நாளரை கெட்டியாய் வில்லை செய்
கெவினமதாகிக் கெம்பெனுமாதபக்
கெதியினி நாலுநாள் கெழும உலர்ந்த பின்
கெவுளியெச்சத்திற் கெளுத்தி நெய்விட்டரை
கெவியெனக்குகை செய்கெத்திகை யென்னவை
கெவித்திடுசிலைமண் கெடுவிரு நாலுநாள்

கெலிக்கவுலர்ந்தபின் கெசமலமுட்டையிற்
கெசவுயரத்தினிற் கெசபுடமிட்டெடு
கெசகனமெனவே கெண்ணியமாகிய
கெந்தகவடலையைக் கெங்கையிலுண்டிடக்
கெசத்திமிரலறுங்கெடி நெயிலுண்டிடக்
கெர்ச்சனை வலிபோங்கெந்த வீரசத்திலுண்
கெண்டி மேகங்கெடுங் கெவுளிபாத்திரையிலுண்
கெத்திப்பரந்தைபோங் கௌவுரி பானத்திலுண்
கெருவவுன்மத்தநோய் கெருடன் முன்பணியெனக்
கெட்டு முறிந்திடுங் கெசவந்தனையிலுண்
கெர்ப்பவிப்புருதிபோங் கெஜானனன்பத்திரக்
கெழுமுரசத்திலுண் கெக்கலிக்கொட்டுநோய்க்
கெர்ச்சிப்பறுமே கெண்ணியவெண்ணெயிற்
கெடுவுறவுண்டிடிற் கெட்டமேகப்புண்ணேய்
கெட்டிடத் தேறுமேகெதி தருசருக்கரைக்
கெண்டினிலுண்டிடக் கெலித்து வருசுரக்
கெலிப்பெலாமறுமே கெழுமுலைப்பாலினிற்
கெடுவுறவுண்டிடக் கெஞ்சுக பானலக்
கெச்ச நோயறுமே கெணிக்கப்படு பொருட்
கெந்தக வடலையே.

கெந்தக வடலையான நீறது கெந்தமான நாகமே - .... கெழுமிய - பொருந்தி யிருக்கக்கூடிய, மல மறு - குற்றம் நீக்கி, கெவியமாகியதோர் - சுத்தம் செய்யப்பட்ட, கெந்தகம் ஒரு தொடி - கெந்தகம் ஒரு பலம். கெண்ணிய நிறைக்கோர் - அதன் எடைக்கு, கெஞ்சா விலை ரசம் - கஞ்சா இலைச்சாறு, கெழுமுத்தொடி விடு - மூன்று பலம் சேர்த்து, கெடுவிரு நாளரை - இரண்டு நாட்கள் அரைத்து, கெல்லிக் கிழங்கு நீர் - கெல்லிக் கிழங்குச் சாறுவிட்டு, கெடுவிரு நாளரை - இரண்டு நாள் அரைத்து, கெட்டியாய் வில்லை செய் - அழுத்தமுள்ள வில்லைகளாகச் செய்து, கெவினமதாகி - கவனமாக, கெம்பெனு மாதபம் - செந்நிறச் சூரிய, கெதியினி நாலு நாள் - ஒளியில் நான்கு நாள், கெழும உலர்ந்த பின் - நன்ருக உலர்ந்த பின்பு, கெவுளி யெச்சத்தில் - கெவுளி யெச்சத்திற்கு, கெளுத்தி நெய் விட்டரை - கெளுத்தி மீன் நெய் விட்டரைத்து,

கெவியெனக் குகை செய் - குகை செய்து, கெத்திகை யென்னவை - கத்தியைப்பாதுகாப்பாகவைப்பது போன்றுவை, கெவித்திடு சீலை மண் - சுற்றிச் சீலை மண் செய்து, கெடுவிறு நாலு நாள்-எட்டு நாள், கெலிக்க உலர்ந்த பின் - நன்றாக உலர்ந்த பின்பு, கெசமல முட்டையில் - கஜ எருவில், கெச வுயரத்தினிற் - ஒரு கெஜ உயரத்தில், கெச புடமிட்டெடு - கெஜபுடம் வைத்தெடுத்து, கெசகனமெனவே கெண்ணியமாகிய - உயர்வு பெற்றுள்ள, கெந்தக அடலையை - கெந்தக பற்பத்தை, கெங்கையிலுண்டிட - நீரில் உட்கொள்ள, கெசத் திமிரலறும் - திமிருடன் கூடிய கஜ சருமக் குட்டம் தீரும், கெடி நெய்யிலுண்டிட - மணமுள்ள நெய்யிற் கொள்ள, கெர்ச்சனை வலி போம் - சப்தத்துடன் கூடிய வலி நீங்கும், கெந்த வீரசத்திலுண் - கெந்த வீரசத்திலுண்டிட, கெண்டி மேகங் கெடும் - மேக நோய் நீங்கும், கெவுளி பாத்திரையிலுண் - கெவுளி பாத்திரையிலுண்ண, கெத்திப் பரந்தை போம்-.........,கௌரி பானத்திலுண்- இளநீரிலுண்ண, கெருவ உன்மத்த நோய் - ஆங்காரத்தை உண்டு பண்ணுகின்ற பைத்திய நோய், கெருடன் முன்பணியென - கெருடனைக் கண்ட பாம்பைப் போன்று, கெட்டு முறிந்திடும் - நோய் நலிந்து நீங்கிவிடும், கெசவந்தனையிலுண் - யானை நெருஞ்சிச் சாற்றில் உண்ண, கெர்ப்ப விப்புருதி போம் - கெர்ப்ப விப்புருதி நோய் நீங்கும், கெஜானனன் பத்திரக் கெழுமுரசத்திலுண்-அறுகன் சாற்றிலுண்ண, கெக்கலி கொட்டு நோய் - கெக்கலிப்பைக்கொடுக்கின்ற நோய்களின், கெர்ச்சிப்பறுமே - வேகம் நீங்கும், கெண்ணிய வெண்ணெயிற் - வெண்ணெயில், கெடுவுற வுண்டிடிற் - தீரும் நாள் வரை உண்ண, கெட்டமேகப்புண் நோய் - துர் நடத்தையினால் உண்டாகிய புண்ணோய், கெட்டிடத்தேறுமே - கெட்டு உடல் தேறும், கெதிதரு சருக்கரை கண்டினில் - கற்கண்டில், உண்டிட - உண்ண, கெலித்துவருசுர - அதிசுரம், கெலிப்பெலாம் தீரும் - வேகம் தீரும், கெழுமுலைப்பாலினிற் - முலைப்பாலில், கெடுவுற - உண்டிட - தீரும் நாள்வரை உண்ண, கெஞ்சுகப அனலக் கெச்ச நோயறுமே - கப அனல் நோய் நீங்கும், கெணிக்கப்படு பொருட் கெந்தக வடலையே - மேற்கூறப்பட்ட நோய்களுக் கெல்லாம் கந்தக பற்பமே மருந்தாம்.

கெந்தக பற்பம் செய் முறை

சுத்தி செய்யப்பட்ட கந்தகம் ஒருபலம் எடுத்துக் கொள்ள வேண்டும். அதற்கு மூன்று பலம் கஞ்சா இலைச்சாறு சேர்த்து இரண்டு நாள் அரைத்து கெல்லிக்கிழங்குச்சாறு விட்டு இரண்டு நாள் மேலும் அரைத்து அழுத்தமான பில்லைகள் செய்து எட்டு நாள் வெயிலில் உலரவைத்துப் பின் அதை கெவுளியெச்சத்திற்கு

கெளுத்தி மீன் நெய் விட்டு அரைத்துக் குகை செய்து அதற்குள் பில்லைகளை வைத்து மூடி அதைச் சுற்றிச் சீலை மண் செய்து எட்டு நாள் உலரவைத்துப் பின்பு அதை யானை எருவில் கெஜபுடமிட்டு எடுத்துப் பொடித்துக் கொள்ளவும்.

அனுபானமும் பிணி நீக்கமும் :-

அளவுடன் நீரில் கொள்ள திமிருடன் கூடிய கஜசருமக்குட்டம் தீரும். நெய்யிற் கொள்ள சப்தத்துடன் கூடிய வலி நீங்கும். கெந்த வீரசத்திலுண்ண மேக நோய் நீங்கும். கெவுளி பாத்திரையி லுண்ண கெத்திப்பரந்தை போம். இளநீரில் உண்ண உன் மத்த நோய் நீங்கும். அறுகன் சாற்றிலுண்ண கொட்டு நோய் நீங்கும். வெண்ணெயிற் கொள்ள கெட்ட மேகப்புண்ணேய் தீரும். சர்க் கரை கற்கண்டில் உண்ண அதிசுரம் நீங்கும். முலைப்பாலில் உண்ண கப அனலம் தீரும்.

கேச ரக்ஷண்ய மை

கே

கேசரக்ஷண்யமையைமா கேசரக்ஷண்யமென்பரே
கேளிதைமுறைப்படி கேடின்மையாமைந்தனே
கேகயக் கொன்றைவேர் கேரளபுல்வேர்
கேடகப்புளிவேர் கேப்பைப் பயிர்வேர்
கேளெனத்தழைத்திடு கேள்வேர் நெல்லிவேர்
கேழிலி நுணுவேர் கேசவத்தார் வேர்
கேத்தரத்தாவேர் கே்ஷதமில்வேரெலாங்
கேடிலாக்கடத்திற் கேணிப்புதுப்புனல்
கேவலமிட்டதிற் கேழ்கிளர்வன்னியைக்
கேண்மையின் மூட்டியே கேளிருஜாமம்
கேதையிலெரித்தே கேடையக்கடத்திலக்
கேடில் நீரிறுத்ததிற் கேதகை மல்லிகை
கேசம் முல்லை கேதன மல்லிகை
கேதமில் பாடலி கேடில்மாலதிமலர்க்
கேசரத்துடனே கேளறு நாரி
கேள் முளைப்பூ கேசரருணச்சீ

கேளிப்புனுகு நெய் கேத்திரமிளகிவை
கேடுறப்பொடித்ததைக் கேட்டநாள் முதனுட்
கேட்டையே யொழித்துக் கேத்திரபாலனைக்
கேட்டிட வணங்கிக் கேத்திரப் பொருளெனக்
கேதமொன்றின்றி கேடில்புதுக்கடங்
கேண்மையி லெரித்ததைக் கேண்மையிற் புதுமையாய்க்
கேண்மைசெய் தம்மையைக் கேழ்கிளர்பரணியிற்
கேந்திரித்ததனைக் கேசந்தனக்கிடக்
கேகயத்திற்கெனக் கேதனமுகிலெனக்
கேசவனென நலக் கேழ்மணி வண்ணமுங்
கேள்வனப்புந்தருங் கேடனைப்பிணியெனுங்
கேடலைப்பிணிகெடுங் கேணி போனயனமுங்
கேள்வனப்புறுமே கேள்வனப்புறுமே
கேசரக்ஷணையின் கேண்மையிதாமே.

கேச ரக்ஷண்யமையை - கேச ரக்ஷண்யமையை, மா - பெரிய, கேசரக்ஷண்யமென்பரே - கேசத்தைப் பாதுகாக்கும் என்பர், கேடின்மையாம் - (கேடு + இன்மை + ஆம்) கேடில்லை, மைந்தனே - மகனே, முறைப்படி - முறையாக, இதைக்கேள் - கேட்பாயாக, கேகயம் - மயில், கொன்றைவேர் - கொன்றைவேர், கேரளப்புல் வேர் - கேரளப்புல் வேர், கேடகப்புளிவேர் - மலைப்புளிவேர், கேப்பைப்பயிர்வேர் - கேப்பைப்பயிர் வேர், கேளெனத்தழைத்திடு - உறவினர் போன்று திளைத்திடும், கேள்வேர்-தென்னைவேர், நெல்லி வேர் - நெல்லி வேர், கேழிலி - (கேழ் + இலி) உவமை இல்லாத, நுணு - நுணுவேர், கேசவத்தார் வேர் - மகிழ்வேர், கேத்தரத்தாவேர் - ஆச்சாமரவேர், கேதமில் - குற்றமில்லாத, வேரெலாம் - வேர்களையெல்லாம், கேடிலா - குற்றமற்ற, கடத்தில் - பானையில், கேணிப்புதுப்புனல் - கிணற்று நீரை, கேவலமிட்டதில் - தேவையான அளவு விட்டு, கேழ்கிளர்வன்னியை - நெருப்பை, கேண்மையின் மூட்டியே - மூட்டி, கேளிரு சாமம் - இரு சாமம், கேதையிலெரித்தே - எரித்து, கேடையக் கடத்தில் - அக்குற்றமற்ற பாத்திரத்தில், கேடில் நீரிறுத்து அதில் - குற்றமற்ற நீரை இறுத்து அதில், கேதகை - தாழம்பூ, மல்லிகை - மல்லிகைப் பூ, கேசம் - மகிழம்பூ, முல்லை - முல்லைப்பூ, கேதனமல்லிகை - கொடிமல்லிகைப் பூ, கேதமில் பாடலி - குற்றமில்லாத பாதிரி, கேடில்

மாலதி மலர் - குற்ற மற்ற வசந்த மல்லிகை, கேசரத் துடனே - அப்படியே, கேளறு நாரி - குற்றமற்ற நன்னரி, கேண் முளைப்பூ - மூங்கிற்பூ, கேசருணம் - எலுமிச்சம்பழம், சீகே ளிப்புனுகு - மத நீரால் உண்டாகக் கூடிய புனுகு (எனவும் கொள் ளலாம்), நெய் - நெய், கேத்திரமிளகு - உயர்ந்தமிளகு, இவை - இவைகளை, கேடுற-சேடு இல்லாமல், பொடித்ததை - பொடியாக்கி, கேட்டநாள் முதனள் - செய்வதற்கு முந்திய நாள், கேட்டையே யொழித்து - கெடுதல்களை நீக்கி (கோதுமுதலியன போக்கி), கேத் திரபாலனை - இறைவனை, கேட்டிட வணங்கி - வணங்கி, கேத்திரப் பொருளென - முக்கிய பொருளென்றெண்ணி, கேதமொன்றின்றி - குற்றம் ஒன்றும் இல்லாமல், கேடில் புதுக்கடம் - குற்றமற்ற புதுப் பானையில், கேண்மையில் - தீங்கில்லாமல், எரித்ததை - அதை எரித்து, கேண்மையிற் புதுமையாய் - புதுமையாக (புது + மை எனக் கொண்டு பொருள் கொள்க), கேண்மை செய்த - செய்யப் பட்ட, அ-அந்த, மையை - மையை, கேழ்கிளர்பரணியில்-பரணியில் கொண்டு,கேந்திரித்ததனை - கடவுளைத் தொழுது, கேசந்தனக்கிட - கேசத்திற்குத்தடவ, கேகயத்திற்கென - மயில் தோகைபோன்றும், கேதனமுகிலென-கருமேகம் என்று சொல்லும் படியாகவும், கேசவ னெனக் கேழ் மணிவண்ணமும் - கார் முகில் வண்ணனாகிய திருமா லின் நிறத்தைப் போன்றும், கேள்வனப்பும் தரும் - அழகைத் தரும், கேடளைப் பிணியெனும்-கெடுதலைச் செய்யும் மயிர் உதிர்ப்பிணியும், கேடலைப்பிணி - சுருட்டை விழும் உரோம வியாதியும், கெடும் நீங்கும், கேணிபோநயனமும் - குழிவிழுந்துள்ள கண்களுக்கு, கேள் வனப்புறுமே - அழகையும் கொடுக்கும், கேச ரக்ஷணையின் - கேச ரக்ஷணையின், கேண்மையிதாமே - குணம் இதுவேயாகும்.

கேச ரக்ஷண்யமை செய்முறை

தேவையான சரக்குகள் :- *1.* மயிற்கொன்றை வேர் *2.* கேர ளப் புல்வேர் *3.* மலைப்புளிவேர் *4.* கேப்பைப்பயிர்வேர் *5.* தென்னை வேர் *6.* நெல்லி வேர் *7.* நுணா வேர் *8.* மகிழ் வேர் *9.* ஆச்சாமர வேர் *10.* தாழம்பூ *11.* மல்லிகைப்பூ *12.* மகிழம்பூ *13.* முல்லைப்பூ *14.* கொடிமல்லிகைப்பூ *15.* பாதிரிப்பூ *16.* வசந்த மல்லிகைப்பூ *17.* மூங்கிற்பூ *18.* எலுமிச்சம் பழம் *19.* புனுகு *20.* நெய் *21.* மிளகு.

செய்முறை :- மேற் சொல்லப்பட்ட ஒன்பது வகை வேர்களை யும் குற்றமற எடுத்துப்பானையில் தேவையான அளவுக்குக்கிணற்று நீர் விட்டு அதில் அவ்வேர்களைத் தரித்துப் போட்டு இருசாமம் வரை நன்ருக எரித்துக் குடிநீராக்க வேண்டும். பின் அந்நீரைக் குற்றமில்லாத பாத்திரத்தில் இறுத்துக் கொள்ள வேண்டும்.

தாழம்பூ, மல்லிகைப்பூ, மகிழம்பூ, முல்லைப்பூ, கொடிமல்லிகைப்பூ, பாதிரிப்பூ, வசந்தமல்லிகைப்பூ, மூங்கிற் பூ, மிளகு ஆகிய சரக்கு களை நன்கு உலர்த்திப் பொடி செய்துகொண்டு அப்பொடியையும் எலுமிச்சம்பழச்சாறு, புனுகு, நெய் ஆகியவைகளையும் மருந்து செய் வதற்கு முதல் நாள் எடுத்து அதனுடைய குறைபாடுகளை நீக்கிச் சுத்தம் செய்து குடி நீரில் போட்டு எரித்துப் புதுமையாகச் செய்து எடுத்துப் பரணியில் வைத்துக் கொண்டு கடவுளைத் தொழுது தலையில் தடவி வர கருமேகம் போன்று முடிவளரும்.

தீரும் நோய்கள் :- முடி உதிரல், சுருள் நோய், நரை, செம் பட்டை, முடிபிளத்தல் முதலியன போம்.

கொன்றைக் கிருதம்

கொ

கொன்றைக்கிருதந்தனைச் செய்துசொண்டெப் படியுமினிவாழி
கொன்றைவேரிருபால் கொண்மறுவேர்சரி
கொஞ்சிபனசவேர் கொண்டைவேர்கணிவேர்
கொம்பர்வேர் நுணுவேர் கொட்டிவேர் வாழை வேர்
கொக்குவேர் நரத்தைவேர் கொங்குவேர் கரந்தை வேர்
கொல்லிவேர் பணிலவேர் கொட்டைக்கரந்தைவேர்
கொழுஞ்சிவேர் மணிவேர் கொவ்வைவேர் புன்னைவேர்
கொறியுணுமூலிவேர் கொடிவேலிவேர் மயிற்
கொன்றைவேர்:வகைகள் கொன்றைக் கிணையெனக்
கொண்முறையுலர்த்திக் கொட்டியிடித்ததைக்
கொட்டியப்பொடியொடு கொப்பரை கறிகணை
கொட்டை ஏலங்கனல் கொங்குகிராம்புரை
கொந்தளமிவையுநேர் கொட்டியிடித்ததைக்
கொட்டியப்பொடியொடு கொட்டியத்துப்பிணை
கொட்டியத்துப்பிணை கொஞ்சமெனச் செயா
கொஞ்ச மெனத்தழல் கொளுவியிறக்கிய
கொழுங்கரான கொடையுறு பொருளாங்
கொன்றைக் கிருதத்தைக் கொண்டு முறையுண்டிடக்

கொண்டமேகப்பிணி கொச்சைநோய்கயநோய்
கொல்லுநோய் சொறிநோய் கொந்த நோய்சுருக்கு நோய்
கொங்கைபாலிநோய் கொலேநோய் வயிற்று நோய்
கொள்ளிச்சிலந்திநோய் கொடுவரியைக்காண்
கொறியெனப்பறந்திடுங் கொங்கணரிதனையே
கொண்டுரைத்தனரே.

கொன்றைக்கிருதந்தனே - கொன்றைக்கிருதத்தினே, செய்து கொண்டு - செய்து கொண்டு, எப்படியுமினிவாழி - இனி எப்படியும் வாழலாம், கொன்றை வேர் இருபால்-இரண்டுபங்கு கொன்றை வேர், கொண்மறு வேர் - மறு வேர், கொஞ்சி - கொஞ்சி வேர், பனச வேர் - பலா வேர், கொண்டை வேர் - வெட்டி வேர், கணி - வேங்கை வேர், கொம்பர் வேர் - கொம்பர் வேர், நுணு - நுணு வேர், கொட்டிவேர் - கொட்டிவேர், வாழை - வாழைவேர், கொக்கு வேர் - மா வேர், நரத்தை வேர் - நாரத்தை வேர், கொங்கு வேர் - கோங்கு வேர், கரந்தை வேர் - சிவகரந்தைவேர், கொல்லிவேர் - கொல்லி வேர், பணில வேர் - சங்கம் வேர், கொட்டைக் கரந்தை வேர் - கொட்டைக் கரந்தை வேர், கொழுஞ்சி வேர் - கொழுஞ்சி வேர், மணி வேர் - உத்தாமணி வேர், கொவ்வை வேர் - கோவை வேர், புன்னேவேர் - புன்னேவேர், கொறியுணு மூலி வேர் - ஆடு தீண்டாப்பாளே வேர், கொடி வேலி வேர் - கொடி வேலி வேர், மயிற் கொன்றை வேர் - மயிற்கொன்றை வேர், வகைகள் - சொல்லப்பட்ட இந்த வேர்களே யெல்லாம், கொன்றைக்கிணேயென - கொன்றைக்குச் சமமாக வெடுத்து, கொண்முறையுலர்த்தி - நன்ருக உலரவைத்து, கொட்டியிடித்ததை - ஒன்ருகச் சேர்த்து இடித்து, கொட்டிய பொடியொடு - சேர்த்த பொடியுடன், கொப்பரை - கொப்பரைத் தேங்காய், கறி - மிளகு, கணே - திப்பிலி, கொட்டை - சுக்கு, ஏலம் - ஏலம், கனல் - சித்திரமூலம், கொங்கு - கோங்கு, கிராம்பு - கிராம்பு, உரை - இலவங்கப் பட்டை, கொந்தளம் - கொந்தளம், நேர் - சமமாக, கொட்டி இடித்ததை - தூளாக்கி, கொட்டிய பொடியொடு - சேர்க்கப்பட்ட பொடியுடன், கொட்டியத்துப் பிணே (கொட்டியத்து + பிணே) கொட்டிய துப்பிணே - பசுவின் நெய் இருபங்கு, கொஞ்சமெனச்செய - சேர்த்து, கொஞ்சமெனத் தழல் - சிறு தீயில், கொழுவி - காய்ச்சி, இறக்கிய - இறக்கப்பட்ட, கொழுநிகரான கொடையுறு பொருளாம் - நோயைச் சிதைத்து நன்மையைக் கொடுக்கக் கூடிய பொருளாகிய, கொன்றைக் கிருதத்தைக் கொண்டு - கொன்றைக் கிருதத்தைக் கொண்டு, முறையுண்டிட -

முறையாகவுண்ண, கொண்ட மேகப்பிணி - மேகப்பிணி, கொச்சை நோய் - கொச்சை நோய், கயநோய் - கயநோய், கொல்லு நோய் - கொல்லுகின்ற பிணிகள், சொறிநோய் - சொறி நோய், கொந்து நோய் - கொந்த நோய், சுருக்கு நோய் - நீர்ச்சுருக்கு நோய், கொங்கைபாலி நோய்-நகிலத்தைப் பற்றியுள்ள நோய்கள், கொலைநோய் - வயிற்று நோய், கொள்ளிச் சிலந்திநோய் - எரிச்சலைக் கொடுக்கும் கட்டிகள், கொடுவரியைக் காண் - புலியைக் கண்ட, கொறியெனப் பறந்திடும் - ஆட்டுக் கூட்டம் போன்று நடுங்கி ஓடிவிடும், கொங்கணரிதையே - கொங்கணதேவர் இதனையே, கொண்டுரைத்தனரே - கூறியுள்ளார்.

செய்முறை :

கொன்றை வேர் இரு பங்கும் வெட்டி வேர், மறு வேர், கொஞ்சி வேர், பலா வேர், வேங்கை வேர், கொம்பர் வேர், மா வேர், நாரத்தை வேர், கோங்கு வேர், சிவகரந்தை வேர், கொல்லி வேர், சங்கம் வேர், கொட்டைக் கரந்தைவேர், கொழுஞ்சி வேர், உத்தாமணி வேர், கோவை வேர், புன்னை வேர், ஆடு தீண்டாப்பாளை வேர், கொடிவேலி வேர், மயிற் கொன்றை வேர். ஆகிய இவ்வேர்களை யெல்லாம் சொல்லப்பட்ட கொன்றை வேருக்குச் சம எடை எடுத்துக் கொண்டு நன்ருக உலர வைத்து இடித்துப் பொடியாக்கித் தேவையான அளவு நீர்விட்டுக் குடிநீரிட்டு அடுப்பேற்றி கொப்பரைத் தேங்காய், மிளகு, திப்பிலி, சுக்கு, ஏலம், சித்திர மூலம், கோங்கு, கிராம்பு, இலவங்கப்பட்டை, கொந்தளம் ஆகிய கற்கத் திரவியங்களை அரைத்துக் கலந்து, இரு பங்கு நெய் சேர்த்து கடுகு பதத்தில் காய்ச்சி எடுக்க வேண்டும்.

தீரும் நோய்கள் :

மேகப் பிணி, கொச்சை நோய், கயநோய், சொறி நோய், கொந்த நோய், நீர்ச்சுருக்கு நோய், கொங்கையைப் பற்றிய நோய்கள், வயிற்று நோய், கொள்ளிச் சிலந்தி நோய் முதலியன.

கோடாசலக் குளிகை

கோ

கோடாசலமாத்திரையுடற்கு கோடாசல மாத்திரையாமே
கோரோசமுக்கடுகுபலை கோட்டமரிதாரம்பவளம்
கோவைநிலப்பனை கோவைமாபிச்சி

கோரகையிவைகள்வேர் கோளொரு நிறையுடன்
கோமயத்துலர்ந்தபின் கோணுதரைத்திடிற்
கோங்கிரசத்திஞல் கோளிருநாளரை
கோபுரந்தாங்கி நீர் கோளிருநாளே
கோலத்தறலிஞற் கோளிருநாளே
கோல மூத்திரத்திஞற் கோளிருநாளே
கோழிக்கருவிஞற் கோளிருநாளே
கோகிலக்கருவிஞற் கோளிருநாளே
கோலிமாத்திரையதைக் கோடியப்பாலே
கோமணிவெயிலின்முன் கோறிவைத்துலர்த்திக்
கோவிலரைத்துணக் கோவிஃனயறுமே
கோசலத்துரைத்துணக் கோட்டியுப்புசமறும்
கோச்சுதையிலுணக் கோசப்புற்றறும்
கோவைரசத்துணக் கோவை நீர்க்கட்டறும்
கோரைச்சாற்றினிலுணக் கோமாய் வலியறும்
கோது கன்னலிலுணக் கோணச்சிலந்திபோம்
கோறுதேனிற் கொளமகோதரமறுமே
கோடைரசத்திலுண் கோர நீரிழிவறும்
கோமய நீரிலுண் கோட்டாஃலகளறும்
கோலவிளா நீரிலுண் கோப்பருப்புண்ணறும்
கோவெற்றிஃலயிலுண் கோட்டான் வலியறும்
கோகனகத்திலுண் கோளக்கநோய்போம்
கோரக்கர் முதலிஞேர் கோடியதிஃதே.

கோடாசல மாத்திரை - கோடாசல மாத்திரையானது, உடற்கு - உடலுக்கு, கோடு - கொம்பைப் போலவும், அசலம் - மஃலயைப் போலவும், மாத்திரை ஆம் - பேரஃல போலவும் நோய்கஃள அடித்துக் கொண்டு போம், கோரோசம் - கோரோசஃன, முக்கடு - சுக்கு, மிளகு, திப்பிலி, முப்பஃல - கடுக்காய், நெல்லிக்காய் - தான்றிக்காய், கோட்டம் - கோஷ்டம், அரிதாரம் - தாளகம், பவளம் - பவளம், கோவை - கோவை, நிலப்பஃன - நிலப்பஃன, கோவை - இலந்தை, மா - தும்பை, பிச்சி - பிச்சிப்பூ, கோரகை - கஞ்சா, இவைகள் வேர் - இவைகளின் வேர்கள், கோள் - கொள்ளுகின்ற,

ஒரு நிறையுடன் - சரியளவு எடுத்து, கோமயத்துலர்ந்த பின் - சாணிநீர் விட்டு ஊறியுலர்ந்தபின், கோணுதரைத்திடில்-முறைதவறு மல் அரைத்தும், கோங்கு - கோங்கு இரசத்தில், கோளிருநாளரை - இரண்டு நாளரைத்து, கோபுரந்தாங்கி நீர் கோளிருநாளே - கோபுரந்தாங்கி இலைச் சாற்றிலும் இரண்டு நாளரைத்து, கோலத்தறலினல் கோளிருநாளே - அங்கோலமென்று சொல்லப் பட்ட அழிஞ்சில் இரசத்திலும் இரண்டு நாளரைத்து, கோல மூத்திரத்தினல் கோளிருநாளே - பன்றியின் மூத்திரத்திலும் இரண்டு நாளரைத்து, கோழிக்கருவினல் கோளிருநாளே - கோழி முட்டைக்கருவினலும் இரண்டு நாள் அரைத்து, கோகிலக்கருவி னல் கோளிரு நாளே - குயில் முட்டைக்கருவினலும் இரண்டு நாள ரைத்து, மாத்திரை கோலி - மாத்திரையாக உருட்டி, அதைக் கோடி - அதைக்கொள்ளுவாய், அப்பால் - பிறகு, கோமணி - இரத் தினம் போல் சொலிக்கும், வெயிலின் முன் - வெயில் முன்பாய், கோறி - விரும்பி, வைத்துலர்த்தி - வைத்துக்காயவைத்து, கோவி லரைத்துண - பசும்பாலில் இழைத்து உண்ண, கோவினையறும் - வாத நோய் தீரும், கோசலம் - பசுநீரில், உரைத்து உண - இழைத் தருந்த, கோட்டி - வளைகின்ற, உப்புசம் அறும் - மகோதரம் நீங்கும் (அதாவது வில் மகோதரம் என்று பெற்றும்), கோச்சுதை யில் உண - பசுவின் பாலில் அருந்த, கோசப்புற்றறும் - இலிங்கப் புற்று நீங்கும், கோவை ரசத்துண - கோவை இலைச்சாற்றில் அருந்த, கோவை நீர்க்கட்டறும் - (இடைநிலை தீபமாகக் கொண்டு பொருளுரைக்கில்) நீர்க்கோவையும் நீர்க்கட்டும் நீங்கும், கோரைச் சாற்றினில் உண - முத்தக்காசு ரசத்தில் உண்ண, கோமாய் வலி யறும் - உயிர் மயக்க மடைகின்ற வலிநீங்கும், கோது - சீவியெடுக் கின்ற, கன்னல் - கரும்புச் சாற்றில் உண்ண, கோணச்சிலந்தி போம் - மூக்குச் சிலந்தி தீரும், கோறு தேனில் கொள - (ஐயத் தைக்) கொல்லுகின்ற தேனில் கொள்ள, மகோதரம் அறும் - பெரு வயிறு நீங்கும், கோடை - செங்காந்தள், ரசத்தில் உண - சாற்றில் உண்ண, கோர நீரிழிவறும் - துன்பத்தை விளைவிக்கின்ற நீரிழிவு நோய் நீங்கும், கோமயம் - சாணத்தின், நீரில் உண் - பாலில் உண் டால், கோட்டாலைகளறும் - துன்பத்தை விளைவிக்கின்ற நோய்கள் தீரும், கோல விளா நீரிலுண் - விளாம்பழச் சாற்றிலே உண்டால், கோப்பருப் புண்ணறும் - இராசப் பருவினல் ஏற்பட்ட புண்கள் தீரும், கோவெற்றிலையிலுண் - வெற்றிலைச் சாற்றிலுண்டால், கோட் டான் வலியறும் - கோட்டான் சிறகை அடித்துக் கொண்டால் எவ்வாறு இருக்குமோ அவ்வாறு உண்டாகின்ற வலிகள் தீரும், கோகனகத்திலுண் - தாமரைச் சாற்றிலுண்டால், கோள் அக்க நோய் போம் - பலம் பொருந்திய கண்ணோய்கள் தீரும், கோரக்கர்

முதலினோர் கோரக்கர் முதலிய சித்தர்கள், கோடியது-கொண்டது, இஃதே - இந்த கோடாசல குளிகையே யாமென்றவாறு.

சந்தனாதித் தைலம்

ச சை சௌ

சந்தனாதிப் பேர் பூண்ட சந்தனாதித் தைலங் கேண்மோ
சந்தனக்கட்டைமுப்பால் சம்புபுல் கணிகடுக்காய்
சங்குவில்விளாவால் நெல்லிசம்பிரைகளாமா வேங்கை
சலசநீலோற்பலஞ்சாய் சந்திரமைத்திரிவிராலி
சரவணமறுகுமுன்னை சரியிருபாலி வேர்கள்
சலமுறக்குடி நீர் காய்ச்சி சரிப்படவளவின் மார்க்கஞ்
சைவலங்குமரி சீதை சடைமுசுமுசுக்கை மேனீ
சதாபலைரசங்களின்னஞ் சைகையிளநீர்களன்ன
சௌரியின் கனிச்சாறூட்டிச் சரக்குகள் கோட்டமேலஞ்
சதகுப்பைகறி சுக்குகையை சசிகணை சீரகமயிர்
சக்கை முத்தக்கா சோம்பு சராசரி நிறைபொடித்துச்
சமயநேர றிந்தெரித்துச் சடுதியிற் புனுகு நாவி
சவாதுகுங்குமப் பூவிட்டுச் சயிலமாநிற மிதென்னுஞ்
சையிலிலிறக்கிப் பின்னர் சரதமோர் மதிநெற்கூட்டிற்
சசைவுறவைத்தெடுத்தே சட்டகமூர்த்திக்கிட்டுச்
சரவறபங்கித்தானஞ் சமர்த்தினிற் செய்து பத்யஞ்
சருவிடிற்குணங்களுண்டே சசிவலிதலை நோய்சராசன் வாயு
சக்குநோய் குக்கிநோய் சந்துநோய் கந்து நோய்
சரைநோய் திரைநோய் சரிநோய் வரிநோய்
சகலமுமாறு மெய் சர்ப்பசியுண்டாய்
சரித்திர மிதை நற்சரித்திரமாகி
சந்திராதித்தர் சரித்திடு நாளுஞ்
சஞ்சீவிக் கெதிர் சஞ்சீவியாமே.

சந்தன் - சந்திரகுலத்தைச் சார்ந்தவனுகிய சந்தனது, பேர் பூண்ட சந்தனுதித்தைலம் - பெயர் கொண்ட சந்தனுதித்தைலத்தை, கேண்மோ - கேட்பாயாக, சந்தனக்கட்டை முப்பால் - மூன்றுபங்கு சந்தனக் கட்டை, சம்புபுல் - சம்புபுல், கணி - பொன்னுங்காணி, கடுக்காய் - கடுக்காய், சங்கு - சங்கங்குப்பி, வில் - வில்வம், விளா - விளா, ஆல் - ஆல், நெல்லி - நெல்லி, சம்பிரை - எலுமிச்சை வேர்ப்பட்டை, களா - களா, மா - மா, வேங்கை - வேங்கை, சலசம் - தாமரை, நீலோற்பலம் - நீலோற்பலம், சாய் - கோரைக் கிழங்கு, சந்திரமைத்திரி - அல்லி, விராலி - விராலி, சரவணம் - நாணல், அறுகு - அறுகம் புல், முன்னை - முன்னை, சரி - நன்னுரி, இருபாலி வேர்கள் - வெட்டி வேர், விலாமிச்சு வேர் (ஆகிய இவ் வேர்களையிட்டு), சலமுறக்குடி நீர் காய்ச்சி - குடி நீர்காய்ச்சி, சரிப் படவளவின் - சரியளவிற்கு, மார்க்கம் - கையாந்தகரை, சைவலம் - கற்பாசி, குமரி - கற்ருழை, சீதை - பொன்னுங்காணி, சடை - சடா மாஞ்சில், முசுமுசுக்கை - முசுமுசுக்கை, மேனி - குப்பைமேனி, சதா பலை - எலுமிச்சம்பழம், ரசங்கள் - சாறுகள், இன்னம் - இன்னும், சைகை - கரிசலாங் கண்ணி, இளநீர்களன்ன - இளநீர் போன்ற வைகளும், சௌரியின் கனிச் சாறூட்டி - சௌரிப்பழரசம் விட்டு, சரக்குகள் - மேற் சரக்குகளாகிய, கோட்டம் - கோஷ்டம், ஏலம் - ஏலம், சதகுப்பை - சதகுப்பை, கறி - மிளகு, சுக்கு - சுக்கு, கையை ...., சசி - பச்சைக் கற்பூரம், கணை - திப்பிலி, சீரகம் - சீரகம், அயிர் - யானைக் காஞ்சொறி, சக்கை - பறங்கிச்சக்கை, முத்தக் காசு - கோரைக் கிழங்கு, சோம்பு - சோம்பு, சராசரி நிறை - ஒரே யளவு எடுத்து, பொடித்து - பொடித்துச் சேர்த்து, சமய நேரறிந் தெரித்து சடுதியில் - எரித்துப் பக்குவமான நேரமறிந்து வடிக்கும் பொழுது, புனுகு - புனுகு, நாவி - கஸ் தூரி, சவாது - சவ்வாது, குங்குமப்பூ இட்டு - குங்குமப் பூ சேர்த்து, சயிலமா நிறமி தென்னும் - சைலநிறமாக வந்ததும், சையிலிலிறக்கிய பின்னர் - கீழிறக்கிய பின்னர், சரதம் ஓர்மதி நெற் கூட்டிற் - கண்டிப்பாக ஒரு மாத காலத்திற்கு, நெற்குதிருக் குள், சைவுரவைத் தெடுத்து - வைத்தெடுத்து, சட்ட மூர்த்திக் கிட்டு - உடம்பிற்கும் தலைக்குமிட்டு, சரவற பங்கித்தானம் - ஸ்நானம் செய்ய, சமர்த்தினிற் செய்து - முறையாகச் செய்து, பத்யம் - பத்தியமும் இருந்தால், சருவிடிற் குணங்களுண்டே - நல்ல குணம் கிடைக்கும், சசிவலி - தோள் வலி, தலை நோய்-தலை நோய், சராசன்வாயு - சராசன்வாயு, குக்கி நோய் - குக்கி நோய், சந்து நோய் - சந்து நோய், கந்து நோய் - கந்து நோய், சரை நோய் - சரை நோய், திரைநோய் - திரைநோய், சரிநோய் வரிநோய் - சரி நோய் வரிநோய் என்று சொல்லப்பட்ட நோய்கள், சகலமுமாறும்

- எல்லாம் நீங்கும், மெய் சர்ப்பசி உண்டாம் - நல்ல பசியை உண் டாக்கும், சரித்திரமிதை நற் சரித்திரமாகி - நோயினத்தை வரலா ருக மாற்றி, சந்திராதித்தர் - சந்திர சூரியர், சரித்திடு நாளும் - உள்ள நாள் வரைக்கும், சஞ்சீவிக் கெதிர் சஞ்சீவியாமே - சாவை யொழித்து நிலையாக இருக்கச் செய்யும்.

சந்தனாதித் தைலம் செய்முறை :

செய் முறை : சந்தனக்கட்டை மூன்று பங்கு எடுத்துக் கொண்டு அதனுடன் சம்பு புல், பொன்னாங்காணி, கடுக்காய், சங் கங்குப்பி, வில்வம், விளா, ஆல், நெல்லி, எலுமிச்சை வேர்ப்பட்டை, களா, மா, வேங்கை, தாமரை, நீலோற்பலம், கோரைக்கிழங்கு, அல்லி, விராலி, நாணல், அறுகம்புல், முன்னை, நன்னாரி, வெட்டி வேர், விலாமிச்சு ஆகிய இவ்வேர்களைச் சேர்த்து நீர் விட்டுக் குடி நீராகக் காய்ச்சி எடுத்து அதில் கையாந்தகரை, கற்பாசி, கற்றாழை பொன்னாங்காணி, சடாமாஞ்சில், முசுமுசுக்கை, குப்பைமேனி, பழச்சாறு, கரிசலாங்கண்ணி ஆகியவைகளும் சௌரிப்பழரசம் ஆகியவைகளைக்குடிநீருக்கு அரைப்பங்குசேர்த்துக் கஷாயத்திற்குச் சரியெடை எண்ணெய், பால் சேர்த்து ஏலம், சத குப்பை, மிளகு, சுக்கு, பச்சைக் கற்பூரம், திப்பிலி, சீரகம், யானைக் காஞ் சொறி, பறங்கிச் சக்கை, கோரைக்கிழங்கு, சோம்பு ஆகியவைகளை ஒரே யளவு எடுத்துப் பொடித்துப் போட்டு எரித்து நன்னிறத்தில் தைல பதமாக வந்தவுடன் வடிகலசத்தில் புனுகு, கஸ்தூரி, சவ் வாது, குங்குமப்பூ முதலிய மணப்பொருள்களைச் சேர்த்து வடித் துப் பின் ஒரு மாதம் நெற்குதிருக்குள் வைத்தெடுத்து உபயோ கிக்க வேண்டும்.

தீரும் நோய்கள் : தோள்வலி, தலைநோய், சராசன் வாயு, சக்கு நோய், குக்கி நோய், சரி நோய், வரி நோய் முதலிய நோய் கள் நீங்கும். நல்ல பசியை உண்டாக்கும்.

சாம்பிராணிப்பூ

சா

சாம்பிராணிப்பூவணைய சாம்பிராணிப்பூவிஃதே
சாம்பிராணி முப்பகுதி சாபத்திர முக்கடுகுபலை
சாதிக்காய் வால்மிளகு துடிசாரைப்பருப்பு கிராம்புபுச்சி
சாயவேரதிங்கமரமஞ்சள் சாலியனைத்து மிருபஃதே
சாலநொறுக்கிமதித்தறலிற் சாலிற் கலக்கிமேல்மூடி

சாரமென்முடிப்புழை வழியே சாமந்திப்பூகொடி வேலி
சாம்புசிவனுர் வென்றிரசம் சாதுர்ப்பாதியடைவிறுத்துச்
சாரவதன் மேல் வகளைகவர் சாமர்த்தியத்தாற் புரிந்ததன் மேற்
சாகப்புழுக்கையஃதெனினுஞ் சாகப்புழுக்கையெருவிருந்தை
சாதியடிவேர் கோத்திரத்தோல் சாலியளிப்படி நிறைத்து
சாக்ஷிதெய்வத்தினையிருத்திச் சாடத்திறக்கிற் புகையெழுப்பி
சானித்திய முத்தின மொழித்துச் சாரப்புடத்தைத் திறந் தெடுக்க
சாயுச்சியரூபப் பொருளாஞ் சாம்பிராணிப் பூவென்னும்
சார்தூலத்தைப் பிணிக்குழுவாஞ் சாரங்கத்தின்மேலிடற் போல்
சாற்றவிருந்தைரசத்திலுணிற் சாலேசுரம்போம ஜீரணம்போம்
சாணிப்பாலிலுணிற் குன்மஞ் சாபவாதசுரமகலும்
சாராமதுவிலுணிற் பல்லே சாட்டிய வினை களறுமிக்குச்
சாற்றிலுணப் போமதுமேகஞ் சான்னிகவேதனைகளிலிவை
சாவற்றுவசர் குறுமுனிக்குச் சாலவுபதேசித்ததிதே.

சாம்பிராணி - மரணத்துடன் போராடிக் கொண்டிருக்கின்ற உயிரானது
பூவணைய - பூவுலகில்வந்து சேர
சாம்பிராணிப்பூவிஃதே - சாம்பிராணிப்பதங்க மிதுவாகும்
சாபத்திரம் - சாதிப்பத்திரி
புச்சி - புனுகு
சாயவேர் - இம்பூரல் வேர்
அதிங்கம் - அதிமதுரம்
சாலி - புனுகுச்சட்டம்
சாம்புசிவனுர் வென்றிரசம் - தும்பை ரசம்
சாதுர்ப்பாதி - 2 (நான்கில்பாதி)
அடைவிறுத்து - இருக்கச் செய்து
சாகப் புழுக்கை - வெள்ளாட்டுப்புழுக்கை
விருந்தை - துளசி
சார்தூலம் - புலி
சாரங்கம் - மான்

செய் முறை :-

சாம்பிராணி 3 பங்கு, சாதிப்பத்திரி, சுக்கு, மிளகு, திப்பிலி கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், சாதிக்காய், வால்மிளகு, ஏலரிசி, சாரைப் பருப்பு, கிராம்பு, புனுகு, இம்பூறல் வேர், அதி மதுரம், மரமஞ்சள், புனுகுச்சட்டம் இவைகள் வகைக்கு ஒரு பங்கு, ஆகக்கூடி 20 பங்காகும். இவைகளில் புனுகை நீக்கி மற்றவைகளை நன்ருக இடித்துக் கலந்து புனுகைச் சேர்த்து ஒரு பெரிய மண் பாண்டத்திலிட்டு, அதற்கு வாய் பொருந்தும்படியான மற்றோர் சட்டிக்குச் சாமந்தி இலை, கொடி வேலி இலை, தும்பை இலை இவை களின் சாற்றின் கூட்டுத் தொகை பத்துப் பங்கைக் கொண்டு மேற் சட்டியின் உட்புறம் பூசிப்பூசி உலர்த்திய பின் பெரிய சட்டிக்குப் பொருத்தி, பொருத்துவாய்க்கு வன்மையாய்ச் சீலை மண் செய்து அடுப்பிலிட்டு அடுப்பினுள் உலர்ந்த ஆட்டுப் புழுக்கை, காட்டெரு, உமி, வேர்ப்பட்டைகள் இவைகளுள் ஏதேனும் ஒன்றினைப் போட் டுத் தீயிட்டுத் தானுகவே பற்றி எரிந்து அடங்கி ஒரு நாள் ஆன பின், சட்டி அசையாமற்படிச் சீலையை நீக்கி மேற்சட்டியைச் சரி வாகச் சாய்த்து எடுத்துப் பார்க்க அதில் சாம்பிராணிப் பூ படிந்து இருக்கும். அதனை நோய்க்குத் தக்கவாறு அளவிட்டுத் துளசிச் சாற்றில் கொடுக்கச் சாலேசுரமும் அசீரணமும் போகும். சாணிப்பாலில் கொடுக்கக் குன்மமும் வாத சுரமும் தீரும். தேனி லீய வல்லையும், கொடும்பிணிகளும் தீரும். கரும்புச் சாற்றில் கொடுக்க நீரிழிவு தீரும். சன்னிக்குக் கள்ளியிலைச் சாற்றில் கொடுக்கப் போகும்.

சிந்தூரத் தொகை

சி

சிந்தூரத்தொகையமுதம் சிந்தூரத்தொகை கேண்மோ
சிந்தையுறமலினமறும் சிவபீசமாத லையால்
சிந்துவினலிருபகலிற் சிவப்பாகுந்தேவியுரஞ்
சிவதைதழுதாழையினுற் சிந்தூரமாந்தாம் பிரமும்

குறிப்பு : சாம்பிராணிப் பூ வென்பதன் பொருள் சன்னிநோயினல் உண்டாகும் சாவிலிருந்து நீக்கி வாழச் செய்யலாம். சாமர்த் தியத்தால் புரி என்றதில் இதனைச் செய்வதற்கு அறிவைக் கொண்டு செய்தால் மட்டுமே மருந்தைப் பெற முடியுமென வறிக.

சிந்துவாரத்தறலாற் சிறுகீரையாற்றுவராம்
சிலையரனுர் வரப்புனலாற் சிந்தூரமாமயமும்
சித்திரமூலத்தறலாற் சித்திரத்தாற் பாடலமாஞ்
சிட்டவங்கமரிதகியிற் சிவனுமங்காரகநிறமே
சித்தர் புகழிரசிதமுஞ் சிந்துமரையாற் சேதாம்
சிக்கனற் காந்தமது சிங்கமழைபணிமழையாற்
சித்திரபானுவை நிகராஞ் சிறிதறிந்த மருமமினிச்
சிறிதினமுநேருமெனிற் சினமகன்ருராலறிமின்
சிக்கறவிப்படியுரைத்த சித்தூ ரத்தின்கரவெனினுஞ்
சித்திக்குமுறைபுரிதல் சிட்டையார் கைமுறைகள்
சிலிமுகவேகத்திறல் போற் சித்திரகாயத்திறல் போற்
சிற்பர் தொழிற்கை முறை போற் சிற்ருெழின்மை பெருந்தொழின்மை
சித்தமொரு மித்துவசிசித்தர் மருமத்தொழிலே
சிந்து வடிவான சுதைச் சிந்து சயனத்தவர் போற்
சிந்து வினைக் கைமுறைக் கசிந்துணர வெளியாமே
சிங்க மதி கன்னிமதி சிலைத்திங்கட்குடமாசஞ்
சித்திரைமாதமுமாகும் சித்தியுரு தேனையவை
சிகியான பேர்புனைந்த சிகண்டியெனு நற்சாதிச்
சிகாவளத்தின் முறை பிறழாச் சினைப்பார்ப்பினதராகச்
சிதைத்திடுதலரைத்திடுதல் சிமிழ்த்திடுதல் புடமான
சிகிக்கிடுதலிவை நான்குஞ் சிறப்பிடுதல் தப்பாமற்
சிரத்திடுதற் சிந்தூரச்சிவப்பிடுமாறவைமாதே.

சிந்தூரத் தொகை - சிந்தூரங்களின் தொகையானது, அமுதம் - அமுதம் போன்றது, சிந்தூரம் - யானையின், தொகை - கூட்டம் போன்றது, கேண்மோ - கேட்பாயாக, சிந்தையுற மலின மறு - சுத்தி செய்யப்பட்ட, சிவபீசம் - இரசம், ஆதலையால் - குட்டைக் காட்டாமணக்கினுல், சிந்துவினுல் - நொச்சி, இரு பகலில் - இரண்டு பகலில், சிவப்பாகும் - செந்தூரமாகும், தேவியுரம் - கந்தகம், சிவதை தழுதாழையினுல் - சிவதை தழுதாழைச் சாறுகளினுல் செந்தூரமாகும், தாம்பிரமும் - தாம்பிரம், சிந்துவாரத்தறலால் - வெண் நொச்சிச் சாற்றினுலும், சிறு கீரையாற் - சிறு

கீரைச் சாற்றினாலும், துவராம் - செந்தூரமாகும், சிலை - மனோசிலை அரனார் வரப்புனலால் - கொன்றைச் சாற்றினால், சிந்தூரமாம் - செந்தூரமாகும், அயமும் - அயம், சித்திரமூலத்தறலால் - சித்திர மூலச்சாற்றால், சித்திரத்தால் - ஆமணக்குச் சாற்றினால், பாடலமாம் - செந்தூரமாகும், சிடவங்கம் - நல்ல வங்கம், அரிதகியிற் - கடுக்காய்ச் சாற்றினால், அங்காரக நிறமே சிவணும் - செவ்வாயின் நிறமாகிய செந்நிறத்தைப் பெறும், சித்தர் புகழ் இரசிதம் - சித்தர்களால் புகழப்பட்ட வெள்ளி, சிந்து - நொச்சிச் சாற்றாலும், மரை - தாமரைச் சாற்றாலும், சேதாம் - செந்தூரமாகும், சிக்கு அனல் - நெருப்பு நிறமுள்ள காந்தம், சிங்க மழை - ஆடாதோடைச் சாற்றாலும், மணி மழை - உத்தாமணிச் சாற்றாலும், சித்திர பானுவை நிகராம் - சூரிய நிறத்தை அடையும், சிறிதறிந்த மருமம்- கொஞ்சம் தெரிந்து கொண்ட மர்மம், இனிச் சிறிது இனமு நேருமெனில் - இன்னமும் கொஞ்சம் தெரிந்து கொள்ள ஆவல் ஏற்படுமேயானால், சினம் அகன்றோரா லறிமின்-சினம் அகன்ற முனிவர் கிடைக்கப்பெற்றால் தெரிந்து கொள்வாயாக, சிக்கற-ஐயந்திரிபற, இப்படி உரைத்த - இவ்வாறு சொல்லப்பட்ட, சிந்தூரத்தின் - செந்தூரத்தின் கரவு எனினும் - மறைவு என்றாலும் சித்திக்கு முறை புரிதல் - கைப் பழக்கத்திற்கு வருமுறையைச் செய்தல், சிட்டையார் கைமுறைகள் - சிஷ்டை சொல்லிக் கொடுப்பவர்கள் கைமுறைகள், சிலி முகம் - பாணத்தின், வேகத்திறல்போல் - செல்லுகின்ற வேகத்தின் வன்மையைப் போல், சித்திர காயத்திறல் போல்- புலிவேகத்திறத்தைப்போலவும், சிற்பர் தொழில் கை முறைபோல்- சித்திர வேலை செய்கின்ற, சிற்பருடைய சிற்பத் தொழில் செய்யும் கைமுறை போல், சிறு தொழின்மை பெருந் தொழின்மை - சிறிய தொழிலாய் இருந்தாலும் பெரிய தொழிலாய் இருந்தாலும், சித்தம் ஒருமித்து வசிசித்தர் - சித்தம் ஒரு வழிப்பட்டு வசிக்கின்ற சித்தர்களின், மருமத் தொழில் - இரகசிய வேலைப்பாடாகும், சிந்து வடிவான - சமுத்திர ரூபத்தில் ஒன்றான, சுதைச் சிந்து - பாற்கடலில், சயனித்தவர் போல் - துயில்கின்ற மஹாவிஷ்ணுவைப் போல், சிந்துவினைக் கைமுறை - செந்தூரத்தைச் செய்யும் கைமுறை, கசிந்து உணர வெளியாமே - மனம் கரைந்து உணர வெளியாம், சிங்கமதி - ஆவணி மாதம், கன்னிமதி - புரட்டாசி, சிலைத் திங்கள் - மார்கழி, குடமாசம் - (கும்பம்) மாசி மாதம், சித்திரை மாதம் - சித்திரை மாதம், ஆகும் - செந்தூரம் செய்வதற்கு ஏற்ற மாதங்களாகும், ஏனையவை சித்தியுறாது - மற்றைய மாதங்களில் செய்ய பலனுண்டாகாது என்ற படியினாலே மற்றைய மாதங்கள் பற்பங்கள் செய்வதற்கு ஆம் என்று பெற்றோம். சிகியான பேர்புனைந்த சிகண்டியெனு நற்சாதிச் சிகாவளத்தின் முறைபிறழாச் சினைப்பார்ப்பினதராச் ...., சிதைத்திடுதல் -

நறுக்குதல், அரைத்திடுதல்-அரைத்தல், சிமிழ்த்திடுதல்-சில்லிட்டுச் சிலை செய்தல், புடமான சிகிக்கிடுதல் - புடமாகிய நெருப்பிடுதல், இவை நான்கும் - இந்நான்கு தொழிலும், தப்பாமல் சிறப்பிடுதல் - தப்பிதமில்லாமல் சிறப்பாகச் செய்தல், சிரத்திடுதல் - உயர்வாக மதித்தல், சிந்தூர சிவப்பிடும் ஆறு இவை - இவைகள் செந்தூரம் சிவப்பாவதற்கு வழியாம் என்றவாறு.

சீரகத் தைலம்

சீ

சீரகத்தைலமிது சீரகத்தைலமே
சீரகந்தொடிபஃது சீரகத்திரிவிழுது
சீயைகிச்சிலியினடி சீறி மற்றொருபஃது
சீவிதிற் பெரிய கடல் சீகரப்பயமுனிறை
சீர்கடத்தினிறுவல் சீவனத்துடனனல் கோள்
சீமுதகமுதகமெரி சீமுதமறவே
சீர்மை முத்தினமே சீரெரியான பின்
சீருணிப்பாத்திரஞ் சீருடனிறுத்ததிற்
சீந்திற் சருக்கரை சீனி வெங்காயமும்
சீதரமாலை கொச் சீரமுமொக்கவெய்
சீர்பெற ஒரு தினஞ் சீத்துவமாயெரி
சீறு முத்தீயிலாஞ் சீரகத்தைலம்
சீயமொப்பாமிபச் சீரிணேய் களுக்க
சீரணவினைக்குவாள் சீரமுதமுமாம்
சீக்கிரமாகவச் சீரகத்தைலம்
சீவனமெனக் கொளச் சீப்பிணிமாந்தை
சீதச் சுரப்பிணி சீரணமின்னேய்
சீதக்கழிச்சல்போம் சீவநண்பாகமெய்
சீர்பொனினகமாம் சீவித்திடவரு
சீரகமுறுமே சீட்டி காந்திசேர்
சீபதியுரமாஞ் சீங்குழலிசைத் தொனிச்
சீமானெவருஞ் சீதனப் பொருளெனச்

சீக்கிரமினிமையாஞ் சீடலக்ஷணமுறை
சீகாரியமுனி சீவரத்தினமெனச்
சீவனிலுரைத்த சீவதயாபரச்
சீரகமிஃதே.

சீரகத்தைலம் - சீரகத்தைலம், இது - இச்சீரகத்தைலம், சீர்+அகத்து+ஐலம் - அகத்துக்கு நன்மையைக் கொடுக்கும்(ஐலம் - அழகு), சீரகந்தொடி பஃது - சீரகம் பத்துப் பலம், சீரகத்திரி விழுது - சீரகத்திற்கு மூன்று பங்கு வெண்ணெய், சீயை கிச்சிலியி னடி - நாரத்தையின் வேர், சீறி மற்றொரு பஃது - பத்துப்பலம், சீவிதிற் பெரிய கடல் சீரகப் பயமுனிறை சீர்கடத்தினிறுவல் சீமுதக முதகமெரி சீமுத மறவே சீர்மை முத்தினமே சீரெரியான பின் - முற்சொல்லப்பட்ட அளவுள்ள சீரகத்தையும் வேரையும் பெரிய கடத்திலிட்டு நீர் ஊற்றி மூன்று நாட்கள் நடுத்தரத் தீயிட்டு நன்ருக எரித்துக் குடிநீராக்கிக் கொண்டு, சீருணிப்பாத்திரஞ்-செப் புப் பாத்திரத்தில், சீருடனிறுத்து-இறுத்து எடுத்து, அதில் சீந்தில் சர்க்கரை-அக்குடி நீரில் சீந்தில் சர்க்கரை, சீனி - சர்க்கரை, வெங் காயமும் - வெங்காயச்சாறு, சீதரமாலை கோ - துளசிச்சாறு, சீரமு மொக்கவெய் - பசுவின் பாலையும் சேர்த்து, சீவனத்துடன் - வெண் ணெயைக் கூட்டி, அனல்கொள் - அடுப்பேற்றி, சீர்பெற ஒரு தினம் - ஒரு நாள், சீத்துவமாயெரி - சீராக எரிக்க வேண்டும், சீறு முத் தீயில் - முத்தீயில், ஆம் - முடியும், சீரகத்தைலம் - சீரகத்தைலம், இபசீரி நோய்களுக்கு - யானை போன்ற வேகம் கொண்ட நோய் களுக்கு, சீயமொப்பாம் - சிங்கத்தைப் போலாகும், அசீரண வினைக்கு - அசீரண நோய்களுக்கு, வாள் - வாளைப் போன்றது, சீர் அமுதமாம் - சிறந்த அமுதம் போன்றதாகும், (உடலைக்காக்க), சீக் கிரமாக - காலாகாலத்தில் (தக்கபொழுதில்), சீரகத்தைலம் - சீர கத்தைலத்தை, சீவனமெனக் கொள்ள - மருந்தாகக் கொள்ள, சீப் பிணிமாந்தை - உளமாந்தை நோய், சீதச்சுரப்பிணி - கபச்சுர நோய், சீரணமின்னோய் - சீரணம் இல்லாத நோய்கள், சீதக்கழிச் சல் - சீதக்கழிச்சல் முதலிய நோய்கள், போம் - நீங்கும், சீவநண் பாகமெய் - உயிருக்கு நண்பனாகி, சிர்பொன்னின கமாம் - உள் ளத்திற்குப் பொன் போன்ற சிறப்பைக் கொடுக்கும், (நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்றவாறு), சீவித்திட - நெடுநாள் வாழ்ந்திட, வருசீரக முறுமே - சீரகத்தைலம் பயன்படும், சீட்டிய காந்தி சேர் - உள்ளொளியைக் கொடுக்கும், சீங்குழலிசை சீபதி தொனி உரமாம் - கண்ணன் குழலோசை போன்று இனிமையான குரலைக் கொடுக்கும், சீதனப் பொருள் என - சீதனப் பொருள் போன்று, சீக்கிரம் இனிமையாம் - நன்மையைப் பெறும், சீமான்

என வரும் - செல்வந்தர் ஆவர், சீடலக்ஷண முறை - மாணவர் தம் இலக்கணமுறைப்படி, சீகாரியமுனி-போகத்தை நீக்கிவிடு, சீவரத்தினமென - சீவனுக்கு இரத்தினம் போன்ற, சீவனிலுரைத்த - உயிர்ப் பொருளாகக் கூறப்பட்ட, சீவதயாபர - உயிர்களுக்குக் கருணை காட்டும், சீரகமிஃதே - சீரகத்தைலம் இஃதாகும்.

சீரகத்தைலம் செய்முறை

பத்துப்பலம் சீரகத்தையும் பத்துப்பலம் நாரத்தை வேரையும் எடுத்து ஒரு பெரிய கடத்தில் போட்டு நீர் விட்டு நடுத்தரத்தீயாக மூன்று நாள் எரித்துக் குடி நீர் செய்து அக்குடிநீரை ஒரு செப்புப் பாத்திரத்தில் இறுத்துக் கொள்ள வேண்டும். பின் அதில் சீந்தில் சர்க்கரை, சர்க்கரை, வெங்காயச்சாறு, துளசிச்சாறு, பசுவின்பால் ஆகியவைகளைச் சேர்த்து, அத்துடன் முப்பதுபலம் வெண்ணெயைக் கூட்டி அடுப்பேற்றி ஒரு நாள் முழுவதும் சிறுதீயாக முத்தீயெரித்து இறக்க வேண்டும். இதுவே சீரகத்தைல மாகும்.

தீரும் நோய்களை உரையில் காண்க.

சுராங்குச மாத்திரை

சு

சுராங்குச மாத்திரை சுதாங்கமொலியே
சுஞசியில் முப்பலை சுக்குதிப்பிலிகறி
சுதையரிலவணை சுவணைவெண்பொன்மா
சுண்டைவேர்பணிலவேர் சுயோதனத்தின்வேர்
சுரேசமேதினியின் வேர் சுங்கக் குஞ்சுவேர்
சுந்தரிமலமிவை சுலவுமோர்நிறை
சுரவவேபொடிசெய்து சுருக்கினில் மோதியே
சுரையிலேச் சாற்றின் முசுட்டைச் சாற்றினிற்
சுக்கையினமுச் சுவடுகாணவே

குறிப்பு : தைலமென ஆசிரியரால் தலைப்புக் கொடுக்கப்பட்டிருந்த போதிலும் செய்யுளில் எண்ணெய் காணப்படவில்லை. அதற்குப் பதில் வெண்ணெயைக் குறிக்கும் விழுது, சீவனம் என்ற சொற்கள் காணப்படுகின்றன.

சுழலிருமூன்று நாள் சுழலமத்தித்துச்
சுடரவன் வடிவமாச் சுருவவில்லைசெய்
சுடர்வைத்தாறுநாள் சுருங்கவைத்துபின்
சுதியினிற்புடமிடு சுசியையாற்றியே
சுருதிநேர்முக்கடு சுத்தி செய்துடன்
சுருளில் வையரைதிமுசுக்கைச் சாற்றினுற்
சுளுவுறுமாத்திரை சுபாவமீறச் செய்
சுருவமாத்திரை வெயிற் சுவடுகாணவை
சுளிவினை நலிக்கிது சுரிகையாகுமிச்
சுராங்குசமாத்திரைச் சுகுணமென சொல்வேன்
சுதையிலறிவினுற் சுலோபியாலுணிற்
சுவடென கனவிச் சுடிகைநோயறும்
சும்மையுட்டதிர் செவிச் சுகுண நோயறும்
சுட்டடர்வாதநோய் சுரமெலாமறும்
சுடுதணலையவைச் சுரமெலாமறும்
சுடரெனப்பைத்திய சுரமெலாமறும்
சுடரெனவடர் கபச் சுரமெலாமறும்
சுவாகுவை நிகர்சனிச் சுரமுமோடுமே
சுறவெனுங்காரகச் சுரமுமாறுமே
சுனளெனுமாரகச் சுரமுமாறுமே.

சுராங்குச மாத்திரை - சுராங்குசமாத்திரை, சுதாங்கமொலியே - (சு + அங்கம் + ஒலி) நாசி, உடல், குரல் ஆகியவைகளுள் உண்டாகும் நோய்களை நீக்கி நன்மையைக் கொடுக்கும், முப்பலை - முப்பலை, சுக்கு - சுக்கு, திப்பிலி - திப்பிலி, கறி - கறிமிளகு, சுதை - வெள்ளைப்பாடாணம், அரி - அரிதாரம், லவணை - (லவணம் + ஐ) - ஐந்துப்பு, சுவணை - தங்கம், வெண்பொன் - வெள்ளி, மாசுண்டை வேர் - மாசுண்டைவேர், பணிலவேர் - சங்கம்வேர், சுயோதனத்தின் வேர் - நந்தியாவட்ட வேர், சுரேசம் - முசு முசுக்கை, மேதினியின் வேர் - பூமிவேர் (நாக்குப்பூச்சி), சுங்கம் - ஆடுதின்னுப்பாளை, குஞ்ச வேர், குன்றிவேர் (அதிமதுரம்), சுந்தரிமலம் - பெருச்சாளி மலம்,இவை-இவைகளை, சுலவுமோர்நிறை-சமஎடை எடுத்து, சுருக்கினில் மோதியே - நன்ருக இடித்து, சுரவவே - நன்ருக, பொடி செய்து - பொடியாகும்படிச் செய்து, சுரையிலைச்சாறு - சுரையிலைச்

சாறு, முசுட்டைச் சாறு - முசுட்டைச் சாறு, சுக்கை - முசுமுசுக் கைச்சாறு, முச்சுவடு - இம்மூன்று சாறுகளும் அடையாளமாக, காணவே - கண்டுகொள், சுழலிருமூன்றுநாள்-ஒவ்வொருசாற்றிலும் ஆறு நாள், சுழலமத்தித்து - நன்ருக அரைத்து, சுடரவன்வடிவ மாய் - சூரியனைப் போன்ற வட்ட வடிவமாக, சுருவவில்லை செய் - வில்லை செய்து, சுடர்வைத்தாறு நாள் - ஆறு நாட்கள் சூரியஒளி யில், சுருங்க வைத்து - காயவைத்து, பின் - நன்கு காய்ந்த பின்பு, சுதியினிற்புடமிடு-முறைப்படி புடமிட்டு, சுசியை யாற்றியே - குளிர வைத்து, சுருதிநேர் - சமமாக, முக்கடுகு - திரிகடுகு, சுருளில்வை யரைதி - கல்வத்திலிட்டு அரை, முசுக்கைச் சாற்றினல் அரைதி - முசுக்கைச்சாறு விட்டு அரை, சுளுவுறு மாத்திரை - இலேசான மாத்திரைகளாகச் செய்து, சுபாவமீறச் செய் - தேவையான அள விலிருந்து சிறிது பெரிதாக, சுருவ மாத்திரை - செய்யப்பட்ட மாத் திரையை, வெயிற் சுவடுகாணவை - சுருங்கும் படியாக வை (வெயி லில் வைத்து மடிப்புக்காணும் படியாக நன்ருகக் காயவைக்க வேண்டும்), சுளிவினை நலிக்கிது - வேகமான நோய்க்கு (உடலை நலியச் செய்கின்ற நோய்களுக்கு), சுரிகையாகும் - கவசம் போன் றது, இச்சுராங்குச மாத்திரை - இந்தச் சுராங்குசமாத்திரையின், சுகுணமென் சொல்வேன் - குணங்களை என்னென்று சொல்லுவது, அறிவினற் சுலோபியால் - அறிவிற்சிறந்த நமது முன்னேர்கள் கூறிய முறைப்படி, சுதையில் - பால் அல்லது தேனில், உணில் - சாப்பிட, சுவடென கனவிச் சுடிகை நோயறும் - குறிப்பாக பாரத் தைக் கொடுக்கக் கூடிய உச்சி (சிரசு) நோய் தீரும், சும்மையுட்ட திர் செவிச்சுகுண நோயறும் - பாரத்தையும் இரைச்சலையும் கொடுக்கக் கூடிய செவிநோயறும், சுட்டடர் வாத நோய் - கூட்டு டன் கூடிய அடர்ந்த வாதப்பிணி, சுரமெலாம் - வாத சுரம், அறும் - நீங்கும், சுடுதணலையவைச் சுரமெலாம் - (சுடுதணல் + ஐய + ஐச் சுரம்) அதிக வெப்பத்தையுடைய கபவாத சுரம், அறும் - நீங்கும், சுடரெனப்பைத்திய சுரமெலாமறும் - பித்த சுரம் நீங்கும், சுடரென வடர் கபச்சுர மெலாமறும் - கபச்சுரம் நீங்கும், * சுவாகுவை நிகர் சனிச்சுரமுமோடுமே - சனிச்சுரம் சுவாகுவைப் போன்று ஒழிந்து விடும், சுறவெனுங்காரகச் சுரமுமாறுமே - வெப்பச் சுரம் நீங்கும், சுனளெனுமாரகச் சுரமுமாறுமே - மரணத்தை விளைவிக்கக் கூடிய மாரகச் சுரமும் நீங்கும்.

* தாடகையின் மைந்தர்களான மாரீசன், சுவாகு என்பவர்கள், தண்டகாரண்யத்தில் நடைபெற்றுவந்த முனிவர்களின் வேள் வியைக் கெடுக்க வந்தனர். அப்பொழுது இராமபிரான் அக் கினி அஸ்திரத்தை சுவாகுமீது எய்ய சுவாகு அங்கேயே எரிந்து அழிந்தான் என்று கூறப்படுகின்றது. அதுபோன்று

சுராங்குச மாத்திரையை உட்கொண்ட மாத்திரத்திலேயே சனிச்சுரம் நீங்கும் என்பதாகும்.

சூதபற்பம்

சூ

சூதபற்பமிது நோயின் சூதபற்பமிதை மாட்டுஞ்
சூதமோர் தொடியை மாரிச் சூல்வளைய கட்டிற் பெய்து
சூளை வெற்றிலை நீர் புன்னீர் சூதபல்லவநீர் நேர்பெய்
சூகரமலத்திற்பாரில் சூளிரு நாள்வைதீபச்
சூட்டெரியான பின்னர் சூக்ஷமாயெடுத்துநேரிற்
சூரிய காந்தி நீர் பெய் சூரைநீர் வார்த்தரைத்துச்
சூழ்ச்சிமுத்தின மதற்பின் சூடனும் விட்டரைத்துச்
சூசனைவில்லை செய்து சூரனிற் காயவைத்துச்
சூரத்துநில ஆவாரைச் சூரண நடுவைத்தங்கிச்
சூட்டினிற்புடத்தைச் செய்து சூட்டறவெடுத்தப்பாலச்
சூதபற்பத்தைத் தின்னிற் சூரிய நட்பி நீரிற்
சூலைநோயறு முலைப்பால் சூதக சந்நிமாறும்
சூரைக்காய் ரசத்திற்காக்கை சூழ்விரைவாத நீங்கும்
சூரையாநெய்யிற்பையுள் சூசிகாவாய்வுவிக்கல்
சூக்குமசன்னிமாயுஞ் சூழ நற்பயத்தில் மேகச்
சூத்திரக்கிரந்தி புண்கள் சூட்டாலாகத்திலுள்ள
சூத்திரமெல்லாமாறும் சூரிபோலறுக்குமற்றைச்
சூசனைவேறென்றின்றே.

சூதபற்பம் - இது இரசத்தினது வெண் பொடி, நோயின் சூது - நோயின் வஞ்சனையை, அபற்பம் - கெட்ட மருந்தைப் போலாக, இது ஐ மாட்டும் - இது விசேடமாகக் கெடுக்கும், சூதம் ஓர் தொடியை - இரசம் ஒரு பலத்தை, மாரி - மழைக் காலத்தில், சூல்வளை-கருப்பம்கொண்ட சங்கின், அகட்டில் பெய்து-வயிற்றில் விட்டு, சூளை - காரமுள்ள, வெற்றிலை நீர் - வெற்றிலைச் சாறு, புல் நீர் - கௌரிவால் புல்லின் சாறு, சூத பல்லவ நீர் - மாந்துளிர் நீரையும், நேர் பெய் - சரி எடையாகப் பெய்து (சங்கை ஒரு பாத்திரத்தினுள் 'வைத்து மேல் மூடிச்சீலை செய்து), பாரில் - பூமியில்

(ஒரு குழி வெட்டி), சூகர மலத்தில் - பன்றியின் மலத்தை (அக்குழியில் பாதி போட்டு அதன் மேல் பாண்டத்தை இட்டு, மேலும் பன்றி மலத்தினலே மூடி), சூல் இரு நாள்வை - உண்மையாய் இரண்டு நாள் வைத்து (சூள் என்று பாடமாயின் தொடர்ந்து என்று பொருள் கொள்ளவும்), தீபச் சூட்டெரியான பின்னர் - சிறு நெருப்பு மலத்தில் இட்டுப்பின்பு, சூட்சமாய் எடுத்து - தந்திரமாய் (இரசத்தை) எடுத்து (கல்வத்தில் இட்டு), நேரில்-அதற்குச் சமன் (இரசத்திற்கு), சூரிய காந்தி நீர் பெய் - சூரிய காந்தி இலைச்சாறுவிட்டு, சூரை நீர் வார்த்து - சூரை நீரும் விட்டு (செஞ்சூரை, பச்சைச் சூரை), சூக்ஷி - தந்திரமாக, முத்தினமரைத்து - மூன்று நாள் அரைத்து, அதற்பின் சூடனும் விட்டரைத்து - அதன் பிறகு சூடனும் சேர்த்து அரைத்து, சூசனே - பக்குவமாய், வில்லே செய்து - வில்லே தட்டி, சூரனில் காய வைத்து - வெய்யிலில் வில்லேயை உலர்த்தி, சூரத்துநிலாவாரைச்சூரண நடுவைத்து-ஒரு அகலில்கீழே நிலாவாரைச்சூரணம் பரப்பி அதன்மேல் வில்லேயை வைத்துமேலும் மேற்படி சூரணத்தால் மூடி மேலோடு கொண்டு மூடிச் சீலே செய்துலர்த்தி, அங்கிச் சூட்டினில் புடத்தைச் செய்து - நெருப்பின் சூட்டில் புடமிட்டு, சூடற எடுத்து அப்பால் - புடம் ஆறியபின் எடுத்துப் பிறகு, சூத பற்பத்தை - இரச பற்பத்தை, சூரிய நட்பி நீரில் தின்னில் - தாமரைப் பூச்சாற்றில் உண்ண, சூலே நோய் அறும் - சூலே என்று தென்னுட்டிலே சொல்லப்படுகின்ற குட்டநோய்அறும், முலேப்பால் - முலேப்பாலில் அனுபானித்து உண்ண, சூதக சந்நி மாறும் - சூதக சன்னி நோய் தீரும், சூரைக்காய் இரசத்திற்கு - சூரைக்காயின் இரசத்திலே உண்ண, (வெள்ளரிக்காய் என்றும் கூறுவர்), ஆக்கை சூழ் விரைவாதம் நீங்கும் - உடம்பிலே இருக்கின்ற விரைவாதம் தீரும், சூரை - வலிவான, ஆநெய் - பசுவின் நெய்யில், பையுள் - கருப்பை நோயாகிய, சூசிகா வாய்வு - சூசிகா வாய்வும், விக்கல் - விக்கல் நோயும், சூக்கும சன்னி - தெரியாமல் மரண காலத்தில் வெளிப்படுகின்ற சன்னிநோயும், மாயும் - கெடும், சூழு நற்பயத்தில் - அதிகமாயிருக்கின்ற பசுவின்பாலில், மேகச் சூத்திரக் கிரந்திப் புண்கள் - மேகத்தினுல் கிளேத்து உண்டாகின்ற கிரந்திப் புண் நோய்கள், சூட்டால் ஆகத்திலுள்ள-சூட்டினுல் வாதம் பிரகோபித்துச்சரீரத்திலுண்டாகிய கருப்பாகிய, சூத்திரம்-காரணங்களெல்லாம், மாறும்-தானே மாய்வதல்லாமல், சூரிபோலறுக்கும் - தின்ற உடன் கத்தி போல் நோய்களே அறுக்கும், சூசனே வேருென்று இன்றே - காரணங்கள் வேருென்றும் இல்லே என்றவாறு.]

செம்பின் பற்பம்

செ

செப்புப்பற்பமாகும் வாறு செப்புகின்றவாறு கேள்
செம்பதோர் தொடிக்கிரண்டு
செம்பியன் தொடிப்புனல்
செருகிமத்தனம் புரிந்து செல்லிரண்டு வைகல் போய்
செப்பு மேலேவைகளுலு செங்கதிர்க்கணிட்ட பின்
செச்சை யெச்ச முட்டையிற் செய்
செய்ய நற்புடத்தையே
செம்மை யுண்டிடாத மூலி செழியன் மாலேயரிதகி
செம்பையிந்த நான்கிலுஞ் செய் செய்தவாறு மேற்படி
செட்டி கட்டளேப் படிக்கோர் செட்டி கட்டளேப் புனல்
செவ்வியிந்த நாலுமேற்செய்
செவ்வியந்த வெண்மையாம்
செப்புமப்பருப்பமுண்கை செய்யுமாறுரைத்திடிற்
செம்பருத்தியம் பிலுண்ணில்
சென்னி நோய் சுரங்கள் போம்
செண்பகத்தி நீரிலுண் செவாப்பரந்தை நோயறும்
செல்லறற்கு ளுண்ணவாயு செவிடு காச நோயறும்
சென்னெ நீரிலுண்ண வெம்மை
செறியுமேக விஜேகள் போம்
செங்கல்வத்து நீரிலுண்ணிற்செண்டுவாதமாறுமே
செக்கராவினெய்யிலுண் செடிப்பெரும் பிணிகள் போம்
செண்டுவெக்ஷிநீரிலுண் செனித்தகுட்ட நோயறும்
செயலேயப்பிலுண்வியாதி செயலே முன்னழிக்குமே
செப்பமாமிதைப்புசிக்கில் செத்த பேர் பிழைப்பரே.

செப்புப்பற்பம் ஆகும்வாறு - செம்பானது பற்பமாகும் வகையை, செப்புகின்றவாறு கேள் - சொல்லுகின்ற முறைப்படி கேட்பாயாக, செம்பது ஓர் தொடிக்கு - செம்பு ஒரு பலத்திற்கு

(அது - பகுதிப்பொருள் விகுதி), செம்பியன் தொடைப்புனல் இரண்டு - சோழனுடைய மாலையாகிய ஆத்தியிலைச்சாறு இரண்டு பலம், செருகி - ஊற்றி, மத்தனம் புரிந்து - மர்த்தனம் செய்து (அரைத்து), செல்லிரண்டு வைகல் போய் - செல்லுகின்ற இரண்டு நாள் கழிந்து (இரண்டு நாளரைத்து),செப்பு மேலை வைகல் நாலு - சொல்லப்பட்டு வருகின்ற நாட்கள் நாலும் (அஃதாவது இரண்டு நாளரைத்ததை வில்லை செய்து மேலே வருகின்ற இரண்டு நாள்), செங்கதிர் கண்ணிட்டபின் - சிவந்த கதிர்களை உடைய சூரியனில் காயவைத்த பிறகு (உலர்த்திய பிறகு), செச்சை - வெள்ளாட்டின், எச்சம் - மலத்தினல், முட்டையில் செய் - செய்யப்பட்ட எருமுட்டையைக் கொண்டு, நற்புடத்தையே செய்ய - நல்ல புடைத்தைப் போட்டு ஆறவிட்டு எடுத்து, செம் - வளமான, மை - ஆடு, உண்டிடாத மூலி - தின்னு மூலிகையாகிய ஆடு தின்னுப்பாளைச் சாறு, செழியன் மாலை - பாண்டியனுடைய மாலையாகிய வேம்பினிலைச் சாறு, அரிதகி - கடுக்காய் இலைச்சாறு, செம்பை - கருஞ்செம்பைச் சாறு, இந்த நான்கிலும் - இந்த நான்கு சரக்குகளின் சாற்றிலும், மேற்படி செய்தவாறு செய் - மேலே கூறியபடி சாற்றினளவு, அரைக்கும் நாள், உலர்த்தும் நாள், புடமிடல் முதலியவற்றை முறைப்படி செய்வாயாக, செட்டி - முருகப்பெருமான், கட்டளைப் படிக்கு - ஏற்படுத்திய நூலின் முறைப்படிக்கு, ஓர்-ஓர்ந்த, செட்டி - வெள்ளாளச் செட்டியாகிய தேரன், கட்டளைப்புனல் - ஏற்படுத்திய நீர் அளவின்படி (அஃதாவது ஒன்றிற்கு இரண்டுபங்கு சாறு),செவ்வியந்த நாலு மேற்செய் - செவ்வையாக அந்த நாலு சாற்றையும் கொண்டு மேலும் செய்வாயாக, செவ்வி-தாம்பிரமானது, அந்தம் - முடிவில், வெண்மையாம்-பற்பமாகும், செப்புமப்பருப்பம்-சொல்லுகின்றஅந்த பற்பத்தை, உண்கை செய்யுமாறு உரைத்திடில் - தின்னும்விதத்தைக்கூறினல், செம்பருத்திஅம்பில் உண்ணில்-செம்பருத்திச் சாற்றிலுண்ண, சென்னி நோய் - தலையிலுண்டாம் நோய்கள், சுரங்கள் போம் - வெப்புநோய்கள், தீரும், செண்பகத்தி நீரிலுண் - செண்பகத்தின் சாற்றிலுண்ண, செவாப்பரந்தை நோய் அறும் - துன்பத்தைத் தருகின்ற செவ்வாப்பு நோய் தீரும், செல் - மேகம் (தந்த), அறல் - நீர், உள் உண்ண - வைத்துண்ண (நீரிலாவது பனி நீரிலாவது), வாயு - வாயு, செவிடு - காது கேளாமை, காச நோயறும் - இருமல் நோய்தீரும், செந்நெல் நீரில் உண்ண - செந்நெற் பசுங்கதிர்ச் சாற்றில் உண்ண, வெம்மை செறியு மேக வினைகள் போம் - வெப்பத்தினலே உண்டான மேக வினைகள் நீங்கும், செங்கல்வத்து நீரில் உண்ணில் - செங்கழுநீர்ச் சாற்றில் உண்ண, செண்டு வாதமாறுமே - செண்டு போல ஆங்காங்கே தடித்து உண்டாகின்ற வீக்கங்கள் மாறிப்போகும் (வீக்க வாயு),

செக்கர் - சிவந்த, ஆவின் - பசுவின், நெய்யில் உண்ண - நெய்யில் உண்ண, செடிப் பெரும் பிணிகள் போம் - துன்பத்தை உண்டாக்கு கின்ற நோய்கள் தீரும், செண்டு வெக்ஷி நீரிலுண் - செண்டு செண் டாகப் பூக்கின்ற வெக்ஷியின் இரசத்திலே (பூச்சாறு) உண்ண, செனித்த குட்ட நோயறும் - பிறவியிலே உண்டான குட்ட நோய் நீங்கும், செயல் அப்பில் உண் - துளசிச்சாற்றில் உண்ண, வியாதிச் செயலே முன்னழிக்கும் - வியாதி நீங்கிய பின் உண்டாம் உடல் தளர்ச்சியைப் போக்கும் (இதுவே நோய்ச் சல்லியம் என்று சொல்லப்படும்), செப்பமாம் இதைப் புசிக்கின் - நன்ருய் முடிந்த தான தாமிரபற்பத்தை அருந்தினல், செத்த பேர் பிழைப்பரே - செத்தவர்கள் பிழைப்பார்கள் என்றவாறு.

சேராங்கொட்டை லேகியம்

சே

சேராங்கொட்டை லேகியத்தைச்
சேராங்கொட்டையம்பறவே
சேராங்கொட்டையிரண்டு பங்கு
சேரனலங்கன் மந்திரமும்
சேதாவ ஊயு நாற்கூறு சேர்த்தொன்பது நாளூறிய பின்
சேஞர் மணிக்காந்தியிலதனைச்
சேரொன்பதுநாள் மேலுலர்த்தி
சேதித்துரலிலிடித்ததனைச்
சேர்முக்கடுகு கிராம்புப்பு
சேறு குணமிதாகுமெனச் சேறு:குளமா சீரகம்:புல்
சேரவிடுத்துத் தீயேற்றிச் சேதப்படாது லேகியஞ் செய்
சேமித்தொரு மாதப்பருவஞ்
சேரவதன் பின்னதையெடுத்துச்
சேவற்றுவசன் முன்னவனைச்
சேவித்திரண்டு பொழுதுமுண்டு
சேமநிதிபோற் பத்தியத்தை
சேர்த்து வகிக்கப்பித்த சன்னி
சேஞபதியாகிய நாமச்

சேத்துமமருத்து வாதசன்னி
சேட்டை மேகப் புண்குட்டச்
சேர்க்கை வியாதி மது மேகம்
சேனத்திறகிற் படர் தேமல்
சேவேறுடலப்பிணிகளெல்லாம்
சேராவழகு வடிவினுக்குச் சேருமதிக பசியுண்டாஞ்
சேங்கன்றென்ன உரமுண்டாம்
சேகண்டியைப் போல் தொனியுண்டாம்
சேடனெனவே யின்ப மெல்லாஞ்
சேரத்து ஊயாமென்மேலும்
சேயின் முகம் போல் களையுண்டாம்
சேற்கேதனன் போலெழிலுறுமே.

சேராங்கொட்டை லேகியத்தைச் சேர் - சேராங்கொட்டை லேகியத்தைச் செய்வதற்கு, ஆங்கு ஒட்டு ஐ அம்பு அறவே - அதில் ஒட்டியிருக்கின்ற குற்றமாகிய நீர் (பால்) நீங்கிய, சேராங்கொட்டை யிரண்டு பங்கு - சேராங்கொட்டை இரண்டு பங்கு, சேரன் அலங் கன் மந்திரமும் - மலை நாட்டரசனாகிய சேரனுடைய மாலையாகிய பனம் பூவையுடைய மரத்தினது கள்ளும் (பனங்கள்) நான்கு பங்கு, சேது ஆ அளையும் நாற்கூறு-சிவப்புப்பசுவின் தயிரும் நான்குபங்கு, சேர்ந்து ஒன்பது நாள் ஊறியபின் - இரண்டையும் கலந்தவற்றில் (சேங்கொட்டையை) ஒன்பது நாள் ஊறவைத்த பின்பு, சேணூர் - ஆகாயத்தில் ஊர்ந்து செல்லுகின்ற (சேணர் என்னும் பாடம் - சேண் ஆர் - ஆகாயத்தில் நடக்கின்ற), மணிக்காந்தியில் அதனைச் சேர் - சூரிய வெளிச்சத்தில் அதனைச் சேர்ப்பித்து, ஒன்பது நாள் மேலுலர்த்தி - மேலும் ஒன்பது நாள் உலர்த்தி, சேதித்துரலில் இடித்து - உரலில் இட்டு நன்ருகத்தூள் செய்து, அதனைச் சேர் - அதனுடன் சேர், முக்கடு-சுக்கு மிளகு திப்பிலி,கிராம்பு-இலவங்கம், உப்பு - சோற்றுப்பு, சேறுகுளமிதாகும் எனச் சேறு - குளத்தி லுள்ள சேற்றைப் போல் இது ஆகும்படிச் சேர்ப்பாய், குளம் - வெல்லத்தை(எல்லா சரக்குகளும் சேர்ந்த எடைக்குச்சமன் அல்லது ஒன்றரைப் பங்கு வெல்லத்தைச் சேர்க்க வேண்டும்), மாசீரகம்புல் மாசீரகம் - பெருஞ் சீரகம், புல் சீரகம் - சிறிய சீரகம் (தாழிசைப் பொருள்கோள் கொள்ளவும்), சேரவிடித்து - சேரும்படி இடித்து, தீயேற்றி - தீயில் வைத்து, சேதப்படாது லேகியம் செய் - சேதமா காதவாறு சர்வ ஜாக்கிரதையுடன் லேகியம் செய்வாய், சேமித்

தொரு மாத பருவம்-ஒரு மாதகாலம் உபயோகிக்காமல் சேமித்து (பழக) வைத்து உபயோகப்படுத்த, சேர அதன் பின் அதை எடுத்து - ஒரு திங்கள் கழித்து அதை எடுத்து, சேவல் துவசன் முன்னவனே-சேவல் கொடியை உடைய முருகனுடைய முன்னவனு கிய கணபதியை, சேவித்து-வணங்கி, இரண்டு பொழுதும் உண்டு-காலை மாலையென்னும் இரு வேளையும் உண்டு, சேமநிதி போல் - சேமித்து வைத்திருக்கின்ற பொருளை எவ்வளவு கவனத்துடன் காப்பாற்றுகின்றோமோ அவ்வாறே, பத்தியத்தைச் சேர்த்து வகிக்க - பத்தியத்தைக் (காத்தும்) பத்தியப் பொருள்களை கவனத் துடன் சேர்த்தும் அபத்தியப் பொருட்களைத் தள்ளியும் வந்தால், பித்த சன்னி - பித்த சன்னி, சேனுபதியாகிய நாமச் சேத்தும மருத்து - சேனைத் தலைவன் என்னும் பெயரையுடைய கபத்தைச் சேர்ந்த வாதம் (கப வாதம்), வாத சன்னி - வாத சன்னி, சேட்டை மேகப்புண் - நீரையுடைய மேகப் புண்கள், குட்டம் - குட்டம், சேர்க்கை வியாதி - சேர்க்கையினுல் உண்டாகின்ற நோய் - தொத்து நோய்கள் (மேற்கண்ட புண் குட்டம்), மது மேகம் - வெளிக்குத் தெரியாமல் உள்ளிருந்தே கொல்லுகின்ற தித்திப்பு நீரும், சேனத்து இறகு - பருந்தின் இறகின் நிறத்தையுடைய, படர் தேமல் - மேலுக்குத் தடிப்புடன் தெரிந்து எழுந்து படர்கின்ற தேமலும் (செம்படை), சேவேறு உடலப் பிணிகள் எல்லாம் - சரீ ரத்தைச் சேருகின்ற நோய்களெல்லாம், சேரா - சரீரத்தை நெருங் காது, அழகு வடிவினுக்குச் சேரும் - தேகத்திற்கு அழகு உண் டாகும், அதிக பசியுண்டாம்-அதிக பசிஉண்டாகும், சேங்கன்றென்ன உரமுண்டாம் - இளங்காளையைப் போன்று பலம் உண்டாகும், சேகண்டியைப்போல் தொனியுண்டாம் - சேமங்கலத்தையடித்தால் உண்டாகின்ற சப்தத்தைப்போல் பேசத் தொனி (சப்தம்) உண் டாகும், சேடன் எனவே இன்பம் எல்லாம்-ஆதி சேடனைப் போன்று புணர்ச்சியில் இன்பத்தை எல்லாம் "தூமப் பணிகளொன்றித் தோய்ந்தாலென்ன" (சிலப்பதிகாரம்), சேரத்துணையாம் மென் மேலும் - கூட்டுவதற்கு (உடலைச் சேர்வதற்கு) மேலும் மேலும் துணையாயிருக்கும், சேயின் முகம் போல் களையுண்டாம் - செவ் வேளைப்போன்றுமுகத்தில் களை உண்டாகும், சேல்கேதனன் போல் எழில் உறுமே - மகர மீனின் கொடியை உடையவனுகிய மன் மதனைப் போன்று அழகு சரீரத்திற்குப் பொருந்தும் என்றவாறு.

சொர்ன பற்பம்

சொ

சொர்ன பற்பத்தைச் சொல்லுதுங்கேண் மதி
சொர்னமோர் தொடி சொல்லறலீர் தொடி
சொச்சமின்றிச் சொரிந்தரைத் தைந்துநாள்
சொக்கட்டானெனச் சொரூபமாவில்லை செய்
சொல்லுமத்தொகை சொக்க வெயிற் கண்வை
சொரிதிமேற்புடஞ் சொற்றமுறைப்படி
சொன்ன நீரினுஞ் சொன்னவையே புரி
சொரிபுன்றீகனுஞ் சொன்னவையே புரி
சொக்கவெள்ளைச் சொரூபமதாகுமே
சொமமத்தர் சொல்லுமிசைவாகவே
சொல்லு நெய்யிலுண் சொப்பன நோயறும்
சொற்சுதைக்கனுண் சொள்ளை வியாதிபோம்
சொன்ன நீரிலுண் சொட்டெழுநோயறும்
சொக்குவிக்கல் சொறிவலி தேமல் புண்
சொத்தமாகிச் சொகுமெய் விளக்கமாஞ்
சொந்தமாகுஞ் சொலு நற்சுகமெலாம்
சொன்னமால் வருஞ் சொன்னவரையெனச்
சொற்படிக்கு மெய்ச் சொத்தென வாக்கையோர்
சொம்புபொன்னெனச் சொப்புமணியெனச்
சொக்கர் முன் செய்த சொற்பெருஞ்சித்தெனச்
சொர்க்க வாழ்வெனச் சொர்க்கமிதாகுமே.

சொர்ன பற்பத்தைச் சொல்லுதும் கேண்மதி - பொன்னை நீருக்கும் விதத்தைக்கூறுகிறேன் கேட்பாயாக, சொர்னம் ஓர் தொடி, - தங்கம் ஓர் பலம், சொல்லறல் ஈர் தொடி - சம்பா நெற் பசுங்கதிர்ப் பால் இரண்டு பலம், சொச்சமின்றி - குறைவில்லாமல், சொரிந்து - ஊற்றி, ஐந்து நாளரைத்து - ஐந்து நாள் காலை முதல் மாலை வரை அரைத்து, சொக்கட்டான் எனும் சொரூபமா வில்லை செய் - சொக் கட்டான் என்று சொல்லும்படி அதன் வடிவைப் போன்று வில்லை

செய்து, சொல்லும் அத்தொகை - முன்னே சொல்லப்பட்ட (ஐந்து நாள்) நாளளவு, சொக்க வெயிற் கண்வை - நன்ருக எரிக்கும் வெய் யிலில் வைப்பாய், மேற்புடம் - மேலே செய்ய வேண்டியதாகிய புடத்தை (சில்லிட்டுச் சீலே செய்த பிறகு), சொரிதி - போடுவாயாக (ஆறியபின் எடுத்து), சொற்ற முறைப்படி - முன்னே கூறியபடி, சொன்ன நீரிலும் - முன்னே கூறிய சாற்றிலே (நெற்பசுங்கதிர்ச் சாறு), சொன்னவையே புரி - முன்கூறியதாகிய அரைத்தல், வில்லே செய்தல், காய வைத்தல் என்னும் தொழிலேச் செய்வாய், சொரி புனல் தீக்கணும் - முன்போலவே புடமிட்டு எடுக்கவும் (சொரி பின் தீக்கணும் என்றும் பாடம்), சொக்க வெள்ளே - சொரூபமதாகும் - நல்ல வெள்ளே நிறத்தை உடைய சொரூபத்தை அடையும், ஏ - அசை, சொம மத்தர் - திங்களேயும் ஊமத்தை மலர் மாலேயை யும் சூடிய சிவபெருமான், சோம என்பது சொம என்று விகாரப் பட்டது, சொல்லுமிசைவாகவே - சொல்லும்படியாகத்தானே, சொல்லு - சொல்வாய், நெய்யில் உண் - நெய்யில் மேற்படி பற் பத்தை அனுபானித்துண்ணில், சொப்பன நோய் அறும் - தூக்கத் திலே உண்டாகின்ற கனவுகள் தீரும், சொற்சுதைக்கண் உண் - சொல்லப்பட்ட பாலிலே உண்ண, சொள்ளே வியாதி போம் - புழு வெட்டினுலே உண்டாகின்ற சொள்ளே நோய் நீங்கும், சொன்ன நீரில் உண் - நெற் பசுங்கதிர்ச் சாற்றில் உண்ண, சொட்டெழு நோயறும் - உடலேப் பற்றிய தீய சிறு நோய்கள் தீரும், சொக்கு - மயக்கமும், விக்கல் - விக்கலும், சொறி - சொறியும், வலி - வலியும், தேமல் - தேமலும், புண் - புண் ணும், சொத்தமாகி - சௌகரியமாகி, சோருமெய் - சோர்வடைந்த உடலுக்கு, விளக்கமாம்-விளக்கமுண்டாகும், சொலுநற்சுகமெலாம் சொந்தமாகும் - சொல்லப்படுகின்ற நல்ல சுகங்கள் எல்லாம் சரீரத் திற்குச் சொந்தமாகும், சொன்னமால்வரும் - தங்கம் போன்ற அழ குடைய திருமாலானவர் எழுந்தருளியிருக்கின்ற, சொன்னவரை யென - பொன் மலேயைப் போன்று, சொற்படிக்கு - சொன்னபடி, மெய்ச் சொத்தென - உண்மையான பொருள் போல், ஆக்கை ஓர் - சரீரமானது ஒரு, சொம்பு பொன் என - செம்பினுல் செய்யப்பட்ட சொம்பானது பொன்னுகவும், சொப்பு - விளேயாட்டுச் சாமான்கள், மணியென - மணியாகவும், சொக்கர் - சொக்கனுதர், முன் செய்த - முன் காலத்திலே செய்து காட்டப்பட்ட, சொற்பெரும் சித்தென - சொல்லுவதற்கருமையான சித்தைப் போன்றும், சொர்க்க வாழ் வென - பிணியின்றி வாழ்கின்ற தேவர்களேப் போன்று, சொர்க்கம் இது ஆகும் - உயர்ந்த பொருளாகும் என்றவாறு.

சோகைக்குச் சூரணம்

சோ

சோகைக்குச் சூரணத்தைச்
சோர்விலாதுரைக்கக் கேண்மின்
சோகையினிலக்கணங்கேள்
சோர்வுகை கால்கட்குண்டாம்
சோறு வேண்டாமை தூக்கம்
சோளிபோலண்டம் வீங்கும்
சோதினி யெனக்காதாகும்
சோங்கடர் காகமாங்கண்
சோம்பலுக்குறையுளாமெய்
சோணிதமெங்கே போமோ
சோத்திரங் கவியை யொப்பாஞ்
சோலி செய்யிந்த நோய்க்கு
சோகையென்றொரு பேராமச்
சோகை நோய்க்கவிழ்தஞ் சொல்வாம்
சோமனட்பரத்தங்காமன்
சோற்றினுக்கிகல் முப்பல்லே
சோபியுப்பதிங்கங் கோட்டஞ்
சோளவேர்பனை வேர்வில் வேர்
சோணநாயுருவி வேரும்
சோக வேர்க்கணி வேர் வேல் வேர்
சோர்வில்லாச் சரக்கிரட்டிச்
சோட்டில் வேர் வகைகள் கூட்டிச்
சோரவார் துளசிச்சாறு சோடசத்தினமிவ்வாறே
சோதியாதபத்துலர்த்திச்
சோடை போலிடித்துத் தூள் செய்
சோலையில் வளர் கரும்பு சோபனமாகத்தந்த
சோடிலாவிசையமத்தஞ் சேர்த்துச்

சோதிவந்திடு முன் காலைச்

சோதி பொன்றிடு முன்மாலைச் சோகியாரளவு தின்று

சோர்வில் பத்தியமேற்கொள்ள

சோகையுமகன்றோடும்மே.

சோகைக்குச் சூரணத்தை - சோகை யென்னும் நோயிற் கருந்தப் பொடியை, சோர்விலாது - தளர்ச்சியில்லாமல், உரைக்கக் கேண்மின் - சொல்லக் கேட்பாயாக, சோகையினிலக்கணம் கேள் - சோகையென்னும் நோயின் இலட்சணங்களைக் கேட்பாயாக, சோர்வு கை கால் கட்குண்டாம்-கைகளுக்கும் கால்களுக்கும்தளர்ச்சி யுண்டாகும், சோறு வேண்டாமை - உணவு கொள்ளாமை, தூக்கம் - தூக்கம் (ஆனல் அலர்ந்த நித்திரை இல்லை), சோளி போல் அண்டம் வீங்கும்-பை போல அண்டம் வீங்கும், (சோல்ஹ இந்துஸ்தானிமொழி), சோதினியென - செத்தை போல் (துரும்பைப்போல்), காதாகும் - காதானது ஆகும், சோதினியெனக் காதாகும் - கடலிரைச்சல் போலிருக்கும் என்ற பொருளும் உண்டு, சோங்கடர் - தெளிவின்மை அதிகமுண்டாகும், காகமாம் கண் - காகத்தின் கண்ணைப் போல் ஒரு கண் பார்வை, சோம்பலுக்கு உறையுளா மெய் - தேகமானது சோம்பலுக்கு இருப்பிடமாகும், சோணிதம் எங்கே போமோ - இரத்தமானது எங்கு செல்லுமோ? (இரத்தக் குறைவு உண்டாம்), சோத்திரம் - காதானது, கவியை ஒப்பாம் - குரங்கினுடைய காதைப் போலாம்-(அஃதாவது மெலிந்து போம்), சோலி செய் - தொந்தத்தை உண்டாக்குகின்ற, இந்த நோய்க்கு - இந்த நோயினுக்கு, சோகை என்றொரு பேராம் - சோகை என்று ஒரு பெயர் உண்டாம், அச்சோகை நோய்க்கு - அந்தப் பெயரை உடைய (சோகை) நோய்க்கு (தீர), அவிழ்தஞ்சொல்வாம் - மருந்தைச் சொல்லுவோம், சோம நட்பு - செவ்வல்லிப்பூ, அரத்தம் - சிவந்த நிறத்தையுடை குங்குமப்பூ, காமன் - சிறு திப்பிலி, சோற்றினுக்கு இகல் - சோற்றுக்குப் பகையான போஜன குடாரி என்று சொல்லும் சீரகம், முப்பல்லை - முப்பலையாகிய நெல்லிவற்றல் தான்றிக்காய்த்தோல், கடுக்காய்த்தோல், சோபி - சுத்தித்த நேர்வாளம், உப்பு-இந்துப்பு, அதிங்கம்-அதிமதுரம்,கோட்டம்-கோஷ்டம்,சோளவேர்-சோளத்தின் வேர், பனை வேர்-பனையின் வேர், வில்வேர்-வில்வத்தின் வேர், சோணநாயுருவி வேரும் - சிவந்த நாயுருவி வேரும், சோக வேர் - முல்லை வேர், அசோக வேர் என்ற உரையும் உண்டு, கணி - வேங்கை யென்றும், பொன்னாங்காணி என்று கூறுவாரும் உளர், கணி வேர் - கரிசலாங்கண்ணி வேர், வேல் வேர் - கருவேலம் வேர், சோர்வில்லாச் சரக்கிரட்டிச் சோட்டில்வேர் வகைகள் - இவ்வேர்கள் ஒவ்வொன்றும் மேற்கூறிய சரக்கிற்கு இரண்டு

பங்கு, கூட்டி - சேர்த்து, சோரவார் - ததும்பும்படியாக ஊற்று, துளசிச்சாறு - துளசிச் சாற்றை, சோடசதினம் இவ்வாறே - இவ் வாருகவே பதினறு நாட்கள் செய்வாயாக, சோதி ஆதபத் துலர்த்தி - சோதியை உடைய சூரியனில் காயவைத்து, சோடை போலிடித்துத் தூள் செய் - மெல்லியதாக இடித்துப் பொடி செய் வாய், சோனையில் வளர் கரும்பு - மழை நீரிலே வளர்ந்த கரும்பா னது, சோபனமாகத் தந்த - மங்களகரமாகக்கொடுத்த, சோடிலா- இணையற்ற, விசயம் - சர்க்கரை (நாட்டுச் சர்க்கரை), அத்தம் சேர்த்து - சூரணத்தின் அளவிற்குப் பாதி சேர்த்து, சோதி வந்திடு முன் காலை - சூரியன் புறப்படும் முன்காலையிலும், சோதி பொன் றிடு முன் மாலை - சூரியன் மறையுமுன் மாலையிலும், சோகியா ரளவு - பலகரையினளவு, தின்று - அருந்தி, சோர்வில் பத்தியம் மேற்கொள்ள - நல்ல பத்தியத்தைக் கடைப்பிடிக்க (இச்சாபத்தி யத்தை), சோகையும் அகன்று ஓடும்மே - சோகை நோய் நீங்கும் என்றவாறு.

தயில வருக்கம்

தா - தை - தௌ

தயில வருக்கந்தனையுரைக்கத்தகுமெப்படியுமிப்பால்
தலைக்குத்தயில முறைத்தயிலம்
தடவுந்தயிலம் பிடித்தயிலம்
தணவாத்தயிலம் மடர்த்தயிலம் தழுவுத்தயில முதலாய
தயில வருக்கங்களுக்கெல்லாம்
தலைமையான சருவாதித்
தயில மிது கேள்வக் கணைமா
தளவிளவு களவு முன்னை
தகரை காரை சூரை வழை
தணக்கிவ் வகை வேர் நிறையொன்றே
தண்ணமதனற் றகித்திடு நீர்
தனின் முக்கடுகு லவங்கமுனி
தவணவிரைவாதுமையவுரி
தக்கோலத்தோடதிமதுரம்
தனதாய் நிறுத்து வெண்குடப்பால்

தரு நெய்யதனிலொன்ருக்கித்
தணவா தனலிலதையிட்டுத்
தயிலமாக்கியத் தைலம்
தனே நெற்கூட்டிலிரு மூன்று
தசநாள் வைத்தெடுத்ததற் பின்
தரமாய் முழுகி மெய்க்கிட்டால்
தலே நோக்காடு தலேக்குடைச்சல்
தவடை பிடிப்பு மூக்கடைப்பு தந்தவாய்வு பீசன நோய்
தடித்த சன்னி சுவேத சன்னி தள்ளுவாய்வு பாரிச நோய்
தனுசுவா தமுதற்பிணிகள்
தகரத்தகர யிடித்தடிக்கும்
தலேக்குத் தெளிவு தனேக் கொடுக்கும்
தடிபோல் வளேந்த காத்திரத்தின்
தடியைத் தடிபோல் பண்ணுவிக்கும்
தைவந்துடலிதென் வயினே
தருமே தகமேதனதாக தன்மயமாஞ் சருவாதித்
தயிலமிஃது தனேப் பாராய் தயிலமிஃதேதனேத் தேரே.

தயிலவருக்கந்தனேயுரைக்கத்தகு மெப்படியுமிப்பால் - எப்படியும் உரைக்கத் தகும் தயில வருக்கத்தை, தலேக்குத் தைலம், முறைத் தயிலம், தடவுந் தயிலம், பிடித்தயிலம், தணவாத்தயிலம், (எரிக்கப் படாத தயிலம்), அடர்த்தயிலம், தழுவுதயிலம் (புண்களுக்கு உபயோகப்படுத்தும் தயிலம்), முதலாய - முதலிய, தயில வருக்கங்களுக் கெல்லாம் - தயில வருக்கங்களுக் கெல்லாம், தலேமையான - தலேயான, சருவாதித் தயிலமிது - சர்வாதித் தயிலந் தனே, கேள் - கேட்பாயாக, வக்கணே - வக்கணே, மாதளே - மாதுளே, விளவு - விளா, களவு - களா, முன்னே - முன்னே, தகரை - தகரை, காரை - காரை, சூரை சூரை, வழை-புன்னே, தணக்கு - தணக்கு, இவ்வகைவேர் - இவ்வேர்களே யெல்லாம், நிறை யொன்றே - ஒரு நிறையாக எடுத்து, தண்ணமதனல் தகித்திடு நீர் - குளிர்ந்த நீர் விட்டுக் குடி நீராக்கு, தனின் - அதில், முக்கடுகு - சுக்கு, மிளகு,திப்பிலி, லவங்கம் - இலவங்கம், முளி - நெல்லிமுள்ளி, தவணவிரை - தவனவிரை, வாதுமை - வாதுமை, அவுரி - அவுரி, தக்கோலம் - தக்கோலம், அதிமதுரம் - அதிமதுரம், தனதாய் நிறுத்து - சமனுக

எடுத்து, வெண்குடப்பால் தருநெய்யதனில் - வெள்ளாட்டு நெய்யில், ஒன்ருக்கி - ஒன்ருகக் கலந்து, தணவாதனலில் - விடாது எரிகின்ற தீயில், அதையிட்டு - அக்கலவையை வைத்து, தயிலமாக்கி - தயிலமாகக் காய்ச்சி, அத்தயிலம் தனே - அதனே, நெற்கூட்டினிலிருமூன்று தசநாள் - நெல்லிற்குள் பதினைந்து நாள், வைத்தெடுத்து - வைத்து எடுத்து, அதற்பின் - பின்னர், மெய்க்கிட்டுதரமாய்முழுகி - உடம்பிற்கு அளவாகத் தேய்த்துக்குளித்து வர, தலை நோக்காடு - தலைவலி, தலைக்குடைச்சல் - தலைக்குடைச்சல், தவடைப்பிடிப்பு - தாடைப்பிடிப்பு, மூக்கடைப்பு - மூக்கடைப்பு, தந்தவாய்வு - தந்த வாய்வு, பீனச நோய் - பீசன நோய், தடித்த சன்னி - பெருஞ்சன்னி, சுவேதசன்னி - வியர்வையை விளைவிக்கும் சன்னிரோகம், தள்ளுவாய்வு - தள்ளுவாய்வு, பாரிசநோய் - பக்கவாதம், தனுசுவாதம் - தனுர்வாதம், முதற்பிணிகள் - முதலான நோய்களை, தகரத்தகர யிடித்தடிக்கும் - விற்கொண்டு சிதறவடிப்பது போன்று சிதறடிக்கும், தலைக்குத் தெளிவு தனைக் கொடுக்கும் - புத்திக்குத் தெளிவையும் கொடுக்கும், தடிபோல் வளைந்த காத்திரத்தின் - முள்ளந்தண்டு போல் வளைந்த உடலை, தடிபோல் பண்ணுவிக்கும் - உலக்கைபோன்ற உறுதியினைக் கொடுக்கும், தைவந்துடலிதென்வயினே - உடலுக்குப் பாக்கியம் வந்தடைவதுடன், தருமேதகமே தனதாக - தெளிவும் நன்மையும் வந்து, தன்மயமாம் - இன்பநிலையைக்கொடுக்கும், சர்வாதித்தயிலமிஃதுதனைப்பாராய் - திறங்கொண்ட சர்வாதித் தயிலத்தைக் காண்பாயாக, தயிலமிஃதேதனைத்தேரே - இதுவே சிறந்த தயிலமெனத் தெரிவாயாக.

சர்வாதித்தைலம் செய்முறை

வக்கணை, மாதுளை, விளா, களா, முன்னை, தகரை, காரை, சூரை, புன்னை, தணக்கு ஆகிய இவ்வேர்களை யெல்லாம் ஒரு நிறையாய் எடுத்துக் குடி நீராக்கியதில் சுக்கு, மிளகு, திப்பிலி, இலவங்கம், நெல்லி முள்ளி, தவனவிரை, வாதுமை, அவுரி, தக்கோலம், அதிமதுரம் ஆகியவைகளைச்சமனாகஎடுத்து வெள்ளாட்டு நெய்யில் ஒன்ருகக் கலந்து அக்கலவையை அடுப்பில் வைத்து, விடாது எரித்துத் தைலமாகக் காய்ச்ச வேண்டும், பின் பதினைந்து நாள் நெல்லிற்குள் வைத்து எடுக்க வேண்டும்.

தீரும் நோய்கள் :- தலை நோய், தலைக் குடைச்சல், தாடைப் பிடிப்பு, மூக்கடைப்பு, தந்த வாய்வு, பீனசவாய்வு, பெருஞ்சன்னி, வியர்வையைக் கொடுக்கும் சன்னி ரோகம், தள்ளு வாய்வு, பக்க வாதம், தனுர்வாதம் முதலியன.

தாளிசச் சூரணம்

தா

தாளிசச் சூரணந் தானுயர்ச்சியே
தாளிச பத்திரிதான்றி முக்கடு
தாடிமமாவரி தாழை மூதண்டை
தாதகிகேதகை தாரு வில்விளா
தாமரை வழுதழு தாழை மாதவி
தாலிமந்தாரையித்தாரண வேர்வகை
தாஞெரு நிறைப்படி தாரமாக முன்
தாளிசபத்திரி தானிரட்டியே
தாவுரவிற்பொடி தானிடித்ததைத்
தாக்கணங்கிடத்து நீர் தாழையின் மது
தாக்கணங்காக நிதானமாகவை
தாத்திரிக்கிடையினிதாக வேமுநாள்
தாவுமாதவத்திலே தாவவோர்பக்கந்
தானதையிடித்துமைதானிதாகவே
தாவளச் சருக்கரை தானதிற் பெய்து
தாமசமின்றி யோதாமறைப்படி
தாகமற்றிடமதிதாலுவிற் கொளத்
தாடைநோய் விலாவலி தாடி வாய் நோய்
தாட்பிடிப்புறவலிதாகமா சுரந்
தாமத மூர்ச்சை மேதான விக்கல் நோய்
தாமரமத்த நோய் தானெலாமறுந்
தாலுவுக்க திருசிதானளித்திடுந்
தாரகவமுதெனத் தாரைவாய்த்திடுந்
தாரைகளிரண்டு நேர்தாரையாகுமால்
தானமிதாமெனத் தானமாகுமே
தாவுக்கிரப்பசிதானெழும்பிடுந்
தாளிசபத்திரி தாவிதாகுமே.

தே. 8.

தாளிசச் சூரணந்தானுயர்ச்சியே - தாளிசாதிச் சூரணம் உயர் வானதாகும், தாளிசபத்திரி - தாளிச பத்திரி, தான்றி - தான்றி, முக்கடுகு - சுக்கு, மிளகு, திப்பிலி, தாடிமம் - மாதுளை, மாஅரி - பெரிய தண்ணீர் விட்டான் கிழங்கு, தாழை - தென்னை, மூதண்டை- அறுகு,-தாதகி - ஆத்தி, கேதகை-தாழை, தாரு - தேவதாரு, வில்- வில்வம், விளா-விளா, தாமரை-தாமரை, வழு - கத்தரி, தழுதாழை- தழுதாழை, மாதவி-வசந்தமல்லிகை, தாலே - பனை, மந்தாரை - மந் தாரை, இத்தாரண வேர் வகை - அமைக்கின்ற வேர் வகைகள், தானொரு நிறைப்படி - ஓர் அளவாக, தாரமாக - கொண்டு, முன் தாளிசபத்திரி தானிரட்டியே - முன் கூறப்பட்ட தாளிசபத்திரி இரு பங்கு கொண்டு, தாவுரலில்தான் பொடி இடித்து - பெரிய உரலிலிட்டுப் பொடியாக இடித்து, அதை - அப்பொடியினை, தாக் கணங்கிடத்து நீர்தாழையின் மது - தாமரைக் குளத்தங்கரையி லிருக்கும் தாழையிலுள்ள தேன், தாக்கு - அப்பொடியில் சேர்த்து, இனிதாக ஏழு நாள் தாத்திரிக் கிடையினில் நிதானமாக அணங்காக வை - பூமியினுள் ஏழு தினங்கள் தேன் கலந்துள்ள அச்சூர ணத்தை தெய்வத்தைப் பேணுவது போன்று வைத்திரு, தாவளச் சர்க்கரையை - சர்க்கரையை, தானதை மைதானிதாகவே இடித்து-மைபோன்று இடித்து, அதிற்பெய்து-சேர்த்து, தாவவோர் பக்கம் - ஒரு பட்சம், தாவு மாதவத்தில் - வெயிலில் வைத்து, தாமசமின்றி-காலம் கடத்தாது, ஓது ஆம் மறைப்படி - நூற்களில் கூறப்பட்ட முறைப்படி கொள்ள, அதிதாக மற்றிட - அதிதாக நோய் நீங்க, தாலுவிற் கொள்ள - நாக்கிற் கொள்ளவும், தாடி வாய் நோய் - அலகு நோய், தாள் பிடிப்பு - கால்பிடிப்பு, புறவலி - புற இசிவு, தாகமாசுரம்-எரிச்சலுடன் கூடிய சுரம், மேதான - அதி, விக்கல் நோய் - விக்கல் நோய், தாமரமத்த நோய் - உன்மத்த நோய், தானெலாமறும் - முதலிய நோய்கள் எல்லாம் நீங்கும், தாலுவுக்கு அதிருசிதான் அளித்திடும் - நாக்கிற்கு ருசியைக் கொடுக்கும், தாரகவமுதென தாரை வாய்த்திடும் - நீர் ஊறும், தாரைகளிரண்டு நேர்தாரையாகுமால் - கண்ணிற்கு நல்ல ஒளி யைக் கொடுக்கும், தானமிதாமெனத் தான மாகுமே - இது ஒரு பெருங் கொடை போன்றதாகும், தாவு - பரந்த, உக்கிர - நல்ல, பசிதானெழும்பிடும் - பசியை உண்டாக்கிடும், தாளிச பத்திரி தானிதாகுமே - இக்குணங்களை யெல்லாம் தாளிசபத்திரி சூரணம் கொடுக்கும்.

தாளிசச்சூரணம் செய் முறை

தேவையான சரக்குகள் :- 1. தாளிசபத்தி 2. தான்றி 3. சுக்கு மிளகு, திப்பிலி, 4. மாதுளை 5. பெரிய தண்ணீர் விட்டான் கிழங்கு

6. தென்னை 7. அறுகு 8, ஆத்தி 9. தாழை 10. தேவதாரு 11. வில்வம் 12. விளா 13. தாமரை 14. கத்தரி 15. தழுதாழை 16. வசந்த மல்லிகை 17. பனை 18. மந்தாரை ஆகியவைகளின் வேர்கள் 19. தேன் 20. வெள்ளைச் சர்க்கரை

செய் முறை :- தாளிசபத்திரி வேர் இரண்டு பங்கும், ஏனைய வேர்கள் எல்லாம் ஒரு பங்கும் சம அளவாகக் கொண்டு இவ்வெல்லா வேர்களையும் உரலிலிட்டு இடித்து எடுத்த பொடியுடன் தாமரைக்குளத்தின் கரையிலுள்ள தாழையின் தேன் கலந்து ஷி சூரணத்தை ஏழுதினங்கள் பூமிக்குள் புதைத்து வைத்து எடு. பின் தாவளச் சர்க்கரையை மைபோல் இடித்துப் பொடியாக்கிச் சூரணத்திற் கலந்து ஒருபட்சம் வெயிலில் காய வைத்துக் கொள்ள வேண்டும்.

அனுபானம் :- நூற்களில் கூறியுள்ளபடி

தீரும் நோய்கள் :- அதிதாக நோய் நீங்கும், தாடி வாய் நோய் (அலகு நோய்), தாள் பிடிப்பு, கால்பிடிப்பு, புறஇசிவு, எரிச்சலுடன் கூடிய சுரம், விக்கல் நோய், உன்மத்த நோய், நாக்கிற்கு ருசியைக் கொடுக்கும், கண்ணிற்கு நல்ல ஒளியைச் கொடுக்கும், பசியைக் கொடுக்கும்.

திராவக வைப்பு

தி

திராவகவைப்பு திராசு நிறுப்பு
தியான செய் தியான மிதற்கே
திராவிட மொத்த திராணியதற்கே
திலமிளகரிதகி தினை வரகபினி
திபிலி மெய்கடுகரி திரிபுரை மஞ்சள்
திரள் முளியிலவணை திரிப லைய வரை
திரதிகை நவமிவி திகளிவைநிறையே
தினகர முனமிடு திதிகளதினை
திகிலயை யிரசிதை திணையுவருடனே
தினமிருபஃதரை திரவியமெனவே
தினமிருபஃதரை திரவியமெனவே
திடமொரு கடமது திவனவையதிலே

திட்டெனவிட்டது திட்டென விட்டே
திக்கயமுக்கதி திட்பமுமிட்டோர்
தினமிருபஃதொடு தினமுமோர்பஃதே
திகிலறவடியில்லை திகநடையெனவோர்
திடனுறு கருவிகள் தினமதிலிழியத்
திவவெனவடர் கடத் தினிலஃதமரும்
திராவைகளற வரு திராவகமஃதே
திணையெழுதிணையெனத் தினவறலுடனே
திமிர்வலிகடி படர் தினவிவையறுமே
தினிசுயர் சுரமடர் திமிரமுமறுமே
திரிதருசுழல் வளிதிவன் சனியறுமே
திகிலுறு பயித்தியத் திரள் விணையறுமே
திடிலென விழுவலி திமிர் வலியறுமே
தினயறிநவிகளு திரவலியறுமே
திண்டென வண்டமெய் திண்குன்மமறு மோர்
திப்பிரமையைப் பொரு திக்கயமுறுமே
திண்ணமோரரணெனத் திறமிகவறுமே
திரிபுரபவனிகர் திடனது தருமே
திடமுறுமவிடதத் திலகமிதாமே.

திராவகவைப்பு திராசுநிறுப்பு தியானசெய் தியான மிதற்கே திராவிட மொத்த திராணியதற்கே - திராவக வைப்பிற்குச் சேர்க்கப்பட வேண்டிய சரக்குகளையெல்லாம் துல்லியமாக நிறுத்து எடுத்துக் கொண்டு சிந்தித்து அனுஷ்டானம் செய். இது தமிழ் மொழியைப் போன்ற வலுவுடையது.

தேவையான பொருட்கள் :- 1. எள்ளு 2. மிளகு 3. கடுக்காய் 4. திணை 5. வரகு 6. அபினி 7. திப்பிலி 8. பெருங்காயம் 9. கடுகு 10. கொடிவேலி வேர் 11. பூண்டு 12. உரைமஞ்சள் 13. நெல்லி முள்ளி 14. ஐந்துப்பு 15. திரிபலை 16. அவரை, திருதிகை - மூன்று, நவமி - ஒன்பது

செய் முறை:- மேற் சொல்லப்பட்ட சரக்குகளை மூன்று, ஒன்பது என்ற விதிப்படி நிறுத்து எடுத்துக் கொண்டு வெயிலில் நன்ருக' உலரச் செய்து அவைகளை அரைத்தெடுத்துக் கொள்ள வேண்

டும். பின் அந்த அரவைப் பொருளை நல்ல பாண்டத்தில் அள்ளிப் போட்டு வாலையை வைத்து பந்தனம் செய்து உலர்த்தி அடுப் பேற்றித் திராவக மிறக்கிக் கொள்ளவும்.

அனுபானமும் தீரும் நோய்களும் :- ஒரு தினை முதல் ஏழு தினையளவு நீரில் கலந்து சாப்பிட திமிர்வலி, காணுக்கடி, படர் தாமரை, தினவு ஆகியவைகள் நீங்கும். பலவகை அடர்சுரம், திமிர்நோய் நீங்கும், சுழல் வாய்வு, சன்னி நீங்கும், திகில் உண்டா கின்ற பயித்திய நோய்கள் எல்லாம் நீங்கும், திடீரென்று சாய்க்கக் கூடிய வலிப்பு நோய் நீங்கும், குன்ம ரோகங்கள் நீங்கும், அஷ்ட கசங்களைப் போல் பிரமை ரோகத்தை நீக்கும், உடலை நல்ல கோட்டை போன்று பாதுகாக்கும், சிவனைப் போன்ற திடத்தினைக் கொடுக்கும், இம்மருந்து மருந்துகளுக் கெல்லாம் திலகமாகும்.

தீபன கற்கம்

தீ

தீபன கற்க நோய்க்கு தீபன கற்கமாமே
தீமுனர் மெழுகதாகுந் தீவினை மந்த நோய்க்கே
தீர்ந்திட வினையைத் தீர்த்து தீர்க்கவாணுளை நல்கும்
தீவிகையொத்துமந்தத் தீப்பிணித்திமிர மாட்டுந்
தீதறு மிஞ்சி காமன் தீக்ஷணமோடிசுக்கு
தீரமாகிராம்புகுப்பை தீவினெண்முறையாமிந்த:
தீக்ஷையின் கிரமமேழுந் தீர்த்தத்திலாட்டியட்டு
தீட்டியொவ்வொன்று வேறு தீக்கையின் முறை போலூட்டில்
தீவினைப் பிணியைக்கொல்லுந் தீரவையெனவேயார்ந்து
தீப்பிணியிருட்டை யோட்டித் தீபமார் தீபனத்தைத்
தீவிரமாக வேற்றித் தீக்ஷணப் பசியாமண்ணைத்
தீர்க்க மாநிலைக்கப் பண்ணுந் தீழ்ப்புறு கூழைக் கூடத்
தீவதாக்ஷியைப் போலாக்குந் தீனமாமுடலைத் தங்கத்
தீர்மைமாலவரை நோக்குந் தீண்டவொண்ணுத பானு
தீமதி மேனியாகுந் தீங்குறு விடங்கள் யாதுந்
தீண்டினும் படருருது தீர்த்த யாத்திரை போனேர்க்குத்

தீதெலாமொழிந்து மேலே தீர்த்தனதருள் வந்தாற்போற்
தீர்க்கரோகங்கள் போய்மேல் தீவண்ணனருளினலே
தீதின்றி வாழப்பண்ணுந் தீபனக்கற்க மீது
தீர்ப்பெனலறுதியாமே.

தீ - பசியென்று, பன் - சொல்லுதல், அகல் - நீங்கின, கம் நோய்க்கு - நீர் கொண்ட நோய்க்கு, தீபனகற்கம் ஆம் - பசி எடுக்கக் கூடிய கற்கம் ஆகும், தீவினைமந்த நோய்க்கு - கொடிய துன்பங்களை விளைவிக்கின்ற பசியில்லா நோய்க்குக்கொடுத்தால், தீமுனர் மெழுகதாகும்-தீயில் அகப்பட்ட மெழுகைப் போலாம், தீர்ந்திடா வினை-தீராதநோய்களை, தீர்த்து-மேற்சொன்னநோய்களைமந்தத்தை நீக்கும் வழியானே தீர்த்து, தீர்க்க வாழ்நாளை நல்கும் - நீடித்த ஆயுளைத்தரும், தீவிகை ஒத்து - விளக்கை ஒத்து (இருட்டை நீக்கி வெளிச்சத்தைக்கொடுப்பது போல்), மந்தத்தீப்பிணி - மந்தமாகிய கொடிய பிணியாகிய, திமிராம் - இருட்டை, மாட்டும் - போக்கும், தீதரும் - குற்றமற்ற, இஞ்சி - இஞ்சி, காமன் - திப்பிலி, தீக்ஷணம் - மிளகு, மோடி - திப்பிலி மூலம், சுக்கு - சுக்கு, தீரமாகிராம்பு - கால் நீண்ட பெரிய கிராம்பு, குப்பை - சத குப்பை, தீவி னெண்முறையாம் - சப்த தீவின் கணக்கைக் கொண்ட ஏழாகிய, இந்த ஏழும் - தனித்தனி ஏழையும், தீக்ஷையின் கிரமம் - சுத்தி பண்ணும் முறைப்படி செய்து, தீர்த்தத்தில் ஆட்டி - நீர் விட்டரைத்துக் கொழுக்கட்டைபோல் பிடித்து, அட்டு - பிட்டவியலாய் அவித்து, ஒவ்வொன்று வேறு தீட்டி - தனித்தனியே வெவ்வேருகச் செய்து, (வேறு - இடைநிலை தீபகம்), (வேறு) தீக்கையின் முறைபோல் ஊட்டில் - அனுபானம் முறைபோல் கொடுத்தால் (தனித்தனியே கொடுத்தல் வேண்டும்), தீவினைப் பிணியைக்கொல்லும் - கொடிய பிணிகளை நீக்கும், தீர - தைரியத்தை உடைய, ஐயென - படைத்தலைவனைப் போல, ஆர்ந்து-பொருந்தி, தீப்பிணி இருட்டை ஓட்டி - கொடிய நோயாகிய இருட்டைப் போக்கி, தீபமாம் - வெளிச்சமாகிய, தீபனத்தை - பசியை, தீவிரமாக ஏற்றி - விரைவாக ஏற்றி, தீக்ஷணப் பசியாமணீண - அக்கினி சம்மந்தமான பசியாகிய அழகை (மண்ணி - அலங்கரித்தல்), தீர்க்கமாம் நிலைக்கப்பண்ணும் - எப்பொழுதும் இருக்கப்பண்ணும், தீழ்ப்புறு- இழிவாகக்கூறப்பட்ட(புல்லுணவைக்கூட),கூழைக்கூட-கூழையும், தீவதாஷியைப் போல் - திராட்சையைப் போல், ஆக்கும் - இனிமையைக் கொடுக்கும், தீனமாம் உடலை - பசியின்மையால் வன்மை குறைந்து கெட்ட உடலை, தங்கத் தீர்மை - தங்கத்தின் அழகை உடைய, மால்வரை - பெரிய மலைக்கு, நேராக்கும் - ஒப்பாகச் செய்யும், தீண்ட ஒண்ணுத பானு - சூரியனைப் போல்ஒளியும்,

தீமதி - வெளிச்சத்தையுடைய சந்திரனைப் போல், மேனியாகும் - சரீரத்தில் நிற முண்டாகும், தீங்குறு விடங்கள் யாதும் - தீமையை விளைவிக்கின்ற விடங்களில் எதுவும், தீண்டினும் - சரீரத்தைத் தீண்டினாலும், படருறாது - சரீரத்திலே பரவாது, தீர்த்த யாத்திரை போனோர்க்கு - ஸ்தல யாத்திரை சென்றவர்கட்கு, தீதெலா மொழிந்து - செய்த தீவினையெல்லாம் நீங்கி, மேலே - மேலே, தீர்த்தனருள் வந்தாற்போல் - சுத்தனாகிய இறைவனுடைய அருள் வந்தடைந்ததுபோல், தீர்க்க ரோகங்கள் போம் - நீடித்த ரோகங்கள் தீரும், மேல் - இனி, தீவண்ணன் அருளினாலே - ஈசுவரனாகிய சிவந்த நிறத்தையுடைய சிவனின் அருளினாலே, தீதின்றி வாழப் பண்ணும் - நோய்க்குற்றம் உண்டாகாமல் வாழும்படிச் செய்யும், ஈது - இது, தீபன கற்கம் எனல் தீர்ப்பு - தீபனகற்கம் என்று சொல்லல் தீர்ப்பாகிய, அறுதியாம் - முடிவாகும்.

தெய்வ உபாசம்

தெ

தெய்வ உபாசனை தெய்வவாராதனை
தென்வளர் கணபதி தெறுமாறுதிமறத்
தெரிவை வேள் காரியித் தெய்வவர்க்கத்தொடு
தென்னவர் தங்குலத் தெய்வமாகியதொரு
தெக்ஷப் பிரஜாபதித் தெறுமந்தகனெடு
தென்டிரையடர் புவி தெரிக்குதுங் கேட்டி
தெறுவியின் முதுகில தெறுவியதாமே
தெலுங்கு முதன்மொழித் தெய்வ நற்பாஷைத்
தெம்முதலக் கர தெக்ஷணலக்ஷணர்
தெற்கு மேற்றிசை கீழ் தென் கீழ் தென்மேல்
தென்பலாவாழை மா தெம்மாதுளை விளா
தெக்ஷிணை பொன்மணி தெரிகலை நூல்வாள்
தெர்ப்பைபூவறுகிலை தெளிபழுப்பாறே
தெற்றி குட்டிமைநடை தெருமனைவாசல்
தெண்ணருச்சனை தெந்தனமுந்துறல்
தெட்டிலுரைத்திடில் தெக்கணமுறையே
தெருமாலறுக்குமித் தெய்வ உபாசனை
தெள்ளியவமுதினிற் தெய்வோத்தமமாந்

தெவ்வடர் பற்பமுன் தெரிந்த சிந்தூ ரமுந்
தெள்ளுமாத்திரையுடன் தென்மை செய்கிருதமுந்
தெரிவுறுலேகியமுந் தென்னிடு தைலமுந்
தென்முனிமுறையினிற் றென்மொழிவாகடத்
தெம்பினிற் கைவசத் தெய்வரக்ஷணையிதே.

தெய்வ உபாசனை தெய்வ ஆராதனை - இறைவனை வழிபடுதலும் பூசனை செய்தலும், தென்வளர் கணபதி - தெற்கே வளர்ந்து கொண்டிருக்கும் விநாயகக் கடவுள், தெறுமாருதி - பகைவர்களைத் தெறக்கூடிய அநுமன், மறத்தெரிவை - வீரத்தையுடைய துர்க்கை, வேள் - குமரவேள், காரி - பைரவர், இத்தெய்வ வர்க்கத்தோடு - ஆகிய இத்தெய்வங்களோடு, தென்னவர் தங்குலத் தெய்வமாகிய தொரு தெக்ஷப் பிரஜாபதித்தெறு - பாண்டிய குலத்தவரின் ஒப்பற்ற தெய்வமும் தக்ஷயனைக் கொன்றவனுமாகிய, அந்தகனொடு - சிவனொடு (தக்ஷயனைக் கொன்ற இயமன்), தெண்திரையடர் புவி தெரிக்குதுங்கேட்டி - ஓதம் புரிகின்ற கடலாற் சூழப்பட்ட இப் பூமிக்குத் தெரியப்படுத்துகிறோம், தெறுவியின் முதுகில தெறுவிய தாமே - அழிவிற்குப் பெரும் அழிவைக் கொடுக்கக் கூடியதாகும், தெலுங்கு - தெலுங்கிற்கு, முதன்மொழி - முதன் மொழியாகிய, தெம்முதல் அக்கர தெக்ஷணர் லக்ஷணர் - வழிபாட்டிற்குரிய தேவ பாஷை, தெற்கு மேற்றிசை - தெற்கு மேற்கு ஆகிய திசைகள், கீழ் - கீழ் திசை, தென்கீழ் - தென் கீழ் திசை, தென்மேல் - தென் மேற்குத் திசை, தென் பலா வாழை மா தெம்மாதுளை விளா - தேங்காய், பலாப்பழம், வாழைப்பழம், மாம்பழம், மாதுளம் பழம், விளாம்பழம் ஆகிய பழவர்க்கங்களோடு, தெட்சணை - தெட்சணை, பொன்-பொன்னும், மணி - மணிகளும், தெரிகலை நூல் - வஸ்திரம், நூல் ஆகியவைகளும், வாள் - வாள், தெர்ப்பை - தெர்ப்பை, பூ - மலர், அறுகு - அறுகம்புல், இலை - பத்திரம், பழுப்பாறே - நிறங்கள் ஆகிய இவை ஆறும், தெற்றி - திண்ணை, அல்லது சித்திரக்கூடம், குட்டிமை - கற்பரப்பப்பட்ட இடம், நடை - நடையிலும், தெரு - தெருவிலும், மனைவாசல் - வீட்டு வாசலிலும், தெண்ணருச்சனை - தெளிவான அருச்சனை, தெந்தனம் முந்துறல் - தாளக் குறிப்பு முன்னிடம்பெற, தெட்டிலுரைத்திடில் தெக்கண முறையே - தென்னவர் வழக்கமாகும், இத்தெய்வ உபாசனை தெருமாலறுக்கும் தெள்ளிய அமுதினிற் தெய்வோத்தமமாம் - இத்தெய்வ உபாசனை அறிவு மயக்கத்தைப் போக்கி அமுதை விட உயர்வளிக்கும், தெவ்வடர் தென்முனி முறையினிற் தென்மொழிவாகடத் தெவ்வடர் பற்பமுன் தெரிந்த சிந்தூரமுந் தெள்ளுமாத்திரையுடன் தென்மை செய்கிருதமும் தெரிவுறு லேகியமுந் தென்னிடு தைலமும் - அகத்

திய முனிவரால் தென்மொழியில் கூறப்பட்டுள்ள பற்பமும் சிந்தூரமும் மாத்திரைகளும் கிருதமும் இலேகியமும்போன்ற செய்யப்பட்ட மருந்துகளுக்கு சத்துருத் தன்மைகள் நீங்கி, தெம்பினிற் கைவச தெய்வ ரக்ஷணையிதே - கைவசப்படுத்தும் தன்மையுடையன இத் தெய்வ வழிபாடும் ஆராதனையுமாகும்.

தேங்காய்க்குழம்பு

தே

தேங்காய்க் குழம்புதனை அறிதி
தேங்காய்க்குழம்பாய் தேங்காயே
தேங்காயுலர்ந்த கொப்பரைக்காய்
தேறுமத னைப்புழையாக்கி
தேற்ருன் விரைரோகணிமாவேல் தேவதாரி முக்கடுகு
தேமாவாளமிவைகள் விரை
தேடுமரைக்காற் பலலவணங்
தேடி நிறுத்துப் பொடியாக்கி
தேன் வார்த்ததன் வாய்மெழுகடைத்து
தேனுமலத்தாற் சீலைமண் செய்
தேருதபத்தின் முப்பகல்வை
தேவாலயத்தை நிகரிடத்தில்
தேர் முப்பது நாள் நிலத்தில் வைத்துத்
தேடியெடுத்து மேற்போக்கித்
தேவாமெரியிலா மணக்கைத்
தேர்நேயத்திலஃதையே தேனேராணமவை யாகுந்
தேவாமிருதமஃதையுணத் தேறலின மும்மலங் கழியும்
தேனரெனுமுக்குறும் பொழியும்
தேவாங்கென உள்ளாவியறத்
தேயுங்கிராணி கழிச்சலறும்
தேரைவீழ்ந்து நேர்ந்தழிந்த
தேங்காயென மேகத்தாலே தேகமுலர்ந்த மெலிவகலும்
தேமலூறு மேகமறும் .

தேசாந்திரி போற் பேய்போற்பேய்த்
தேர்போலுழலுந் துன்பமறும்
தேசமறியப் பாண்டிதமாய்
தேரனுரைத்த வாகடமே
தேர்ந்ததென்றுதானுணரே.

தேங்காய்க் குழம்புதனை - தேங்காயினல் செய்யப்பட்ட குழம்பு பக்குவத்தை, அறிதி - தெரிந்து கொள்வாய், தேங்காய் குழம்பாய் - தேங்காய் குழம்பைப் போல, தேங்காயே - திகைக்காதே (மனம் குழம்பாதே), தேங்காய் உலர்ந்த கொப்பரைக்காய்-நன்ருக உலர்ந்த கொப்பரைத் தேங்காய், தேறுமதனை - தேர்ந்தெடுக்கப்பட்டதை, புழையாக்கி - குடுமி நீக்கி ஒரு கண்ணைத் துளைத்து, தேற்ருன் விரை - தேத்தான் வித்து, ரோகணி - கடக ரோகணி, மா - மாம்பருப்பு, வேல் - கருவேல் வித்து, தேவதாரி - தேவதாரிக்கட்டை, முக்கடு - திரிகடுகு, தேமா - தேமாங்காய் பருப்பு (தித்திப்பு மாங்காய்), வாளம் - நேர்வாளம், இவைகள் விரை - இவைகளின் வித்துக்கள், லவணம் - உப்பு, தேடும் - தேடி, அரைக்கால் பலம் - வகைக்கு அரைக்கால்பலம், தேடி - ஆராய்ந்து நல்லதாய் பார்த்தெடுத்து, நிறுத்து - லோபஞ்செய்யாமல் நிறுத்தெடுத்து, பொடியாக்கி - பொடி செய்து, தேன்வார்த்து - (தூளைத் தேங்காய்த் துளை வழியாய்ச் செலுத்தி) தேன் நிறைய விட்டு, அதன் வாய் மெழுகடைத்து - அதன் வாயை மெழுகால் அடைத்து, தேனுமலத்தால் சீலமண் செய் - பசுவின் மலத்திஞல் கவசம் செய்து, தேர் - தேர்ந்த, ஆதபத்தில் முப்பகல் வை - சூரியனில் மூன்று நாள் வைத்துக் காயவைத்து, தேவாலயத்தை நிகரிடத்தில் - சுத்தமான இடத்தில், தேர் முப்பது நாள் நிலத்தில்வைத்து - முப்பது நாள் பூமியில் புதைத்து வைத்திருந்து, தேடியெடுத்து - பிறகு வைத்த இடத்திலிருந்து தேடி எடுத்து, மேற்போக்கி - கவசம் சிரட்டை முதலானவைகளை நீக்கி, ஆமணக்கைத் தேர் - நல்ல ஆமணக்காகத் தேர்ந்தெடுத்து, நேயத்தில் - (அதனல் செய்யப்பட்ட) நெய்யில், தேவாமெரியில் - சுசியாக்கினி என்று சொல்லப்பட்ட தீயிட்ட அடுப்பின் மீது ஒரு பாண்டத்தை ஏற்றி அதில் ஆமணக்கு நெய்யை விட்டு அதில் பூமியிலிருந்து எடுத்த மக்கிய தேங்காயை விட்டு, அஃதையே - அதைத்தானே, தேன் நேர் ஆணம் - தேனையொத்த குழம்பு பக்குவத்தில், அவையாகும் - அவையாம்படிக் காய்ச்சியெடுக்க, தேவாமிருதம் - தேவர்களுண்ட அமிர்தத்திற்கு ஒப்பாகும், அஃதை உண் - அதையருந்த, தேறலினமும் - தங்கிப் போதலினல் மலம் கட்டிப்போன, மலம்

கழியும்-அம்மலத்தைக் கழிக்கும், தேனர் எனும்-(தீனர்) கெட்டவர்களாகிய, முக்குறும் பொழியும்-வாதபித்த கபத்தினுடைய உபாதை நீங்கும், தேவாங்கென-தேவாங்கைப் போல, உள்-உடலிலேஉள்ள, ஆவி அற - உயிர்பலம் கெட்டு (ப்போகும்படி செய்கின்ற), தேயும்-சரீரத்தை மெலிவடையச் செய்கின்ற, கிராணிக் கழிச்சலறும் - கிராணியும் கழிச்சலும் நீங்கும் (பழமலமிருந்தால் கிராணியுண்டாம் அது பழமலத்தைக் கழித்தால்தான் தீரும்), தேரைவீழ்ந்து நேர்ந் தழிந்த தேங்காயென - உள்ளே தேரை வீழ்ந்ததினல் அழிந்து ஒல்லியாகின்ற தேங்காயைப் போல, மேகத்தாலே - மேகரோகத் தினலே, தேகம் உலர்ந்த மெலிவு அகலும் - சரீரம் உலர்ந்த தினலே உண்டாம் மெலிவானது நீங்கும், தேமல் ஊறு - தேமல் படர்ந்த, மேகமறும் - மேக நோய் நீங்கும், தேசாந்திரி போல் - தேசங்கள் ஒவ்வொன்றையும் சுற்றித் திரிகின்றவனைப் போலவும், பேய் போல் - பேயைப் போலவும், பேய்த் தேர் போல் - பேய்த் தேரைப் போலவும், உழலும் துன்பம் அகலும் - உழன்று வருகின்ற துன்பம் தீரும், தேசமறிய பாண்டிதமாய் - தேசத்தி லுள்ளவர்கள் அறியும் பொருட்டு பாண்டித்தியத்துடன், தேரனுரைத்த வாகடமே - தேரச்சிகாமணி உரைத்த மறையாகும், தேர்ந்த தென்று தானுணரே - எவ்வாகடத்திலும் சிறந்ததென்றறிவாயே.

தொந்தவினைக் குணம்

தொ

தொந்தவினைக் குணத்தை தொந்தமிகத்தெரிப்பேன்
தொண்டக மத்தளத்தில்
தொனியெனவே பொலிக்குந்
தொன்று தொடச்சனித்த தொந்தவினைப் பெருக்கை
தொன்குரிசிற்கருத்தன் தொன் கணமைச்சிருக்கை
தொன்று படைக்க வேநன் தொம்பரினத்தொத்து
தொந்தமெனச் செயநட்டந் தொண்டரெனப்பரப்பு
தொளியிளிலோட நாடி தொன்நன்னுளமாறித்
தொந்தியெலாமுலாவத் தொப்புள்மீற
தொண்டை புண்ணுக நோவத் தொப்புள்வலி மீறத்
தொனியிருகாதுமூடத் தொழுமரடாதாவூறு வாயில்
தொடுவென நாவுலாவத் தொல்லைவிவேகிமாறித்

தொன்மறவீகளாகத் தொட்டிபுண் மோழை போநீர்
தொந்திழிமலமுநாறத் தொக்கிடையகவேமேயத்
தொக்கிய வெப்பமீறித் தொங்கியவண்டநீளத்
தொடிக்கை நன்னரம்பு நோகத்
தொருவயதாதிபோலே
தொகுதிவிடாதுகூடுந் தொந்தவியாதியின்
தொழிலிது பாரிலாமே.

தொந்தவினை-நாட்பட்ட நோயின் (பழைய நோய்), குணத்தை-தன்மைகளை, தொந்த மிகத் தெரிப்பேன் - அன்னியோன்னியமாக உரைப்பேன், தொண்டக மத்தளத்தில் - குறிஞ்சிப்பறையில், தொனியெனவே பொலிக்கும் - தொளியென்ற ஓசை முழக்கத் துடனே அதிகரிக்கும், தொன்று தொடச் சனித்த தொந்தவினைப் பெருக்கை - பழமை சேரப் பிறந்த தொந்த வியாதியின் அதி கரிப்பை (உ-ம் வாதம் - தனிக்குற்றம், வாத கபம் - தொந்தித்து வரும் குற்றம் என்பன போல்க), தொன் குருசில் கருத்தன் - அதி கப்பட்ட வாத தோடம், தொன் கணமைச் சிருக்கை - (தொன் - கணம் - ஐ - சிருக்கை) வாதத்துடன் கூடி வந்த சிலேத்துமப் பிர கோபம், தொன்று படைக்க வேநன் - உண்டு பண்ணின நோய், தொம்பரினத் தொத்து தொந்தமெனச் செய நட்டங் தொண்ட ரெனப் பரப்பு - கழைக்கூத்தாடி போன்று உடம்பை அடிமை யாக்கி வருத்திக் கூத்தடித்துத் துன்பத்தைக் கொடுக்கும், தொளி யிளி லோட நாடி - நாடி கலங்கியும் குறைந்தும் நடக்க (பேதமுற்று இழிந்து நடக்க) தொன் நன்னுளமாறி - நல்ல உள்ளமானது மாறு பட்டு, தொந்தியெலா முலாவ - வயிறு முழுவதும் பாதிக்கப்பட்டு, தொப்புள் மீற - தொப்புள் அதிகப்பட்டுத் தொன்ற, தொண்டை புண்ணுக நோவ - தொண்டையில் அதிக நோவுண்டாக, தொப் புள் வலி மீற - தொப்புளில் அதிக வலி உண்டாக, தொனியிரு காது மூட-குரல் கம்மி இருசெவிகளும் கேளாமல், தொழுமர்-தொழு வத்திலுள்ள, ஆவாயில் - பசுவின்வாயில், அடாது - இடைவிடாது, ஊறு - சுரக்கின்ற நீரை, தொடுவென - தடவுவதற்காக, நாவுலாவ-பசுவின் நாக்கானது புரண்டு புரண்டு இங்குமங்கு மசைந்துகொண் டிருப்பதைப் போன்று நீர் வேட்கையால் நா உலர்ந்து உலாவ, தொல்லை விவேகி மாறி - புத்தி மிகுந்தோன் நிலை மாற்றமடைந்து, தொன்மறவீகளாக - பழையவற்றை மறந்தவனாக, தொட்டி புண் மோழை போநீர் - படுக்கை விரணமுண்டாகி (குழிப்புண்) கஞ்சி போன்று நீர் வடிய, தொந்திழிமலமு நாற - வெளிப்படுகின்ற மலம் துர்நாற்றமடைய, தொக்கு - தோல், இடை அகவே மேய-

திரையேற்பட்டு ஆட, தொக்கிய வெப்பம் மீறி - வெப்பம் அதிகப் பட்டு, தொங்கிய அண்டம் நீள - தொங்கிக் கொண்டிருக்கின்ற பீஜப்பை நீள, தொடிக்கை நன் நரம்பு நோவ - நன்னிலையிலிருந்த நரம்புகளெல்லாம் நோவடைய, தொருவய தாதிபோல - வயோதி கரைப் போல, தொகுதி விடாது கூடும் - உடம்பின் எல்லாப் பகுதிகளையும் விடாது பற்றுகின்ற, தொந்த வியாதியின் தொழி லிது பாரிலாமே - (அதாவது வயோதிகப் பருவமடைந்தவர்களது அங்கங்கள் ஒவ்வொன்றும் அவ்வயோதிகத் தன்மையை அடைவ தைப் போல உடலின் எல்லாப் பாகங்களையும் விடாது நோய் பற்றிக் கொள்ளும்) இதுவே தொந்த வியாதியின் குணமாகும்.

தோஷகண்டாவுஷதம்

தோ

தோடகண்டாவுடத நோய்க்கெலாந்
தோமரந்தா ஊவசியீட்டியே
தோகைகண்டோடுமொருபாப்பென
தோட.முண்டான திடுமோட்டமே
தோடமுண்டாவதெதுவாற்றெனில்
தோயமுண்டாலஃது மூர்த்தி சேர்
தோறு மங்கான நளிர் பூர்த்தியாய்
தோலெலும்பூறிமலமூத்திரத்
தோஷ மங்கான சுரமாத்திரந்
தோரணங்காணுமென நேத்திரந்
தோசை தின்றலென மேவாய்ப்பலாந்
தோஷமுண்டாகுமது தீர்த்திட
தோகைமயில் கிளியிறகு கோட்டதள்
தோன்றெரியில் அடலை பொடியாக்கியே
தோன்றியறல் மிளகு கணை கூட்டியே
தோய்ந்த மதுவதனிலது நீட்டியே
தோரையளவஃது விரனூட்டியோர்
தோன்றலவிர் நடுவின் முனை நாக்கிலோர்
தோய்ச்சிடவுநாக்கிலுறு சேத்துமத்

தோடமறுமறல் பெருகு நாக்கிலே
தோப்பை நிகராகுமிறுவார்த்தையே
தோளிணைகளதிராது மூக்கினீர்
தோட்டியெனவுதிராதி மாத்திரமே
தோடகண்டாவுடதமார்க்கமே.

தோடகண்டாவுடதம் நோய்க்கெலாம் - எந்த நோய்களிலும் தோடமுண்டானால் அதற்குக் கண்டாவிழ்தம், தோமரந்தானைவசி யீட்டியே - அக்கண்டாவிழ்தமானது (1) தடுக்கும் கருவியாகவும் (2) வெற்றி பெரும் சேனைகளாகவும் (3) வாள் போன்றதாகவும் (4) ஈட்டி போன்றதாகவும், தோகை கண்டோடும் ஒரு பாப்பென - (அன்றியும்) தோகையை உடைய மயிலைக் கண்டு ஓடும்படியான பாம்பைப்போல், தோடமுண்டானதிடுமோட்டமே - உண்டாகிய தோடம் ஓடும், தோட முண்டாவதெதுவாற்றெனில் - தோடம் உண் டாவது எவ்வாறென்றால், தோயமுண்டாலஃது மூர்த்தி சேர் - அந் நோயிருக்கும் காலத்தில் குளிர்ந்த நீருண்டால் அஃது தலையில் சேர்ந்து, தோறு மங்கான நளிர் பூர்த்தியாய் - தலையில் சீதளம் சேர்ந்து, தோலெலும் பூறி மல்மூத்திரத்து - தோல் எலும்பு முத லிய சப்த தாதுக்களிலும் சேர்ந்து பின் மலமூத்திரத்தில், தோடம் அங்கு ஆனசுரமாத்திரம் - தோஷங்கண்டால் சுரம் மாத்திரம் வந்தும், தோரணங் காணுமென நேத்திரம் - கண்ணனது கொடி கட்டி இழுப்பது போலவும், தோசை தின்றுலெனமே வாய் பல் லாம் - தோசை முதலிய மாப்பண்டங்களைத் தின்றால் எப்படி தாக மும் வரட்சியும் வாயிலும் பல்லிலும் இருக்குமோ அப்படி இருக் கும், தோஷமுண்டாகும் அது தீர்த்திட - இத்தகைய குணங்களை உண்டாக்குமாயின் அதைப்போக்க, தோகை மயில் கிளியிறகு கோட்டதள் - மயில் தோகை கிளியிறகு சங்கம்பட்டை, தோன்றெரி யில் அடலை பொடியாக்கியே - எரிகின்ற தீயில் சாம்பலாக்கிப் பொடித்து, தோன்றியறல் மிளகு கணை கூட்டியே-வெண்தோன்றி, சுக்கு, மிளகு, திப்பிலி கூட்டி, தோய்ந்த மதுவதனிலது நீட்டியே - நல்ல கட்டித் தேனில் அதைக் கூட்டிக் கொடு, தோரையளவஃது விரனட்டியோர் - துவரையளவு அதை ஒரு விரலில் தோய்த்து, தோன்றலவிர் நடுவின் முனை நாக்கிலோர் - ஒரு நோயாளியின் விளங்குகின்ற நாக்கின் முனை நடுவில், தோய்ச்சிடவு நாக்கிலுறு சேத்துமத் தோடமறும் - தடவ உள் நாக்கிலுண்டான சேத்தும தோடம் போம், அறல் பெருகு நாக்கிலே - நாக்கில் நீர் பெருகும், தோப்பை நிகராகு மிறு வார்த்தையே - வறண்ட வார்த்தை குளிர்ச்சிக்கு நிகராகும், தோளிணைகளதிராது - தோள்கள் இரண்

டும் அதிர்ச்சியடையாது, மூக்கினீர் தோட்டியென உதிராது - மூக்கு நீரானது தொட்டியிலிருந்து உதிர்வது போல உதிராது, இமாத்திரமே - இம்மாத்திரமே, தோடகண்டா அவுடத மார்க்கமே - தோட கண்டா அவுடதத்தின் போக்காம் என்றவாறு.

நசியவருக்கம்

நா நை நௌ

நசியந் தலைவலிமற்றது நசியந் தகனுமே
நையத்தெறுமையப் பிணி நௌவ்விக்கிதுபுலியே
நமனுக்கொருநமன் வெற்றியை நறுக்கிபிழி மூக்கில்
நளிருஞ்சுரகுளிருந்தலை நடுக்கும் பிணிவிடுக்கும்
நளினத் தளிர் துளவத்துளிர் நறையுப்பொடு மிளகு
நசைமர்த்தன மிசைவித்திதை நன்மாத்திரையாக்கி
நண்பன் கதிர் முன்பொன்றவை நசியக் குளிகையை
நகிலச்சுதையொடு பஞ்சினில் நனைத்துப் பிழி மூக்கில்
நளிர் வெஞ்சுரமருளின்! சுரம் நலி வெஞ்சுரமறுமே
நஞ்சிற்படர்விட சன்னிகள் நஞ்சப்புறமகலும்
நட்டத்தொடு முட்டப்பொரு நட்டத்தனுவாதம்
நடைதத்திடு விட மித்ததோர் நக்கப்படு சன்னி
நடுக்காட்டொரு புலி போத்தெதிர் நரிக்கூட்டமதாமே
நறைக்கோங்கொடு முடப்போந்தைகள் நனை நீரது பஞ்சில்
நனைத் தேயிலை முனை மூக்கினில் நசியத்தினையிடுதி
நவியத்தினில் வயிரத்தரு நறுக்குண்டது போலே
நரம்பிற்படர் குரம்பிற் பிணிநவிரச்சனிவாதம்
நையத் தொனிமையத் தடர் நலக்கப் பிணியெல்லாம்
நள்ளாறெனவுள்ளாதெறி நறைப்பந்தமதாமே
நசியத்திறலிஃதிப்படி நவிலப்படு நெறியே.

இச் செய்யுள் நசிய வகைகளையும், அவற்றால் தீரும் நோய்களையும் கூறுகின்றது.

(சொ - ரை) நசியம் - நாசியில் விடக்கூடிய மருந்தானது, தலைவலி - தலை நோயையும், மற்றது - அதைச் சம்பந்தப்பட்ட மற்ற நோய்களையும், நசி - ஒழிக்கின்ற, அந்தகன் ஆம் - எமனுக்கு ஒப்பானதாகும், நைய - உடலும் உயிரும் மெலியும்படி, தெறும்- வருந்துகின்ற, ஐயப்பிணி - சீதள நோயாகிய, நவ்விக்கு மானுக்கு, இது - இந்த நசியமானது, புலியே - புலிக்கு ஒப்பானதேயாகும், அந்த நசியமாவன:- நமனுக்கு - எமனுக்கு ஒரு நமன் - ஒப்பற்ற எமனாகிய சிவபெருமான் அணிந்த, வெற்றியை- வெற்றி மாலையாகிய தும்பைப்பூவை, நறுக்கி - சிதைத்து வருஞ் சாற்றை, மூக்கில் பிழி - மூக்கில் விட வேண்டிய அளவாக விடுவாய் (அப்படி விட்டால்), நளிரும் - தனிக்குளிரும், சுரகுளிரும் - குளிர் சுரமும், தலை நடுக்கும் பிணி விடுக்கும் - தலையை நடுக்கச் செய் கின்ற நோயாகிய நடுக்கு வாதமும் (கம்பவாதம்) நீங்கும். (இத்தும் பையானது தன்னுடைய வலிவு காரணமாக ஒருவனை அழிக்க வரு கின்ற அரசனை எதிர்த்து அவனை அழிப்போன் தரிப்பதாம். அவ் வாறாக மார்க்கண்டேயனைத் தன் வன்மை காரணமாக அழிக்க வந்த எமனை அழிக்க வந்த அவசரத்தில் சிவபெருமான் அணிந் திருக்க வேண்டியது தும்பை மலர் மாலையாகையால், அம்முறைப் படி 'நமனுக்கொரு நமன் வெற்றி' என்று அத்தும்பையைக் கூறி னார் தேரையர் இதனை,

"மைந்து பொருளாக வந்த வேந்தனைச்
சென்று தலையழிக்குஞ் சிறப்பிற்றென்ப" என்று

தொல்காப்பியம் பொருளதிகாரம், புறத்திணையியலிற் கூறியதனால் அறிக).

நளினத் தளிர் - தாமரைப் பூ அல்லது தாமரை இலை, துளவத் துளிர் - துளசித் துளிர், நரையுப்பு - வெள்ளை உப்பு, மிளகு -மிளகு (ஆகிய இந்நான்கையும் சரி எடை எடுத்துக் கல்வத்திட்டு), நசை - விருப்பமாய், மர்த்தனம் இசை வித்து - நன்றாய் அரைத்து, அதை - அப்படி அரைக்கப்பட்டதை, நல் மாத்திரை ஆக்கி - உயர்ந்த மாத் திரையாகச் செய்து, நண்பன் கதிர் முன்பு ஒன்ற வை - மேற்படி தாமரைக்கு நண்பனான சூரியன் முன்னர்ப் பொருந்தும் படி வை (என்றால்) வெயிலையடுத்தும் விரைவில் உலரக் கூடியது மான இடமான நிழலில் வை, (அப்படிவைத்து உலர்த்தப்பட்ட) நசி யக்குளிகையை - மூக்கின் தொளையில் ஊறவைத்து விடுதற்குரித் தான நசியக் குளிகையை, நகிலச் சுதையொடு - கொஞ் சம் பொடித்து ஒரு கண்ணாடிப் பாத்திரத்தில் போட்டு அத் துடன் கொஞ்சம் முலைப்பால் விட்டு வைத்து நன்றாய் ஊறின பின்னர் அதில், பஞ்சினில் நனைத்துப் பிழி மூக்கில் -

கொஞ்சம் பஞ்சு எடுத்து நனைத்து அப்பஞ்சில் ஊறின மாத்திரை யூறலை மூக்கில் வேண்டிய அளவு பிழிவாய் (அப்படிப் பிழிந்தால்) நளிர் - மிகவும் வேகமாய்க் குளிர்கின்ற, வெம்மை சுரம் - கொடுஞ் சுரமுமாகிய மாறல் சுரமும், மருளின் சுரம் - அறிவை மருளச் செய்கின்ற பூத சுரமும், நலி - மிகவும் தாள முடியாதபடி உடம்பில் வலியை உண்டாக்குகின்ற, வெம்சுரம் - கொடிய சுரமும், அறும் - நீங்கும், நஞ்சின் - விஷத்தின் வேகம் போல, படர் - உடலில் விரைவாக விஷமிக்கின்ற, விட சந்நிகள் - தோஷ சந்நிகள், நஞ்சு - கெட்டு, அப்புறம் அகலும் - வேறு இடத்திற்குச் சென்று விடும் (அது ஒழியும் என்பதாம்) அன்றி, நட்டத்தொடு - உடல் இருக்கின்ற இயற்கைக்கு மாருக நஷ்டஞ் செய்வதோடு, முட்ட-வளைந்து நடக்குங் காலத்து எதிரிடங்களில் போய் விழும்படி, பொரு - மோதும்படி செய்கின்றதும், நட்டம் - நடக்கும் போதே கூத்தைப் போலே ஆடும்படிச் செய்கின்றதுமான தனுர்வாதம்-வில்லைப்போல் வளைவிப்பதான தனுர்வாதமும், நடைதத்திடு - நடக்கும் நடையைத் தடுத்துத் தடுத்து நடக்கச் செய்கின்ற, விடமித்தது - குற்றம் அடைந்ததாகிய, ஓர் - தனித்து (மிகுந்த), நக்கப்படுசந்நி - கண்டோரால் சிரிக்கப்படுகின்ற சந்நியும் (ஆகிய இவைகள்), நடுக்காட்டு - காட்டின் நடுவில், ஒரு - ஒப்பற்ற, புலிப்போத்து - ஆண் புலியை, எதிர் - எதிர்த்த, நரிக்கூட்டம் ஆம்-பல நரிகளின் கூட்டம் அழிந்து போவதைப்போல் அழிந்து போய்விடுவனவாம், நறைகோங்கொடு - தேன்மிகுந்த கோங்கிலவ மலரில், முடப்போந்தைகள் - வளைந்த பனை மதுவை (கள்) விட்டு, நனை-ஊறவைத்து, அது-அவ்வூறலாகிய, நீர் - கள் நீரை, பஞ்சில் நனைத்து - பஞ்சில் நனையச் செய்து, ஐஇல் - சளி முதலிய கழிவுப் பொருள் இராத, மூக்கு முனையில் - மூக்கின் துளையில், நசியத்தினையிடுதி - நசியஞ்செய்வாய் (பிழிவாய்) (அவ்வாறு செய்தால்), நரம்பில் படர் - உடலிலிருக்கின்ற நரம்புகள் தோறும் படர்ந்த, குரம்பில்பிணி - இவ்வளவு தானென்று அளவிட்டறிய முடியாத நோய்களும், நவிரம் - துன்பத்தை விளைவிக்கின்ற சனிவாதம் - சன்னிபாத சுரங்களும், நைய - வருந்தும்படி, தொனிமையத்து அடர் - குரலின் இடை இடை வந்து தொடர்கின்ற, நல்ல - தீர்ந்துவிடக்கூடிய, கம்பிணி - ஐய சம்பந்த நோய்களுமாகிய எல்லாம் - எல்லா நோய்களும், நவியத்தினில் - கோடரியால், வயிரத்தரு - சேவுபற்றிய மரங்களும், நறுக்குண்டது போல - வெட்டப்படுவன போலவும், நள்ளாறு என - இது நடு ஆறு என்று, உள்ளாது - எண்ணமல், எறி - வீசி விடுகின்ற, நறை - எண்ணெய் நிறைந்த, பந்தம் ஆம் - தீப்பந்தம் அவிந்தொழிவது போலவும் அழிவனவாகும், இப்படி - இந்நில உலகில், நசியத்திறல் - நசியத்தின்

வன்மை, நவிலப்படுநெறி - சொல்லப்படுகின்ற வழி, இஃது - இதுவேயாகும்.

நாசிகா பரணம்

நா

நாசிகாபரணநோய்வெல் நாந்தகப்படையதாமே
நாரமேலிட்ட மூர்த்த நாதனுமிறையை முன்னி
நாடொரு மமைச்சை மீளி நாணவோர் கனலை மூட்டி
நாமுனை வறட்சி நீண்ட நாசியானனத்தராக்கும்
நானிலமருட்டும் வெப்ப நாகமாநாக நோய்க்கே
நால்வகைப்பாலை சுண்டை நாரத்தையிருப்பையின் வேர்
நாகமல்லிகை நீராட்டி நாலிரு நாளுலர்த்தி
நாட்டமுற்காயின்பன்ன நாரத்துமவ்வாருற்றி
நாலிருநாளவ்வாறு நாதனுதபத்துலர்த்தி
நாணயப் பொடியதாக்கி நாப்பனோர் பரணி சேர்த்து
நாத நாமத்தையுன்னி நாசித்துவாரமாற்றில்
நாற்றமோர் விசையிற் போட நாகபாணத்திற்ருக்கும்
நாவினிலறலுண்டான நாசரோகத்தைப் போக்கும்
நாட்டிய சன்னிரோக நாட்டியவிடத்தை மாற்றும்
நாவியிற் சனித்த பச்சை நாபி நேர்பிணியை வாட்டும்
நாலுமுக்கத்தை நேர்வாய் நாலு முக்கத்தைப் போக்கும்
நாவி போற்பாயுஞ் சேத்ம நாம சன்னிகளை நீக்கும்
நாளின முபாயத்தீட்டும் நாசிகாபரணங்கேண்மோ
நான்முகபத்ரமொன்று நாய்க்கடுகிலைதானென்று
நாரணனலங்கலொன்று நாட்டெருமுட்டையொன்று
நாரறவெயிலிலுலர்த்தி நாணயப்பொடிகள் செய்து
நாண வெவ்வேறுதான் பெய்
நாசிகாபரணச் சேதி நாரதருரைத்தவாறே.

இச்செய்யுள் நாசிகாபரண வகைகளையும் அவற்ருல் தீரும் நோய்களையும் கூறுகின்றது. நாசிகாபரணம் - மூக்குக்குப்

போடும் தூளான இது, நோய்வெல் - தலையிலுள்ள அறிவின் சம்பந்தமாய் வருகின்ற நோய்களையெல்லாம் வெல்லுகின்ற, நாந் தகப் படையாம் - வாளாயுதம் போன்றதாவதுடன், நாடொறும் - நாள்தோறும், அமைச்சு - பித்தமும், ஐ - வாதமும், மீளி - சேத்மமு மாகிய முக்குற்றங்களும், நாண - வெட்கமடைய, ஓர் கனலை மூட்டி - ஒரு தீயை உண்டாக்கி, நாமுனை வறட்சி - முனை நாக்கில் வறட்சி யும், நீண்டநாசி ஆனனத்தராக்கும் - நாசியையும் முகத்தையும் நீண்டவைகளாகவுமாக்கும், நானிலம் மருட்டும் - நிலவுலகில் வாழ் கின்ற உயிர்களை வருந்தச் செய்கின்ற, வெப்பம் நாகமாநாக நோய்க்கு - சூடாகிய குரங்கு போன்று நீர்ப்பந்த நோய்க்கு, நாரம் - கங்கையை, மேல் இட்ட - சடையில் வைத்திருக்கின்ற, மூர்த்த நாதனும் - எல்லாவற்றிற்கும் எவர்க்கும் தலைவனுகிய, இறையை முன்னி - சிவபெருமானை நினைத்துச் சொல்லுகின்றேன். நால் வகைப் பாலை - வெட்பாலை, தீம்பாலை, மலைப்பாலை, ஊசிப்பாலை ஆகிய நான்கு பாலைகள், சுண்டை-சுண்டைக்காய்ச்செடி, நாரத்தை- நாரத்தஞ் செடி, இருப்பை - இருப்பை மரம், (ஆகிய) இவ்வேர் - இவைகளின் வேர்ப்பட்டைகளைச் சரியெடை எடுத்து அவற்றைப் பொடித்துக் கல்வத்திலிட்டு, நாகமல்லிகை நீர் - நாகமல்லிகை சாற் ருல், நால் இருநாள் ஆட்டி - எட்டு நாள் அரைத்து, உலர்த்தி - எட்டுநாள் உலர்த்தி, அவ்வாறு உலர்த்தப்பட்ட பொடியை, நாட்டு - இத்தமிழ்நாட்டிற்கே உரியபொருளான - அழற்காயின் பன்னம் - அழற்காய், அனல் மணி, தீக்ஷணம் என்று சொல்லப்படுகின்ற மிளகுக் கொடித்துளிரின், நாரத்தும் - சாற்றிலும், அவ்வாறு - முன் உலர்த்தினது போலவே, நாதன் ஆதபத்து உலர்த்தி - சூரி யன் வெய்யிலில்எட்டுநாள்உலர்த்தி, நாணயப்பொடியதாக்கி-மெல் லிய பொடியாய்ச் செய்து, ஓர் பரணி நாப்பண் சேர்த்து - ஒரு பர ணியில் வைத்து, நாதன் நாமத்தை உன்னி - சிவபெருமானுடைய திருப்பேராகிய அஞ்செழுத்தை நினைக்கவேண்டிய மாதிரிநினைத்து, நாசித்துவாரம் ஆற்றில் - மூக்குத் தொளை வழியாக, நாற்றம் - அம் மணமுள்ள பொடியை, ஓர் விசையிற் போட - ஒரு முறை போட் டால், நாக பாணத்தின் தாக்கும் - நாகாஸ்திரம் எதிரிகளைத் தாக்கி முறியடித்தோட்டுவதைப் போல் நோய்களை ஓட்டும், நாவினில் - நாக்கில், உண்டான - ஏற்பட்ட, அறல் நாச ரோகத்தைப் போக்கும் - நாவறட்சி முதலியவைகளைக் காட்டுகின்ற கருநாத் தோடம், செந்நாத்தோடம், மஞ்சள் நாத்தோடம் என்னும் மூவகை நாத்தோடங்களை நீக்கும், நாட்டிய - நோயாளியைக் கண்டபடியெல்லாம் ஆட்டுவிக்கின்ற, சந்நிரோகம் நாட்டிய விடத்தை மாற்றும் - சந்நிநோயானது உண்டாக்குகின்ற விஷத் தன்மைகளையெல்லாம் மாற்றிவிடும், நாவியிற்சனித்த - நாபியில் உண்டான, பச்சை நாபி நேர் - பச்சை நாபியை யொப்பான,

பிணியை வாட்டும் - நோய்களை நீக்கும், நாலும் - தொங்குகின்ற உக்கத்தை நேர் - உறி அசைவதையொத்த, வாய் - வாயிலிருந்தும், நாலும் - அசைந்து வெளிப்படுகின்ற, முக்கத்தைப் போக்கும் - முக்காத்தை நீக்கும், நாவி போல் பாயும் சேத்ம நாம சந்நிகளை நீக்கும் - நஞ்சேறுவதைப் போல் உடல் முழுதும் பாய்கின்ற சீதள சம்பந்தமான சன்னிகளை மாற்றும், இனம் - (இவையின்றி) இன்னும், நாள் - ஒரு நாளிலேயே, உபாயத்து - எளிதாக, ஈட்டும் - செய்து கொள்ளக் கூடிய, நாசிகாபரணம் கேண்மோ - சில நாசிகா பரணங்கள் சொல்லுகின்றேன் அவற்றைக் கேளுங்கள், (அவற்றில்) நான்முக பத்ரம் ஒன்று - பிரம பத்திரம் என்னும் புகையிலை ஒன்றும், நாய்க் கடுகு இலை ஒன்று - நாய்க் கடுகு இலை ஒன்றும், நாரணன் அலங்கல் ஒன்று - நாராயணனுடைய மாலையாகிய துளசியிலே ஒன்றும், நாடு - நாட்டில் இயற்கையாக விருக்கின்ற, எரு முட்டை ஒன்று - எரு முட்டை ஒன்றுமாகும் (ஆகிய இவற்றைத் தனித்தனியாக), நார் அற - ஈரம் உலரும்படி, வெயில் உலர்த்தி - வெயிலில் உலரச் செய்து, நாணயப் பொடிகள் செய்து - மெல்லிய தூள்களாகச் செய்து, நாண - இப்பொடிகளைக் கண்டு நோய்கள் வெட்கும்படி, வெவ்வேறு தான்பெய்-வெவ்வேருக வைத்துக்கொள்வாய், நாசிகா பரணச் செய்தி - இந்த நாசிகாபரண முறைகள், நாரதர் உரைத்த வாறே - நாரத முனிவர் உரைத்தபடியே சொல்லப்பட்டனவாம்.

நித்தில விபூதி

நி

நித்தில விபூதியிது நித்தில விபூதி
நிற்சய விபூதியுடல் நித்தியவிபூதி
நித்திலமதோர்தொடி நிறுத்ததிலிரட்டி
நிற்குண்டிரசமளவ நிற்பதிரு நாளே
நிறைத்ததையரைத்தி லையினிற்படிவமாக்கி
நின்றபுடமொன்று புரி நின்றதையெடுத்து
நிலப்பனை ரசத்தினும் நிறைப்படி முனை
நிறை நிறையியற்றி வரு நித்திலபருப்பம்
நிறைப்படியுரைப்படி நினைத்தடலை தன்னை
நிகழ்த்து மறலிற்கொள நிசிப்படலை மாறும்
நிரைச்சுதையினிற்றின நிற்கன லிவாங்கும்

நிலத்துளசியினிற்றினமுனிர்ப் பந்த வலிப்போம்
நிறுவிடமதிற்பருக நித்திரைமருட்போம்
நில விளாவறலிலுண நிகழ்பித்தவனல் போம்
நிற்குண்டிநீரிலுண நிலையாதுவாய்வு
நிலமானகத்திலுண நிட்டூரவளிபோம்
நிமலபத்திரியிலுண நிற்குமதிசாரம்
நிலமைத்தயிரிலுண நிவப்புவளிவிடுமே
நிகழிக்கிலுண்ணவறு நிற்பந்தவனிலம்
நிறைவிசையமதனிலுண நிபவாந்திவினைபோம்
நிகழ் வெண்ணெய்தனிலுண்ண நிலையாது மூலம்
நிசப்படமொழிந்த திதை நித்தியமதாக
நிறுத்துவர் மருத்துவர் நிலத்தின் மிசைதானே
நிடதமிது லேசருப நிடதமிதுதானே.

இச்செய்யுள் முத்துப் பற்பம் செய்யும் வகையையும் அதனல் தீரும் நோய்களையும் கூறுகின்றது. இது நித்தில விபூதி - இது முத்துப் பற்பமாகும், நித்தில விபூதி - இது முகத்தில் அணியும் பொட்டுப் போன்ற சிறப்புடையதாகும், நிச்சயவிபூதி - உண்மையான பற்பமாகும், உடல் நித்திய விபூதி - உடலைநிலைத்திருக்கச் செய்கின்ற பற்பமாகும், நித்திலம் அது ஓர் தொடி நிறுத்து - தொளையில்லாத கெட்டி முத்து ஒரு பலம் நிறுத்தெடுத்துக் குழிக்கல்லில் இட்டு, அதில் இரட்டி - அம்முத்தெடைக்கிரண்டு பங்கான இரண்டு பலம், நிர்க்குண்டிரசம் அளவ - வெண்ணொச்சியிலைச் சாறுவிட்டு, இருநாள் நிற்பது - இரண்டு நாள் ஊறவைத்து, நிறைந்ததை - சாற்றால் நிறைக்கப்பட்டுள்ளமுத்தை, அரைத்து - இரண்டு நாள் அரைத்து, இலையினிற்படிவமாக்கி - இலையைப்போல் வில்லை செய்து, (இரண்டு நாள் உலர்த்தி) நின்ற புடம் ஒன்று புரி - (நாற்பது வறட்டியில்) ஒரு புடம் செய்வாய், நின்றதை எடுத்து - அப்படி செய்யப்பட்ட புடம் நன்றாய் ஆறுகின்றவரைக்கும் நிதானித்துப் பிறகு அப்பில்லையை எடுத்து, நிலப்பனை ரசத்தினிலும் - நன்றாய் முதிராமலும் இளஞ்செடியாக விராமலும் பக்குவமான பருவத்தை அடைந்திருக்கிற நிலப்பனைச் சாற்றாலும், முன் நிறைப்படி ஆக - முன் வெண்ணொச்சியிலைச் சாற்றால் அரைத்த அளவுப்படிஅரைத்துப்புடஞ் செய்து, நிரை நிரை இயற்றி வரும்-வரிசைக் கிரமமாகச் செய்யப்பட்டு முடிந்த, நித்தில பருப்ப அடலை தன்னை - முத்துப் பற்பமாகிய திருநீற்றை, உரைப்படி - முன்னோர்களாற் சொல்லி

யிருக்கப்பட்ட சொல்லின்படி ஆராய்ந்து, நிரைப்படி - அளவாக, நிகழ்த்தும் அறலில் கொள்ள - உண்டான தண்ணீரில் உண்டால், நிசிப்படலே மாறும் - இரவில் கண் தெரியாமை நீங்கும், நிரைச் சுதையினில் தின்ன - பசுவின் பாலில் உண்டால், நிற்கனலி வாங்கும் - நீர் மஞ்சள் நிறமாவது செந்நிறமாவது அடைந்திருக்கின்ற அதிவெப்ப நோய் நீங்கும், நிலத்துளசியில் தின்ன - நிலத்துளசிச் சாற்றில் உண்டால், முன் நிர்ப்பந்தவலி போம் - நெடுங்காலமாக வருந்திக் கொண்டிருக்கிற வலி நீங்கும், நிறுவிடம் அதில் பருக - நீர்விடக் குடிநீரிலாவது தூளோடாவது சேர்த்துண்டால், நித்திரை மருள் போம் - தூக்கத்திலுண்டாகின்ற மருட்சி நீங்கும், நிலவிளா அறலில் உண்ண நிகழ்பித்த அனல்போம் - நிலாவிளா இலைச் சாற்றில் உண்டால் உண்டாகின்ற பித்தவெட்டை நீங்கும், நிற்குண்டி நீரில் உண்ண நிலையாது வாயு - வெண்ணொச்சியிலைச் சாற்றில் உண்டால் வாயு நீங்கும், நிலம் ஆனகத்தில் உண்ண நிட்டுர வளிபோம் - பூமியின் கண் தேவதாருக் குடிநீரிலாவது தேவதாருப் பொடியிலாவது உண்டால் மிகவும் தொந்தரவு செய்கின்ற வாத ரோகங்கள் நீங்கும். நிமலபத்திரியில் உண்ண அதிசாரம் நிற்கும்-வில்வ இலைச் சாற்றில் உண்டால் அதிசாரம் தீரும், நிலவும் மைத்தயிரில் உண்ண நிவப்பு வளிவிடும் - உயர்ந்த ஆட்டுத்தயிரில் உண்டால் மேலெழுகின்ற வாயு (ஊர்த்வகத வாதம்), தீரும் நிகழ் இக்கில் உண்ண நிர்ப்பந்த அனிலம் அறும் - கரும்பின் சாற்றில் உண்டால் பிடிப்புவாதம் தீரும், நிறை விசையம் அதனில் உண்ணநிபவாந்தி நலிபோம்-மிக்க நாட்டுச் சர்க்கரையில் உண்டால் வாந்தி நோய் தீரும், நிரை ஆச்சியத்தில் உண்ண நித்த அனல்வினை போம் - பசு நெய்யில் உண்டால் சேவேறியிருக்கின்ற வெட்டை நீங்கும், நிகழ் வெண்ணெய் தனில் உண்ண நிலையாது மூலம் - பசு வெண்ணெயில் உண்டால் மூலந்தீரும், நிசப்படமொழிந்தது இதை - உண்மையாகச் சொல்லப்பட்டதாகிய இம்முத்து பற்பத்தை, மருத்துவர் - மருந்து சம்பந்தத்தால் பேர் பெற்ற மருத்துவர்களான தமிழ் வயித்தியர்கள், நிலத்தின் மிசை - இந்த மண்ணுலகில், நித்தியமதாக நிறுத்துவர் - இப்பற்பத்தைக் கையாடி அதன் பெருமையை என்றும் அழியாதபடி செய்வர், இதுவே நிடதம் மிதிலேசர் உபநிடதம் - இந்தத் தமிழ் வழியே நிடத நாட்டினரும் மிதிலை நாட்டினரும் தங்கள் நூலில் எழுதிக் கொண்டதும் வழங்குவதுமாகும்.

நீரிருவினைக் குணம்

நீ

நீரிருவினைக் குணத்தை நீயறிவிரித்துச் சொல்வாம்
நீரினைப் பெருக்கலொன்று நீரினையருக்கலொன்று
நீரிழிவுடனே கொல்லும் நீர்க்கட்டுவினைகளென்று
நீணிலமுரைக்குமிந்த நீர்நிறைக்குணத்தைக் கேளாய்
நீரினைப் பெருக்கலென்னும் நீரிழிவிலக்கணங்கேள்
நீலவாரிதி போற்குக்கி நீட்டிக்கு முரை தள்ளாடும்
நீவி கூடாது கைகால் நீலமாவினை நேராகும்
நீஞ்சொணுவுரனின் மூச்சு நீசமாமுயக்கங் காட்டும்
நீரினையருக்கலென்னும் நீர்க்கட்டின் குணத்தைக் கேட்டி
நீதமில்லாமற்கோச நீர்ப்புழை நெருப்புப் போலாம்
நீபனுயுதத்தாற்பட்ட நீலவம்பரமாங்குக்கி
நீறணிகடவுளுண்ணு நீர்க்கட்டுப் பிணியோருள்ளே
நீவி நாவறலிலாமல் நீக்கமாம் வீக்கமாமெய்
நீற்றறை போலா மூக்கும் நீரறும் விழியுமம்மா
நீதியுமிதற்குத் தீர்வு நீர்க்கடம் பொடு கற்றூழை
நீவிர் முக்கடுகு முன்பின் நீக்கிமத்திமையொன்றேகொள்
நீரறுகுடி நீராக்கி நீர்மையின் முன்பின்னே கொள்
நீக்கமாமிரண்டு நோயும் நீணிலமிஃதுதானே.

இச்செய்யுள் எண் வகை ஆராய்ச்சிகளில் ஒன்றான நீருக்கு உண்டாயிருக்கின்ற இரண்டு தொழில்களின் குறி குணங்களைச் சொல்லுகின்றது, நீர் இருவினைக் குணத்தை விரித்துச் சொல்வாம் நீ அறி - நீரின் இரண்டு தொழிலின் குறிகுணங்களை விளக்கமாகச் சொல்லுவோம், அதை மாணுக்கனுகிய நீ நன்றாய் அறிந்து கொள்வாய், அவ்விரு வினையாவன :- நீரினைப் பெருக்கல் ஒன்று நீரினை அருக்கல் ஒன்று - நீரை அதிகமாக்கல் ஒன்றும் நீரைக் குறைத்தல் ஒன்றுமாம் (இவ்விரண்டையும் முறையே) நீள் நிலம் - பெரிய நில உலகத்திலுள்ளவர்கள், நீரிழிவுடனே கொல்லும் நீர்க்கட்டு வினைகளென்று உரைக்கும்-நீரிழி

வென்றும் கொல்லுகின்ற நீரடைப்பு என்றுஞ் சொல்லுவார்கள், (இவற்றில்) நீரினைப் பெருக்கல் என்னும் நீரிழிவு இலக்கணம்கேள் - நீரிழிவின் குறி குணங்களைச் சொல்லுகின்றேன் கேட்பாயாக, நீல வாரிதி போல் குக்கி நீட்டிக்கும் - நீல நிறமுள்ள கடலைப்போல் மூத்திரப்பை நீளும், உரை தள்ளாடும் - பேச்சுத் தடுமாறும், கை கால் நீவி கூடாது - கையொன்றைப் பிடிக்கவும் கால் நடக்கவும் முடியாது, நீல மாவினை நேராகும் - நீல நிறம் பொருந்திய நஞ்சுக் கொடி போல் உடல் துவளும், நீஞ்சொண உரனின் மூச்சு - விட முடியாதபடி மூச்சு உண்டாம், நீசமாம் உயக்கம் காட்டும் - இழிவாகிய துவளுதலை உண்டாக்கும், (இனி) நீரினை அருக்கல் என்னும் நீர்க்கட்டின் குணத்தைக் கேட்டி - நீரடைப்பின் குறி குணங்களைக் கேட்பாயாக, கோச நீர்ப்புழை நீதமில்லாமல் நெருப்புப் போலாம்- ஆண் குறியில் நீர்த்துவாரமானது மிகவும் நெருப்புப் போல கொளுத்தும், நீபன் ஆயுதத்தால் பட்ட நீல அம்பரமாங்குக்கி - கடப்ப மலர் மாலையணிந்த முருகனுடைய வேலாயுதத்தால் வறண்ட கடலைப் போல நீர்ப்பையில் நீர் வறண்டு போம், நீரணி கடவுள் உண்ணு - உண்ணுக்கானது நீற்றையணிந்த கடவுள் மேனி போல் வெளுத்திருக்கும் (மாவு பூத்திருக்கும்),நா அறல் இல்லாமல் நீக்கமாம் - நாவில் சுரக்க வேண்டிய நீர் சுரக்காமல் நீங்கும், மெய் வீக்கம் ஆம் - (அதனால்) உடம்பு வீங்கும், மூக்கு - மூக்கானது, நீற்றறை போலாம் - சுண்ணும்புக் காளவாய் போல் நீறு பூத்திருக்கும், விழியும் நீர் அறும் - கண்களும் நீர்ப்பசை இல்லாமல் வறண்டிருக்கும், நீர்க்கட்டுப் பிணியோர்க்கு - நீரடைப்புள்ளவர்களுக்கு, நீதியாம் - இக்குறி குணங்களெல்லாம் இருக்க வேண்டியவைகளாகுமென்று, உள் - தெரிந்து கொள், இதற்குத் தீர்வு - இந்நோய்க்குப் பரிகாரமானது, நீர்க்கடம் பொடுகற்றுழை - நீர்க்கடம்பும் கற்றுழஞ் சோறும், முக்கடு முன்பின் நீக்கி மத்திமை யொன்றே கொள் - மிளகும் கூட்டி (ஒரு மண் பாண்டத்திலிட்டு), நீர் - நீர் விட்டு, அடுகுடிநீர் ஆக்கி - நன்றாய்க் காய்ச்சி, கொள் - கொள்வாய், முன்பின் நீர்மையின் கொள் - நீர்க்கடம்பு, கற்றுழஞ்சோறு, சுக்கு, திப்பிலி, இவற்றைக் குடி நீர் செய்து கொள் (அவ்வாறு கொண்டால்) நீள் நிலம் இஃதில் - பெரிய பூமியாகிய இதில், இரண்டு நோயும் நீக்கம் ஆம் - நீரிழிவு, நீர்க்கட்டு என்னு இரு நோயும் முறையே தீரும்.

நுட்ப மருத்துவம்

நு

நுட்பமருத்துவ நுட்பமுரைப்பாம்

நுவல்வழி வாகட நுண்மையுமிஃதே

நுதல் விழியர்முனம் நுதலியதிஃதே
நுந்தையுரைப்படி நுந்தியசுடரே
நுக்குவர் பண்டித நுண்மையறிந்தோர்
நுகமருத்துவர் கரம் நுவல் வினையவர் மெய்
நுனியிருளினனிலது நுவன் மறைநெறியே
நுனிமயிரடியணி நுதல் பைத்தியமே
நுசுப்பினிற் சேத்தும நுட்பமுமிஃதே
நுவலணம் புசித்திடு நுதிருசியெனலாம்
நுட்பவளிப்பிணி நுண்பொருளிஃதே
நுங்குதனைத்தினம் நுங்குவதெனலாம்
நுவல் பைத்தியவினை நுட்பமுமிஃதே
நுரைப் பீர்க்கின் கறி நுங்குவதெனலாம்
நுவல் சைத்தியவினை நுண்பொருளிஃதாம்
நுனிமயிலடி நடை நுடங்குவ தெனலாம்
நுவல் வளிவினையென் நுவலுமம்மறையே
நுரைப்புன்னடையென நுறுங்கிடுமுடனே
நுவல்பைத்தியவினை நுட்பமுமிஃதே
நுணலையின் நடையென நுடங்கிட வருமே
நுவல் கபவினையிவை நுட்பமுமிஃதே
நுங்கையெனச்சில நும்பியெனப்பேர்
நுங்களினத்திது நுட்பமதாமே.

நுட்ப மருத்துவ நுட்பமுரைப்போம் - எளிமையாக நோய்களைக் கணித்து அந்நோய்களைப் பரிகரிப்பதற்குரிய சூட்சமத்தைச் சொல்லுவோம், நுவல் வழிவாகட நுண்மையுமிஃதே - வைத்திய சாஸ்திரங்களில் கூறப்பட்ட நுட்பங்களும் இதுவேயாகும், நுதல் விழியர் முனம் நுதலியதிஃதே - சிவனார் ஆதியில் கூறியதும் இதுவே, நுந்தையுரைப்படி நுத்திய சுடரே - உங்கள் தந்தையுரைத்தபடி தூண்டப்பட்டுக் கிடைக்கப்பெற்ற அறிவு ஒளியாகும், நுக்குவர் பண்டித நுண்மையறிந்தோர் - பண்டித நூற்களின் நுட்பமறிந்தோர் புகழ்வர், நுகமருத்துவர் கரம் நுவல் வினையவர் மெய்நுனியிருளினனிலது நுவன்மறை நெறியே-(நுன் + இருளில் + அனிலது - நுனிருளினனிலது) சொல்லப்பட்ட நோயினரின் கை

பிடித்து நாடி நடை, உடம்பின் நிறம் முதலிய எண்வகைத் தேர்வுகளின் மூலம் நோய்கணிக்கும் மருத்துவர்களுக்கு நோயினனின் உடல் இருண்ட நிறத்தையடையுமேயானல்வாதமென்றுஆயுள்மறை நூற்கள் கூறும், நுனிமயிரடிவணி நுதல் பைத்தியமே - மயிரின் அடியும் நுனியும் செந்நிறத்தையடையுமானல் பித்தமென நூல் கூறும், நுசுப்புணில் சேத்துமம் நுட்பமுமிஃதே - இடை நேரங்களில் சாப்பிடுவது சேத்துமத்தை விளைவிக்கும், நுவலணபுசித்திடு நுதிருசியெனலாம் - வறட்சியையும் அருந்தும் பொருள் தினைமாவின் ருசியைக் கொடுக்குமானல், நுட்பவளிப்பிணி நுண்பொருளிஃதே - வளிப்பிணி யென்று தேறலால், நுங்குதனைத் தினம் நுங்குவதெனலாம் நுவல்பைத்திய வினை நுட்பமுமிஃதே - பனைநுங்கை தினம் அருந்துவது பித்தமாகும், நுரைப் பீர்க்கின் கறி நுங்குவதெனலாம் நுவல் சைத்திய வினை நுண்பொருளிஃதாம் - நுரைப் பீர்க்கின் கறியைத் தினம் உண்பது கபநோயாகும், நுனிமயிலடி நடை நுடங்குவதெனலாம் நுவல்வளிவினை யென நுவலுமம் மறையே - நாடி மயிலின் நடைபோன்று செல்லுமானல் வாதநாடி யென்று நூற்கள் கூறும், நுரைப்புன்னடையென நுறுங்கிடு முடனே நுவல் பைத்திய வினை நுட்பமுமிஃதே - நீரில் மெல்லெனச் செல்லும் நுரை நொறுங்குவதுபோல நாடி நடைகாணின் பித்தநாடியின் சூட்சமம் என்றறிக, நுணலையின் நடையென நுடங்கிட வருமே நுவல் கபவினையிவை நுட்பமுமிஃதே - தவளை நடைபோல் நாடிகாணுமானல் கபம் என அறிக, இதனை,

"வாகிய லன்னங் கோழி மயிலென நடக்கும் வாதம்
ஏகிய ஆமையட்டை யிவையென நடக்கும் பித்தம்
போகிய தவளைபாம்பு போலவாம் சேத்துமந்தானே"

என்ற மேற்கோளால் அறியலாம், நுங்கையெனச் சில நும்பியெனப்பேர் நுங்களினத்திது நுட்பமதாமே - நாடி நடை மாத்திரையளவு சில தாயைப்போலவும் சில தங்கையைப் போலவும், சில தம்பியைப் போலவும் ஒரே இனமாகவே இயங்குகின்றது என்பதனை உணரலாம்.

நூதனபாண்டிதம்

நூ

நூதனப் பாண்டிதப் பேர் நூதனமறையைச் சொல்வாம்
நூன்முறைவருக்கமான நூனுதிகத்தையெல்லாம்
நூற்பொருளறிந்த மேலோர்

நூற்றியபஞ்சின் மார்க்கம்
நூலுமங்கதிக முன்னர் நூற்பொருளுரைத்திட்டாலும்
நூறு பங்கதிகமான நூதன பரிக்ஷை காண்பார்
நூறுதி றத்தின் வண்ணம் நூறையின் வண்ணமாகில்
நூழிலான் பெருமையான நூதன பரிக்ஷையாமே
நூற்றுப் பத்தக்கனூர்தி நூதன நடையைக் கண்டால்
நூலிசையிறைவன் வண்ண நூதன பரிக்ஷையாமே
நூற்றுப் பத்தக்கன் கேது நூற்றுப்பத்ததிகவோசை
நூனுதிகங்கள் காட்டில் நூ னெறியமைச்சனுமே
நூற்கயிறிழுத்தல் போலே நூனுதிகத்தைநாடி
நூக்கிடநடக்குமாகில் நூ ன்முறைமூவர் கூட்டே
நூபுரத்துழனி போலே
நூன் மொழியொலியைக் காணில்
நூழிலானதிகமென்பர் நூதன பரிக்ஷயீதே.

நூதனப் பாண்டிதப் பேர் - நூதன பாண்டிதம் (வித்தை) என்கிற பெயருள்ள, நூதன மறையைச் சொல்வாம் - புதுவித மருத்துவ நூல் மறைப்பைச் சொல்லுவோம், நூன்முறை வருக்கமான - பாயிரத்தின் முறையான, நூனுதிகத்தையெல்லாம் - பெருந் தொழிலை எல்லாம் (மிகுதியை எல்லாம்), நூற்பொருள் அறிந்த மேலோர்-பல நூல் பொருள்களை அறிந்த பெரியோர்கள், நூற்றிடு பஞ்சின் மார்க்கம் - பஞ்சை நூற்க எப்படி நீண்டு கொண்டு போகுமோ அப்படி (மார்க்கம் - வழி) நூறு பங்கு அதிக முன்னர் நூலின் பொருளைச் சொல்லி இருந்தாலும், நூறு பங்கு அதிகமான நூதன பரிஷை காண்பார் - அதற்கு நூறு பங்கு அதிகமாகவும் பொருள், புலவர்கள்சொல்வார்கள், நூறுதிறத்தின் வண்ணம்- ...., நூறையின் வண்ணமாகில் - மலங்கு மீனின் நிறமாக இருந்தால், நூழிலான் - கபத்தின், பெருமையான நூதன பரிக்ஷையாமே - பெருமையைக் கொடுக்கக் கூடிய புதுமையான பரிக்ஷையாகும். நூற்றுப்பத்தக்கன் ஊர்தி - இந்திரனுடைய வாகனமாகிய வெள்ளை யானையின், நூதன நடையைக் கண்டால் - புதுமையான நடையைப் போல் நாடி நடந்தால், நூலிசை - நூலிலே சொல்லுகின்ற, இறைவன் வண்ண நூதன பரீஷையாமே - வாத நாடியின் தன்மையை உணர்த்தும் புதிய சோதனையாகும், நூற்றுப்பத்து அக்கன் கேது - இந்திரனின் கொடி (இடி), நூற்றுப்பத்து அதிக

ஓசை நூனுதிகங்கள் காட்டில் - அது அசையும்பொழுது உண்டாம் ஓசையைப் போல ஆயிரம் பங்கு அதிகமாக அடித்து அதனுல் ஏற் படும் ஓசையையும் மிகுதியாகக் காட்டினுல், நூனெறி அமைச்ச னுமே - நூல்வழி சொல்லப்பட்ட பித்த நாடியின் நடையாம் என்று அறிக, நூற்கயிறிழுத்தல் போலே, நூனுதிகத்தை - நூல்கயிற்றை மிகுதியாக இழுத்திருப்பதைப் போல, நாடி நூக்கிட நடக்குமா கில் - நாடியானது மேலிட்டுத் தோன்றுமாழல், நூன்முறை மூவர் கூட்டே - நூல் வழி சொல்லப்பட்ட வாதபித்த கபம்மூன்றின் கூட் டாகும் (மரணநாடிஎன்று அறிக), நூபுரத்து-பாதசரத்தின், துழனி போலே - சப்தத்தைப் போலே, நூன்மொழி யொலியைக் காணில் - காணப்பட்டால், நூழிலானதிக மென்பர் - பலமுள்ளவனுகிய சேனுதிபதியாகிய கபத்தின் மிகுதி என்று கூறுவர், நூதன பரி க்ஷையீதே - புதுமையான நாடிப் பரிக்ஷை இதுவேயாகும்.

நெல்லிக்காய்த் தைலம்

நெ

நெல்லிக்காய் விளையுநாட்டு
நெல்லிக்காய்த்தைலங்கேண்மோ
நெல்லிக்காயிரதமுப்பால் நெய்தலின் சமூல மிஞ்சி
நெருஞ்சில் வல்லாரை சிதை ஙெய்ச்சிட்டிய முதவல்லி
நெட்டி கல்லாரங் கீழா நெல்லி நன்னுரி முன்னை
நெற்பயிரிவையின் சாறு நெப்பறியிரண்டு பால்வார்
நெளுவறியடுப்பிலேற்றி நென்னலுநெருனலென்ன
நெய்யுடனெண்ணெய்விட்டு
நெற்பொரியரைக்கால்வாசி
நெட்டுலையெனும் போதிட்டு நெருப்பினைவீக்கத்தாக்கி
நெறிமுறை பிறழாதட்டு நெருப் பினிலிறக்கியந்த
நெல்லிக்காய்த்தைலந்தன்னை
நெற்குவைவைத்தெடுத்து
நெய்த போற்றுனம் பண்ணில்
நெறியிடித லைக்குடைச்சல்
நெற்றிநோய் தலைநோய் பன்னேய்
நெஞ்சினிலெரிச்சல் பித்த

நெருக்கமாரிடித்தல் வாங்கும்

நெல்லிக்காய்த்தைலமென்னும்

நெறியுறுதைலமீதே.

நெல்இக்காய் விளையுநாட்டு - நெல்லானது கரும்பைப் போல் வளப்பத்துடன் விளையும் நாட்டினின்றும் (மருத நிலத்தினின்றும்) கிடைக்கப்பெற்ற, நெல்லிக்காய்த் தைலங்கேண்மோ - நெல்லிக் காயினுல் செய்யப்படும் தைலத்தைச் செய்யும் வகையை (நீ) கேட் பாயாக, நெல்லிக்காயிரதம் - நெல்லிக் கனியின் சாறு, முப்பால் - மூன்றுபங்கு, நெய்தலின் சமூலம் - நெய்தற் சமூலம், இஞ்சி-இஞ்சி, நெருஞ்சில் - நெருஞ்சில், வல்லாரை - வல்லாரை, சிதை - பொன் ஞங்காணி, நெய்ச்சிட்டி - நெய்ச்சிட்டி (சகதேவி), அமுதவல்லி - (சிந்தில் - குடுச்சி), நெட்டி - நெட்டி, கல்லாரம் - செங்குவளை, கீழா நெல்லி - கீழாநெல்லி, நன்னரி - நன்னரி, முன்னை - முன்னை, நெற் பயிர் - நெற்பயிரின் சாறு, இவையின் சாறு - இவைகளின் சாறு, நெப்பறி - இரகசியத்தை அறிவாய், இரண்டு பால்வார் - ஒவ் வொன்றும் இரண்டுபங்கு சேர்த்து, நெளுவறி - உளவை அறி வாய், அடுப்பிலேற்றி - அடுப்பிலிட்டு, நென்னலு நெருனலென்ன - முன்னும் பின்னுமாக, நெய்யுடன் எண்ணெய் விட்டு - நெய்யும் எண்ணெயும் சேர்த்து, நெற்பொரியரைக்கால்வாசி - நெல்பொரி அரைக்கால் பங்கு, நெட்டுலையெனும் போதிட்டு - நெட்டுலைப் பக்கு வத்தில் அதாவது முக்கால் பாகம் காய்ந்த உடன் இட்டு, நெருப் பினை வீக்கத்தாக்கி - நெருப்பை அதிகமாகத் தாக்கி எரித்து, நெறிமுறைபிறழாது அட்டு - நீதி வழிமுறையினின்றும் மாருது காய்ச்சி, நெருப்பினிலிறக்கி - அடுப்பினின்றும் இறக்கி, அந்த நெல் லிக்காய்த் தைலந்தன்னை - அந்த நெல்லிக்சாய்த் தைலத்தை, நெற்குவை வைத்தெடுத்து - நெற்குவியலில் (தானிய புடம்) வைத் திருந்து எடுத்து, நெய்த போற்ருனம் பண்ணில் - மூழ்கினுல், நெறியிடி - நெறியிடிப்பு (இரு நெறியில் வலித்தல்), தலைக் குடைச் சல், நெற்றி நோய் - நெற்றி நோய், தலை நோய் - தலை நோய், பன்னோய் - பல்நோய், நெஞ்சினில் எரிச்சல் - நெஞ்சினில் உண் டாம் எரிச்சல், பித்த நெருக்கமார் இடித்தல் - பித்தத்தினுல் உண் டாம் நெருக்கி மார் இடித்தல், வாங்கும் - தீரும் (போகும்), நெல் லிக்காய்த்தைலமென்னும் - நெல்லிக்காய்த்தைலமென்று சொல்லப் பட்ட, நெறியுறு - வழி பொருந்திய (முறையாகச் செய்யப்பட்ட, தைலம் இதே - தைலம் இது ஆகும் என்றவாறு.

நேர்வாள மாத்திரை

நே

நேர்வாள மாத்திரை நேர்வாள மாத்திரை
நேடாத பேர்க்கெமன் நேர்வாள மாத்திரை
நேமகத்தாக்ஷி யிவி நேர்வாளமோர் பங்கு
நேமித்த சுத்திபுரி நேர்வாள மாத்திரையோர்
நேமித்த புன்மை நேர்வாளந்தனக்கு
நேராக முக்கடுகு நேர்கடுகுலவ ணையே
நேமியான் மாலைரசம் நேராக விட்டரை
நேற்றைக்குமப்படி நேற்றைக்குமப்படி,
நேரியன் மாலை ரச நேராகவிட்டரை
நேற்றைக்குமப்படி நேற்றைக்குமப்படி
நேரமறவிவ்வாறு நேமரை மாத்திரை செய்
நேசனுை பனிவிடு நேயமற உலரவே
நேத்திவெம்புனலிலுண் நேத்திவெகு நலமே
நேடு பழமலமலினம் நேரிலஃதறுமே
நேசித்த கிருமிமலம் நேதிக்குளறுமே
நேத்திர வியாதி சுரம் நேத்திர முண்மூலம்
நேரும்வளி சீதம் நேரு மனல் பித்தம்
நேரத்திலொழியுமிகு நேர்த்தியுயிர் நிலைக்கே.

நேர்வாள மாத்திரை - நேர்வாள மாத்திரை, நேர்வாள் - (நேர் + வாள்) வாளைப் போன்றதாகும், அ மத்திரை - அம்மாத்திரை, நேடாத பேர்க்கு - ஒத்துக் கொள்ளாத உடலமைப்புடையோர்க்கு (பித்த உடம்பினர், மேக நோயினர் கருப்பிணி, வயோதிகர், குழந்தைகள் ஆகியோர்), எமன் - இயமன் போன்றதாகும், நேர்வாள மாத்திரை - (என்பதனை அமாத்து + இறை + நேர் + வாள் எனக்கொள்க) தந்திரியாகிய சிலேத்துமத்திற்கும் இறையாகிய வாதத்திற்கும் கூரிய வாள் போன்றதாகும், நேமகத்தாக்ஷியில் (நேமகத்து + ஆ + க்ஷீ (ரி) + இல்) - நியமித்த பசுவினுடைய சாணப்பாலில், இ நேர்வாளம் - இந்த நேர்வாளம், ஒருபங்கு - ஒரு பங்கு, நேமித்த சுத்திபுரி- * சொல்லப்பட்ட முறைப்படிசுத்திசெய்,

நேர்வாள மாத்திரை - நேர்வாள மாத்திரை, ஓர் - ஆராய்ந்து பார்த்தால், நேமித்தபுன்மை - அற்பமானது (செய்முறை அற்பமாக இருந்த போதிலும் தொழிலில் ஈனமுடையது), நேர்வாளம் தனக்கு நேராக - நேர்வாளத்திற்குச் சமமாக, முக்கடுகு - சுக்கு, மிளகு, திப்பிலி, நேர்கடுகு - சம அளவு கடுகு, லவணை - இந்துப்பு, நேமியான் மாலைரசம் - துளசிச்சாறு, நேராக விட்டரை - விட்டு அரை, நேற்றைக்கு மப்படி, ஆபிரசம் - பசுமூத்திரம், ஆபிரசம் - சாணிப்பால், அருணம் - எலுமிச்சை.

நேர்வாள சுத்தி முறை

* **குறிப்பு :-**

சோபியெனு நேர்வாளம் புனிதமாகில்
சுரரருந்தும் மருந்தாகும் மருந்தாகாது
பாபியஃதேயாகும் ஆகாவிட்டால்
பண்ணுமுறை யெப்படி யென்றெண்ணவேண்டாம்
ஆபிரசம் ஆபிரசம் அருண நாலொன்று
ஆக்கியதில் இதை முடிந்து அடுவாயோர் நாள்
நீபிறகெடுத்துடைத்து மேலுள் போக்கி
நித்தியமா யதையுலர்த்தி வைத்துக் கொள்ளே.

மூனேற்றைக்குமப்படி - மூன்று நாளரைக்க வேண்டும், நேரியன் மாலைரசம் - (நேரியன் - சோழன்) ஆத்திப்பூச்சாறு, நேராக விட்டரை - அளவாக விட்டரைத்து, நேற்றைக்குமப்படி மூனேற்றைக்குப்படி - மூன்று நாளரைத்து, நேரமற - குறைபாடில்லாமல், நேரமரை - குறிப்பிட்ட காலம் வரை அரைத்து, மாத்திரை செய் - மாத்திரை செய்து, நேசனுதபனிலிடு (நேசன் + ஆதபன் + இல் + இடு) நல்ல வெயிலில் உலரவை, நேயமற உலரவே - அதிலுள்ள எண்ணெய்ச்சத்துப் போகும்படி உலரவைத்து, நேத்திவெம் புனலில்உண் - வெந்நீரிலுண்ண, நேத்தி வெகு நலமே - உடம்பிற்கு மிக நன்மையைக் கொடுக்கும், நேடுபழமலமலினம் - நாட்பட்ட பழமலக் குற்றம், நேரிலஃதறுமே - தீரும், நேசித்த கிருமிமலம் - கிருமிகள் விரும்பி வாழ்கின்றமலம், நேதிக்குளறுமே - உடனே நீங்கும், நேத்திரவியாதி - கண்ணைப்பற்றிய பிணிகள், சுரம் - சுரநோய்கள், நேத்திர உண்மூலம் - வேரையுடைய உள்மூலம், நேத்திரவளி சீதம் - வாயுவுடன் கூடிய சீதம், நேரும் அனல் பித்தம் - பித்த உஷ்ணம்,

நேரத்திலொழியும் - இம்மாத்திரையையருந்த காலத்தில் நீங்கும், மிகு நேர்த்தி உயிர் நிலைக்கே - உயிர் வாழ்வதற்கு இம்மாத்திரை, மிகச் சிறந்தது.

நேர்வாள மாத்திரை செய் முறை :

நோய்களுக்கு இயமனைப் போன்றுள்ள நேர்வாள மாத்திரை செய்யும் முறையானது.

நேர்வாளத்தைச் சுத்தி செய்து அதற்குச் சம எடை சுக்கு மிளகு திப்பிலி ஆகியவைகளையும், அதே அளவுக்குக் கடுகும், இந்துப்பு ஆகியவைகளையும் எடுத்துக் கொண்டு இவைகள் எல்லாவற்றையும் ஒன்ருகச் சேர்த்துத் துளசிச் சாறு விட்டு மூன்று நாள் விடாது அரைத்த பின் மூன்று நாள் ஆத்திப் பூச்சாறு விட்டு மேற் சொல்லப்பட்ட முறைப்படி அரைத்து மாத்திரைகளாகச் செய்து நெய்ச்சத்து நீங்கும்படியாக வெய்யி வில் நன்ருக உலர்த்தி வைத்துக் கொள்ள வேண்டும்.

அனுபானம் : வெந்நீரில் உண்ண நாட்பட்ட பழமலக்குற்றம், கிருமிகளுடன் கூடியமலம், கண்நோய், உள் மூலம், சுரநோய், வாயு வுடன் கூடிய சீதம், அனல் பித்தம் முதலியன நீங்குவதுடன் உடம் பிற்கு மிகுந்த நன்மையையும் உண்டாக்கும்.

நொச்சில் தைலம்

நொ

நொச்சிற்றயில நொட்பப் பொருளை
நொச்சிக் குடி போல் நொத்திற் பகரலாம்
நொச்சிற்றழையும் நொச்சிக்கிளைநேர்
நொச்சிற் கொடிவேர் நொட்பப் பொருளும்
நொடியார் வில் வேர் நொடி கூவிளை வேர்
நொருங்கப் புரிநீர் நொய்திற் பெய்து
நொடியாதட்டெழ நொடி நாள் காறும்
நொச்சிற் குடி நீர் நொதியாதறலாம்
நொடி நெய்யெண்ணெய் நொடி முக்கடுகார்
நொடி வெள்ளுளிமெய் நொடியாதண்டை
நொறுங்கப் புரிதி நொய்திற் பெய்தி

நொறினமாநொதி நொசிவற்றிடுதி
நொடியிற்சுழவி நொடியிற் கோடி
நொச்சில்தைல நொட்பப் பொருளை
நொப்பாவியகம் நொப்பாவியமெய்
நொப்பாவியதோள் நொப்பாவியதாள்
நொடியிற்றுன நொடியிற் கழுவி
நொசிவற்றிட நீர் நொடியிற் கழுவ
நொண்டிக்குதிரை நொண்டிக் கொளல் பொய்
நொடியிற் பாய்மா நொறிலானதுபோல்
நொந்தெய்ப்புறலாம் நொடிமால் சன்னி
நொடி வளிவாய்வு நொசிதனு வாதம்
நொசி வினையறுமே நொடியினில்தானே.

நொட்பம் - திண்மை, உறுதி
நொர்ச்சி - மதில்
நொச்சிக்குடி போல் - மாற்றார்க்கெதிர் ஊன்றித் தம்மதிலைக் காக்கும் மறக்குடியினர் போல
நொசிவு - மெல்லிய
நொறில் - விரைவு
நொதி - பெருஞ் சேறு

தைலம் செய்முறை

நொச்சித்தழையும், நொச்சிக்கிளையும், நொச்சிக் கொடியின் வேரும் எடுத்துக்கொண்டு ஆத்திவேர், கரும்புவேர், கூவிளைவேர் ஆகிய இவ் வேர்களையும் சேர்த்து நன்றாக நொறுக்கி நீர் விட்டு எரித்துக் குடிநீர் செய்து கொள்ளவேண்டும். அக் குடிநீரை வடித்தெடுத்துக் கொண்டு அதில் நெய்யும், எண்ணெயும் குடி நீருக்குச் சம அளவு சேர்த்து சுக்கு, மிளகு, திப்பிலி, சந்தனம், வெள்ளைப் பூண்டு, பெருங்காயம்,ஆதொண்டை ஆகிய கற்கத்திரவியங்களை நன்றாக இடித்துத் தூளாக்கி (பராக கற்கம்) அதில் போட்டு நன்றாகத் துழாவிப் பதமாகக் காய்ச்சி வடித்து எடுக்கப்பட்ட நொச்சில் தைலத்தை, உடம்பிலும், தோள்களிலும், கால்களிலும் தடவி நீர் விட்டுக் கழுவ நொண்டிக் குதிரை நொண்டுவது பொய்யென்று சொல்லுமாறு வேகமாகப் பாய்ந்து செல்லுவதைப் போன்று வளி

நோய், வாய்வு, தனுர்வாதம் ஆகிய நோய்களைப் போக்கி உடம்பைக் காக்கும்.

நோயினுற்பத்தி

நோ

நோயினுற்பத்தி கேள் நோன்மைகூர் மைந்தனே
நோயாளியென்பதறு நோயாளி முன்னே
நோய்கள் வினைக்காதரமு னேய்கள்வரவேது
நோனுமையால் வெகுளி நோனுதபசியால்
நோனுத நீர்பருகல் நோனுதவுணவால்
நோக்கியருணமதாக நோக்கியொழி துயிலால்
நோக்கரெனநடமாடி நோக்கி நடமிடலால்
நோட்டக்காரரி னுடி நோட்டமொழி குரலால்
நோவயர்மாதரொடு நோவமருவுதலால்
நோன்புவிரதாதிமிக நோற்கவருமெலிவால்
நோஞ்சையெனவணுகுணவு நோவவயிலுதலால்
நோண்ட வரிதென வேரை நோண்டிய யருதலால்
நோனுத யீரமடி நோனவணி குதலால்
நோய்களுற்பத்தி வெகு நோய்கள் விளைவிரையாய்
நோய்கள் விளைவயலாய் மெய் நோய்கள் வளர்பயிராய்
நோயுதவு பலனுகி நோய்கள் வெகுமேலாம்
நோதகவுரைத்தனமி நோய்களறமேலே
நோயினிகலாளர்புரி நோன்மையிஃதினியே.

நோன்மை கூர் மைந்தனே - மருத்துவ நூலை ஆராய உள்ளத்தில் வன்மை மிகக் கொண்ட மாணுக்கனே! நோயின் உற்பத்தி கேள் - மக்கள் உடலில் நோய் தோன்றும் வரலாற்றைத் திரட்டிப் பொதுவாகச் சொல்லுகிறேன் அதை நீ கேட்டுக் கொள்வாயாக. நோயாளி என்பது - நோயாளி என்று சொல்லிக் கொள்வதை, அறு - நீக்கு, நோயாளி - நோயுற்றவனுக்கு, நோய்கள் வரவு - அந்நோய்கள் வருதலுக்கு, ஏது - காரணங்களாவன, முன்னே நோய்கள் - பழவினைத் துன்பங்களும், வினைக் காதரமும் - இப்பொழுது செய்கிற உணவு செயல்களின் துன்பங்களுமாம் (ஆயினும் அவற்

றில் உணவு, செயல்களாகிய காரணத்தாலேயே ஈண்டு சொல்லு கிறேன்), அவை : நோனுமையால் - அது நன்ருயில்லே இது நன்ருக இல்லே என்று சொல்லி எதையும் வெறுத்தலாகிய சகியாமை யாலும், வெகுளி - எப்பொழுதும் சினம் கொள்வதாலும், நோனுத பசியால் - சகிக்க யியலாத மிக்க பசியாலும், நோனுத நீர் பருகல்-(குடிக்க வேண்டிய விதிப்படி காலத்தில் குடியாமல் நினைத்த நினைத்த காலங்களிலெல்லாம்) மிகுதியாக நீர் குடித்தலாலும், நோனுத உணவால் - (ஒரு நாளைக்கு இத்தனை பொழுதுதான் உண்ண வேண்டுமென்கிற விதியைக் கடந்தும் அவ்விதிப்படி உண்ணினும் மிகுதியாக) உண்ணும் உணவாலும், நோக்கம் அருணம் அதுவாக நோக்கி - எப்பொழுதும் மேற்பார்வையாய்ச் சூரியனேயே பார்த்துக் கொண்டு இருப்பதாலும், ஒழி துயிலால் - (உடற்பயிற்சி யாதொன்றுமின்றி) தொழிலற்றுச் சோம்பலாய் இருத்தலினுலும், நோக்கர் என - நோக்கர் என்னும் குலத்தினர் நடிப்பதுபோல, நடமாடி - நடை முதலியவற்றைக்காட்டி, நோக்கி-மேற்பார்வையாய்ப் பார்த்து, நடமிடலால் - நடிப்பதினுலும், நோட்டக்காரரின் நாடி நோட்ட மொழி குரலால் - பொருள்களின் நோட்டம் பார்ப்பவர்களைப் போலத் தாம் பலவற்றின் நோட்டம் கண்டு எப்பொழுதும் சத்தமாய்ப் பேசுதலாலும், நோ அயர் மாத ரொடு நோவ மருவுதலால் - நோயால் வருந்திக் கொண்டிருக்கிற பெண்களுடன் தான் துன்பப்படற்கு ஒரு காரணமாய்ப் புணர்தலி னுலும், நோன்பு விரதாதி மிக நோற்கவரும் மெலிவால் - ஒரு பொழுது உண்டு பல நோன்புகள் நோற்பதால் உண்டாம் உடல் மெலிவாலும், நோஞ்சையென அணுகு உணவு நோவ அயிலுத லால் - சிறு உணவும் வருத்தப்பட்டுக் கொண்டே உண்ணுத லாலும், நோண்ட அரிது என வேரை நோண்டி அயருதலால் - இம்மரத்தின் வேர் கல்லி எடுத்தற்கு அவ்வளவு கடுமையா? பார்ப்போமென்று அதைக் கல்லி உடல் சோர்வு அடைத லாலும், நோனுத ஈரம் மடி நோன அணிகுதலால் - மிகுந்த ஈரத்துணியை எப்பொழுதும் கட்டிக் கொண்டிருப்பதாலும், நோய்கள் உற்பத்தி - நோய்கள் உண்டாகும், வெகு நோய்கள் விளை விரையாய் - அவை மிக்க நோய்கள் விளைகின்ற விதையாக வும், நோய்கள் விளைவயலாய் - அவ்விதைகளிலிருந்து வேறு நோய் கள் உண்டாகக் கூடிய வயலாகவும், மெய்நோய்கள் வளர் பயிராய் - உடல் நோய்கள் வளரக் கூடிய பயிராகவும், நோயுதவு பலனுகி - அப்பயிரிலிருந்து வேறு நோய்கள் வளரக்கூடிய பலனுகவும், நோய் கள் வெகு மேலாம் - இன்னும் வெகு நோய்களுமுண்டாம், நோதக உரைத்தனம் - இவற்றை நோய்க்குத் தக்கவாருகச் சொன்னேம், இனி - இனிமேல், இந்நோய்கள் அற - அச்செய்யுளில் சொல்லப்

படும் காரணங்களால் உண்டாகக் கூடிய நோய்கள் நீங்க, நோயின் இகலாளர் புரி நோன்மை - அதற்குப் பகைவரான மருத்துவர்கள் தக்கவழி செய்தல் அவர்களின் வன்மையாம்.

பற்ப வரிசை

ப ப்பை பௌ

பற்பத்தொகையே பையுளையிப்
பௌவப்படிமேற் பையவறை
பற்பவரிசைத் திறமிது கேள்
பற்பலுரை களன்றென்றே
பதுமனுரைத்த வாயுண்மறைப்
படியேயுரைத்தார் பண்டிதரும்
பற்றற்றிருக்கு நவலோகம் பகர்கல் சரக்கு முதலாகப்
பங்காரிலந்தைக் கனிரசத்தால் பற்பமாகுமிரசிதமும்
பதுமக்குவளை ரசமொன்றால் பற்பமாகுமிரதமுற்
பலத்தின் சலத்தாலடலையதாம்
பரையினுர மாலூரச் சாற்றால்
பற்பமாகு மயவயிரி பணிலப் பெயரால் வெண்ணீரும்
பங்கக் கரும்பொன் கொடி வேலிப்
பயத்தாற் பயம்போ லடலையதாம்
பவளமருக்கச் சுதையாலெப்
படியும் பொடியாமப் பிரகம்
பவநாசனி சத்துருவறலாற் பற்பமாகுங் காரீயம்
பதுமநாபனலர் மழையாற் பற்பமாகும் நவநீதம்
பகண்டை மழையாற்றா சனையாற் பற்பமாகு மயநாகம்
பருத்திப் புனலால் வெண்ணீரும்
பரசுபாணி படைபருப்பம்
பச்சைப் புனலால் நீருகும்
பரனுரைத்த மறைப்பொருளைப்
படியினந்தி யகத்தியற்குப் பகர விபுத பண்டிதரும்

பகரவதனைத் தவருத

படியே யுரைத்தான் திராவிடத்தால்

பட்டாரகர்க்குங் கிட்டாதார்

பட்டாரகர்க்குங் கிட்டாதே.

பையுளை - நோயை, இப்பௌவம் - இந்த நீர்க்குமிழ், மேற்பைய வறைப்படி - குமிழியின் மீது கையை வைத்த போது அழிந்து போவது போன்று, பற்பத் தொகையே - இந்தப் பற்ப வகைகள் அழித்துவிடும் என்றவாறு, பற்பவரிசைத் திறமிதுகேள் - பற்பமாக்கும் முறைகளாவன, பற்பல உரைகள் அன்று - பலவிதப் பொருள்களன்று, ஒன்றே - ஒரே பொருளேயாகும், பதுமனுரைத்த - பிரம்மன் சொன்ன, ஆயுண்மறைப்படியே - ஆயுள் வேத முறைப்படியே, பண்டிதரும் - பாண்டித்திய முள்ளவரும், உரைத்தார் - கூறினர், பற்றற்றிருக்கும் - சுத்தி செய்யப்பட்ட, நவலோகம் - நவலோகங்கள், பகர் - சொல்லப்பட்ட, கல்சரக்கு முதலாக - பாடாணவகைகள், பங்காரிலந்தைக் கனிரசத்தால் - இலந்தைப் பழச்சாற்ருல், பற்பமாகும் - பற்பமாகும், இரசிதமும் - வெள்ளியும், பதுமக்குவளை ரசமொன்ருல் - தாமரைப்பூச் சாற்ருல், பற்பமாகும் - பற்பமாகும், இரதம் - இரசம், உற்பலம் - செங்கழு நீர், சலத்தால் - சாற்ருல், அடலையதாம் - பற்பமாகும், பரையினுரம் - கந்தகம், மாலூரச்சாற்ருல் - வில்வச் சாற்ருல், பற்பமாகும் - பற்பமாகும், அயவயிரி - அயத்தின் சத்துருவாகிய வெள்ளைப் பாடாணம், பணிலப் பெயரால் வெண்ணீரும் - சங்கால் பற்பமாகும், பங்கக் கரும்பொன் - அயம், கொடிவேலி - சித்திரமூலம், பயத்தாற் - சாற்ருல், பயம்போற் - பால் போன்று, அடலையதாம் - பற்பமாகும், பவளம் - பவளம், அருக்கச்சுதையால் - எருக்கம் பாலால், எப்படியும் பொடியாம் - பற்பமாகும், அப்பிரகம் - அப்பிரகம், பவநாசனி சத்துருவறலால் - (பவம்+நாசம்+சத்துரு+அறல்) பிறப்பை அழிக்கின்ற ......, பற்பமாகும் - பற்பமாகும், காரீயம் - காரீயம், பதுமநாபனலர் மழையால் - துளசிச்சாற்ருல், பற்பமாகும் - பற்பமாகும், நவநீதம் - வெண்ணெய், பகண்டை - இலந்தை, மழையாற் றாசனையால் - சொக்குச் சாற்ருல் *, பற்பமாகும் - பற்பமாகும், அயநாகம் - அயநாகம், பருத்திப் புனலால் - பருத்திச் சாற்ருல், வெண்ணீரும்-பற்பமாகும், பரசுபாணிபடை - எஃகு, பருப்பம் பச்சைப் புனலால் நீருகும்......, பரனுருரைத்த மறைப்பொருளை - சிவனர் சொல்லிய வேதப்பொருளை, படியினந்தி - நந்தி கூறியபடி, அகத்தியற்குப் பகர - அகத்தியனுக்குச் சொல்ல, விபுத பண்டிதரும் - தேவ பண்டிதரும், அதனை - அம்மறைப் பொருளை, திராவிடத்தால் - தமிழ்மொழி

யால், தவருதபடியே யுரைத்தான் - அப்படியே சொன்னன், பட்டார கர்க்கும் - கடவுளுக்கும் கூட, கிட்டாதார் - கிட்டாதது, கிட்டார்காக்கும் - நோயைப் போக்கிடும். கிட்டாதே - கிடைத்தற்கரியது.

நவநீத பற்பம்

* குறிப்பு :

தூசனை பகண்டை வாதுமை நெய் மூன்றிறை
பாசறு நவநீதம் பற்பமதாமே. (தே. கா.)

கொக்கு, இலந்தை, வாதுமைநெய் இம்மூன்றினலும் நவநீதமானது பற்பமாகும்.

செய்முறை : பசுவின் வெண்ணெய் 35 கிராம், கொக்கினது கால் எலும்பின் மேற் தோல் 70 கிராம், இலந்தை இலைச்சாறு 70 கிராம், வாதுமை நெய் 70 கிராம் இவற்றை ஒன்று சேர்த்து இரண்டு நாழிகையரைத்து ஒரே உருண்டையாக உருட்டி அதன் மேல் இலந்தைப்பூ, கண்ணுவல்லி இலை இவையிரண்டையும் அரைத்துக் கவசித்து மூசைக்குள் வைத்து மேல் மூடிச்சீலை மண் செய்து ஓர் இரவு முழுவதும் பனியில் வைத்து மறுநாள் சூரிய உதயத்தில் எடுத்துப் புடமிடப் பற்பமாகும்.

பாஷாண மாத்திரை

பா

பாஷாண மாத்திரைப் பேர் பாண்டிதோத்தம கிரீடை
பாசுபதாத்திரப் பேர் பாணமாம் பிணிப்படைக்கே
பாஷாண காத்திரத்தைப் பாலருளாயிற் போற்றும்
பாதாதி கேசமட்டும் பாய்ச்சிய கவசமாகும்
பாவகமாஞ் சுரத்தைப் பாரமோதிடு தண்டாகும்
பாஷாண மொரு தொடிக்குப் பாவிரியற லிரண்டு
பாய்ச்சி மத்தித்து மேலொன்பான் றினம்வெயிலிற்சீலை
பார்த்திபத்தொரு புடஞ் செய் பாடலத்தினு மவ்வாறே
பாசனையினு மவ்வாறே பான்மையிற் பருப்பஞ் செய்து
பாண்டுவை லிகுசச்சாற்றுல் பாவிரு நாளரைத்துப்

பால் பிரித்தரை மாலூரில் பாங்குற வுருட்டியீரம்
பாறுமாத்திரையைத் தேனில்
பாரணித் திடக்குன்மம் போம்
பாணியத் துண்ணிற் சீத பாவக வெப்பமாயும்
பாவை யரமுதி லுண்ணிற்
பாண்டு ரோகங்கள் நீங்கும்
பாசாங்கு சேந்திரப் பத்திரப்
பாணியத்தினிலே யுண்ணிற்
பாஷாண்ட சுரங்கள் சன்னி பாதங்கள் வலிகள் போகும்
பாஷாண மாத்திரைப் பேர் பாக்கிய வவிழ்த மீதே.

பாஷாணம் 1 பலம், முறைப்படி சுத்தித்து 2 பலம் பாகலிலை இரசம் விட்டு ஒன்பது நாள் அரைத்து வில்லை செய்து காய வைத்து ஓட்டிலிட்டுச் சீலை செய்து மணல் மறைவில் 3 வறட்டியில் புடமிடவும். மேற்படியாகவே பாதிரிப்பூ இரசத்திலும் பசரைக் கீரைச் சாற்றிலும் அரைத்துப் புடமிட்டு எடுக்கப் பற்பமாகும். இப்பற்பத்தை எலுமிச்சம்பழச் சாற்றுலும் வில்வயிலைச் சாற்று லும் முறையே இரண்டிரண்டு நாள் அரைத்துப் பயறளவு மாத் திரை செய்து தேனில் இழைத்துக் கொடுக்கக் குன்மம் போம். தண்ணீரில் உண்ண சீத பித்தசுரம் போம். முலைப்பாலில் உண்ண பாண்டுரோகம் போகும். அறுகம்புல் சாற்றில் கொடுக்கப் பழைய சுரங்கள், சன்னிகள், வலிகள் தீரும்.

குறிப்பு: இம்மாத்திரையை ஒரு திங்கள் பழகிய பிறகே பயன்படுத்துவது நலம்.

பத்தியம்: உப்பு நீக்கிய கஞ்சியே நல்லது.

பிரவாள பற்பம்

பி

பிரவாள பற்பமிது பிரதாபவெற்றி
பிசகாதியற்றி லிது பிரதானி நட்பாம்
பிரதான வஸ்துவிது பிரயோசனித்தால்
பிலமாகு மெய்க்கரண் பிலமாகி நிற்கும்

பிரவாள முப்பத்தி பிணை நீரதற்குப்
பினு மூவிரட்டியிடு பிறழா தரைத்துப்
பிரமா முடிப் பகல்கள் பிரிவா யுலர்த்தி
பின் போர் புடத்தையிடு பிறழாததைப் பின்
பிணைபோ லெருக்கமுது பினவே யரைத்துப்
பிரியாது முற்படிசெய் பிறைபோ னிறக்கும்
பிளிராளி போல்குமது பிடியானை யொக்கும்
பிணியான வெப்பமுதல் பினுநோய்களுக்கே
பிரசத்தி லுன்ணின் மதி பிசகிப் பரக்கும்
பித்தவினை மத்தசனி பித்த வலியறுமே
பிருந்தத்தின முதிலயில் பிரமை யதிசாரம்
பிளவை வலிகுன்மவலி பின்னநலி யறுமே
பிரமியிலை யமுதிலுணிற் பிச்செரி கழிச்சல்
பிண்டநலி சுக சன்னி பிறைக்காய்ச்ச லறுமே
பிரண்டை ரச மதனிலயில் பிரியாத வாத
பித்தகப சஞ்சிதக பித்தசனி யறுமே
பிப்பிலி ரசத்திலுணப் பிற்றை முறைக் காய்ச்சல்
பிரசாபதிக்கடுகள் பிஞ்சுநலி வினைபோம்
பித்திகை ரசத்திலுணப் பித்திகை யைச்செய்யும்
பித்தையுறு சிக்கவலி பில்லி முதலறுமே
பிலத்துருசி நெய்யிலுண பிறங்குகபவனல்போம்
பிரமபத்திரியொ டிளம்பிடியும் வர்ச்சிதமே.

இது பிரவாள பற்பம் - இது பவழ பற்பம், இது பிசகாது இயற்றில் - இதை அடியிற் சொல்லப்படும் கிரமத்தின்படி தவறின்றிச் செய்து முடித்தால், பிரதாப வெற்றி - யாவராலும் புகழப்படும் கீர்த்தியோடு கூடிய வெற்றியை யுடையதாகும், பிரதான வஸ்து இது - அடியிற் காணப்படும் நோய்களைப் போக்குதற்கு முக்கியப் பொருளாகிய இந்தப் பவழ பற்பத்தை, பிரயோசனித்தால்-நோய்கள் மேல் கையாடினல், பிரதானி நட்பு ஆம்-சேனைத் தலைவனாகிய சிலேத்துமத்திற்கு சிநேகமுள்ளது ஆகும் (அன்றியும்), பிலம் ஆகும் மெய்க்கு-பலமுள்ளதாகிய சரீரம் என்னும் கோட்டையைப் பாதுகாத்தற்கு, அரண்பிலம் ஆகி நிற்கும் - பலமுள்ள மதில்

போலாய் காத்திருக்கும் (இது வரைக்கும் இப்பவழ பற்பத்தின் சிறப்புச் சொல்லப்பட்டது. இனி அதன் செய்முறை சொல்லப்படும்), பிரவாளம் முப்பத்தி - சுத்தி செய்த நற்பவழம் மூன்று ரூபாய் எடை எடுத்து (அதைக்கல்வத்தில் இட்டு), அதற்கு-அந்தப் பவழத்தின் எடைக்கு, பின்னும் - மேலும், பிணைநீர் - பெண் யானையின் நீர், மூ இரட்டியிடு - நாளொன்றுக்கு ஆறு ரூபாயெடையாக இரண்டு நாள் அவ்வாறே செய்து, பிறழாது அரைத்து - தவருமல் அரைத்து (வில்லையா யுருட்டி), பிரமா முடிப்பகல்கள் - பிரமதேவனுடைய தலைகளது எண்களைக் கொண்ட நான்கில், பிரிவு ஆய் - (அரைப்பு இரண்டு நாட்கள் சென்றதால் பிரிந்த இரண்டு நாட்கள்), உலர்த்தி - வெயிலில் உலர்த்தி, பின்பு-நன்ருய் உலர்ந்த பின்பு, அதை பிறழாது - அதை யாதோர் தவறுமின்றி, புடத்தையிடு - ஐந்தாவது நாள் காலையில் இயற்கை எரு அல்லது அவ்வெரு ஒன்றன் எடை கொண்ட வைக்கோல் முதலியவை போடாமற் தட்டப்பட்ட எரு நூற்றில் ஐம்பது கீழும் ஐம்பது மேலுமாக வைத்துப் புடம் போடு (பிறகு ஆருவது நாள் காலையில் நன்ருய்க் குளிர்ந்திருக்குமதனை எடுத்துப் பிரித்து அப்பில்லையைக் கல்வத்திலிட்டு), பின் - மறு முறையும், எருக்கு அமுது - எருக்கம்பாலை, பிணைபோல்-பெண் யானை நீர்போல் அரைப்புக்குச் சொன்ன எடையே விட்டு, பின்னவே அரைத்து - நன்ருய்ச் சிக்கும் படியரைத்து, முன்படி பிரியாது செய் - முன்புடத்திற்கு எவ்வாறு அரைப்பளவு எருவளவு செய்யப்பட்டதோ அந்த விதியை விட்டு விடாமல் புடம்போடு, (பிறகு பதினேராவது நாளின் காலையில் பிரித்துப் பார்த்தால்), பிறைபோல் நிறக்கும் - மூன்ரும் நாள் சந்திரன் நிறம் போன்ற நிறத்தையுடையதாயிருக்கும் (இப்படி முடிந்த), அது - அப்பவழபற்பமானது, வெப்ப முதல் பிணியான பின்னும் நோய்களுக்கு - உஷ்ணம் (அல்லது சுரம்) முதலிய நோய்களான தொந்தரோகங்களுக்கு, பிளிறு ஆளி ஒக்கும் - (அவைகளைப் போக்குவதனுல்) கர்ச்சிக்கின்ற ஆளியின் பலத்தையுடையதாகும், பிடியானை ஒக்கும் - (நோய் நீங்கின சரீரத்திற்குப் பலங்கொடுத்து ஆதரிப்பதனுல்) பெண் யானையின் பலத்தை யுடையதுமாகும், பிரசத்தில் உண்ணின் - (இப் பவழ பற்பத்தை அனுபவப்படி ஆளும் அளவுப்படி) தேனில் சாப்பிட்டால், மதிபிசக பரக்கும் - புத்தியானது தவறும்படி முழுமையும் பரவுகின்ற, பித்த வினை-பித்தசெய்கைகளும், மந்தசந்நி-உன்மாத சந்நியும், பித்தவலி அறும்-பித்தத்தால் உண்டாகிற சரீர நோக்காடும் நீங்கும், பிருந்தத்தின் அமுதில் அயில் - துளசியின் சாற்றில் அனுபானித்துச் சாப்பிட்டால், பிரமை அதிசாரம் - புத்திச்சபலமும் அதனேடு கூடிய அதிசாரரோகமும், பிளவை வலி - கட்டிகளின் வலியும், குன்ம வலி - வலி குன்மமும், பின்னம் நலி - சரீரத்தை இளைப்பிக்கின்ற

உளை மாந்தை ரோகமும் க்ஷயரோகமும், அறும் - நீங்கும், பிரமியிலை யமுதில் உண்ணில் - பிரமியிலைச் சாற்றில் அனுபானித்துச் சாப்பிட்டால், பிச்சு எரிகழிச்சல் - பித்தத்தால் எரிச்சலோடு கூடிய பேதியும், பிண்டநலி - கருப்பையின் நோயும், சுகசந்நி - சுக சந்நியும், பிறைக் காய்ச்சல்-பதினைந்து நாட்கொரு முறையாக மாறி மாறி வருகின்ற முறைச்சுரமும், அறும் - நீங்கும், பிரண்டை ரசம் அதனில் அயில் - பிரண்டையை வதக்கிப் பிழிந்த சாற்றில் அனுபானித்துச் சாப்பிட்டால், பிரியாத வாத பித்த கபம் - ஒன்றை விட்டு ஒன்று பிரியாத வாயு பித்த சீதளங்களின், சஞ்சிதம் - சேர்க்கையினையுடைய, க-சரீரத்தின்கணுண்டாகின்ற, பித்தசனி அறும் - பித்தமாகிய சன்னி நீங்கும், பிப்பிலி ரசத்திலுண்ண-பச்சைத் திப்பிலிச் சாற்றிலாவது திப்பிலிக் கஷாயத்திலாவது அனுபானித்துச் சாப்பிட்டால், பிற்றை முறைக்காய்ச்சல் - ஒரு நாள் விட்டு வரும் முறைக் காய்ச்சலும், பிரசாபதிக்கடுகள் - ஆண்குறியிலுண்டாகும் விரண ரோகங்களும், பிஞ்சு நலி வினை - குழந்தைகள் வருந்தும்படி செய்கின்ற கப ரோகங்களும், போம் - நீங்கும், பித்திகை ரசத்தில் உண்ண - இஞ்சிச் சாற்றில் அனுபானித்துச் சாப்பிட்டால், பித்திகை என்னசெய்-சுவரைப்போல் ஸ்தம்பிக்கச் செய்கின்ற, பித்தை உறு - பித்த சம்பந்தமான, சிக்கவலி - குறுக்காக வலிக்கின்ற வலியும், பில்லி - பேய் பிடித்தல், முதல் அறும் - முதலியவைகளும் நீங்கும், பிலத்து உருசி நெய்யில் உண்ண - மிக்க ருசியுள்ள பசு நெய்யில் அனுபானித்துச் சாப்பிட்டால், பிறங்கு கப அனல்போம் - வெளிப்பட்டு வருத்துகின்ற கபோஷ்ணமானது நீங்கும், (ஆகையால் இம்மருந்தைச் சாப்பிடுங் காலத்தில்), பிரமபத்திரியோடு - புகையிலையும், இளம்பிடியும் - பெண்போகமும், வர்ச்சிதமே - நீக்கப்படவேண்டியவைகளாம்.

பிரதானி நட்பாம் என்றதற்கு இப்பவழபற்பம் சேனைத் தலைவனாகிய சிலேஷ்மத்துக்கு சிநேகமாயின் அந்நோயுடன் கலந்து கொண்டு அந்நோயைப் பெருக்கி அந்நோயாளியை வருத்துமென்றன்றோ உரைத்தல் வேண்டும். நூலாசிரியர் தவறிக் கூறியிருக்க அதற்கு அத்தவறாகவே நீரும் பொருள் உரைத்தீரோ யெனின், நூலாசிரியர் கூறியதும் தவறேயாகா, நாம் உரை கூறியதும் தவறேயாகா, சினேகமே யென்க. எங்ஙனமெனின். இப்பவழபற்பமானது சிலேஷ்ம நோய்க்கு உத்தம சினேகனாயிருந்து அச்சீதளமிகுந்த நோயாளியை வருத்துங் காலத்து அதனை மிகவொட்டாது அடக்குதலின் என்க. அவ்வாறியற்றல் சினேகனுக்கே உரிய கடனென்க. பகைவனுக்குரிய தொழிலன்றென்க. இதனை,

நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண்
மேற்சென் றிடித்தற் பொருட்டு.

எனுந் தெய்வப் புலவர் திருவாக்காலுணர்க.

சீதளத்தைச் சேனபதி என்று கொண்டது ஏன் எனில், வாதத்தை அரசனெனவும், பித்தத்தை மந்திரியெனவும், சீதளத்தைச் சேனபதியெனவும் கூறுதல் இந்நூலாசிரியர் வழக்காதலின் என்றறிக.

இவ்வாசிரியர்க்கு ஒரு பல அளவு சரக்குகளே எந்நூலின் கண்ணும் சொல்லுதல் வழக்காதலின் முப்பத்தியென்றதற்கு மூன்று பங்கு எனக் கொண்டு முப்பலம் கொள்ளாமல் மூன்று ரூபா எடை எனக் கொண்டு பலத்தின் மேலேற்றினம்.

பவளம் என்பது பிரவாளம் என்னும் ஆரியத்தின் சிதைவென்பர். சிலர் பவழம் எனவும் வழங்குதலின் தமிழிற்கே உரிய ழகரம் அதிலிருத்தலின் அப்பெயர் தமிழிற்கே உரியதென்று கூறுவர்.

ஒருவன் இருமலால் வருந்துவானேல் அவனைக் கண்டானொருவன் பவழம் சாப்பிடு என்பது வழக்கு.

பீனசப்பிணிக்கு நெய்

பீ

பீனசப் பிணிக்கு நெய் சொல்
பீதகனகத்தை யொக்குமேற்
பீடையைத் தொடைத் திரத்தின பீடமத்தி வைக்குமே
பீறிடாக்கடத்தி னெற்றி பீலியொக்கு முளையினீர்
பீறிடக் குடத்தினிற்கு பீலெனத் தடிக்கவே
பீமமொத்து நிற்கவுட்டு பீமணத்தி நிற்கவே
பீன வெப்ப நோயிதைச்சில் பீனசமெனச் சொல்வார்
பீனசத்தினுலு வர்க்க பீடையாவு மகலவோர்
பீள் குடத்தி நேயமுப்பு பீரவித்தி னேயமாய்
பீசவத்தி னுவியோக பீதியொத்த ளாவவே
பீடிகைக்கு நேர நெய்யை பீறுநாசி யூரவார்
பீனசக் கணத்தை யட்டல் பீசநேயமாகுமே

பீனசக் குறும்பை வெட்டு பீமராசனாகுமே
பீறிடச் செய் சீமிகுத்த பீனசத்தை நுக்குமே
பீறிடச் செய் நீரிறைத்த பீனசத்தை வெட்டுமே
பீறிடச் செய்பக்குகட்டு பீனசத்தையுந்தெறும்
பீதகச் சுகந்த புட்ப பீசவாச மேறுமோர்
பீசமிட்ட வாசலொத்த பீதிநாசியாகுமே
பீனசத்தி னவிழ்தமீது பீனிசத்தி நெய்யிதே.

பீனசப்பிணிக்கு சொல் நெய் - பீனசப்பிணிக்குச் சொல்லப்படுகின்ற நெய்யானது, பீதகனகத்தைதயொக்கும் - பொன்னையொக்கும், மேற்பீடையைத் தொடைத்து - பீனசப்பிணியைத் துடைத்து, இரத்தின பீடமத்தி வைக்குமே - உயர்ந்த இடத்தில் இருக்கச் செய்யும்,பீறிடாக்கடத்தினெற்றி பீலியொக்கும் முளையிநீர் குடத்தில் பீறிடக் குபீலெனத் தடிக்கவே - நீர் இறைக்கும் பத்தல் போன்று உடம்பிலும் நெற்றியிலுமிருந்து உண்டாகின்ற நீர் மூக்கின் வழியாகப் பீறிட்டுவர நாசியை விரைவாகத் தடிக்கச் செய்து, பீமமொத்து நிற்க - அச்சத்தைக் கொடுத்து, உட்டுபீமணத்திநிற்கவே - வெப்பத்தை விளைவித்து துர்நாற்றத்தைக் கொடுத்துக் கொண்டிருக்கின்ற, பீனவெப்ப நோயிதைச் சில்பீனசமெனச் சொல்வார் - பீனச வெப்ப நோயாகிய இதனைச் சில்பீனசமென்பர், பீனசத்திலுவர்க்க பீடையாவுமகலவோர் (யோகம்) - நான்குவகை பீனச நோய்களுக்கும் ஒருவகை மருந்து முறை கூறுகிறேன், ஓர் பீள் குடத்தி - வெட்பாலை வித்து, நேயம்- நெய், உப்பு - இந்துப்பு, பீரவித்து - பீர்க்கவித்து, நேயமாய் - விருப்பமாக, பீசவத்திறைவி - புனுகு, பீதி - கலந்து, ஒத்தளாவவே - அடுப்பேற்றிக் காய்ச்சிக் கொள்ளவும் (புனுகு நீங்கலாக ஏனையவற்றைக் கலத்திலிட்டுக் காய்ச்சி வடிக்கவும்), பீடிகைக்கு நேர நெய்யை பீறுநாசியூர வார் - பெருமையுடைய நெய்யை நாசியில் ஊரும்படியாக விடு, பீனசக் கணத்தையட்டல் பீசநேயமாகுமே - பீனசக் கூட்டங்களை நீக்க வித்துக்கள் சேர்ந்த நெய்யாகும், பீனசக்குறும்பை வெட்டு பீமராசனாகுமே - பீனசத்தால் உண்டாகும் துன்பங்களைப் போக்குவதில் இந்நெய் பீமராசனையொக்கும், பீறிடச் செய் சீமிகுத்த பீனசத்தை நுக்குமே - மிகுந்த சீழை பீறிட்டு வெளிப்படுத்துகின்ற பீனசத்தை நொறுக்கும், பீறிடச் செய் நீரிறைத்த பீனசத்தை வெட்டுமே - மிகுந்து பீறிட்ட நீரை வெளிப்படுத்துகின்ற பீனசத்தை வெட்டும், பீறிடச் செய் பக்குகட்டு பீனசத்தையுந் தெறும் - பக்குகட்டுகின்ற சிரூய்ப் பீனசத்தை நீக்கும், பீதகச்சுகந்த புட்ப பீசவாச மேறுமோர் - மஞ்சள் நிறமுடைய செண்பக மலர் வாசனையை உண்டாக்கும்,

பீசமிட்டவாசலொத்த பீதி நாசியாகுமே - செப்புத் தகட்டில் அட்சரங்கள் எழுதி வாசலிலிட்டு பீதியைப் போக்குவது போல் இந் நாசிப்பிணிகளைப்போக்கும், பீனசத்தி னவிழ்தமீது பீனசத்தி நெய் யிதே - பீனசத்தின் மேலான மருந்தாகிய பீனச நெய் இதுவே யாகும்.

புண்ணுக் கவிழ்தம்

பு

புண்ணுக்கவிழ்தம் புன்னமக் கிகலே
புன்னைத்தருவேர் புங்கச் செடி வேர்
புல்வேர் வரைவேர் புளிமாதளைவேர்
புனவேர் கணிவேர் புளியாரையின் வேர்
புகலோர் நிறை புகலோர் கடமார்
புனல்வாரது நேர் புனவாரஃதூழ்
புகலாரிருநாள் புலிங்கக் கனலோர்
புழையாரது கீழ் புலவீழ் தைலம்
புகையா துறவே புரை தீர்சசியுப்
புடனே மெழுகிற் புல்லாமலி நீர்
புரையத் தைலம் புகழ் கொப்பரையும்
புரையத்தசநாள் புள்ளாதரைமின்
புனையம் மெழுகாம் புட்டகமதிலே
புட்டகமாகிப் புரைமீது ரையப்
புண்வினையற வெய் புண்டரிகமதிற்
புண்டரீகமதாம் புசமீநிற நூ
புரமானனமார் புண் வேதனைபோம்
புதிதாமழகாம் புருவஞ் செவி கால்
புறமுந்தியினேர் புண்ணுகெனவோர்
புண்ணுக்கிரணம் புலைநாறிடு செம்
புனலூ றிடுசொற் புட்டத்திடையு
புட்டத்திடையாம் புண்ணுந் தெறுமீ

புனலுந்தருமே புண்ணுக் கவிழ்தம்
புலமைத் தொழிலே.

புண்ணுக் கவிழ்தம் புன்னமக்கிகலே - புண்ணுக்கவிழ்தம் நமக்குக் கொஞ்சம் வலுவைக் கொடுக்கும்.

புலவு - இறங்கும்
சசியுப்பு - இந்துப்பு
புட்டகம் - பிருஷ்டம்
புண்டரிகம் - (புண் + தரி + அகம்)

செய் முறை

தேவையான சரக்குகள் :- 1. புன்னைவேர் 2. புங்க மர வேர் 3. தென்னை வேர் 4. மலை மூங்கில் வேர் 5. புளி மாதளை வேர் 6. பலாசுவேர் 7. பொன்னுங்காணி வேர் 8. புளியாரை வேர் 9. இந்துப்பு 10. கொப்பரைத் தேங்காய்.

மேற் கூறப்பட்டுள்ள எண் வகை வேர்களையும் சம அளவாக எடுத்துப் பொடித்து அப்பொடியை ஒரு கடத்திலிட்டு மூடிச் சீலை மண் செய்ய வேண்டும். அக்கடத்தின் அடிப்பகுதியில் சில துளை கள் செய்து அத்துளைகளில் இரும்புக் கம்பிகளைப் பொருத்தி வைத்துக் கொள்ள வேண்டும். வேறு ஒரு கடத்தை, பொடிகள் இருக்கும் கடத்தின் அடிப்பகுதியுடன் இரும்புக் கம்பிகள் அப் பானைக்குள் இருக்குமாறு பொருந்த வைத்து சீலை மண் செய்து வெயிலில் காயவைத்துப் பின் ஓர் அகன்ற குழியின் மத்தியில் பொருத்தப்பட்டுள்ள அப்பானைகளை வைத்துச்சுற்றி எரு அடுக்கிப் பற்றவைத்துத் தானுக எரியச் செய்ய வேண்டும். கடத்திற்குள் ளிருக்கும் சரக்குகளிலுள்ள தைலம் (குழித்தைலமாக) இரும்புக் கம்பி வழியாக இறங்கி அடியிற் பொருத்தி வைக்கப்பட்டுள்ள பானையில் தங்கும். இரண்டு நாட்கள் கழித்து அக்குழித்தைலம் நன்ருக ஆறியபின் எடுத்து அதில் இந்துப்பும் கொப்பரைத்தேங் காயும் சேர்த்து 10 நாட்கள் விடாமல் மெழுகு பதமாக அரைக்க வேண்டும்.

பூபதி மாத்திரை

பூ

பூபதி மாத்திரை பூபதிக்கு நேர்
பூவையர் மேற்கொள்வார் பூடணத்தினே
பூசுரர்மருமமார் பூண் நூலிதே
பூரணியரிதகி பூதமாதவி
பூதரமாதளை பூனைக்காஞ்சொறி
பூசனியாசினி பூவைவெயின் வேர்
பூமிசையுலரவோர் பூட்டிலேயிடி
பூருவப் பொடிக்கு நேர் பூலவித்தால் விரை
பூரமுக்கடுசசி பூமிப் பூதுடி
பூடணகருவி கற்பூவெலாமிடு
பூசைநீர் ஞமலிநீர் பூவை முட்டை நீர்
பூட்டியாறிரு தினம் பூரவார்த்தரை
பூண்டினிலாறு நாள் பூர்த்தியாயரை
பூர்த்தியாகக் கருப் பூரவள்ளி நீர்
பூச்சினுமாறு நாள் பூணவேயரை
பூர்த்திவா ரரைத்தபின் பூரணுகுதிப்
பூருவோத்திர மெப் பூட்டு மாத்திரை
பூண்மணியாகச் செய் பூவிலாரவை
பூரசத்திலுணப் பூட்சி குட்டம் போம்
பூவையரமுதிலுண பூச்சி வாய்வு போம்
பூவிலாச்சி யத்திலுண பூப்புசச் சன்னியும்
பூளைக் கண்ணருகலும் பூழிக்காய்ச்சலும்
பூதர மூர்ச்சையும் பூதி வீக்கமும்
பூசல் செய்சுரங்களும் பூரிக்குன்மமும்
பூரணைக் காய்ச்சலும் பூரத்தேமலும்
பூதரமிலையெனப் பூண்டு நீங்குமே
பூபதி மாத்திரைப் பூவிதாவிதே.

பூபதி மாத்திரை பூபதிக்கு நேர் பூவையர் மேற்கொள்வார் பூடணத்தினே பூசுரர்மருமமார் பூண் நூலிதே - பெண்ணிற்குப் பெருமையைக் கொடுப்பது ஆபரணம், அந்தணர்களுக்கு அழகினைக் கொடுப்பது அவர்தம் மார்பிலொளிரும் நூலாகும். அது போன்று மன்னனுக்கு நேராக வைத்தெண்ணப்படுவது பூபதி மாத்திரையாகும், பூரணி - இலவங்கம். அரிதகி - கடுக்காய், பூதம்-சடாமாஞ்சில், மாதவி - குறுக்கத்தி. பூதர மாதுளை - மலை மாதுளை, பூனைக்காஞ்சொறி-பூனைக்காஞ்சொறி, பூசனி-நிலப் பூசனி, ஆசினி - பலா, பூவை - காயாமரம், எயின்-பாலை, வேர் - ஆகியவைகளின் வேர், பூமிசையுலர - நன்ருக உலர்த்தி, ஓர் பூட்டிலேயிடி - ஒன்ருகச் சேர்த்து இடியுரலிற் போட்டு இடித்துப் பொடியாக்கி. பூருவப் பொடிக்கு - இடித்துச் சேர்த்தெடுத்த பொடிக்கு, நேர் - சமமாக, பூலாவித்தால் - பூல் வித்து, ஆல் விரை, பூரம் - ரச கற்பூரம், முக்கடுகு - சுக்கு, மிளகு, திப்பிலி, உச்சிப்பூ - சாம்பிராணிப்பூ, பூமிப்பூ - பூநீர், துடி - ஏலம் , பூடண கருவிகல்பூ - தங்க பற்பம், எலாமிடு-இவை போன்றவைகளையிட்டு, பூசை நீர் - கழுநீர், மேலி நீர் - கள்ளு, பூவை முட்டை - நாகணவாய்ப் பறவை முட்டை நீர், பூட்டி - சேர்த்து, ஆறிரு தினம்-பன்னிரண்டு நாட்கள், பூரவார்த்தரை - முழுவதையும் விட்டு அரைக்க, பூண்டினிலாறு நாள் - பூண்டுச் சாற்றில் ஆறுநாள், பூர்த்தியாயரை - முழுவதுமாக அரைத்து, பூர்த்தியாக - முழுவதுமாக, கருப்பூர வள்ளி நீர் - கருப்பூரவள்ளிச் சாற்றிலரை, பூச்சிறு மறுநாள் - ..., பூணலே அரை -..., பூர்த்திவாரரைத்த பின் - முழுவதுமாக அரைத்த பின், பூரணுகுதி - ஓமகுண்டம் வளர்ப்பது போன்று, பூருவோத்திர மெப்பூட்டு மாத்திரை - பூபதி மாத்திரையை, பூண்மணியாகச்செய்-பயறு அளவாகச் செய்து, பூவிலாரவை - உலரவை, பூரசத்திலுண-தேனில் உண்ண, பூட்சிகுட்டம் போம் - பராகம் (தூள்) என்ற ஒரு வகைக் குட்டம் நீங்கும், பூவையர் அமுதிலுண்ண - தாய்ப்பாலிலுண்ண, பூச்சி வாய்வு போம் - உடலைப்பற்றின வாய்வு நீங்கும், பூவில் (அல்லது) ஆச்சியத்திலுண்ண - கருப்பஞ்சாறு அல்லது நெய்யில் உண்ண, பூப்புசச் சன்னியும் - சூதகச் சன்னியும், பூளைக் கண்ணருகலும் - பூளைக்கண்ணும் அருகல் நோயும், பூழிக்காய்ச்சலும் - சுர நோயும், பூதர மூர்ச்சையும் - மூர்ச்சை நோய்களும், பூதி வீக்கமும் - உடம்பு வீக்கமும், பூசல் செய் - துன்பத்தை உண்டாக்குகின்ற, சுரங்களும் - காய்ச்சலும், பூரிக்குன்மமும் - உப்புசத்தை விளைவிக்கக் கூடிய குன்ம நோயும், பூரணைக் காய்ச்சலும் - காய்ச்சலும், பூரத் தேமலும் - படர்கின்ற தேமல் நோயும், பூதரமில்லையென - பூமியில் இல்லையென்று சொல்லுமாறு, பூண்டு நீங்குமே - அடியோடு நீங்கிவிடும். பூவி-இவ்வுலகில், பூபதி மாத்திரை தாவிதே - பூபதி மாத்திரையின் குணமிதுவாகும்.

"உலகத்து மக்கட்கெல்லாம் அரசன் தலைவனுதலால் பூபதி என்றழைக்கப்படுகிருன்."

பூபதி மாத்திரை செய்முறை

இலவங்கம், கடுக்காய், சடாமாஞ்சில், குருக்கத்தி, மலைமாதுளை, பூனைக்காஞ்சொறி, நிலப்பூசனி, பலா, காயாமரம், பாலை ஆகியவை களின் வேர்களை எடுத்துக்கொண்டு நன்ருக உலர்த்தி ஒன்ருகச் சேர்த்து இடியுரலில் போட்டு இடித்துப் பொடியாகச் செய்து அப் பொடிக்குச் சமமாக பூலாவித்து, ஆல்விரை, இரசகற்பூரம், சுக்கு, மிளகு, திப்பிலி, சாம்பிராணிப்பூ, பூநீறு, ஏலம், தங்கபஸ்பம்போன் றவைகளை இட்டு அதில் காடிநீர், கள், நாகணவாய்ப் பறவை முட்டை நீர் ஆகியவைகளை இட்டுப் பன்னிரண்டு நாட்கள் அரைக்க வேண்டும். மேலும் பூண்டுச் சாற்றில் ஆறு நாள் முழுவதும் அரைத்துப் பின்னர் கற்பூரவல்லிச் சாற்றிலும் அரைக்க வேண்டும். பின் மிளகு அளவாக உருண்டை செய்து உலரவைத்துக் கொள்ள வேண்டும்.

அனுபானமும் தீரும் நோய்களும் :- தேனிலுண்ண பராகம் என்ற ஒரு வகைக்குட்டம் நீங்கும். தாய்ப்பாலில் உண்ண உடலைப் பற்றின வாய்வு நீங்கும். கருப்பஞ்சாறு அல்லது நெய்யில் உண்ண சூதகச்சன்னி நீங்கும். மேலும் பூளைக்கண், கண்ணருகல் நோய், சுரநோய், மூர்ச்சைநோய், அடிவயிறு வீக்கம், காய்ச்சல் குன்மம் தேமல் ஆகிய நோய்கள் அடியோடு தீரும்.

பெருவியாதிக்கு நெய்

பெ

பெருவியாதிக்கு நெய்ப் பெயென்ருமை சொல்வாம்
பெப்புலியாக நோய் பெயரிஞட்டுறும்
பெருமை செறிந்த நெய்ப் பெயர் நிசாகிருதம்
பெண்ணை வேர் வரைவேர் பெண்டகத்தின்வேர்
பெருங்கழிஞ்சில் வேர் பெரிய தான்றிவேர்
பெந்த வேர் கணிச்சி வேர் பெருநன்னுரி வேர்
பெண்மைமோ ரண்மைவேர் பெட்டமத்தின் வேர்
பெருக்கொடுதறித் தொரு பெருங்கடத்திரு
பெத்திரியெனப்புனல் பெய்ததன்கணே

பெட்டையேய் மூத்திரம் பெட்டை நாயெச்சம்
பெய்ததை நிலத்திடு பெருமுத் திங்களே
பெந்தகத்துடனெடு பெட்பினுலெரி
பெருமநார் விறகினற் பெரிய நாலுநாள்
பெலனுறவெரியதிற் பெய்யுமெண் ணெயை
பெரிய நூன் முறைப்படி பெட்டி நேர்நிறை
பெலிக்கு நேராகவே பெலிக்கு நேர்வது
பெய்யமுதடு மளே பெறுநன் நெய்விடு
பெருமுன் காக்குளி பெருங்காயத்தொடு
பெய்ததை மீட்டெரி பெயர் கொள் நெய்யதை
பெற்றவூர் தியார்தரப் பெற்ற நீறெனப்
பெரிய நென்மாவொடுண் பெருமையாகவே
பெயர்பெறு மெய்யினும் பெய்து பூசினற்
பெரு வியாதிப் பெயர் பெற்ற நோயெனும்
பெரிய நோயகன்றிடும் பெட்பு வாய்த்திடும்
பெருவியாதிக்கு நெய் பெருமை யீதரோ.

பெருவியாதிக்கு - குட்ட நோய்களுக்கு, நெய் - மருந்தாகிய நெய்யினது, பெருமை - பெருமையினை, என்சொல்வாம் - என்னென்று சொல்லுவேன், பெப்புலியாக - பயப்படுத்தக் கூடிய புலி போன்ற, நோய் - நோயின், பெயரினட்டுறும் - பெயரை நிலைநிறுத்திக் கொண்டிருக்கக் கூடிய பெருவியாதிக்கு, பெருமை செறிந்த நெய்ப்பெயர் - பெருமையையுடைய நெய்யினது பெயர், நிசாகிருதம் - நிசாகிருதமெனப்படும், பெண்ணைவேர் - பனைவேர், வரைவேர் - மூங்கில் வேர், பெண்டகத்தின் வேர் - கழற்சிவேர், பெருங்கழிஞ்சில் வேர் - அழிஞ்சில் வேர், பெரிய தான்றிவேர் - தான்றிவேர், பெந்தவேர் - கலப்பைக்கிழங்கு வேர், கணிச்சிவேர் - வெற்றிலைவேர், பெருநன்னரிவேர்-நன்னரிவேர், பெண்மைமோரண்மைவேர் - குமரிவேர், பெட்டகவேர் - துத்திவேர், பெத்திரியெனப் புனல் பெய்ததன்கணே - அதைப்போன்று மூன்று பங்குநீர்விட்டு, பெட்டையேய்மூத்திரம் - பெட்டைக் கழுதை மூத்திரம், பெட்டை நாயெச்சம் - பெட்டை நாய் எச்சம், பெய்து - அதனுடன் சேர்த்து, அதை - அக்கலவைப் பொருளை, பெருமுத்திங்கள் நிலத்திடு - மூன்று மாதங்கள் பூமிக்குள் புதைத்துவை, பெந்தகத்துடன் எடு - பின்பு கவனமாகப் பூமிக்குள்ளிருந்து எடு, பெட்பினுலெரி -

பெருமையாகத் தீயெரி, பெருமநார் விறகினுல் பெரிய நாலுநாள் பெலனுறவெரி - மட்டை போன்ற விறகுகள் கொண்டு நான்கு நாட்கள் நன்ருக எரி, அதில் - எரிக்கப் பட்ட அக்கலவையில், பெரிய நூன் முறைப்படி பெட்டி நேர் நிறை பெய்யுமெண்ணெயை - நூற்களில் கூறப்பட்டுள்ளபடி சம அளவு எண்ணெயைச் சேர்த்து, பெலிக்கு நேராகவே பெலிக்கு நேர்வது பெய்யமுதடு மளே பெறு நன்நெய் விடு - எண்ணெய்க்குச் சம அளவு நெய்யையும் அதனுடன் சேர்த்து, பெருமுன்காக் குளி - வெள்ளேப் பூண்டும், பெருங்காயத் தொடு பெய்ததை - பெருங்காயத்தையும் சேர்த்துப் போட்டு, மீட்டெரி - மீண்டுமெரித்து, பெயர் கொள் நெய்யதை - பெயர் பெற்ற நிசாகிருதத்தை, பெற்ற வூர்தியார்தரப் பெற்ற நீறென - இடபவாகனத்தையுடைய சிவபெருமானின் திருவருட் பிரசாதமாகிய திருநீற்றையிட்டுக்கொள்வதுபோன்று, பெரிய நென் மாவொடுண் - நெல்மாவினுடன் சேர்த்து உண்டு, பெருமையாகவே பெயர் பெறுமெய்யினும் பெய்து பூசினுல் - பெருமையாகச் சொல்லப் படுகின்ற உடம்பிலும் தடவிப் பூசிட, பெயர் பெற்ற பெருவியாதி நோயெனும் பெரிய நோயகன்றிடும் - பெருவியாதியென்ற பெயரிணயுடைய பெரிய வியாதியாகிய குட்டம் நீங்கும், பெட்பு வாய்த்திடும் - சரீரத்திற்கு நன்மையைக் கொடுத்திடும், பெருவியாதிக்கு நெய் பெருமைபீதரோ - பெருவியாதி நெய்யின் பெருமையை யார் அறிவார் ?

பெருவியாதிக்கு நெய்

தேவையான சரக்குகள் :

1. பனே வேர் 2. மூங்கில் வேர் 3, கழற்சி வேர் 4. அழிஞ்சில் வேர் 5. தான்றி வேர் 6. கலப்பைக் கிழங்கு வேர் 7. வெற்றிலேக் கொடி வேர் 8. நன்னரி வேர் 9. குமரி வேர் 10. துத்தி வேர் 11. பெட்டைக் கழுதை நீர் 12. பெட்டை நாய் எச்சம் 13. எண்ணெய் 14. நெய் 15. பூண்டு 16. பெருங்காயம்.

செய் முறை : மேற் சொல்லப்பட்ட பத்து வகை வேர்களேச் சம அளவாக எடுத்து ஒரு கடத்திலிட்டு அதற்கு மூன்று பங்கு நீர் விட்டு பெட்டைக்கழுதை நீர், நாய் எச்சம் ஆகியவைகளேயும் அதனுடன் சேர்த்து அக்கலவையை மூன்று மாதங்கள் பூமிக்குள் புதைத்து வைத்துப் பின்னெடுத்து மட்டை போன்ற எரி பொருள்கள் கொண்டு நான்கு நாட்கள் தீ யெரித்து நூன் முறைப்படி சம அளவு எண்ணெய் சேர்த்து அதற்குச் சம அளவு நெய்யும்

சேர்த்து அதில் வெள்ளைப் பூண்டும், பெருங்காயமும் சேர்த்து மீண்டும் எரித்து நெய்யை வடித்து எடுக்க வேண்டும்.

அனுபானம்: சிவபெருமானது அருட்பிரசாதத்தைக் கொஞ்சம் வாயிற்போட்டு, மெய்யில் தூவி இட்டுக் கொள்வது போன்று நெய்யை நெல்மாவுடன் சேர்த்து உண்டும் மெய்யிலும் பூசிவர குட்டம் நீங்கும்.

பேரீச்சங்காய்க் கிருதம்

பே

பேரீச்சங்சாய்க் கிருதப் பேரீச்சதாமே
பேதாகு முயிர் நிலைக்குப் பேர்க்கவசமாமே
பேரீச்சங்காய் விரையைப் பேர்த்தவையை மாற்றி
பேனமதிலே கழுவிப் பேணவதினிறைநேர்
பேராமுட்டி கொடிவேலிப் பேய்ப்புடல் நன்னாரி
பேதனுகிரி கொன்றை பித்திரண் பல்லி
பேசி வேர் சரியாகக் குடி நீர்விட்டதிலே
பேசு திரிகடுகு துடி இலவங்கமடைவே
பேழையெனவொரு கடத்தாகவதையிட்டே
பேசுமிருபது கன்னல் பேர்பெற வெரித்தே
பேராவிநேயமொரு கால்வாசியதிலே
பேழ்வாய் கடத்திலிடு பேர்வாக வெரிகம்
பேரிகையினொலிகுழறு பேதத்திலயிர் பெய்
பேணுத்துறையான பேரீச்சங்காய் நெய்
பேசுமிருபக்கமிது தானியத்தில் வை
பேசாதெடுத்துநுக ரிருபோதுமிகவே
பேசுமது மேகமெரி குன்மமனல் வாய்வு
பேர்பெருமகோதர பலாதிலேவினை மாறும்
பேரழகு முரமுமிகு முயிரினுக்குறுதி
பேதமத வுளதாகும் வீரியமு முளதாம்
பேதையர்க் கினிதான மதனவேளாவார்
பேரீச்சங்காய்க்கிருத பேராண்மையிஃதே.

பேதாகும் உயிர்நிலைக்குப் பேரீச்சங்காய் கிருதம் பேர்ஈச்சதாகும் - அதுகவசத்தைப் போன்று உடலில் நோயணுகாவண்ணம் பாதுகாக்கின்றது.

செய்முறை :-

பேரீச்சம் பழத்தின் உள்ளிருக்கும் கொட்டையை நீக்கிப் பின் நுரையுடன் கூடிய புதிய ஆற்றுநீரால் கழுவி எடுத்துக்கொண்டு அதற்குச் சம எடையாகப் பேராமுட்டி, கொடிவேலி, பேய்ப்புடல், நன்னரி, சிறுபீளை (பேதனகரி), கொன்றை, செண்பகம், பல்லிப் பூண்டு (பித்திரண்பல்லி), ஆகிய இவ்வேர்களைச் சேர்த்து முறைப் படி குடிநீர் செய்து, அக்குடிநீரில் திரிகடுகு, ஏலம், இலவங்கம், ... (மடைவே) ஆகியவைகளைப் பாதுகாப்பான பானையிற் போட்டு இருபது நாழிகை எரித்துப் பின் அதை இறுத்து அதில் கால்பாக அளவு பசு நெய்யைச் சேர்த்து வாயகன்றுள்ள பாத்திரத்திலிட்டு எரிக்க வேண்டும். அவ்விதம் எரித்துக் கொண்டிருக்கும் பொழுது முரசு ஒலிப்பது போன்ற ஒலியுடன் கொதிக்கும். அதுநெய்யின் கடுகு திரளும் சமயமாகும். அத்தருணத்தில் இறக்கி, முப்பது நாள் தானியபுடமாக வைத்துப் பின் பேசாது எடுத்து இருபோதும் உட்கொள்ள மதுமேகம், எரிகுன்மம், உஷ்ணவாய்வு, மகோதரம், ஈரல் சம்பந்தமான நோய்கள் ஆகிய நோய்களைப் போக்கடித்து உடலுக்கு அழகையும் உயிருக்கு உறுதியையும் கொடுத்து வீரியத் தையும் கொடுக்கும். பெண்களும் விரும்புமாறு போக இன்பத்தைக் கொடுக்கும்.

இத்தகைய ஆண்மையை நல்க வல்லது பேரீச்சங்காய்க் கிருதம்.

பொடுதலைத் தைலம்

பொ

பொடுதலைத் தைலப் பொற்பினைப் பகர்வாம்
பொடுதலைச் செடிவேர் பொன்னுங்காணிவேர்
பொன்னுவாரைவேர் பொன்னுவலின்வேர்
பொன்னுங்காய்வேர் பொன் முசுட்டையின் வேர்
பொன்னியன லங்கல் வேர் பொங்கரினடிவேர்
பொலியு மிவ்வேர்வகை பொடுதலைக் கத்தம்
பொட்டெனத் தறித்தது பொங்க நீர் வார்த்து

பொசியாக்கடத்தெரி பொங்கவட்டதனைப்
பொறுமுறைமுக்கடு பொதுகணைக் கிராம்பு
பொடி செய்து சந்தனம் பொரியரை யெண்ணெய்பால்
பொட்டெனவிட்டது பொலிவுடனட்டுப்
பொம்மலினுகுமப் பொடுதலைத் தைலம் நீ
பொங்கரினுமென் பொங்கரில் வைத்துப்
பொன்று மதியெடு பொய்யாததனைப்
பொலிவொடு முழுகிடிற் பொடுதலைச் சொறிபோம்
பொல்லாத தலைவலி பொறியற்றேமல்போம்
பொதுள்கபச் சன்னிபோம் பொசிப்பினே யறுமே
பொய்ப்பித்தனலறும் பொற்பினைத்தருமே
பொச்சை நேருரமாம் பொன்னிலத்தவர்போற்
பொலிவினைத் தருவதிப் பொடுதலைத் தைலமே.

பொடுதலைத் தைலப் பொற்பினைப் பகர்வாம் - பொடுதலைத் தைலத்தின் சிறப்பைக் கூறுவோம், பொடுதலைச் செடிவேர் - பொடுதலைச்செடி வேர், பொன்னுங்காணி வேர் - பொன்னுங் காணி வேர், பொன்னுவாரைவேர் - பொன்னுவாரை வேர், பொன்னுவலின் வேர் - நாவல் வேர், பொன்னுங்காய் வேர் - பொன்னுங்காய் வேர், பொன்முசுட்டை வேர் - பொன் முசுட்டையின் வேர், பொன்னியன் அலங்கல் வேர் - ஆத்தி வேர், பொங்கரினடி வேர் - துத்தி வேர், பொலியுமிவ் வேர்வகை - கூறப்பட்ட இவ்வேர்களை, பொடுதலைக் கத்தம் - பொடுதலை வேருக்குப் பாதியளவு கொண்டு, பொட்டெனத் தறித்து - சிறிது சிறிதாகத் தறித்து, அது - அவ்வேருக்கு, பொங்க - தேவையான அளவு, நீர் வார்த்து - தண்ணீர் விட்டு, பொசியாக் கடத்து - பெரிய பாத்திரத்தில், எரி - எரிக்கவும், அதனை - அந் நீரை, பொங்கவிட்டு - பொங்கு மளவிற்குக் கொதிக்கவைத்து அக் குடிநீரில், பொறு முறை முக்கடுகு - சுக்கு, மிளகு, திப்பிலி, பொதுகணை - திப்பிலி, கிராம்பு - கிராம்பு, பொடி செய்து - ஆகிய வைகளைப் பொடி செய்து போட்டு, சந்தனம் - சந்தனம், பொரி யரை—., எண்ணெய் - எண்ணெய், பால்-பால், பொட்டெனவிட்டு - போட்டு,பொலிவுடன்அட்டு-நன்ருகத்தீயெரித்து,பொம்மலினுகுமப் பொடுதலைத் தைலம்..., நீ பொங்கரினுமென் பொங்கரில் வைத்து - நெற்குதிருக்குள் வைத்து, பொன்று மதியெடு - ஒரு திங்கள் கழித்தெடு, பொலிவொடு பொய் யாததனை முழுகிடில் - பொய்

யாகாத மேற்படி தைலத்தை முழுகிவர, பொடுதலைச் சொறிபோம்- பொடுகு சொறி போகும், பொல்லாத தலை வலி - பொல்லாத் தன்மையையுடைய தலைவலி, பொறியற் றேமல் - சூட்டினால் ஏற்படும் பொறித்தேமல், போம் - நீங்கும், பொதுள் கபச்சன்னி போம் - கபச் சன்னி நோய் நீங்கும், பொசிப்பினையறும் - அசீரண நோய் நீங்கும், பொய்ப்பித்து அனல் அறும் - பித்த அனல் நோயறும், பொற்பினைத்தருமே - அழகினைக் கொடுத்திடும், பொச்சை நேருரமாம் - உடலுக்கு உரத்தைக் கொடுக்கும், பொன்னிலத்தவர் போல் - தேவர்களைப் போன்று,பொலிவினைத்தருவது - அழகினைக் கொடுப்பது, பொடுதலைத் தைலமே - பொடுதலைத் தைலமாகும்.

பொடுதலைத்தைலம்

தேவையான சரக்குகள் :- 1. பொடுதலைச் செடிவேர் 2. பொன்னாங்காணி வேர் 3. பொன்னாவாரை வேர் 4. நாவல்வேர் 5. பொன்னாங்காய் வேர் 6. பொன் முசுட்டை வேர் 7. ஆத்தி வேர் 8. துத்தி வேர் 9. முக்கடுகு 10. திப்பிலி 11. கிராம்பு 12. எண்ணெய் 13. பால்.

செய்முறை :- பொடுதலை வேர் ஒரு பங்கும் சொல்லப்பட்ட ஏனைய வேர்கள் எல்லாம் சம அளவாகக் கொண்டு பொடுதலை வேருக்குப் பாதி அளவு எடுத்து சிறு சிறு துண்டுகளாகத் தறித்து பெரிய பாத்திரத்தில் போட்டுத்தேவையான அளவு நீர் விட்டு எரிக்கவும். நீர்பொங்குமளவிற்குக் கொதித்த பின் வடித்து அக்குடி நீரில் முக்கடுகு, திப்பிலி, கிராம்பு ஆகியவைகளைப் பொடி செய்து அதில் போட்டு எண்ணெய், பால் சம அளவு கூட்டி நன்றாக எரித்து வடித்தெடுக்கப்பட்ட பொடுதலைத் தைலத்தை ஒரு மாதம் நெற்குதிருக்குள் வைத்து எடுக்க வேண்டும்.

தீரும் நோய்கள் :- பொடுதலைச் சொறிபோம். பொல்லாத தன்மையையுடைய தலைவலி, புள்ளித்தேமல், கபச் சன்னி நோய், அசீரண நோய், பித்த அனல் நோய் போவதுடன் உடலுக்கு அழகினையும் உரத்தையும் நல்கிடும்.

போசனக்குடாரி நெய்

போ

போசனக் குடாரி நெய் போஜராஜனே
போஷணை செயுமுடற் போதகத்தையே
போசனக்குடாரி பேர் போந்த சீரகம்

போற்றுமுன் மூன்று பால் போந்தைதாதகி
போதி கூவிளைவிளா போனகத்தின் வேர்
போட்டி போலதற்கு நேர் போட்டிடித்ததிற்
போனலாவாச்சியம் போற்று நேர் நிறை
போட்டு நேரெரியடு போகில் வார்த்தையிற்
போத்திரிமுன்மடா போகியாமெனப்
போற்றநேர்மையிதிற் போகிபோலெடு
போற்றெருமதி நெலிற் போட்டதைப் பினர்
போசனமுறையினுற் போசனித்திடு
போமுடலசீரணம் போமருச்சுரம்
போமுடலெலும்பனல் போமரோசகம்
போமைச்சினைபடு போவி நோயெலாம்
போமிழி மூலநோய் போமுபத்திரவம்
போகுமச்சரக்கனல் போகுமாமெரி
போகுமேகத்தனல் போகுமீளை நோய்
போசன்நேரப் போக மன்னவன்
போசனுமிர்தமெனப் போற்றும் வையமே.

போசனக் குடாரி நெய் உடற்போதகத்தை போஷணை செயும் போஜராஜனே - போசனக் குடாரி நெய் நோயினல் நலிந்த உடலைப் பராமரித்து இளமையைக் கொடுத்து உள்ளத்தைப்போஷணை செய்வதில் போஜ இராசனைப் போன்றது, போசனக் குடாரி பேர் போந்த சிரகம் - போசனக் குடாரி என்றழைக்கப்படுகின்ற சிரகம், போற்றுமுன் மூன்றுபால்-மூன்று பங்கு எடுத்துக்கொண்டு, போந்தை-பனை, தாதகி - ஆத்தி, போதி - அரசு, கூவிளை - வில்வம், விளா - விளாவேர், போனகத்தின் வேர் - சோற்றுக்கற்றாழைவேர், அதற்குப் போட்டிபோல் - அதற்கு எதிராக, நேர்-சமமாக, போட்டிடித்து - இடித்துப் பொடி செய்து, அதில் - அப்பொடியில், போனலாவாச்சியம் போற்று நேர் நிறை - சம அளவாகப் பசு நெய்யை, போட்டு - சேர்த்து, நேரெரியடு - எரிக்க வேண்டும், போகில் வார்த்தையில்-பரதேசிக் கூற்றுப்படிக்கு, போத்திரி முன் மடா போகியாமெனப் போற்ற - பன்றி உணவு கொள்ளும்போது உண்டாம் ஓசை போன்று சப்தம் கேட்கும் பொழுது, நேர்மையிதிற்போகி போலெடு - வடித்து எடுத்து, போற்றெரு மதி நெலிற்

போட்டதை - ஒரு மாதம் நெற்புடம் வைத்து, பினர் - பின்னல், போசன முறையினற் போசனித்திடு - போசன முறைப்படி உண்ண, போம் முடலசீரணம் - அசீரண நோய் நீங்கும், போம் அருச்சுரம் - விடாச்சுரம் நீங்கும், போம் உடம்பெலும்பனல் - அஸ்தி சுரம் போம், அரோசகம் - அரோசக நோய், ஐசினைபடு - மந்தப் பிணிகளைப் போக்கும், போம் போலி நோயெலாம் - கள்ள நோய்களெல்லாம் நீங்கும், போம் இழி மூல நோய் போம் உபத்திரவம் - இரத்தம் இழிகின்ற மூல நோயும் அதன் உபத் திரவமும் நீங்கும், போகும் அச்சரக்கனல் - அச்சரக்கனல் நோய் நீங்கும், போகுமா மெரி - எரிச்சல் நோய் நீங்கும், போகு மேகத் தணல் - மேக காங்கை போகும், போகுமீளை நோய் - ஈளை நோய் நீங்கும், போசன்நேரப் போக மன்னவன் - போசனைப் போல உலக இன்பங்களை அனுபவிப்பவனுவான், போசனமிர்தம் - போசனத்திற்கு அமிர்தம், என - என்று, போற்றும் வையமே - உலகம் புகழும்.

போசனக் குடாரி நெய்

போசனக்குடாரி நெய் உண்டால் உடம்பை இளமையாகச் செய்வதோடு உணவு கொள்வதில் அரசனுக விளங்கச் செய்யும். போசனக்குடாரியென வழங்கப்படுகின்ற சீரகத்தை முதலில் மூன்று பங்கு எடுத்துக் கொள்ள வேண்டும். அதன் பின் பனை வேர், ஆத்தி வேர், அரசுவேர், வில்வவேர், விளாவேர், சோற்றுக் கற்ருழை வேர் ஆகிய அறுவகை வேர்களும் சேர்ந்து சீரகத்தின் அளவிற்குச் சரியெடையாக எடுத்துக் கொண்டு இடித்து அதில் சொல்லப்பட்ட சரக்குக்குச் சம எடை பசு நெய் சேர்ந்து எரிக்க வேண்டும். (பன்றி உணவு கொள்ளும் போது சப்பள சளபள வென ஒரு வகையொலி உண்டாகும்) அவ்வித ஒலி உண்டாகக் கூடிய பருவத்தில் சரக்குகளின் சத்தெல்லாம் நெய்யில் இறங்கும். அப்பதத்தில் வடித் தெடுத்து ஒருமாதம் நெற்புடமிட்டு எடுத்து உண்ண வேண்டும்.

தீரும் நோய்கள் :- அசீரணம், விடாச்சுரம், அஸ்திசுரம், அரோசகம், கிளைக்கின்ற கள்ளநோய்கள், இரத்தம் இழிகின்றமூல நோய் உபத்திரவம், சூட்டினல் உண்டாகின்ற அச்சர நோய், எரிச்சல் நோய், மேககாங்கை, ஈளைநோய், முதலிய நோய்களெல்லாம் நீங்கும்.

மல மூத்திரக் குறி

ம

மலமூத்திரக் குறி செப்பிடின் மலைமேற்பதி விளக்காம்
மையற் கொருகணையாகிய மௌவற்கிணையாமே
மலமானது புயலாமெனில் மன்னற் பெறுசுரமே
மலருங்கவிரானலதமைச்சன் பெறுசுரமாம்
மகவான் கரியானலது மறவன் சுரமாமே
மஞ்சட்கிணையானலது மன்னைத்தொடுகபமே
மலிபாடலியானலது மயங்குங்கபவளியே
மஞ்சாடியதானலது மரணக்குதவளியே
மந்தாரையதனலது மடிக்குஞ் சனிவளியே
மண்டூகமதானலிரு மதிக்கப்புறமிலையே
மறிமூத்திரமானற்சல மன்னற்குறுவனலாம்
மயிடத்தினதான லதமைச்சற்குறு வனலே
மதியாவினதானலது மறவற்குறுவனலே
மதுவாமெனிற்கபானில மழையாமெனின் மருத்தே
மலிநேயமதானல் வெறி மலிதேனெனிற் குன்மம்
மதியெண்ணெயதானலது மரணந்தருமுடனே
மலமூத்திரக் குறியிங்கிது மருத்தாயுளர் கருத்தே.

மல மூத்திரக்குறி - எண்விதத் தேர்விலுள்ள மலக்குறி யையும் மூத்திரக் குறியையும், செப்பிடின் - கூறினல், மலை மேற்பதி விளக்காம் - வைத்தியர்களுக்கு மலையின் மேல் பதிக் கப்பட்ட விளக்கைப்போல் (கலங்கரை விளக்கம் போல்) நோயைக் கணிக்க சாதனமாகும். மையற்கு - பெண்களுக்கு மயக்கம் உண்டாகும்படி எவுகின்ற, ஒரு கணையாகிய - ஒரு அம்பாகிய (ஐ மலரில் ஒன்ருகிய), மௌவற்கு - முல்லை மல ருக்கு, இணையாம் - சமானமாகும், மலமானது புயலாமெனில் - பவ்வீ (மலம்) புயல் நிறம் (மேகத்தின் நிறத்தைப் பெற்றிருந்தால்), மன்னன் பெறு சுரமே - வாதசுரம் பெறப்படுகின்ற நிறமாகும், மலருங்கவிரானல் - மலர்ந்த முருக்கன் பூவின் நிறத்தை (சிவப்பு) ஒத்திருக்குமானல் , அது அமைச்சன் பெறு சுரமாம் - அது பித்த

சுரம் பெறப்படுகின்ற நிறமாகும், மகவான் கரியானல் - தேவேந்திரனுடைய வெள்ளை யானையின் நிறத்தை ஒத்திருந்தால், அது மறவன் சுரமாம் - அது சேனைத் தலைவனாகிய சீதள சுரத்தின் நிறமாகும், மஞ்சட்கிணையானல் - பசு மஞ்சளின் நிறத்தை ஒத்திருந்தால், அது மன்னைத்தொடு கபமே-அது வாதத்தைத்தொட்ட சீதளத்தின் நிறமாகும், மலிபாடலியானல் - மிக்க பாதிரிப் பூவின் நிறத்தை ஒத்து இருக்குமானல், மயங்குங் கபவளியே - மயக்கத்தை உண்டாக்குகின்ற கபவாதமாம், மஞ்சாடியதானல் - யானைக்குன்றி மரத்தின் பூ நிறத்தை ஒத்திருக்குமானல், மரணக் குதவளியே - மரணத்தை விளைவிக்கக்கூடிய மூலவாயுவைக் குறிக்கும், மந்தாரையதானலது - அது மந்தாரைப் பூவின் நிறத்தை ஒத்திருக்குமானல், மடிக்குஞ்சனி வளியே - கொல்லுகின்ற சன்னி வாதத்தைக் குறிக்கும், மண்டுகமதானல் - தவளையின் நிறத்துடன் (கருமையாகவும் வறட்சியுடனும் அழுத்தத்துடனும்) இருந்தால், இருமதிக்கப்புறம் இலை - இரண்டு மாதத்தில் இந்த நோயாளி இறப்பான் என்பதாம், மறி மூத்திரமானல் சலம் - நோயாளியின் மூத்திரமானது ஆட்டு மூத்திரத்தின் நிறத்தை ஒத்திருக்குமாயின், மன்னற்குறுவனலாம் - வாதசுர நோயாளியின் நீரைக் குறிக்கும், மயிடத்தினது ஆனலது - எருமையின் நீரை ஒத்திருக்குமாயினது, அமைச்சற் குறுவனலே - பித்தசுர நோயாளியின் நீரைக் குறிக்கும், மதியாவினது ஆனலது - மதிக்கப்படுகின்ற நீரானது பசுவின் நீரை ஒத்திருக்குமாயின் அந்நீர், மறவற்குறுவனலே - கபசுர நோயாளியின் நீரைக் குறிக்கும், மதுவாமெனில் - கள்ளின் நிறத்தை ஒத்திருந்தால், கபானிலம்-கபவாதத்தைக் குறிக்கும் நீராம், மழையாமெனின் மருத்தே-மழைநீரை ஒத்திருக்குமாயின் வாதத்தைக் குறிக்கும் நீராம், மலிநேயமதானல்-மிகுந்த நெய்யின் நிறத்தை ஒத்திருக்குமாயின், வெறி - பைத்தியம் (பித்தத்தைக் குறிக்கும்), மலி தேன் எனில் குன்மம் - மிகுந்த தேனின் நிறத்தை ஒத்திருக்குமாயின் குன்ம ரோகத்தைக் குறிக்கும் நீராம், மதியெண்ணெயதானல்-முடித்தைலத்துக்குரியதாய் மதிக்கப்படுகின்ற எண்ணெயை ஒத்திருக்குமாயின், மரணம் தரும் உடனே - உடனே மரணத்தை விளைவிக்கும், இங்கு மல மூத்திரக்குறி - இங்கே கூறப்பட்ட மலத்தின் குறிகளும் மூத்திரக்குறிகளும், இது மருந்தாயுளர் கருத்து - வைத்தியத்தொழில் செய்கின்றவர்களின் கருத்தாகும் என்றவாறு, ஏ - அசை.

மாத்திரை வருக்கம்

மா

மாத்திரை வருக்கமெல்லாம்
மாத்திரை வரைப் பிற்கேண்மோ
மாத்திரைக் குளதாஞ் சன்னி
மாத்திரை சர்வ சித்தி
மாத்திரைய முதகண்டி மாத்திரை சுரகுடாரி
மாத்திரை வச்சிராங்க மாத்திரையென வ்வாறே
மாறுபாடனேகமுண்டாம் மார்க்கமெல்லாமொன்றுன
மாமணிமந்திரவெற்றி மாத்திரையொன்று சொல்வாம்
மாடமுக்கடுகுப்பேல மாதங்கவெயிறு கோட்டம்
மாசை துப்பாரங்கோட்ட
மாஞ்சியிவ் வகைகாற்கைசா
மாதளைக் கனிரசத்தால் மர்த்தனஞ் செய்துநற்ற
மாரத்தைக் கனிச்சாற்ருலு மர்த்தனமாக்கிப் பின்னர்
மாத்திரை யரைக்குஞ்சத்தின் மாதிரி யுருட்டியாற
மார்த்தாண்டத் துலரைச் செய்த
மாத்திரை தனை நீரிற் கொள
மாந்தையரோசிகம்போம் மாரியிலுண்ணமேக
மாரெரி குன்மமாறும் மாரிமாரியினிற் கொள்ள
மாமகோதரஞ் சுரம் போம் மாச்சிகை யதனிலுண்ண
மால்கிரந்திகளுமேகும் மாமணிமந்திரவெற்றி
மாத்திரைக் குணமிதாமே.

மாமணி மந்திர வெற்றி மாத்திரை

மாத்திரை வருக்கம் எல்லாம் - மாத்திரைகளின் வகைகளை எல்லாம், மாத்திரை வரைப்பிற் கேண்மோ - பேரலைகளைப் போன்று நிறைவுள்ள மாத்திரை வர்க்கங்களைக் கேட்பாயாக. மா - பெரிய, திரைக்கு - மயக்கத்திற்கு, உள்ளது ஆம் - இடமாக இருக்கின்றதாகிய 1. சன்னி மாத்திரை 2. சர்வசித்தி மாத்திரை 3. அமுதகண்டி மாத்திரை 4. சுரகுடாரி மாத்திரை

5. வச்சிராங்கமாத்திரை, எனும் இவ் ஆறு - இவ்விதமாக, மாறு பாடு அனேகம் உண்டாம் - வேறுபாடுகள் பல இருக்கின்றன, மார்க்கமெல்லாம் - அவ்வழிகள் அனைத்தும், ஒன்ருன - ஒன்ருகச் சேர்ந்துள்ளதாகிய, மாமணி மந்திர வெற்றி மாத்திரை யொன்று- மாமணி மந்திர வெற்றி மாத்திரை யென்ற பெயருடைய ஒரு மாத் திரையை, சொல்வாம் - சொல்லுவோம், மாடம் - உளுந்து, முக் கடுகு - சுக்கு மிளகு திப்பிலி, உப்பு - உப்பு, ஏலம் - ஏலரிசி, மாதங்க எயிறு - யானைப்பல், கோட்டம் - தந்தம், மாசை - தங்கம், துப்பு - பவளம், ஆரம் - முத்து, கோட்டம் - சாதிக் கோஷ்டம், மாஞ்சி - சடாமாஞ்சில், இவ்வகை - இச்சரக்குகளெல்லாம், காற் கைசா - வீசம் பலம் ஆகச் சேர்த்து, மாதளைக் கனி ரசத்தால் - மாதளம் பழச்சாற்ருல், மர்த்தனம் செய்து - அரைத்து (பின்), நற்றமாரத்தைக் கனிச்சாற்ருலும்-தமரத்தம் பழச்சாற்ருலும், மர்த் தனம் ஆக்கி - அரைத்து, பின்னர் - பிறகு, அரைக்குஞ்சத்தின் மாதிரி உருட்டி - அரைக்குன்றிமணியளவு உருட்டி, ஆற - ஆறுவ தற்காக, மார்த்தாண்டத்து உலரச் செய்த மாத்திரை தனை நீரிற் கொள - வெயிலில் உலர்த்தின மாத்திரையைத் தண்ணீரில் இழைத்துண்டால், மாந்தை - உள மாந்தை நோய், அரோசகம் - உணவில் வெறுப்பு, போம்-போகும், மாரியில் உண்ண - தண்ணீரில் இழைத்து உண்டால், மேகம் - உஷ்ண மேகம், மார்எரி - மார்பில் எரிச்சலோடு வருகின்ற, குன்மம் மாறும் - எரி குன்மம் தீரும், மாரி மாரியினில் கொள்ள - மழை நீரிலுண்டால், மா மகோதர சுரம் போம் - மகோதரமும் சுரமும் தீரும், மாச்சிகையதனில் உண்ண - மோரில் கொண்டால், மால்-பெரிய, கிரந்திகளும் ஏகும் - கிரந்தி நோய்கள் தீருவனவாம், மாமணி மந்திர வெற்றி மாத்திரை குணம் இது ஆம் - மாமணி மந்திர மாத்திரையின் தன்மைகள் இவைகளேயாம்.

மாத்திரைகள் பலவிதமாகும். அவை ஒவ்வொன்றும் ஒவ் வொருகுணவிசேடங்களைக் கொண்டதாக இருக்கின்றது. ஆனல் இங்கு கூறப்பட்ட மாமணிமந்திர வெற்றி மாத்திரையானது மேற் கூறப்பட்ட எல்லாவற்றினுடைய குணவிசேடங்களைத் தன்னகத்தே கொண்டதாகும்.

மாமணி மந்திர வெற்றி மாத்திரை

செய்முறை :- உளுந்து, சுக்கு, மிளகு, திப்பிலி, உப்பு, ஏலரிசி, யானைப்பல், யானைத்தந்தம், தங்கம், சாதிக்கோட்டம், பவழம், முத்து, சடாமாஞ்சில் ஆகிய இச்சரக்குகளையெல்லாம் வகைக்கு வீசம் பலம் வீதம் எடுத்து மாதுளம்பழச் சாற்ருலரைத்துப் பின்பு

தமரத்தம் பழச் சாற்றுலுமரைத்துப்பின் அரைக் குன்றியளவு மாத்திரை உருட்டி வெயிலில் நன்ருக உலர்த்திவைத்துக் கொள்ள வேண்டும்.

தீரும் நோய்கள் :- நீரில் இழைத்துண்ண உளமாந்தை, உணவில்வெறுப்பு, உஷ்ணமேகம், எரிகுன்மம் ஆகியநோய்கள் நீங்கும். மழைத் தண்ணீரில் இழைத்துண்டால் பெருவயிறு, சுரம் நீங்கும். மோரில் கொள்ள கிரந்தி நோய்கள் தீரும்.

மாமணி மந்திர வெற்றி மாத்திரையின் குணங்கள் இதுவேயாகும்.

மிசைபண்டக் குணம்

மி

மிசைப்பண்டக்குணம் மிசைப் பண்டக் குணம்
மிச்சிலெனப் புகல் மிசைதலினெச்சம்
மிகைப்படி லெஞ்சிடில் மித்திர பேதம்
மிசைமடையின் குணம் மிக்குரமெய்க்கே
மிசையவலின் குணமிடிதணவாதே
மிசையுமபூபமிட லேயளிக்கும்
மிஞ்சு நெயாக்கை மிஞ்சணியாமே
மிக்க சுதைக் கொருமிக்கு மெய்யழகு
மித்திரவமுதுண மித்திரனுமெய்
மிகுததி பருகவு மிகுமெழின் மேனி
மிதமோர் பருகவு மிதமாமுடலே
மித்தைய முண்ணமெய் மித்தையிராதே
மிடலுறு தேன்கொள மிடறுரமாமே
மிகு கருணையையுண் மிருதுர மெய்க்கே
மிரியலினறல் கொள் மின்மினியாமெய்
மிகுமுசாரணமுண்மிலேயு மெய்யொளியே
மிசையயிரமுது கொள் மிளிரணியாமெய்
மிழற்றரம்பைக் கனி மிசை யுறுமையே

மிழற்றுரைக் கனியுணின் மிஞ்சுமைக் கனலே
மிடை மாங்கனிரச மிசையுடல் கசமே
மிக்க பலாக்கனி மிசையுடல் வசமே
மித்துருவரையலுண் மிதுன மதாக்கை
மிசையலிலட்டுக மிருகபதியுடலே
மிஞ்சு நெய் பாயசம் மிசையமுதஃதே
மிலேயு மிலேக்கறி மிசைவது ப்பூதே
மிழற்று பழங்கறி மிசைவதுமிழிவே
மின்னலி னழியுமெய் மிசையி னெள்ளாணம்
மித்திரபேதன மிக்குமை யவியால்
மிச்சிலென்ருலு மெய் மிசைவது சுகமே
மிதமறிவூ ணினன் மிருகண்டேயன்
மிசைப் பண்டக்குண மிதமிஃதாமே.

மிசை-உண்ணக்கூடிய, பண்டம் - பொருள்களுடைய, குணம் - தன்மைகள், மிசை - மேல், பண்டு - பழமையாகிய, அ - அந்த, குணம் - பண்புகளாம், மிச்சில் எனபுகல் - உயர்ந்த பொருள்களென்று சொல்லப்படுகின்றவற்றை, மிகைப்படில் - அதிகப்பட்டாலும், எஞ்சிடில் - மிகுதியானாலும், மித்திர பேதம் - உடல் நலம் மாறும், மிசை - தின்கிற, மடையின் குணம் - சோற்றின் குணமாவது, மெய்க்கு - உடலுக்கு, மிக்கு உரம் - மிகுபலத்தைக் கொடுக்கும், மிசை - தின்கிற (உயர்ந்த), அவலின் குணம் - அவலினது குணமாவது, மிடிதணவாதே - வறுமை நெருங்காது, மிசையும் அபூபம் - அப்பம், மிடலேயளிக்கும் - உடம்பிற்கு வலிமையைக் கொடுக்கும், மிஞ்சுநெய் - நெய் உண்ண, யாக்கை - சரீரத்திற்கு, அணியாமே - அழகைக் கொடுக்கும், மிக்கசுதை - அதிகமாகப் பால் அருந்துதல், ஒருமிக்குமெய்யழகு - மிகுந்த அழகைக் கொடுக்கும், மித்திரவமுதுண - சித்திரான்னங்களைப் புசிக்க, மித்திரனும் மெய் - சரீரத்திற்கு நண்பனாகும், மிகுததிபருக - தயிர் பருக, மிகுமெழின்மேனி - சரீரத்தின் அழகு அதிகரிக்கும், மித மோர் பருக - அளவுடன் மோர் கொள்ள, மிதமாம் உடலே - உடல்மிதமாகும், மித்தைய முண்ண - வெண்ணெய் உண்ண, மெய்மித்தையிராதே - மெய்பொய்யாகாது, மிடலுறு தேன்கொள - வலிமையுள்ள தேன் கொள்ள, மிடறுரமாமே - தொண்டை உரமாகும், மிகு கருணையையுண் - சிறந்த கருணையை உண்ண, மிருதுரமெய்க்கே - உடல் நொய்மையையடையும், மிரியலினறல் கொள் - மிளகு

நீரை உண்ண, மின்மினியாமெய் - உடல் மினுமினுப்படையும், மிகு முசாரணமுண் - பெருங்காயம் உண்ண, மிலையுமெய்யொளியே - உடலுக்கு ஒளியைக் கொடுக்கும், மிசையயிரமுது கொள் - சர்க்கரைப் பொங்கல் உண்ண, மிளிரணியாமெய் - சரீரத்திற்கு அழகைக் கொடுக்கும், மிழற்றரம்பைக் கனி மிசை யுறுமையே - வாழைப்பழம் உண்ண அழகுண்டாம், மிழற்றுரைக்கனியுணின் - உரைக்கனி உண்ண, மிஞ்சு மைக்கனலே - கபானலம் உண்டாம், மிடை மாங்கனிரசம் - மாங்கனிரசம் உண்ண, மிசையுடல்கசமே - உடல்யானை போன்ற வலுவைப்பெறும், மிக்க பலாக்கனி - பலாக்கனி உண்ண, மிசையுடல் வசமே - மேலான உடல் தன்வசப்படும், மித்துரு வரையலுண்-மூங்கிலரிசியுண்ண, மிதுனமதாக்கை-சரீரம் இரட்டிக்கும் (பருக்கும்), மிசையில் லட்டுகம்-லட்டுசாப்பிட, மிருகபதியுடலே-சரீரம் சிங்கத்தைப்போல் ஆகும், மிஞ்சு நெய்பாயசம் - நெய்பாயசம் உண்ண,மிசையமுதஃதே-சரீரத்திற்கு மேலான அமுதமாகும், மிலையுமிலைக்கறி-கீரைகள் உண்ண, மிசைவதுப்பூதே - சரீரத்திற்கு அழகுண்டாகும், மிழற்று பழங்கறி - பழங்கறி உண்ண, மிசைவதுமிழிவே - உடலுக்கு மிகுந்த குற்றத்தை உண்டாக்கும், மிசையினெள்ளாணம் - எள்சோறு, மின்னலினழியும் - நொடிப்பொழுதில் அழிந்துவிடும், மெய் மிசையும் - மெய்யை வலுப்படுத்தும் (நீடித்த ஆயுளைக் கொடுக்கும்), மித்திரபேதனம் மிக்கும் ஐயவியால் - கடுகால் உடல் அழிந்துவிடும், மிச்சில் என்றுலும் - கரி என்றுலும், மெய் மிசைவது சுகமே - சரீரத்திற்குச் சுகம், மிதமறிவூணினன் - மிதமாக உண்ணக்கூடியவன், மிருகண்டேயன் - என்றும் மார்க்கண்டேயனை வாழ்வான், மிசைப்பண்டக் குணமிதாமே - மிசைப்பண்டப் பொருள்களின்குணம் இதுவேயாகும்.

மெருகன் கிழங்கெண்ணெய்

மெ

மெருகன் கிழங்கெண்ணெய் மெருகிந்த மெய்க்கே
மெய்த்த முனிசித்தர்கண மெச்சமுதமாகும்
மெத்தென ருரைத்தபடி மெத்தவுரை செய்வோம்
மெருகன் கிழங்குபனை மெத்த சிறுவேளை
மெல்லிதழு தாழை வழை மெய்க்குவளை வன்னி
மெச்சிமை வல்லாரை பறழ் மெட்டினை யதற்கே
மெலிதா நுறுக்கி வெயில் மெதுவாக வைத்தே
மெயிலே யுலர்த்தியது மெருகுபொடி செய்வாய்

மெழுகாம் விளக்கெண்ணெய் மெலு மெண்ணெயா நெய்
மெடியான முக்கடுகு மெய்லவண மெய்யே
மெரிதீயடுப்பிலிடு மெழுகாகவாட்டே
மெரிநேர் குறிப்பறிதி மெழுகாயெடுத்தோர்
மெசுமாத முட்கவைநென் மென்வாரமப்பால்
மெலிமேகம் விக்கல்வலி மெலிவிசிவு வெப்பம்
மெலிதாள் குடைச்சல்வலி மெலிதோளுளைப்பு
மெலிவாக மெய்ப்பரி மெலிமார் பெரிச்சல்
மெலிநாவிலைப்பறளை மெலிகாதிரைச்சல்
மெலிபார்வைமங்கல் சளி மெலியூறரித்தல்
மெலிநாசி நெற்றி வலி மெலிகாத வெக்கை
மெலிமார் படைப்புவளி மெலியாறப் போமே
மெருகு நேர்நலத்தரருள் மெருகன் கிழங்கே.

இந்த மெய்க்கு - இந்த உடலுக்கு, மெருகு - மிருதுத் தன்மையையும் ஒளியையும் கொடுக்கக்கூடியது, மெருகன் கிழங்கெண்ணெய் - மெருகன் கிழங்கு எண்ணெயாகும், மெய்த்தமுனி - உண்மைத் தவ முனிவர்களும், சித்தர் - சித்தர்களும், கணம் - கணநாதர்களும், மெச்ச - புகழக்கூடிய, அமுதமாகும் - அமிர்தம் போன்றதாகுமென. மெத்தனர் உரைத்தபடி - சாந்தகுணமுடையவர்கள் (சத்வ குணம்) கூறியுள்ளதைப் போன்று, மெத்தவுரை செய்வாம்- மிகுதியாகக் கூறுவோம், மெருகன் கிழங்கு - மெருகன் கிழங்கு, பனை - நிலப்பனை, மெத்த சிறுவேளை - சிறுவேளை, மெல்லி - கற்றாழை, தழுதாழை - தழுதாழை, வழை - சுரபுன்னை, மெய் - குப்பைமேனி, குவளை - குவளை, வன்னி - சித்திரமூலம், மெச்சிமைவல்லாரை - கறுப்பு வல்லாரை, பறழ் - நேர்வாளப்பருப்பு, மெட்டிணையதற்கே - சம அளவெடுத்து, மெலிதாய் நுறுக்கி - நன்றாக இடித்து, வெயில் மெதுவாக வைத்தே - வெயிலில் வைத்து, மெயிலே யுலர்த்தி - உலரச் செய்து, மெருகு பொடி செய்வாய் - மிருதுவாகும்படிப் பொடிசெய்து, மெழுகாம் விளக்கெண்ணெய் - (அழுத்தமுள்ள) விளக்கெண்ணெய், மெலுமெண்ணெய் ஆநெய் - சிறிதளவு எள்நெய்யும் பசுநெய்யும் சேர்த்து, மெடியான முக்கடுகு- காரமுள்ள சுக்கு மிளகு திப்பிலி, மெய் - பெருங்காயம், மெரிதீயடுப்பிலிடு - அடுப்பேற்றித் தீயிட்டு எரித்து, மெழுகாகவாட்டே - மெழுகாக வாட்டுவதற்கு, எரிநேர் குறிப்பறிதி - எரிகின்ற பக்குவத்தையறிந்து, மெழுகாயெடுத்து - மெழுகாக எடுத்து, மெசுமாத

முட்கவைநெனன் - ஒரு மாதம் நெற்புடமிட்டு எடுத்து, மென்வாரமப் பால் - அதன் பிறகு பங்கிட்டு அளவுடன் உள்ளுக்குக் கொடுக்க, மெலி மேகம் - மெலியச் செய்கின்ற மேக நோய், விக்கல் - விக்கல் நோய், வலி - வலிநோய், மெலி இசிவு வெப்பம் - துன்பத்தைக் கொடுக்கக் கூடிய இசிவு சுரம், மெலிதாள் குடைச்சல் - தாள் வலி, தோளுளைப்பு - தோள் உளைச்சல் மெலிவாக மெய்ப்பரி - (மெலிவு+ ஆகம்+எய்ப்பு+அரி) தேக இளைப்பும் வலியும், மெரிமார் பெரிச்சல்-மார்புஎரிச்சல் மெலி நாவிலைப்பறளை-நா இலைப்பு, அறளைநோய், மெலிகாதிரைச்சல் - காதிரைச்சல், மெலிபார்வை மங்கல் - கண்ணொளிமங்கல், சனிமெலியூறரித்தல் - துன்பத்தைக் கொடுக்கக் கூடிய மெய்யரிப்பு நோய், மெலி நாசி நெற்றிவலி - நாசி, நெற்றி வலி, காதவெக்கை - வருத்தத்தையும் துன்பத்தையும் கொடுக்கக் கூடிய வெக்கை நோய், மெலி மார்படைப்பு - மார்படைப்பு, வலி - வலிநோய், மெலியாறப்போம் - துன்பத்தைக் கொடுக்கக்கூடிய நோய்களெல்லாம் நீங்கும், மெய் நேர் நலத்தருள் - உண்மையையும் நன்மையையும் செய்கின்ற இறைவன் அருளிச் செய்த மெருகன்கிழங்கே - மெருகன் கிழங்கெண்ணெயாகும்.

செய் முறை :

மெருகன் கிழங்கு, நிலப்பனைக் கிழங்கு, சிறுவேளை, கற்றாழை, தழுதாழை, சுரபுன்னை, குப்பைமேனி, குவளை, சித்திரமூலம், கறுப்பு வல்லாரை, நேர்வாளப் பருப்பு, ஆகியவைகளைச் சமமாக எடுத்து மெல்லிதாக நறுக்கி வெயிலில் உலரவைத்துப் பொடி செய்து கொண்டு அதனுடன் விளக்கெண்ணெயும், கொஞ்சம் எள் நெய்யும் பசுவின் நெய்யும் சேர்த்து சுக்கு மிளகு, திப்பிலி, பெருங்காயம் ஆகியவைகளையும் கலந்து அடுப்பேற்றித் தீயெரித்து மெழுகு பதமாக வந்தவுடன் எடுத்து ஒரு மாதம் நெற்படமிட்டு எடுத்துப் பின் அவ்வெண்ணெயை அளவுப்படிக் கொள்ள வேண்டும்.

தீரும் நோய்கள் :

சுரம், தாள்வலி, தோள் உளைச்சல், தேக இளைப்பு, மார்பெரிச்சல், கண்ணொளி மங்கல், மெய்யரிப்பு நோய், நாசி வலி, நெற்றி வலி, வெக்கை நோய், மார்படைப்பு, வலி நோய் ஆகிய நோய்கள் நீங்கும்.

முற்றும்.